# நீ சொன்ன வார்த்தை



# நீ சொன்ன வார்த்தை



## 1

அகன்று விரிந்து ஓடும் காவிரி.. அதன் மேல் அகலமாக விரிந்து நிற்கும் மேம்பாலம்.. காவிரியின் இந்தக் கரையில் நிற்கும் மலை.. அதன் உச்சியில் கோவில் கொண்டிருக்கும் பிள்ளையார்.. காவிரியின் அந்தக் கரையில் ஸ்ரீரங்கம்... அங்கே பள்ளி கொண்ட கோலத்தில் தன் பார்வையை விபிசனனுக்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்ற இலங்கையின் மேல் பதித்திருக்கும் ரங்கநாதர்.

அழகுமிகு திருச்சி.. அதனைச் சுற்றி ஓடும் காவிரி. அதன் கரையெங்கும்

பயிர்கள்.. திருச்சி மாநகரில் இயங்கும் மத்திய அரசு மாநில அரசு நிறுவனங்கள்.. கல்லூரிகள்.. தனியா ஸ்தாபனங்கள்.

வந்தோரை வாழ வைக்கும் தமிழகத்தில்... மாவட்ட விட்டு வேறு மாவட்டத்தில் வேலை பார்ப்பவர்க ஏராளம். அப்படி திருவண்ணாமலை மாவட்டத்தில்.. விரியூர் கிராமத்தில் பிறந்து வளர்ந்து திருச்சி மாநகரி எல்.ஐ.சி.யில் அட்மினிஸ்ட்ரேடிவ் ஆபிசராக வேலை பார்த்துக் கொண்டிருந்த தினகரன்.. அன்றைய இரவு தூக்கம் முடித்து.. காலையில் கண் விழித்து எழுந்தான்

கீழ் வீட்டின் முன்னே பால் வண்டியின் மணியொலி கேட்டது. அவன் குடியிருந்த மாடி வீட்டின் கதவை திறந்து.. கையில் பாத்திரத்துடனும்.. கண்களில் தூக்க கலக்கத்துடனும் படி இறங்கினான்.

"என்ன சார்.. இமையெல்லாம் வீங்கி.. கண்ணெல் லாம் சிவந்திருக்கு.. ராத்தூக்கம் இல்லையா.." பாலை தினகரனின் கையில் இருந்த பாத்திரத்தில் ஊற்றியபடி வினவினான் பால்கார சுப்பையா.

பதில் சொல்லாமல் சிரித்தான் தினகரன்.

"பிரம்மச்சாரி பிள்ளைகள் ஒழுங்காய் சாப்பிட்டு.. சரியான நேரத்தில் படுத்துத் தூங்கி எழுந்ததாக எங்கே யாவது சரித்திரம் இருக்கா?" என்று கேட்டாள். வீட்டுக் கார அம்மாள் விசாலாட்சி.

அதற்கும் பதில் சொல்லாமல் சிரித்தபடி தினகரன் அகன்று விட..

"மரியாதையான பிள்ளை.." என்று பால்கார சுப்பையா விடம் கூறியபடி தன் பால் பாத்திர



கைலியும் பனியனுமாய்.. தலைக்கு துண்டை வைத்து முண்டாசு கட்டிக் கொண்டு.. செடிகளுக்கு தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருந்த கலைவாணன்,

"குட்மார்னிங் தினகரன்.." என்றார்.

"குட்மார்னிங் சார்..." பால் பாத்திரத்துடன் தேங்கி நின்றான் தினகரன்.

"என்ன சொல்கிறாள் என் சகதர்மிணி?" என்றார் அவர்.

"பிரம்மச்சாரிகள் ஒழுங்காய் சாப்பிட்டு நேரத்தில் தூங்குவதில்லைன்னு சொல்கிறாங்க."

"அதில் அவளுக்கு என்ன வருத்தமாம்? கொடுத்து வைத்த ஆத்மாக்கள்ன்னு நான் பொறாமைப்பட்டுக் கொண்டிருக்கிறேன். என்னைப்பாரு.. காலையில் ஆறு மணிக்கெல்லாம் எழுப்பி விட்டு விட்டாள். இவள் கொடுக்கும் காலை காபிக்கு நான் செடிகளுக்கு தண்ணீர் பாய்ச்சி முடிக்க வேண்டும். காலை டிபன்.. மதியச் சாப்பாட்டிற்கு.. இப்போது போய் காய்கறிகள் வாங்கி வர வேண்டும். ராத்திரிச் சாப்பாட்டிற்கு.. சாயங்காலம் வரும்போதே கரண்ட் பில் கட்டி விட்டு வர வேண்டும். உனக்கென்னப்பா.. நீ கட்டைப் பிரம்மச்சாரி.. தனிக் காட்டு ராஜா.. என்ஜாய் பண்ணு... அவசரப்பட்டுக் கல் யாணம் பண்ணி.. என் மாதிரி.. சம்சார சாகரத்தில் மூழ்கி விடாதே."

மனைவி பால் பாத்திரத்துடன் பின்னால் வந்து நின்று கொண்டிருப்பதைக் கவனிக்காமல் அவர் பாட்டுக்குப் பேசிக் கொண்டிருக்க.. அவர் பின்னால் நின்று கொண்

சொல்வது என்று தெரியாமல் தினகரன் மீண்டும் சிரித்து வைத்தான்.

"என்னப்பா இது.. ஒரு தினுசாய் சிரிக்கிற? நான் சொல்வது சரியா.. தப்பா?" அவர் விடாமல் வினவி னார்.

"அதை உங்களுக்குப் பின்னால் நிற்கும் அக்காவிடம் கேட்டுவிட்டுச் சொல்கிறேனே.." என்றான் தினகரன்.

"அக்காவா.. அவள்தான் உள்ளே காபி போட்டுக் கொண் டிருக்கிறாளே" என்றபடி திரும்பிய கலைவாணன். கையும்.. களவுமாய் மாட்டிக் கொண்டு.. சுக்குக் கஷாயம் சாப்பிட்டது போல் விழித்தார்.

"காபி போடப் போய் விட்டால்.. உங்கள் மனதிலிருக் கற தத்துவ முத்துக்களை.. நீங்கள் உதிர்ப்பதை கேட்பது எப்படி..? அதுதான் நீங்கள் உதிர்க்கிற தத்துவங்களை மூட்டை கட்டி எடுத்துக் கொண்டு போகலாம்ன்னு நின்று கேட்டுக் கொண்டிருக்கிறேன். பேசுங்க.. ஏன் நிறுத்திட்டிங்க... கல்யாணமாகாமல் இருந்தால் எப்படி சுதந்திர வானில் சிறகடிக்கலாம்ன்னு எனக்கும் கொஞ்சம் சொல்லுங்க.. நானும் கேட்டுக் கொள்கிறேன்."

விசாலாட்சி வாயைத் திறந்தால் அடி முதல் நுனி வரை ஒரு கை பார்க்காமல் விடமாட்டாள். அது சின்ன விசயமோ.. பெரிய விசயமோ.. அதைப் பற்றியெல்லாம் அவளுக்குக் கவலை கிடையாது... பேச்சு என்று வந்து விட்டால்.. தன் தரப்பு வாதங்களை அடுக்கி.. எதிராளியை வாயடைத்துப் போக வைக்காமல் அவள் பின் வாங்கிய தில்லை.

அவளுக்குத் தாலிகட்டி... பத்து வருடங்களாக அவ ளுடன் குடும்பம் நடத்தி எட்டு வயது சுசீசிற்கும்.. அறு



வயது ஹரிணிக்கும் தகப்பனாக ஆகியிருக்கும் கலை வாணன் அதை உணர்ந்து பேசியிருக்க வேண்டும். அதை மறந்துவிட்டு.. மனைவி உள்ளே காபி போட்டுக் கொண்டிருக்கிறாள் என்ற தைரியத்தில் காலை நேரத்து உற்சாகத்தில்.. தினகரனிடம் வாயைக் கொடுத்து விட்டு மாட்டிக் கொண்டார்.

மனைவியின் முகத்தைப் பரிதாபமாய் பார்த்தவர்.

"நான் சும்மா விளையாட்டுக்கு சொல்லிக் கொண்டிருந் தேன்டி விசாலம்" என்றார்.

"விளையாட்டா...? எது விளையாட்டு? கல்யாணம் பண்ணிக் கொள்வது என்னவோ பொறியில் மாட்டிக் கொள்வது போலன்னு நீங்கள் பேசுவது விளையாட்டா? கல்யாணம் பண்ணிக் கொள்ளாமல் இருந்து அட்வைஸ் பண்ணும் அளவிற்கு நீங்கள் இந்த வாழ்க்கையில் எதை இழந்தீர்கள்? நான் எதை வாரிக் கட்டிக் கொண்டேன்?"

"ஏண்டி.. தெரியாமல் பேசிவிட்டால் அதற்கு இத்தனை பேச்சா?"

"நான் இன்னும் பேசவே ஆரம்பிக்கலையே..."

"அப்புறம் இவ்வளவு நேரமாய் பேசியது என்னடி?"

கலைவாணன் திகைத்துக் கேட்க.. 'முன்னுரையாய் இருக்கும்.. இனிமேல்தான்.. பொழிவுரை.. தெளிவுரை யெல்லாம் வரும்போல..' என்று மனதிற்குள் நினைத்து நகைத்துக் கொண்டான் தினகரன்.

"நீயே இந்த நியாயத்தைக் கேளுப்பா.." விசாலட்சி.. வழக்காடு மன்றத்திற்கு தினகரனை நீதிபதியாக்கினாள்.

"சொல்லுங்க அக்கா.."

"காலையில் நாலு இருபதிற்கு எல்லாம் எழுந்து கொ
கிறேன்."

"அவ்வளவு சீக்கிரமாக எழுந்து கொள்கிறீங்களா
ஏன்க்கா?"

"வேறு வழி..? வீட்டு வேலைக்கு உதவிக்கு ஆ
இருக்கு. வாசல் பெருக்கித் தெளித்து கோலம் போ
ஆள் இருக்கா?"

"ஏன்க்கா.. வேலை செய்கிறவங்க அதையும் செய்
மாட்டாங்களா?"

"மாட்டேன்கிறாங்களே.. அதுக்கு வேற ஆளை
பார்ன்னு சொல்கிறாங்க. நான் மாதத்திற்கு ஒரு ஆளை
தேட முடியுமா? அதனால் நானே எழுந்து மாங்கு.. மா
குன்னு வாசல் கூட்டி கோலம் போட்டு முடிக்க ஐந்த
கிறது.. இந்தா.. நிற்கிறாரே.. இந்த மனுசன்."

தனக்குத் தாலிகட்டின கணவனை ஏற இறங்க விச
லாட்சி பார்க்க.. அதுதான் தான் என்று பெருமிதமா
நிமிர்ந்து நின்று.. தினகரனுக்கு போஸ் கொடுத்தார் கலை
வாணன்.

"ஏன்க்கா.. சாருக்கு என்ன?"

"அவருக்கு ஒண்ணுமில்லை... எனக்குத்தான் எல்ல
மும்.. காலையில் வாக்கிங் போகணும்னா காபி குடித்
விட்டுத்தான் போவேன்னு சட்டமா நிற்பார். இவருக்
காபி கலந்து கொடுத்து முடிக்க ஐந்தரையாகும்.. அத
குள் வேலையாள் வந்து விடும். அவளுக்குப் பாத்திர
களை ஒழித்துப் போட்டு விட்டு நிமிர்ந்தால் ஆறு மண
அடிக்கும்... வாசலில் பால்காரனும் மணி அடிப்பான
போய் பாலை வாங்கிக் கொண்டு வந்தால்... வாக்கி
போகிறேன்னு தெருமுனை ...



திரும்பி வந்து இந்த மனுசன் செடிகளுக்கு தண்ணி காட்டிக்கிட்டு நிற்பார்..."

செடிகளுக்கு நீர் பாய்ச்சுவதை.. மாட்டுக்கு தண்ணீர் காட்டுவது போல அவள் சொல்ல.. கலைவாணன் அதற்கும் பெருமையாய் ஓர் பார்வை பார்த்தார்.

விசாலாட்சியோ.. சம்சார சாகரத்தில் மூச்சுத் திணறிக் கொண்டு இருப்பது தானா இல்லை கணவனா.. என்று தினகரனுக்கு உணர்த்தாமல் விடுவதில்லை. என்ற முடிவோடு கொந்தளித்துக் கொண்டிருந்தாள்.

"செடிகளுக்குத் தண்ணீர் பாய்ச்சுபவருக்கு.. உடனே காபி கலந்து கொடுக்க வேண்டும்."

"சாருக்குத்தான்.. ஐந்தரை மணிக்கே காபி போட்டுக் கொடுத்திருப்பீங்களே.."

"இது செகன்ட்டோஸ். புதுப்பாலில் காபி கலந்து கொடுத்தாக வேண்டும்."

"அப்போ பர்ஸ்ட் டோஸ் காபிக்கு.. பாலுக்கு என்ன பண்ணுவீர்கள்?"

"முதல் நாள் பாலைக் காய்ச்சி.. பிரிட்ஜில் எடுத்து வைத்துக் கொடுப்பேன் தம்பி.. அப்படிப் பதனமாக பார்த்துக் கிட்டதால்தான் இவரு இப்படி வியாக்கியானம் பேசிக்கிட்டு நிற்கிறாரு..."

"விடுங்கக்கா.. ஏதோ தெரியாமல் பேசி விட்டார்."

"தெரியாமல் பேசவில்லை தம்பி. தெரிந்துதான் பேசு கிறேன். ஆறு மணிக்கு காபிக் கடையில் ஆரம்பித்து.. ஏழு மணிக்கு பிள்ளைகளை ரெடி பண்ணி எட்டு மணிக்கு காலை டிபனை ரெடி பண்ணி. பத்து மணிக்கு

வேலையாளை அனுப்பி விட்டு பனிரெண்டு மணிக்
மதிய சமையலை ரெடி பண்ணி இந்த மனிதனுக்கு
கேரியரில் கொடுத்துவிட்டு ஓய்ந்து உட்கார்ந்து ஒ
வாய் சாப்பிட்டு முடித்தால். சாயங்காலமாகி விடு
'அம்மா'ன்னு பிள்ளைகள் வந்து விடுவார்கள். அப்புற
அவர்களைக் குளிக்க வைத்து.. வேறு டிரஸ் மாற்றி விட்
காபி.. டிபன் கொடுத்து.. வீட்டுப் பாடம் செய்ய வைத்து
இந்த மனுசன் வந்ததும் கையில் காபியோடு போ
நின்று உபசரணையாய் பேசி டி.வி. முன்னால் உட்கா
வைத்துவிட்டு.. நைட் டிபன் செய்ய ஆரம்பித்து.. எ
லோரையும் சாப்பிட வைத்து.. தூங்க அனுப்பிவிட்டு
நான் ஒருவாய் சாப்பிட்டு விட்டு மணியைப் பார்த்தா
பத்துன்னு சொல்லும்... அதற்குப் பின்னால் சமைய
மேடையைச் சுத்தம் செய்து.. பாத்திரங்களை ஒழித்
சின்க்கில் போட்டு விட்டு.. கேஸ்.. வாசல் கதவுன்
எல்லாவற்றையும் சரி பார்த்துவிட்டு படுக்கையி
விழும்போது மணி பதினொன்று ஆகிவிடும். திரும்ப
நாலு இருபதிற்கு எழுந்து ஆரம்பிக்க வேண்டும். செக்
மாடு போல பெண்களின் வாழ்க்கை ஆகி விட்ட
மாட்டுக்கு மூக்கணாங்கயிறு மாட்டுவது போல் கழுத்தி
ஒரு தாலியைக் கட்டிக் கொண்டு வந்து வீட்டி
அடைத்து இருபத்தி நான்கு மணி நேர வேலைக்கா
யாக்கி விட்டு.. பேசுவதைப் பார் பேச்சை. ஒரு நாளிற்
ஐந்து மணி நேரத் தூக்கம்தான் கிடைக்கிறது. இதில் இ
மாட்டிக் கொண்டு விழிக்கிறாராம்.''

சொல்லி முடிப்பதற்குள் அவளுக்கு மூச்சு இரைத்த
தினகரனுக்கு மொத்த பெண் குலத்தின் மீதும் பரிதா
எழுந்தது.



''ஏன்க்கா.. கேட்கிற எனக்கே இவ்வளவு கஷ்டமாக இருக்கே.. செய்கிற உங்களுக்கு எவ்வளவு கஷ்டமாக இருக்கும்?''

''இது கொஞ்சம்தான் தம்பி. உன்னிடம் சொல்ல முடியாத வேலைகளும் நிறைய இருக்கு.''

விசாலாட்சி கணவனைப் பார்த்து பல்லைக் கடிக்க.. தினகரன் தர்ம சங்கடமடைந்தான். அவள் மறைமுகமாய் சொல்வது அவனுக்குப் புரிந்தது.

''இத்தனை வேலைகளுக்கும் இவர் சம்பளம் கொடுத்தார்ன்னு வை... இவர் வாங்குகிற சம்பளம் பத்தாது... என்னமோ பேச வந்திட்டார்.. பெரிசாய்..''

விசாலாட்சி புயல் போல வீட்டுக்குள் போய்விட.. கலைவாணன் ஆசுவாசப் பெருமூச்சு விட்டபடி தினகரனைப் பார்த்தார்.

''ஏம்ப்பா... நீயாவது அவள் என் பின்னால் நிற்கிறாள்ன்னு சொல்லியிருக்கலாமில்ல? நான் தெரியாமல் பேசி மாட்டிக் கொண்டேனே.''

''எங்கே சார் சொல்வது? நான் சைகை செய்து பார்க்கிறேன்.. நீங்க கண்டு கொள்ளாமல் நிற்கறீங்க.. அப்புறம் நான் என்ன செய்யட்டும்?''

''மாட்டினதுதான் மாட்டினேன். காலைக் காப்பிக்கு அப்புறம் மாட்டினேனா? முதலிலேயே வாயைக் கொடுத்து.. இப்படி மாட்டிக் கொள்வேனா?''

''ஏன் சார்.. காலை காபியைக் கட் பண்ணி விடுவாங்களா?''

''சேச்சே.. அதெல்லாம் இல்லை. லேட் பண்ணுவாள். கட் பண்ண மாட்டாள்.''

''பரவாயில்லையே... நல்லவங்களா இருக்காங்களே..''

''ரொம்ம்ப... நல்லவ...''

கலைவாணன் கிண்டலாகச் சொல்ல, தினகரன் யதேச்சையாய் அவருக்கு பின்னால் பார்த்தான். கலைவாணன் அரண்டு போய் திரும்பிப் பார்த்தார்.

''என்ன சார்?'' என்று தினகரன் புரியாமல் வினவினான்.

''அட போப்பா.. நீ பார்த்த பார்வையில்.. எங்கே உள்ளே போனவள் திரும்பி வந்து விட்டாளோன்னு பயந்து விட்டேன்.''

கலைவாணன் வீட்டுக்குள் போக.. தனக்குள் அவரது தைரியத்தை எண்ணி நகைத்தபடி தினகரன் மாடிப்படி ஏறினான். சமையலறையில் நுழைந்து அடுப்பைப் பற்ற வைத்து.. பாலைக் காய்ச்ச ஆரம்பித்தான். செல்போன் ஒலித்தது. எடுத்துப் பார்த்தான். ராம்குமார் அழைக்கிறான் என்றது செல்போன்... எடுத்துப் பேசினான்.

''சொல்லு ராம்குமார்...''

''என்னடா செய்து கொண்டிருக்கிறாய்..''

''காபி கலக்கிக் கொண்டிருக்கிறேன். நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய்?''

''பெண்டாட்டி கையால் காபி வாங்கிக் குடித்துக் கொண்டிருக்கிறேன்...''

''ஓஹோ... இதைச் சொல்லத்தான் வேலை மெனக்கெட்டு காலங்கார்த்தாலே போன் பண்ணினாயா?''

''பொறாமை... ம்...?''

''எதற்குப் பொறாமை?''

''நான் பெண்டாட்டி கையால் காபி வாங்கிக் குடிக்கிறேன்னு சொல்லியதை கேட்டுத்தான் உனக்குப் பொறாமை...''

''பெண்டாட்டி கையால் காபி வாங்கிக் குடிப்பதற்கு கீழ் வீட்டில் வீட்டுக்காரர் படும்பாட்டை பார்த்துக் கொண்டுதானே இருக்கிறேன். அதனால் வீண் பெருமை பேசாமல் விசயத்துக்கு வா.''

''இன்றைக்கு மீட்டிங் இருக்கு.''

''கேன்ஸல்ன்னு சொன்னாங்களே.''

''இப்ப இல்லைன்னு சொல்லிட்டாங்க. அதனால் நாம் மீட்டிங் அட்டெண்ட் பண்ணியாகணும். ரெடியாய் வந்திரு..''

''அப்படியா.. இன்றைக்கு மீட்டிங் இல்லைன்னு நினைத்து அசால்ட்டா இருந்து விட்டேனே.. இப்ப சீக்கிரம் வந்து ஸ்டேட்மென்டை ரெடி பண்ணனுமா? நேற்று வேற... விடிய விடிய.. டி.வி. பார்த்து விட்டு லேட்டாய் தூங்கி தொலைத்தேன். இப்ப நீ இப்படி குண்டைத் தூக்கிப் போடுகிறாயே.''

''ஏண்டா.. உன் ஒரு ஆளுக்கு அவ்வளவு பெரிய வீட்டைப் பிடித்துப் போட்டுக் கொண்டு தனியே குடித்தனம் பண்ணாவிட்டால்தான் என்ன? கூட ஒரு ஆளை தங்க வைத்துக் கொண்டால் வாடகையும் பாதி குறையும், நீயும் தனியே இருக்கிறேன் பேர்வழின்னு.. விடிய விடிய டி.வி. பார்க்காமல் நேரம் காலத்தில் உறங்குவாய்.. ஏண்டா இப்படிப் பிடிவாதம் பிடிக்கிறாய்?''

''ச்சு.. கூட எல்லாம் யாரையும் தங்க வைத்துக் கொள்வது சரிப்பட்டு வராதுடா.. என் பிரைவஸி பாதிக்கும்...''

"என்னத்தடா பிரைவஸி வேண்டிக் கிடக்கு உனக்கு? நல்லா வந்திரும் என் வாயில்.. பிரைவஸி.. பிரை வஸின்னு.. கல்யாணம் கூடப் பண்ணிக் கொள்ளாமல் ஒருவன் தனிக் குடித்தனம் பண்ணிக் கண்டோமா?"

"இங்கேதான் கண்டு விட்டாயில்லையா? போனை கட் பண்ணு."

காபியுடன் பால்கனிக்கு வந்த தினகரன்.. காபியை உறிஞ்சியபடி சாலையைப் பார்த்தான். முதல் நாள் மழை யில் கழுவித் துடைத்தது போல் சாலை பளிச்சென்று இருந்தது. பொதுவாக மழை நாட்களில்.. மழை விட்ட வுடன்.. சாலையைப் பார்க்க தினகரனுக்கு மிகவும் பிடிக்கும்."

மழை முடிந்த பின்னும் ஈரக்காற்று வீசிக் கொண் டிருந்தது. அது இதமாக உடலைத் தொட்டுச் செல்ல தினகரன் சுகமாக உணர்ந்தான். சாலையைப் பார்த்தபடி திரும்பியவனின் பார்வையில் எதிர் வீட்டுப் பால்கனி யில் நடந்து கொடுத்தபடி படித்துக் கொண்டிருந்த சுகன்யா தென்பட்டாள்.

'இவளுக்கு வேறு வேலையே இல்லையா..' தினக னுக்கு அலுப்பாக இருந்தது. அவன் காலையில் எழுந் பால் பாத்திரத்துடன் இறங்கும் போதே.. பால்கனியில் நடை பழகிக் கொண்டே.. பார்வையை இவன் மேல் பதித்திருந்தவளைப் பார்த்து விட்டான். கையில் புத்தகம்.. கடமைக்காக..

'படிப்பது ஒரு சாக்கு..' எரிச்சலுடன் வீட்டிற்குள் செல்ல திரும்பினான். அவள் அவசரமாய் இவனைப் பார்ப்பது தெரிந்தது. அதைவிட அவசரமாய் வீட்டிற்குள் வந் விட்டான்.



'நின்று கொண்டிருந்தால்.. சிரித்து.. கிரித்து வைத்து விடப் போகிறாள்.

எதிர் வீட்டு சுகன்யா படிப்பது.. பி.எஸ்ஸி மூன்றாம் வருடம். அவளது பொழுது போக்கு.. வீட்டில் இருக்கும் நேரம் முழுவதும் பால்கனியில் வாசம் செய்து.. எதிர் வீட்டைப் பார்ப்பது.

சில சமயம் தினகரன் கீழ் வீட்டில் விசாலாட்சியுடன் நின்று கொண்டிருந்தால் அடுத்த நொடி சுகன்யா அங்கு ஆஜராகி விடுவாள்.

"அக்கா.. இடியாப்பம் உலக்கு இருந்தால் அம்மா வாங்கி வரச் சொன்னாங்க."

கேள்வி கேட்பது விசாலாட்சியிடம்.. அவள் பார்வை இருப்பது தினகரனிடம்.. தினகரன் நொந்து போவான். விசாலாட்சியிடம் பேசிக் கொண்டிருப்பதை நிறுத்தி விட்டு மாடிக்குப் போய் விடுவான். அதனால் விசாலாட்சி யிடம் அவனுக்கு நல்ல பெயர் உண்டு.



## 2

"எவ்வளவுதான் உழைத்தாலும் நம் சுப்பீரியருக்கு நம் மேல் திருப்தி வரமாட்டேன் என்கிறது. இதற்கு மேல் என்ன பண்ணுவது?" ராம்குமார் அலுத்துக் கொண்டான்.

"இது வியாபார உலகம் ராம்.. நீ ஒரு ஓவியத்தைப் பார்த்திருக்கிறாயா? ஒரு மான் ஒன்றைப் புலி துரத்திக்

கொண்டிருக்கும்.. மான் தப்பி ஓடிக் கொண்டிருக்கும். கீழே எழுதி வைத்திருப்பார்கள். 'நீ மானோ.. இல்லை புலியோ.. எதுவாக இருந்தாலும் ஓடிக் கொண்டிரு. ஓட்டத்தை நிறுத்தாதே..' இதுதான் நம் தாரக மந்திரம். நாம் ஓடிக் கொண்டிருக்க வேண்டும். நமக்கான எல் லையைத் தொட்டு விட வேண்டும்.''

''உனக்கென்னடா.. கட்டை பிரம்மச்சாரி.. ஓடிக் கொண் டிருப்பாய்.. உன் எனர்ஜி லெவல் குறையாது. நான் பிள்ளைக் குட்டிக்காரன்.. என்னால் முடிய வேண்டாமா எனக்கு மூச்சு வாங்குதுடா.''

''அதற்குள்ளேயே புலம்பலா? கல்யாணமாகி மூன்று வருடம்தானே ஆகிறது...?''

''கைக்குழந்தைக்கு ஒரு வயது ஆகிறதேடா.''

''ஹா.. ஹா...''

''சிரிடா.. நன்றாகச் சிரி.. ஆமாம்.. உன் பிரான்ஜில் இன்றைக்குப் புதிதாய் ஒரு கிளார்க் ஜாயின்ட் பண்ண போகிறாளாமே...''

''அதற்குள் அது ஒரு பெண்ணென்று உனக்கு தெரிந்து விட்டதா?''

''அது மட்டுமா தெரியும். அதற்கு மேலேயும் தெரியும்

''என்ன தெரியும்?''

''அந்தப் பெண்ணின் பெயர் சித்ரலேகா. படிப் பி.எஸ்ஸி கம்ப்யூட்டர் சயின்ஸ். வயது இருபத்தி ஒன்று.

''இரு... இரு.. என்ன பெயர் சொன்னாய்?''

''சித்ரலேகா.. ஏன்டா.. நீதானே. ஏ.ஓ. இதுகூட உனக்கு தெரியாதா?''

''சித்ரலேகாவா...? அது 'அவளின் பெயராயிற்றே. இது 'அவளாக இருக்குமோ...' என்று எண்ணியவன்.

'ஊஹூம்.. இருக்காது. அவளையாவது.. அவள் வீட்டில் வேலைக்கு அனுப்புகிறதாவது..' என்று தலையை ஆட்டிக் கொண்டான்.

''என்னடா தலையை ஆட்டுகிறாய்? தெரியாதா?''

''நீ என்னடா கேட்டாய்?''

''அந்தப் பெண்ணின் பெயர் தெரியாதா என்று கேட்டேன்.''

''காலையில்தான் பேக்ஸில் ஆர்டர் வந்தது. மீட்டிங் கிளம்பி வரும் அவசரத்தில் பெயரைக் கவனிக்கவில்லை.''

''ஓஹோ.. அப்போ நான் கிளம்புகிறேன் தினா.. ஸீயு..''

ராம்குமார் அவனது இரு சக்கர வாகனத்தில் ஏறிப் பயணிக்க.. தினகரன் தன் காரில் ஏறிக் கொண்டான்.

'உனக்கென்னடா மச்சான்.. நீ டார்கெட்டுக்கு மேலே அச்சீவ் பண்ணிட்டன்னு கார் கொடுத்திருக்காங்க.. என்னைச் சொல்லு.'

அவனுக்கு கார் கிடைத்த அன்று ராம்குமார் விட்ட பெருமூச்சில் காரே சூடாகி விட்டது.

தினகரன் காரை ஹெட் ஆபீஸ் வளாகத்தை விட்டுக் கிளப்பி தன் கிளையை நோக்கிப் பறந்தான். அலுவல கத்தில் நுழைந்து அவனது சீட்டில் அமர்ந்தபோது அறைக் கதவைத் தட்டி அனுமதி வாங்கிக் கொண்டு அவனுடைய ஸ்டெனோ உள்ளே நுழைந்தாள்.

''யெஸ்...?''

"சார்.. இன்றைக்கு சித்ரலேகா ஜாயின் பண்ணியிருக்காங்க. பார்மலா உங்களை மீட் பண்ணணும்னு வெயிட் பண்ணிக் கிட்டு இருக்காங்க."

"வரச் சொல்லுங்க."

அறைக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்தவளைப் பார்க்காமல் கம்ப்யூட்டரில் கவனமாய் இருந்தவன்,

"சிட் டவுன்..." என்றபடி ஈ-மெயிலை பார்த்துக் கொண்டிருந்தான்.

அவள் பதில் சொல்லாமல் அவனுக்கு எதிரே இருந்த சேரில் அமர்ந்தாள். ஈமெயிலை படித்து விட்டுத் திரும்பி அவளைப் பார்த்தவன் அதிர்ந்தான்.

'கடைசியில் இவளேதானா.. எப்படி இவள் வீட்டில் விட்டார்கள்.'

அதிர்ச்சியெல்லாம் அவனுக்குத்தான். அவள் சலனமில்லாமல் அவன் முகம் பார்த்தபடி அமர்ந்திருந்தாள்.

"நான் உன்னை இங்கே எதிர்பார்க்கவில்லை..."

"எதிர்பாராதது உங்கள் வாழ்விலும் நடக்கலாம் என்பதை இப்போது தெரிந்து கொண்டிருப்பீர்கள்தானே."

"நான் இங்கே ஏ.ஓ.வாக இருப்பது உனக்குத் தெரியும் தானே..."

"தெரியும்..."

"தெரிந்தும் ஏன் இங்கு வந்தாய்?"

"இது என்ன கேள்வி? வேலை பார்க்க வந்தேன்."

"உனக்கு எதற்கு வேலை?"

"குட் ஜோக்.. எனக்கும் வயிறு இருக்கிறது.. வாழ்வதற்குப் பணம் தேவைப்படுகிறது.. அதற்கு நான் வேலை பார்த்தாக வேண்டுமே."



"இப்போது நீதான் ஜோக் அடிக்கிறாய். ஊரையே உன் அப்பனும்.. தாய் மாமனும் கட்டி ஆள்கிறார்கள். ஆயிரம் பேருக்கு அவர்கள் வேலை கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்? நீ உன் தேவைக்கு வேலை பார்த்து சம்பாதிக்க வேண்டுமா?"

"பின்னே வேண்டாமா? என் தேவைகளுக்கு என்னைப் பெற்றவர்களிடம் நான் கையேந்தி நிற்க விரும்பவில்லை."

தினகரன் உதட்டைக் கடித்துக் கொண்டான். அவன் நெற்றியில் சிந்தனையின் ரேகைகள் படிந்தன.

'இதற்கு என்ன பதிலைச் சொல்வது.'

மௌனமாக அவள் முகத்தையே பார்த்தான். அவள் திடமாக பதில் பார்வை பார்த்தாள். அவன் கூர்மையாக அவளைப் பார்த்தபடி கூறினான்.

"ஏன் இப்படிக் கஷ்டப்பட வேண்டும்? செய்ய வேண்டியதை செய்ய வேண்டியவர்கள் செய்தால்.. உனக்கு இந்தத் துன்பம் இல்லையே.."

"நீங்கள் சொல்வது நடந்தால்தான் நான் துன்பப் படுவேன். இது ஒரு துன்பமே இல்லை..."

அவள் அமைதியாக பதில் கொடுத்தவுடன் அவன் முகம் கோபத்தில் சிவந்தது. அவளை உறுத்து விழித்தான். அவளா அஞ்சுகிறவள். அஞ்சாமல் எதிர்த்துப் பார்த்தாள்.

"திமிரா?" என்று உறுமினான்.

"பரவாயில்லையே.. கண்டுபிடித்து விட்டீர்களே.. திமிரேதான்."

"இதற்கெல்லாம் வட்டியும்.. முதலுமாகச் சேர்ந்து படப் போகிறாய்."

''இப்போது பட்டுக் கொண்டுதானே இருக்கிறேன்?''

''இன்னும் உன் திமிரும்.. உன் வீட்டாரின் திமிரு அடங்கவில்லையே.''

''அது எப்போதும் அடங்காது.''

''அதையும் பார்த்து விடலாம்.''

''பார்த்துக் கொண்டுதானே இருக்கிறீர்கள். இனியு பார்க்கத்தானே போகிறீர்கள்.''

''பார்க்கத்தான் போகிறேன். உன் திமிரும்.. உ வீட்டாரின் திமிரும் அடங்கப் போவதை.. அழிய போவதை பார்க்கத்தான் போகிறேன்.''

''தாராளமாய் பாருங்கள். அதற்கு முன்னால்.. நா இப்போது என் வேலையைப் பார்க்கப் போகலாமா?''

அவன் பதில் சொல்லாமல் அவளையே முறைக்க அவள் எழுந்து கொண்டாள். எழுந்து அறைக் கதவி அருகே அவள் செல்லும்போது தினகரனின் குர அவளை தடுத்து நிறுத்தியது.

''நில்..''

நின்றாள்.

''எங்கே தங்கியிருக்கிறாய்..?''

''இங்கே என் சின்ன மாமாவின் வீடு இருக்கிற தெரியுமில்லையா?''

''தெரியும்.. சொல்லு.''

''அங்கேதான் இருக்கிறேன்.''

''இவ்வளவு தூரம் சுயமரியாதை பார்ப்பவள்.. எ அடுத்தவர் வீட்டில் தங்க வேண்டும். ஊரில் எத்தன



''ஏன்.. நான் எங்கே தங்கினால் உங்களுக்கு என்ன வந்தது?'' அவனுக்கு கோபத்தில் கண் சிவந்தது.

''எனக்கு... என்ன வந்ததா? எவ்வளவு தைரியமும்.. தெனாவெட்டும் இருந்தால் இந்தக் கேள்வியை.. என்னைப் பார்த்துக் கேட்பாய்?''

''நீங்கள்தானே என்னைக் கேட்க வைக்கிறீர்கள்?''

''என் மீதே பழி போடுகிறாயா?''

''நான் வேறு யார் மீது பழி போடுவேன்?''

''நான் கேட்பதை.. நீ செய்ய விட மாட்டாய். அதை விட்டு விட்டு என் மேல் பழி போடுவாய்.. அப்படித் தானே.''

''என்னைப் பெற்றவர்கள் என்னால் பெருமைப்பட வேண்டும். சிறுமைப் படக்கூடாது. அதை என்னால் பார்த்துக் கொண்டிருக்க முடியாது.''

''உன்னைப் போல்தானே எனக்கும் இருக்கும்?''

''புரியவில்லை...''

''உனக்கா புரியாது...? நீ கெட்டிக்காரி ஆச்சே.''

''தேங்க்ஸ்...''

''நையாண்டி.. ம்ம்.. நடத்து.. நடத்து.. நீ எவ்வளவு தூரம் போகிறாய் என்பதை நானும் பார்க்கிறேன்.''

''நான் போகலாமா...''

''அதுதான் போய் விட்டாயே...''

சித்ரலேகா சட்டென்று அவன் விழியோடு விழி கலந்தாள். அவள் கண்கள் கலங்கியிருந்தன. அவளது கண்

நிறைவு கண்டது... அவன் இனம் புரியாத திருப்தி கொண்டான்.

"நான் போகவில்லை. நீங்களே போக வைத்தீர்கள்."

"நான் சொல்வதைக் கேட்டிருந்தால் போயிருக்க வேண்டியதில்லை. உன் வீட்டார் கேட்க நினைத்தார்கள். நீ விடவில்லை. நீ பிடிவாதக்காரி."

"இல்லை.. ரோசக்காரி.. எனக்காக ஏன் என் வீட்டார் பணிய வேண்டும்?"

"ஏனென்றால்.. உன் வீட்டார்.. என்னைப் பெற்றவங்களையும்.. அவர்களின் சொந்தக்காரர்களையும் அந்த அளவுக்கு காயப்படுத்தி இருக்காங்க."

"அதற்கு நான் என்ன செய்வேன்?"

"செய்ய வேண்டியதைச் சொல்லி விட்டேனே."

"அதைச் செய்ய விட என்னால் முடியாது."

"இதைச் சொல்லவா.. நான் இருக்குமிடம் தேடி வந்தாய்?"

சித்ரலேகா பதில் சொல்லாமல் வெளியேறினாள். தினகரன் எழுந்து அறைக்கதவை லேசாகத் திறந்து பார்த்தான். அவள் ஸீட்டில் போய் அமர்வதையும்... அவளது பக்கத்து சீட்டில் அமர்ந்திருந்த வையாபுரி அவளிடம் வழிய ஆரம்பித்ததையும் பார்த்தவனின் முகம் இறுகியது.

'அவன் ஜொள்ளு பார்ட்டியாச்சே...'

இருக்கையில் இருப்புக் கொள்ளாமல் அமர்ந்தவன். தன் போனில் அவளை அழைத்தான்.

"சொல்லுங்க..."

அவன் திகைத்துப் போனான். அவன் பேசுவான் என்பது அவளுக்கு எப்படித் தெரியும்..? சந்தேகத்தைக் கேட்டான்.

"எனக்குத் தெரியும்.. எப்படியென்று விளக்க வேண்டியதில்லைன்னு நினைக்கிறேன்."

'இதைத் தெரிந்து என்னத்தைக் கிழித்தாய்... என் மனம் போல் நடந்தாயா' எரிச்சலுடன் நினைத்துக் கொண்டவன்.

"உன் புத்திசாலித்தனத்தை இன்னொரு நாள் மெச்சிக் கொள்கிறேன். உன் பக்கத்து சீட்டில் இருப்பவனிடம் அதிகமாய் பேசாதே."

"ஏன்...?"

"அவன் ஒரு வழிசல் கேஸ்..."

"ஓ... அவன் என்னிடம் வழிந்தால் உங்களுக்கென்ன வந்தது?"

அவன் பல்லைக் கடித்துக் கொண்டான். இவள் வேண்டுமென்றே நான் இருக்குமிடத்திற்கு வந்து என்னுடைய கோபத்தைக் கிளற நினைக்கிறாள்.

"எனக்கு எதுவும் வரவில்லை. உனக்கு அவப் பெயர் வந்து விடாமல் நீ பார்த்துக் கொள்.." அவன் போனைத் துண்டித்து விட்டான்.

தலையை வலிப்பது போல் இருந்தது. மேஜை மேலிருந்த அழைப்பு மணியை அழுத்தினான்... அட்டெண்டர் எட்டிப் பார்த்தான்.

"ஒரு காபி வாங்கிக் கொண்டு வா."

சற்று நேரத்தில் மேஜை மேல் காபி வந்தது. எடுத்துக் குடித்தான். தலைவலி கொஞ்சம் குறைவது போல் இருந்தது.

'அவள் வந்தால் வந்து விட்டுப் போகிறாள். அவளைப் பற்றி நான் ஏன் நினைக்க வேண்டும். அவள் எக்கேடு கெட்டால் எனக்கென்ன? என் பேச்சை மதிக்காதவளைப் பற்றி நான் ஏன் கவலைப்பட வேண்டும்? அவளே சொன்னது போல.. எனக்கென்ன வந்தது? மனதிற்குள் வினா எழுப்பிக் கொண்டான்.

இதைக் கேட்ட அவன் மனம் அவனைப் பார்த்து நகைத்தது.

'உனக்கொன்றும் இல்லையா? அவளிடம் ஒருவன் வழிந்தால் உனக்கு அது கஷ்டமாக இல்லையா? அதைப் பார்த்துக் கொண்டு உன்னால் கையைக் கட்டிக் கொண்டு இருக்க முடியுமா?'

யோசித்துப் பார்க்கையில் அதற்காகத்தான் சித்ரலேகா அவன் கண் முன் வேலை பார்க்க வந்திருக்கிறாள் என்று அவனுக்குத் தோன்றியது. அவனை டார்ச்சர் பண்ண வேண்டும்.. பார்.. உன் கண் முன் என்னிடம் ஒருவன் வழிகிறான். இப்போது என்ன செய்யப் போகிறாய் என்று சவால் விடுவதே அவளது நோக்கம் என்று அவன் நினைத்தான்.

'என்ன செய்வது..' இப்போதைக்கு எதுவும் செய்ய முடியாது என்பது புரிய.. அவன் வேலையில் கவனமானான். மதிய உணவு நேரத்தின்போது.. 'அவள் சாப்பிட்டு விட்டாளா?' என்பதை அறியும் அவா அவனுக்குள் எழுந்தது.

எழுந்து அறையை விட்டு வெளியே வந்தான்.. அவள் அவளது சீட்டில் கம்ப்யூட்டர் திரையில் எதையோ பார்த்துக் கொடிருந்தாள். அவளைத் தவிர அந்த ஹாலில் யாரும் இல்லை.

'இவள் மட்டும் இங்கே என்ன பண்ணுகிறாள்?'

சுற்று முற்றும் யாராவது தன்னைக் கவனிக்கிறார்களா என்று பார்த்தபடி அவன் அவளருகே சென்றான்.

''லேகா..''

அவனது அழைப்பில் சட்டென்று விழியுயர்த்தி அவனைப் பார்த்தாள். அவள் மனம் பழைய நினைவிற்கு ஓடியது..

அன்றும் இப்படித்தான் அந்த மழை நாளில் அவளை அழைத்துக் கொண்டு வந்தபோது..

''லேகா..'' என்று அழைத்தான்.

''என்னையா கூப்பிட்டீர்கள்?'' அவள் மருண்டு நோக்கினாள்.

''ஆமாம்.. உன் பெயர் தானே சித்ரலேகா..?''

''ஆனால்... என் அப்பா.. அம்மா.. அண்ணா.. அண்ணி.''

''அப்பம்மா.. அம்மம்மா.. அப்பத்தா.. அம்மத்தா.. இன்னும் ஊரில் இருக்கும் உன் உறவு எல்லாவற்றையும் அழைக்காமல் விசயத்தைச் சொல்லு...''

''அவங்க எல்லாம் என்னை சித்ரான்னுதான் கூப்பிடு வாங்க...''

''மற்றவர்கள் போல... நான் ஏன் கூப்பிட வேண்டும்? மற்றவர்களும் நானும்.. ஒன்றா..?''

அவன் கண்கள் அவளையே நோக்கியதையும் அவள் வயிற்றில் பட்டாம் பூச்சிகள் பறந்ததையும் இ போது நினைத்துக் கொண்டாள். சித்ரலேகா.

அவன் மனதிலும் அதே நினைவுகள் ஓடியது அவ விழிகளில் இருந்தே தெரிந்தது. மீண்டும் அழைத்தா

"லேகா..."

"ம்.."

"சாப்பிடப் போகவில்லையா?"

"போக வேண்டும்.. அதற்குள்.. இந்த வேலையை எ பார்த்து விடலாம் என்று.. நினைத்தேன்.."

"நீ இன்றைக்குத்தானே வந்திருக்கிறாய். அதற்கு வேலை தெரிந்து விட்டதா?"

"இல்லை.. மேரி ஓரளவு சொல்லிக் கொடுத்தாங் இன்றைய வவுச்சர்களை டேலி பண்ணச் சொன்னாங்க அதுதான் செய்து கொண்டிருக்கிறேன்."

"அதைச் சாப்பிட்டு விட்டுச் செய்யலாமே."

"ஆரம்பித்ததை முடித்து விடலாம் என்று..."

அவள் உதட்டைக் கடித்துக் கொண்டாள். அன்று அவன் கேட்டது மீண்டும் நினைவில் எழுந்து நின்றது

"ஆரம்பித்ததை முடிக்காமல் விட மாட்டாய் போல.."

"ஆமாம் அப்படித்தான்.." அவள் வெட்கத்துடன் நகைத்ததும்.

"அப்படியா.. நான் எது கேட்டாலும் செய்வாயா?" என்றதும் கூடத்தான்.

அவள் நினைத்ததையே அவனும் நினைத்துக் கொண் டிருப்பதை.. அடுத்து அவன் கேட்ட கேள்வி உறுதி படுத்தியது.



"ஆரம்பித்ததை முடிக்காமல் விட மாட்டாய்.. அன்றிலிருந்து இன்று வரை இது மட்டும் மாறவில்லை போல..."

'வேறு எது என்னிடம் மாறியது...?'

கேட்க நினைத்தாள். கேட்கவில்லை. கேட்டால் என்ன பதில் சொல்லுவான் என்பது அவளுக்குத் தெரியும். விடை தெரிந்த கேள்விக்கு வினா எழுப்பிப் பயன் இல்லை.

அதே நேரம்.. எதையோ எடுக்கும் பாவனையில் தன் சீட்டிற்கு வந்த வையாபுரி.. அவர்கள் இருவரையும் மாறி மாறிப் பார்த்தான். அவன் விழிகளில் வியப்பும்.. சந்தேகமும் சேர்ந்து தோன்றின.



# 3

வையாபுரியின் விழிகளில் தோன்றிய சந்தேகத்தைப் பார்த்ததும் 'ஏன் இங்கே வந்தோம்..' என்று தன்னைத்தானே நொந்து கொண்டான் தினகரன்.

'இனி.. இவன் என்ன கதை கட்டி விடப் போகிறானோ...' என்று எண்ணமிடும்போதே.. 'இவன் ஏன் இங்கு வந்தான்?' என்ற கோபமும் அவனுள் எழுந்தது.

யாரும் அருகேயில்லாத சூழ்நிலையில் சித்ரலேகாவுடன் பேசிப் பார்க்க நினைத்து வந்திருக்கிறான். அவள் அருகில் தினகரன் நின்று பேசிக் கொண்டிருப்பதைக் கண்டதும்.. தன்னைப் போல் தினகரனையும் நினைத்து சந்தேகமாய் பார்க்கிறான்...

''என்ன.. வையாபுரி.. சாப்பிடப் போனவர் திரும்பி வந்திருக்கீங்களே.. எதையும் மறந்துவிட்டிங்களா?''

''இல்லை சார்.. வேறு வேலையாய் வந்தேன்...''

'என்ன வேலைடா.. தனியே இருக்கும் பெண்ணிடம் பேசிப் பார்க்கும் வேலையா.'

''சார்... ஏதோ முக்கியமாய் பேசிக் கொண்டிருந்தீங்க போல...''

வையாபுரி விசமமாக கேட்பது தினகரனுக்கு நன்றாகவே புரிந்தது. 'என்னைக் கேள்வி கேட்கிறாயே.. நீ மட்டும் யோக்கியமா? என்று கேட்கிறான்.'

இவனிடமெல்லாம் நின்று 'அவன் பேசியதில்லை. இன்று அவனிடம் போய் பேசும் நிலை அவனுக்கு வந்து விட்டதே... இது யாரால்..?

'இவளால்..' என்று எண்ணமிட்டவாறு அவளை முறைத்தான்.

அவளோ.. அவனது மனப் போராட்டத்தை சட்டை செய்யாதவளாய் கம்ப்யூட்டரை அணைத்தாள். சாப்பாட்டுப் பையை எடுத்துக் கொண்டு எழுந்தாள்.

''நான் என் பேனாவை எடுத்துப் போக வந்தேன் சார். இதோ எடுத்து விட்டேன். போய் விடுகிறேன். ஸாரி சார் த டிஸ்டர்பன்ஸ்..'' வையாபுரி போய் விட்டான்.

'தொந்தரவுக்கு மன்னிக்க வேண்டுமா? என்னடா இது'

பேசாமல் தன் அறையில் அமர்ந்து தன் வயிற்றை நிரப்பியிருக்கலாம் என்று தோன்றியது தினகரனுக்கு. அதை விட்டு விட்டு.. இவள் சாப்பிட்டாளா என்று கவனித்துப் போக நினைத்தது.. அவன் தவறுதான்.



மனம் ஒன்று நினைக்க.. அவன் வாய் அதற்கு எதிர் மறையாய் பேசியது.

''சாப்பாடு கொண்டு வந்து விட்டாயா?''

''ஆமாம்.''

''எங்கேயிருந்து.''

''இது என்ன கேள்வி? என் மாமாவின் வீட்டில் தானே தங்கியிருக்கிறேன் அங்கேயிருந்துதான் கொண்டு வந்தேன்.''

''நீ ஏன் உன் மாமாவின் வீட்டில் தங்க வேண்டும்?''

''ஹாஸ்டலில் தங்க என் பேரன்ட்ஸ் பெர்மிசன் தரவில்லை.''

''மாமாவின் வீடென்றால் வந்து பார்த்துப் போக வசதி.. அப்படித்தானே...?''

தினகரன் எங்கே வருகிறான் என்பது சித்ரலேகாவிற்கு நன்கு புரிந்தது... அவளுடைய பெரிய மாமாவின் மகன் மனோகரன் வந்து போக வசதி என்கிறான்.

'உன் புத்தி இப்படித்தான் போகும்..' என்ற எரிச்சலுடன் அவள் கிளம்பினாள்.

''பதில் சொல்லாமல் போனால் எப்படி?'' அவன் தடுத்தான்.

''என்ன பதில் சொல்ல வேண்டும்?'' அவள் முறைத்தாள்.

''உன் மாமா வீட்டில் இருந்தால் உன்னைப் பார்க்க விரும்புகிறவர்கள் தாராளமாய் வந்து பார்த்து விட்டுப் போகலாம்... அந்த வசதிக்காகத்தானே உன் மாமாவின் வீட்டில் இருக்கிறாய்?''

"ஏன்.. நான் ஹாஸ்டலில் இருந்தால்.. என்னை
பார்க்க விரும்புகிறவர்கள் வந்து பார்த்துவிட்டுப் போ
மாட்டார்களா? இல்லை பார்த்து விட்டுப் போனத்
லையா?"

"இங்கே விடானால் கூடத் தங்கலாமே..."

"இப்படிப் பேச உங்கள் நாக்கு கூசவில்லை?"

"ஏன் கூச வேண்டும்? சித்தப்பன் வீட்டிற்கு அ
வராமல் இருப்பானா?"

"அப்படிப் பார்த்தால் என் அம்மாவும் மனோ
தானுக்கு சொந்த அத்தைதான். அத்தை வீட்டிற்கு வ
தங்கிப் போக மாட்டாரா?"

"என்னடி சொன்னாய்?"

தினகரன் படாரென்று அவள் கன்னத்தில் ஓ
அறைந்து விட்டான். அடிபட்ட கன்னத்தைப் பிடித்
கொண்டு அவள் உறுத்து விழிக்க.. அவன் அவசர
சுற்று முற்றும் மீண்டும் பார்த்துக் கொண்டான். யா
இல்லை.

"மனோ.. அத்தானா? அவ்வளவு தூரத்திற்கு வ
விட்டாயா?"

"சொந்த தாய் மாமனின் மகனை வேறு எப்படிக்
பிடுவது?"

"தாய் மாமன் மட்டும்தான்டி உனக்குச் சொந்தம
தெரிவார். மற்றவங்க உன் கண்ணில் பட மாட்டா

"நீங்க குதர்க்கமாய் பேசுகிறீங்க.."

"உள்ளதைச் சொன்னால் குதர்க்கம் என்கிறாயா

"இவ்வளவு பேச்சை நீங்கள் பேசக்கூடாது..."



"வேறு யார் பேச வேண்டும்.. உன் மனோ அத்தானா?"

"வேண்டாம்... உறவுகளை கொச்சைப் படுத்தாதீர்கள்."

"நானா கொச்சைப் படுத்துகிறேன்? மனோ அத்தான் என்று கொஞ்சியது யார்? நீதானே..."

"இப்போது என்னதான் வேண்டும் உங்களுக்கு?"

"நீ உன் ஊரை விட்டு வந்தது தவறு."

"வேலை பார்க்க வந்திருக்கிறேன்."

"வேலை பார்க்க வந்தவள் ஹாஸ்டலில் தங்கியிருக்க வேண்டும்."

"என் வீட்டில் அதை அனுமதிக்கவில்லை."

"யாரிடம் கதை சொல்கிறாய்?"

"உங்களிடம் கதை சொல்லவேண்டுமென்று எனக்கு என்ன ஆசையா? இல்லை கதை சொல்லி ஏமாற்ற நீங்கள் என்ன குழந்தையா? நீங்களே கதை சொல்லி பிறரை ஏமாற்றுபவர்.. உங்களைப் போய் ஒருவர் ஏமாற்ற முடியுமா?"

தினகரனின் கண்களில் சீற்றம் வந்தது. அவன் பார்வை அவளைச் சுட்டு எரித்து விடுவது போல் அவள் மேல் படிந்தது. சித்ரலேகாவோ அவன் கோபம் கண்டு அஞ்சாமல் நின்றாள்.

"ஸோ... நான் உன்னை ஏமாற்றினேன் என்கிறாய்."

"இல்லையென்றும் நீங்கள் சொல்வீர்களா?"

"அதற்குப் பதில்... என்னை ஏமாற்ற.. ஐ மீன்.. பழி வாங்க நீ இங்கே வந்திருக்கிறாய்..."

"அது உங்கள் கற்பனை... நான் வேலை செய்ய வந்திருக்கிறேன்."

சித்ரலேகா பதில் சொல்லிக் கொண்டிருக்கும்போது.. ஒருவர் பின் ஒருவராய் மற்றவர்கள் சாப்பிட்டு முடித்து விட்டு அவரவர் இருக்கைகளுக்கு வந்து அமர ஆரம்பித்தார்கள். தினகரன் இயல்பாக. ஆனால் வேகமாக அவனது அறைக்குள் சென்று விட்டான். சித்ரலேகா சாப்பாட்டுப் பையை எடுத்துக் கொண்டு டைனிங் ஹாலுக்கு விரைந்தாள். எதிரில் வந்த மேரி ஆச்சரியமாய் பார்த்தாள்.

''இப்போதுதான் சாப்பிட வருகிறாயா? ஐ ஆம் ஸாரி... நான் நீ இருப்பதை மறந்தே போய் விட்டேன்.''

''அதற்கு என்ன...? பரவாயில்லை. நீங்கள் சொன்னபடி வவுச்சர்களை கம்ப்யூட்டரில் பீட் பண்ணி டேலி பண்ணி முடித்து விட்டேன். வேலையை முடித்துவிட்டுச் சாப்பிட வரலாமென்று நினைத்தேன். லேட்டாகி விட்டது.''

''பரவாயில்லையே.. அது ஒரு நாள் பூராவும் செய்ய வேண்டிய வேலை. நீ மதியத்திற்குள் முடித்து விட்டாயே.. பாஸ்ட் வொர்க்கர்தான்.''

''தேங்க்ஸ்..''

''எத்தனை கூடைகளில் நிரப்பிக் கொண்டு வந்திருக்கிறாய்?''

மேரி திடீரென்று சம்பந்தமில்லாமல் வினவ.. சித்ரலேகா திகைத்தாள்.

''எதைச் சொல்கிறீர்கள்?''

''எதைச் சொல்கிறாய்ன்னு கேட்க வேண்டும்.''

''ஸாரி... ஸாரி... எதைச் சொல்கிறாய்?''

''தேங்க்ஸை சொல்கிறேன்... இப்போது ஸாரியும் சேர்ந்து விட்டது. இரண்டையும் கூடை கூடையாய் கொண்டு வந்திருக்கிறாயா?''



சித்ரலேகா சிரித்து விட்டாள்... மேரி அவள் சிரிக்கும் போது கண்களும் சேர்ந்து சிரிப்பதை ஆச்சரியத்துடன் பார்த்தாள்.

''யு லுக் ஸோ பியூட்டி புல்...''

''தேங்க்ஸ்...''

''மறுபடியுமா..''

''ஐயோ.. மறந்து விட்டேன்.''

இப்போது இருவரும் சேர்ந்து சிரிக்க ஆரம்பித்தனர்... சாப்பிட்டு விட்டு வந்து கொண்டிருந்த உமாவும்.. மகேஸ்வரியும் அவர்கள் சிரித்துக் கொண்டிருப்பதைக் கண்டு இயல்பாக அவர்களின் அருகே நின்றனர்.

''என்னப்பா ஜோக்..? எங்களுக்கும் சொல்ல மாட்டிங்களா?''

அவர்கள் பேசிக் கொண்டிருந்தபோது வையாபுரி வந்தான்.. சித்ரலேகாவின் கையில் இருந்த சாப்பாட்டுப் பையைப் பார்த்தவுடன் புருவம் உயர்த்தினான். வையாபுரியைக் கண்ட மற்ற பெண்கள் தங்களுக்குள் எதையோ பேசிச் சிரித்துக் கொண்டனர்.

''என்ன வையாபுரி சார்.. சாப்பிட்டு விட்டு வந்து விட்டீர்கள் போல.. வீட்டுக்குப் போகாமல் இங்கே என்ன இருக்குன்னு நின்று விட்டீர்கள்?''

மேரி வினவ. உமா அதற்குப் பதில் சொன்னாள்.

''என்ன மேரி இப்படிக் கேட்கிறாய்? இங்கே ஸ்பீடு பிரேக் இல்ல இருக்கு?''

''ஸ்பீடு பிரேக்கா.. அப்படின்னா?'' உமா அறியாதவள் போல் வினவ இப்போது மேரி அதற்குப் பதில் சொன்னாள்.

"பெண்கள் கூடி இருக்கும் இடம் சாருக்கு ஸ்பீடு பிரேக்கர்தான்."

அவர்கள் கொல்லென்று சிரிக்க... வையாபுரியோ அதைப் பற்றி அலட்டிக் கொள்ளாமல் 'இதைப் போல நான் எத்தனை வார்த்தைகளைக் கேட்டிருப்பேன்...' என்ற தோரணையில் நின்று கொண்டு இருந்தான். அவன் பார்வை சித்ரலேகாவின் கையில் இருந்த சாப்பாட்டுப் பையின் மீது விழுந்தது.

"சித்ரலேகா... நீங்கள் இன்னுமா சாப்பிடப் போகவில்லை?"

"ஆஹா.. அவள் நேரத்திற்கு சாப்பிடாததில் உங்களுக்கென்ன குறை வந்து விட்டது?"

"அதற்காக கேட்கவில்லை மகேஸ்வரி.. இவ்வளவு நேரமும் இவங்க சீட்டின் பக்கத்தில் ஏ.ஓ. சார் நின்று பேசிக் கொண்டிருந்தார். அதனால்தான் இவங்க லேட்டாக சாப்பிட வருகிறாங்க..."

"என்னது..."

பெண்கள் மூவரும் ஒரே குரலில் ஆச்சரியமாய் வினவிவிட்டு.. அதைவிட ஆச்சரியமாய் சித்ரலேகாவைப் பார்த்துக் கொண்டு இருக்கையிலேயே வையாபுரி ஓர் பார்வை பார்த்துக் கொண்டு அவனது சீட்டிற்குப் போய் விட்டான்.

"ஏன் சித்ரா.. நிஜமாகவே ஏ.ஓ. உன்னிடம் வந்து பேசினாரா?"

"ஆமாம்.. ஏன் இப்படி ஆச்சரியமாய் கேட்கறீங்க?"

"அவர் பெண்களிடம் நின்று பேச மாட்டாரே..."



உமா பொறாமையுடன் கூறினாள். சித்ரலேகாவிற்கு அதைக் கேட்கும்போது பெருமையாக இருந்தது. தினகரன் அப்படிப் பட்டவன்தானே... விரியூரிலேயே அவன் மேல் கண்களால் வலை வீசப் பலர் முயன்று தோற்றிருக்கிறார்களே.

மாநிறம்தான். ஆனால் அவனது உயரமும்.. ஆஜானுபாகுவான உடலும்.. கம்பீரமான தோற்றமும்.. பலரை ஈர்த்திருக்கிறது. ஆனால் அவன்.. சித்ரலேகா ஒருத்தியைத் தான் நிமிர்ந்து பார்த்தான். அதில் சித்ரலேகாவிற்கு கர்வம் கூட இருந்தது. அதன் பின்னால்தானே உண்மை என்னவென்று தெரிந்தது.

அவனை ஈர்த்தது சித்ரலேகா அல்ல. அவனது குடும்பம்தான். இது தெரிய வந்தபோது சித்ரலேகா எப்படித் துடித்துப் போனாள்..?

எண்ணங்களுக்குக் கரையமைத்தபடி.. உமாவைப் பார்த்த சித்ரலேகா தன் மனதை மறைத்து மென்மையாகச் சிரித்தாள்.

"மேரியைத் தேடி வந்தார். அவங்க இல்லையென்றதும் என்னிடம் விசாரித்து விட்டுப் போய் விட்டார்."

"நிஜமாகவா சித்ரா.. ஏ.ஓ. என்னைப் பார்க்க வந்தாரா?"

மேரி அவசரமாய் உள்ளே விரைய.. மற்ற இரு பெண்களும் தங்களுக்குள் பேசிக் கொண்டனர்.

"பாரு மகேஸ்.. இவள் இப்படி ஓடுவதை."

"என்றைக்கும் இல்லாத திருநாளாய் ஏ.ஓ. இவளைத் தேடி வந்தால்.. இவள் ஓட மாட்டாளா?"

அவர்கள் பேசிக் கொள்வதைக் கேட்டபடி சித்ரலே அங்கிருந்து அகன்று விட்டாள்... அவசரமாய் ம உணவை உண்டு முடித்து விட்டு சீட்டிற்கு திரு வந்தபோது.. மேரியின் அருகில் நின்று உமா விசாரி கொண்டிருந்தாள்.

"அப்புறம் என்ன சொன்னார்?"

"அவ்வளவுதான் சொன்னார்."

"அவ்வளவுதானா..."

உமா மனநிம்மதியுடன் அவளது வேலையைப் ப கப் போய் விட்டாள். மேரி எரிச்சலுடன் கம்ப்யூட்ட உயிர்ப்பித்தாள். அவளது ஏமாற்றம் அவளுக்குத்தா தெரியும்.

சித்ரலேகா சொன்னாள் என்று அவசரமாய் தின னின் அறைக் கதவைத் தட்டினாள். சாப்பிட்டுக் கொ டிருந்தவன் எரிச்சலுடன்.

"யெஸ்.. கமின்.." என்றான்.

உள்ளே நுழைந்த மேரி அவன் சாப்பிட்டுக் கொ டிருப்பதைக் கண்டதும் தயங்கி நின்றாள்.

"என்ன வேண்டும்?"

"நீங்கள் என்னைத் தேடினீர்களாமே."

'இவளை நான் தேடினேனா.. இது என்ன புதுக்கதை இந்தக் கதையை யார் சொன்னது..?' தினகரன் பு சுருக்கினான்.

"அப்படின்னு உங்களுக்கு யார் சொன்னது?"

"சித்ரலேகா தான் சொன்னாள்."



கணப் பொழுதில் தினகரனுக்கு என்ன நடந்திருக்கும் என்று புரிந்து விட்டது.

"யெஸ்.. யெஸ்.. உங்கள் சீட்டில்தானே.. இந்த பெய்டு வவுச்சர் டீலிங் இருக்கிறது..?"

"ஆமாம் சார்..."

"அதன் லாஸ்ட் மன்த் டீடெயில் வேண்டுமே."

"கம்ப்யூட்டரில் பிரிண்ட் அவுட் பண்ணிக் கொடுக்கிறேன் சார்."

"ஓ.கே.. யு கேன் கோ..."

'அவ்வளவுதானா..' என்ற ஏமாற்றத்துடன் அவள் சீட்டில் வந்து உட்கார்ந்தாள்.. உமா வேறு என்ன விசயமென்று தூண்டித் துருவிக் கேட்டு விட்டு.. 'அவ்வளவுதானா.. ப்பூ..' என்றபடி போனால் மேரிக்கு எப்படி இருக்கும்?

தினகரன்.. சாப்பிட்டு முடித்துவிட்டு... மீண்டும் வேலையைத் தொடங்கியபோது.. மேரி வந்து அவனிடம் ஒரு பேப்பரை நீட்டினாள்.

"என்ன இது?"

"நீங்கள் கேட்ட ஸ்டேட்மென்ட் சார்."

"ஆமாமாம். நான் கேட்டேனில்லை... மறந்து போய் விட்டது."

அவன் ஸ்டேட்மென்டை வாங்கிக் கொண்டான். அவள் வெளியேறி விட்டாள். எரிச்சலுடன் ஸ்டேட்மென்டை குப்பைக் கூடையில் வீசினான். மனம் சித்ரலேகாவைத் திட்டித் தீர்த்துக் கொண்டிருந்தது.

'இவளை யார் இங்கே வரச் சொன்னது..? என் கண் எதிரே இருந்து கொண்டு என் நிம்மதியைக் கெடுத்துக் கொண்டிருக்கிறாள். வந்த முதல் நாளிலேயே என்னை பொய் சொல்ல வைத்து விட்டாள். இவளை என்ன செய்வது...'

எரிச்சலுடன் யோசிக்கும்போதே.. அவளைத் தன்னால் எதுவும் செய்ய இயலாது என்பதும் அவன் மனதில் உதயமாக.. அவனது எரிச்சல் இன்னும் அதிகரித்தது. அவன் கேட்டதைச் செய்யவும் மாட்டாள். அவனது மன நிம்மதியையும் கொடுப்பாள். என்ன மாதிரி அராஜகம் பண்ணுகிறாள் இவள். அராஜகம் செய்ய இவளுக்குச் சொல்லியா தர வேண்டும்? அவளது குடும்பத்திற்கு அது கை வந்த கலை ஆயிற்றே...

வயலுக்குப் போன தந்தை.. தலையில் ரத்தம் ஒழுக வீட்டுக்கு வந்த போது.. தினகரன் பதறிப் போய் தந்தையைப் பிடித்துக் கொண்டான்.

அதற்குள் வீட்டுக்குள்ளே இருந்து ஓடி வந்த அவனுடைய அம்மாவும்.. அடுத்த தெருவில் திருமணம் செய்து கொடுக்கப்பட்டிருந்த அவனுடைய அக்காவும் அலறினர்.

"ஐயோ.. என்னங்க.. என்ன ஆச்சு.. ரத்தம் கொட்டுதே.."

"ஒன்றுமில்லை சகுந்தலா.. பயப்படாதே..."

"பயப்படாமல் எப்படி அப்பா இருப்பது.. ரத்தம் இப்ப வழிகிறதே... டேய் தினா.. வண்டியை எடுடா..."

"அம்மாவே பயந்து போயிருக்கிறாள். நீ வேறு அவளை இன்னும் பயமுறுத்தாதே திலகா.."



"எப்படிப்பா பயப்படாமல் இருக்க முடியும்? எந்தப் படுபாவி இப்படி வினையை மூட்டினான்?"

திலகா வாய்விட்டு அழுதபோது.. அவளின் கணவன் ஜெகன் வந்து உருமினான்.

"வேறு எவன் வினையை மூட்டுவான்? மாமாவிற்கு வினையை மூட்ட இந்த ஊருக்குள் வேறு யார் இருக்கிறார்கள்?"

தினகரனுக்கு புரிந்து போனது.. அவன் கண்கள் சிவக்க.. தன் தகப்பனாரின் தலையில் இருந்து வழிந்த ரத்தத் துளிகள் சிந்திய மண்ணைப் பார்த்தான்.



# 4

அவனுடைய தந்தை அன்று சிந்திய ரத்தம்.. இன்றும் தினகரனின் நெஞ்சில் நிற்கிறது. அவன் மனதில் வன்மம் புகுந்தது. பகை உணர்வு மிகுந்தது. அவன் பழிக்குப் பழி வாங்கத் துடித்தான். அவனது தாய் தடுத்தாள்.

"வேண்டாம்டா தினா.. எந்தப் பாவியோ.. இரண்டு குடும்பத்திற்கும் பகையை மூட்டிக் குளிர் காய்ஞ்சுக்கிட்டு இருக்கான். நீயும் கோபப்பட்டு விடாதே.. என்னால் அதைத் தாங்கி நிற்க முடியாதுடா..."

அவனது அக்கா திலகாவோ... சகுந்தலாவை கோபித்தாள்.

"என்னம்மா நீ.. அடிபட்டு நிற்கிறது நம்ம அப்பாம்மா.. நீயோ நியாயம் கேட்கப் போகிறவனை தடுத்து

நிறுத்துகிறாயே... என் புருசன் மட்டும் தனியாய் பே
நின்னா... நீ யாருடா எங்க இரண்டு வீட்டுக்கும் குறுக்
வரன்னு அந்த ஆள் சட்டம் பேசுவார். அதனால் தாலே
தம்பியை அத்தான் கூடப் போகச் சொல்கிறேன்.
யாமல் தடுக்காதேம்மா.. டேய் தினா.. நீ போடா.''

''போகாதே.. தினா.. உன்னைக் கையெடுத்துக் கு
பிட்டுக் கேட்டுக்கிறேன்... அங்கேயும் காயம் ப
டிருக்கு. அவங்களும் ரத்தம் சிந்தியிருக்காங்க.''

''ஏம்மா.. அவங்க ரத்தம் சிந்தினால்.. நம்ம அப்
வுக்கு நடந்த அநியாயம் இல்லைன்னு ஆயிடுமா
ஏம்மா இப்படி இருக்கிற? தினா நீ போடா.. நீயு
அத்தானும் நம்ம ஆளுகளைக் கூப்பிட்டுக் கொண்
போய்.. இரண்டில் ஒன்று பார்த்து விட்டு வாங்க...''

''தினா.. போகாதே.. இரண்டில் ஒன்றுன்னா எதை
நான் பார்ப்பேன்? இரண்டு கண்ணில் எந்தக் க
உயர்த்தி?''

''அம்மா.. கட்டின புருசனை விட உனக்குப் பிறந்
வீடு பெரிதாய் போய் விட்டதா? அப்பா அடிபட்டு
கிடக்கிறார். நீ உன் அண்ணனைக் காப்பாற்றத் துடிக்கி
இது கொஞ்சம்கூட நல்லாயில்லைம்மா. தினா இந்தம்
பேச்சைக் கேட்காதே. நீ போடா.. அவருக்கு மட்டு
தான் கையிருக்கா. நமக்கு இல்லையா?''

''தினா.. கையிருக்கு என்பதற்காக எதையும் செய்
விட நினைக்காதே. என் அண்ணன்.. தங்கை புருசனை
ரத்தம் கொட்டும்படி ஒரு நாளும் அடிக்க மாட்டா
என்ன நடந்ததுன்னு விசாரி.''

''விசாரித்தவரை போதும்டா... பழிக்குப் பழி.. ரத்த
திற்கு ரத்தம்தான்.''



''அதைத்தான் அங்கே என் அண்ணனும் கொட்டி விட்டாரே...''

''அதில் என்னம்மா உனக்கு அத்தனை வருத்தம்? என் அப்பா மண்டை உடையும்போது... உன் அண்ணனின் மண்டை மட்டும் உடையக் கூடாதா?''

''உன் அப்பாவின் மண்டையை உடைத்தது என் அண்ணனாக இருக்க முடியாது... அதே போல் என் அண்ணனின் மண்டையை உடைத்ததும் உன் அப்பாவாக இருக்க முடியாது. இடையில் என்ன நடக்கிறதுன்னுதான் எனக்குப் பிடிபட மாட்டேன் என்கிறதடி மகளே...''

சகுந்தலா குமுறி அழுதாள்... ஜெகனின் விழிகள் மின்னின.

'முதலில் இந்தப் பொம்பளையை காடு சேர்த்தால் தான்.. இரண்டு வீட்டையும் அடித்துக் கொள்ள வைக்க முடியும்..' என்று பல்லைக் கடித்துக் கொண்டான் அவன்.

மனதில் இருப்பதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் மனைவியை அதட்டினான்.

''ஏண்டி இப்ப அழுகிற? உன் அம்மாவிற்கே அக்கறை இல்லாதபோது நீயேண்டி பதறுகிற... உடந்தைப்பட்டவங்களுக்கு இல்லாத கவலை நமக்கென்ன வந்தது? உன் தாய்மாமன் ஊர் பண்ணையார். காசு பணம் இருக்கிற மமதையில் தங்கச்சி புருசன்னு கூடப் பார்க்காமல் உன் அப்பாவின் மண்டையை உடைக்கிறான். இன்றைக்கு தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போய் விட்டது. நாளைக்கும் அப்படியே இருக்கும்ன்னு என்னடி நிச்சயம்?''

''சொல்லாதீங்க அத்தான். அதுக்கு மேல சொல் தீங்க... தினா.. இப்போது அத்தான்கூட நீ போகப் போ றாயா இல்லையா.''

சகுந்தலா மகனின் முகத்தைப் பார்த்து தீர்மான கூறினாள்.

''தினா.. என் வார்த்தையை மீறி நீ என் அண்ண வீட்டிற்கு சண்டைக்குப் போனால்... அதன் பின்ன என்னுடன் பேசக்கூடாது.''

''அம்மா...''

''நான் உன் அம்மா என்பது உன் நினைவில் இ தால் உள்ளே போ.''

தினகரன் தாயின் மேல் அதீத பாசம் கொண்ட அழகான சிவந்த நிறத்துடன்.. வட்ட முகத்தில் பெ விழிகளுடன் ஓர் அரசியைப் போன்ற அழகுடன் இ கும் சகுந்தலாவின் மகன் தான் என்பதில் அவனுக் பெருமை அதிகம் உண்டு.

ஜாடையில் திலகாதான் சகுந்தலாவின் பிரதி பி மாக இருப்பாள். தினகரன் அவனுடைய தந்தை பி கரனின் ஜாடையில் இருப்பான். அதில் தினகரனு வருத்தமுண்டு.

''அக்கா மட்டும் உன்னைப் போல் சிகப்பாய் இ கிறாள். நான் மட்டும் கருப்பு அம்மா..''

''இது கருப்பு நிறமில்லைடா கண்ணா.. மாநிறம்''

''அதுதான் ஏன்.. அக்கா மட்டும் அழகு.''

''போடா முட்டாள்.. நீதான் உன் அக்காவைவிட அ நீ அப்படியே உன் அப்பாவைப் போல இருக்கேடா



சகுந்தலா காதலுடன் கணவனைப் பார்ப்பாள். பிரபாகரனின் விழி மின்னும்.. தன் மகனைத் தூக்கிக் கொண்டு சொல்வார்.

''தினா.. நீ வளர்ந்த பின்னால் பாரேண்டா.. உன் அம்மா என் பின்னால் சுற்றி வந்ததைப் போல் எத்தனை பெண்கள் உன் பின்னால் சுற்றி வருவார்களோ...''

பிரபாகரன் சொன்னதுதான் உண்மை ஆனது. தினகரன் வளர்ந்து.. வாலிபன் ஆனபோது.. அவனின் கம்பீரமான தோற்றம் பலரை கவர்ந்து இழுத்தது.. சித்ரலேகா உள்பட...

எப்போதும் தாய் சொல்லைத் தட்டி அறியாதவன். அவளின் வார்த்தைக்குக் கட்டுப்பட்டு வீட்டுக்குள் சென்று விட்டான்.

ஜெகன் மனைவியைப் பார்த்தான். அவன் விழி சொல்லிய சேதியைப் புரிந்து கொண்ட திலகா தாயிடம் ஆடித் தீர்த்து விட்டாள். சும்மாவே அவளுக்கு தந்தையின் மேல் பாசம் அதிகம். 'அப்பா பொண்ணு' என்று செல்லமாய் வளர்ந்தவள். 'பிரபாகரனின் மகள்' என்பதில் அதிகம் பெருமை கொண்டவள். இன்று தகப்பனின் தலையில் ரத்தக் காயத்தைக் கண்டதும் பொருமினாள்.

''மகனுக்கு தடை போட்டுட்டேயில்ல... உனக்கு உன் பிறந்த வீடுதான் முக்கியம்னு காட்டிட்ட இல்ல.. அப்புறம் ஏம்மா.. எங்க அப்பாவைக் கல்யாணம் பண்ணிக்கிட்ட? பேசாமல் உன் அண்ணனுக்குத் தங்கச்சியா உன் பிறந்த வீட்டிலேயே இருந்திருக்கலாமே.. ஏன் எங்க அப்பாவின் வாழ்க்கையை நாசம் செய்கிற..?''

உணர்ச்சி வசப்படும்போது யாரோடு... என்ன வார்த்தைகள் பேசுகிறோம் என்பது மறந்து போய்

விடுகிறது... திலகாவிற்கும் அப்படித்தான் எப்போதெல்லாம் அவளுடைய அப்பாவிற்கும்.. தாய் மாமனுக்கும் சண்டை மூள்கிறதோ.. அப்போதெல்லாம் அவள் தினகரனைப் போய் தட்டிக் கேட்கச் சொல்லித் தூண்டி விடுவதும்.. சகுந்தலா அதை தடை செய்வதும்.. அதைத் தொடர்ந்து அவள் தாய் மீது பாய்வதும் தவறாமல் நிகழ்ந்தன.

அதனால்தான்.. அந்த வலியும்.. மன வேதனையும் தாங்காமல்தான் தினகரன் அந்த முடிவை எடுத்தான். அவன் நினைத்தது போலவே அனைத்தும் நடந்தன... இறுதியில் அவன் வெற்றிக் கோட்டைத் தொட்டு விட ஒரு நூலளவு இடைவெளி இருந்தபோது சித்ரலேகா அவனின் குறுக்கே வந்து தடுத்து விட்டாள்.

தினகரனிடமிருந்து பெருமூச்சு ஒன்று வெளியேறியது. இத்தனை நாள் இருந்த மன அமைதியை இன்று குலைத்து விட்டு எவ்வளவு நிம்மதியாய் அவள் கண் முன் அவள் நடமாடிக் கொண்டிருக்கிறாள் என்று எண்ணும்போதே... அவனுக்கு மனம் வலித்தது.

'இத்தனை நாள் நிம்மதியாகவா இருந்தேன்...'

என்று சித்ரலேகாவால் அவனது திட்டம் தடைபட்டு நின்றதோ அன்றிலிருந்தே அவனது மனநிம்மதி அவனை விட்டுப் போய் விட்டதே... அவள் என்னவோ.. அவனைப் பற்றிய எண்ணமே இல்லாமல் போய் விட்டாள். ஆனால் அவன் அவளை மறக்கவும் முடியாமல் கூட வாழவும் முடியாமல் தினம் தினம் செத்துப் பிழைக்கிறானே.

'இது ஓர் வாழ்வா..?'



அவன் மீண்டும் பெருமூச்செறிந்தான். மாலையில் வேலை முடிந்து அவனது அறையை விட்டு வெளியே வரும்போது வெறிச்சோடித் தெரிந்தது...

'அவள் போய் விட்டாளா...'

அறிந்து கொள்ளும் ஆவல் அடிமனதில் எழுந்தது.. அவள் போகாமல் என்ன செய்வாள் என்று தோன்றவில்லை.. இத்தனை நாளாய் அவளைப் பற்றி இல்லாத கவலை இன்று ஏன் வந்தது என்றும் தோன்றவில்லை.

'இதைத்தான் அவள் எதிர்பார்த்தாளோ...'

அவளைப் பற்றிய நினைவே இல்லாமல் அவன் வாழ்ந்து விடக்கூடாது என்பதுதான் அவள் திட்டமோ. அவன் கண் முன்னே நடமாடினால் எப்படியும் அவளைப் பற்றி நினைத்துத்தானே ஆகவேண்டும் என்பதுதான் அவளது எண்ணமோ..

எது எப்படியாக இருந்தாலும் இப்போது அவள் போய் விட்டாளா என்று அறிவதுதான் முக்கியம் போல் தோன்ற செல்போனை எடுத்தான்.

''சொல்லுங்க...''

''சொல்லி விட்டாலும்.. நீ கேட்டுக் கொள்கிற ஆள்தான்.''

''கேட்டுக் கொள்ளாமல் என்ன செய்தேன்.''

''ஆமாமாம்.. கேட்டு விட்டுத்தான் மறு வேலை பார்த்தாய்...''

''என்னை என்ன சொன்னாலும் நான் கேட்டுக் கொள்ளத் தயார் தான். இதை அன்றைக்கே உங்களிடம் சொல்லி விட்டேன். இனறைக்கும் அதைத்தான்

சொல்கிறேன்.. இதைக் கேட்கவா இப்போது போ
பண்ணினீர்கள்?''

''எங்கே இருக்கிறாய்?''

''வீட்டுக்குப் போய் கொண்டு இருக்கிறேன்.''

''அதுதான் உன் வீடா.''

''தற்போதைக்கு நான் தங்கியிருக்கும் வீடு.''

''எப்படிப் போய்க் கொண்டு இருக்கிறாய்?''

''புரியவில்லை.''

''உனக்குப் புரியாது. எதுதான் உனக்குப் புரிந்த
இது புரிவதற்கு. பஸ்ஸில் போகிறாயான்னு கேட்டேன்

''ஆமாம்ன்னு சொன்னால் என்ன செய்வீர்கள்? உ
கள் காரில் என்னைக் கொண்டு போய் விடுவீர்களா?

''என் காரில் உன்னை அடுத்தவர் வீட்டில் எ
கொண்டு போய் விட வேண்டும்? என் வீட்டிற்
அழைத்துப் போகிறேன்.. நீ மட்டும் குறுக்கே வராம
இருந்தால் போதும்.''

''உங்களுக்கும்.. எனக்கும் நடுவில் யாரும் வரமா
டார்கள். இதற்கு நான் உத்தரவாதம் தருகிறேன். ஆனா
உங்களுக்கும் எனக்கும் நடுவில் குடும்பப் பகை
நீங்கள் கொண்டு வந்து.. என்னைப் பகடைக் காயாக்
என் குடும்பத்தை அவமானப்படுத்த நினைத்தால் நா
அதற்கு ஒரு போதும் இடம் கொடுக்க மாட்டேன்.''

''ஏய்.. உன் குடும்பம்.. உன் குடும்பம்.. உன் குடு
பம்.. இதையே ஜெபித்துக் கொண்டிரு. நீ உருப்பட்
விடுவாய்...''



''உருப்படாவிட்டால் பரவாயில்லை. இப்படியே இருந்துவிட்டுப் போகிறேன்.''

''உன்னைத் திருத்தவே முடியாதுடி.''

''திருத்துகிற அளவுக்கு என்னிடம் மோசமான குணம் எதுவும் இல்லை.''

''விடுடி.. உன்னிடம் மனுசன் பேசுவானா.''

''நீங்கள்தான் போனில் கூப்பிட்டதா.. எனக்கு நினைவு.''

''அதற்கு என்ன செய்யலாம் என்கிறாய்.''

''எதற்காகக் கூப்பிட்டீர்கள் என்பதும் நினைவிருக்கிறது.. நான் பஸ்ஸில் போகவில்லை.. மாமாவின் வீட்டிலிருந்து கார் அனுப்பி இருக்கிறார்கள்.''

''காலையிலும் அவர்கள் காரில்தான் வந்தாயா?''

''ஆமாம்.''

''உன் தாய் மாமன் வீட்டுப் பெருமையை என்னிடம் பீற்றுகிறாயா?''

''உங்கள் தாய் மாமனைக் கொண்டாட உங்களுக்குத் தெரியவில்லை. அதற்கு நான் என்ன செய்வது.''

மறுமுனையில் அவள் சிரிப்பது கேட்டது. பல்லைக் கடித்தபடி போனைத் துண்டித்தான். அலுவலகத்தை விட்டு வெளியே வந்தான். மாலை நேரக் காற்று அவன் முகத்தில் மோதிச் சென்றும் அவன் மனம் லேசாகவில்லை. கனமாய் இருந்தது.

'எப்படிப் பேசுகிறாள். எங்கிருந்து இவ்வளவு தைரியம் அவளுக்கு வந்தது. முதலில் எல்லாம் இப்படிப் பேச மாட்டாளே.'

அவள் மருண்டு விழித்துப் பார்க்கும் அந்த நாட்க அவனுக்கு நினைவு வந்தது. அவனைப் பார்த்து விட்டா அவளுக்குப் பேச்சே வராது.. கை கால்கள் நடுங்க.. பே திணறுவாள். அவளது மருளலில் அவன் உதடுகளி இளநகை அரும்பும்.

ஓர் மழை நாளில்.. தினகரன் மோட்டார் பைக்கி அருகிலிருந்த டவுனுக்குப் போய் விட்டுத் திரும்பி வந் கொண்டிருந்தபோது.. அவள் சாலையில் அவளது ஸ்கூ டியின் அருகே பயத்துடன் நின்று கொண்டிருந்தா அவன் வண்டியின் வேகம் குறைத்து அவளருகே நி தினான். பள்ளிச் சீருடையில் இருந்தவள்.. அவனை கண்டதும் இன்னும் நடுங்க ஆரம்பித்தாள்.

'நான் என்ன சிங்கம்.. புலி.. கரடியா?' அவனுக்கு எரிச்சல் மண்டியது.

''என்ன ஆச்சு...?''

''ம்ம்.. வந்து.. ஸ்கூட்டி... வந்து... ரிப்பேர்.. வந்து...''

''எத்தனை தடவை 'வந்து' போடுவாய்.. என்னை கண்டால் ஏன் பயப்படுகிறாய்? நான் என்ன உன்ன விழுங்கி விடுவேனா?''

விழுங்குவது போல் அவளைப் பார்த்துக் கொண் அவன் கேட்க.. அவள் இன்னும் தலை கவிழ்ந்து கொ டாள். அவளை சுவாரஸ்யமாய் பார்த்தவாறு அவ ஸ்கூட்டியை நெருங்கினான். அவள் தடுமாற்றத்துட பற்று கோலைப் பற்றிக் கொள்கிறவள் போல் ஸ்கூ டியை இறுகப் பற்றிக் கொண்டாள்.

''ஸ்கூட்டியை விடும்மா.''

''எது.. எதற்கு.''



''ம்ம்... எடைக்கு எடை போட்டு பேரிச்சம் பழம் வாங்கிச் சாப்பிடப் போகிறேன். வழியை விடு. என்ன ரிப்பேர்ன்னு பார்க்கிறேன்.''

அவள் தன் புத்தகப் பையை இறுக்கிப் பிடித்துக் கொண்டு தள்ளி நின்றாள். அவன் ஸ்கூட்டியின் அருகே சென்று குனிந்து அதை ஸ்டார்ட் பண்ண முயன்றபடி அவளைப் பார்த்தான். அவன் பார்வையைக் கண்டதும் அவள் இன்னும் மருளுவது புரிய... அவனுக்குள் கனிவு சுரந்தது.

'பார்த்தால் கூடத் தாங்க மாட்டாளா. என் மாமன் மகள்? ம்ம்ம்...'

சித்ரலேகா அவனை விட எட்டு வயது இளையவள். தினகரன் எம்.பி.ஏ. முடித்துவிட்டு எல்.ஐ.ஸி.யில் அட்மினிஸ்ரேடிவ் ஆபிசராக அப்போதுதான் வேலைக்குச் சேர்ந்திருந்தான். லீவில் கிராமத்திற்கு வந்திருந்தான்.

அவன் மீண்டும் அவளைப் பார்த்தான். மழையில் நனைந்த கோழிக் குஞ்சு போல் தெரிந்தாள்.

'என் மாமன் மகள் இவ்வளவு வளர்ந்து விட்டாளா.'

அவன் ஸ்கூட்டியை ஓங்கி ஓர் உதை விட்டான். ஸ்டார்ட் ஆகி விட்டது. அவள் ஆச்சரியத்துடன் அவனைப் பார்த்தாள்.

''எப்படி ஸ்டார்ட் ஆச்சு..?''

''ஒரு உதை விட்டேன். ஸ்டார்ட் ஆகி விட்டது. எதுவுமே உதைத்தால் தான் சரியாகும் போல.''

அவனின் வார்த்தைகளில் பொதிந்திருந்த அர்த்தத்தை உணராமல் அவள் தன் கண்களை அகல விரித்தாள். வெகுளியாய் கேட்டாள்.

"நானும் உதைத்தேனே."

அவன் மனதிலிருந்த வன்மம் மறைந்து ஓர் மென்ை அவனுள் பரவியது. 'இவளிடம் போய் இரு பொருள் பேச முடியுமா?'

"ஒரு இட்டிலி சாப்பிட்டு வளர்ந்தவர்கள் உதைத் ஸ்டார்ட் ஆகுமா?"

"போங்க அத்தான். நான் ஒன்றும் ஒரு இட்லி ச பிடவில்லை."

"என்ன சொன்னாய்? அத்தான் என்றா சொன்னாய்"

"ஆமாம்.. நீங்கள் என் அத்தான்தானே."

"ம்ம்ம்.. ஆமாம்.. எத்தனை இட்லி சாப்பிட்டாய்."

"இரண்டு இட்லி சாப்பிட்டேனாக்கும்."

அவள் பெருமையாய் கூற அவன் ரசித்துச் சிரித்தா

"என்ன படித்துக் கொண்டிருக்கிறாய்?"

"பிளஸ் டூ.. இது கூடத் தெரியாதாக்கும்."

"மேலே என்ன படிக்கப் போகிறாய்..."

"அது நான் வாங்கும் மார்க்கை வைத்துத்தான் சொல் வேண்டும். தேங்க்ஸ் அத்தான். நான் போய் வரட்டுமா

அவனிடமிருந்த பயம் விலகி இயல்பாய் கை அசை விட்டு அவள் ஸ்கூட்டியில் ஏறிக் கிளம்பி.. புள்ளியா மாறி மறைந்த பின்னும் அவள் போன பாதை பார்த்துக் கொண்டே அவன் வெகு நேரம் நின்றி தான்.





# 5

"வாப்பா.. தினகரா.. இன்றைக்கு என்ன சீக்கிரமாகவே வந்து விட்ட போல இருக்கே.." தோட்டத்தில் இருந்த முல்லைக் கொடியில் பூப்பறித்துக் கொண்டிருந்த விசாலாட்சி வினவினாள்.

"தலை வலிக்குது அக்கா... அதுதான் இன்றைக்கு வெளியே எங்கேயும் போகவில்லை..." என்றான் தினகரன்.

உண்மையிலேயே அவனுக்கு காலையிலிருந்து நடந்த சம்பவங்களால் தலைவலி வந்து விட்டிருந்தது. தலையைப் பிடித்துக் கொண்டே படி ஏறினவனைக் கலைவாணன் அழைத்தார்.

"தினகரா.. கொஞ்சம் இங்கே வந்து விட்டுப் போப்பா."

'எதற்குக் கூப்பிடுகிறார்..' என்று மனதிற்குள் அலுத்த படி கீழ் வீட்டுக்குள் நுழைந்தான் அவன்.

"என்ன சார்..?"

"உன் அக்கா தான் கூப்பிடச் சொன்னாள். தலைவலியாமே.. உட்கார்.. சூடாய் ஒரு கப் காபி குடித்து விட்டுப் போ..."

தினகரன் அவர்களது அன்பில் நெகிழ்ந்து விட்டான்.

"உங்களுக்கு ஏன் சார் வீண் சிரமம்?"

"அவருக்கு என்ன சிரமம். லாபம்தான். உன்னை சாக்கு வைத்து இன்னொரு டோஸ் காபி குடிக்கலா

மில்லையா?'' என்று கூறியபடி விசாலாட்சி கை
காபி டிரேயோடு வந்தாள்.

''இந்தாப்பா காபி...'' என்றவள் கூடவே ஒரு ம
திரையையும் தந்தாள்.

''என்னக்கா இது?''

''தலைவலி மாத்திரை.. போட்டுக்க.''

தினகரனுக்கு தன் தாயின் நினைவு வந்து விட்
பெண்கள் எல்லோருக்கும் இருக்கும் உயரிய கு
தாய்மைதான் என்று நினைத்துக் கொண்டான் அவ

''தேங்க்ஸ்க்கா..''

''இதுக்குப் போய் எதுக்குப்பா தேங்க்ஸ் சொல்
தாய்.. தகப்பனை விட்டு விட்டு தனியாய் இருக்
பிள்ளை நீ. ஆத்திர அவசரத்துக்கு உதவி செய்யலை
பக்கத்தில் நாங்க இருக்கிறதுக்கு என்ன அர்த்த
சொல்லு.''

தினகரனுக்கு அவர்களது பரிவிலேயே பாதித் த
வலி குறைந்து விட்டது போல இருந்தது. மாடி
னான். கதவைத் திறந்து விளக்கைப் போட்டான். காற்
உட்காரலாமென்று பால்கனிக்குச் சென்றான். எ
வீட்டுப் பால்கனியில் சுகன்யா தென்பட்டாள்.

'இவள் வேறு இங்கிருக்கிறாளா. இனி இங்கு உட்கா
மாதிரிதான்..' என்று சலித்தபடி பெட்ரூமிற்குள் நுழை
கட்டிலில் விழுந்தான்.

கண்களை மூடிக் கொண்டான். மனக் கண்ண
சித்ரலேகா வந்து நின்றாள்.. அழகாய்.. உயரமாய்.. ஒ
லாய் ஒரு சித்திரப் பாவையைப் போல மனதில் சு
றாள்.



'லேகா..' ஏக்கமாக மனதில் கூறிக் கொண்டான்.

'இத்தனை நாளும் நிழல் போன்ற உன் நினைவு
களுடன் வாழ்ந்து வந்தேன். வாழ்க்கை அது பாட்டுக்கு
ஓடிக் கொண்டிருந்தது. இப்போது நிஜமாய் வந்து எதிரில்
நிற்கிறாயே.. ஏன் வந்தாய் லேகா.. என் நிம்மதியை
குலைக்கவா வந்தாய்... நான் எப்படியிருக்கிறேன்
என்பதைப் பார்த்துப் போக வந்தாயா? உன் பணக்கார
தாய் மாமன்களின் பெருமையை நான் அறிய வேண்டும்
என்பதற்காக வந்தாயா? உன் வீட்டினர் என்ன செய்
தாலும் விட்டுக் கொடுக்காதவள் நீ... உன் வீட்டாரை
ஒன்றும் செய்ய முடியாமல் என் கைகளைக் கட்டிப்
போட்டவளும் நீ... உன் வெற்றியை பறை சாற்ற என்
முன் வந்தாயா?'

தினகரனுக்கு போன தலைவலி மீண்டும் வந்து
விட்டது.. வலி தலையில் இருந்தால் அல்லவா போகும்.
அது அவனின் மனதில் ஆரம்பித்து தலைக்கு வரு
கின்றதே.. பின் எப்படிப் போகும். அது தீராத தலைவலி
அல்லவா? என்று சகுந்தலாவின் கழுத்தில் பிரபாகரன்
மூன்று முடிச்சுக்களைப் போட்டாரோ... அன்று ஆரம்
பித்தது... அந்த உரிமைப் போராட்டம்.

விரியூர் கிராமத்தின் ஊர் பண்ணையார் அந்தஸ்தில்
இருந்த ஏகாம்பரம். வள்ளிநாயகி தம்பதியினருக்கு
ஆண் ஒன்று. பெண் ஒன்று என அளவாக இரண்டே
குழந்தைகள். மூத்தவனான சரவணனே அவர்களுக்கு
பதினைந்து வருடங்கள் கழித்துத் தாமதமாகப் பிறந்தவன்
தான். அவனுக்கு அடுத்து எட்டு வருட இடைவெளியில்
அவர்கள் சகுந்தலாவிற்கும் தாய்.. தகப்பன் ஆனார்கள்.

சரவணனின் இருபத்தி ஐந்தாம் வயதில் அவனுக் வள்ளிநாயகியின் அண்ணன் மகள் வசுந்தராவை திருமணம் செய்து வைத்தார்கள். வசுந்தரா புகுந் வீட்டிற்கு வந்த மறுநாளே வீட்டு நிர்வாகத்தை மரும ளிடம் ஒப்படைத்து விட்டு ஓய்வெடுக்க ஆரம்பித் விட்டாள் வள்ளிநாயகி.. வீட்டு நிர்வாகத்துடன் நாத்தனாரைக் கவனித்துக் கொள்ளும் பொறுப்பையு மனமுவந்து ஏற்றுக் கொண்டாள் வசுந்தரா.

சகுந்தலாவிற்கு திருமண வயது வந்த போது. வழக்கம் போல் திருமண நாளை மட்டும் குறிக் முற்பட்டார்கள். வீட்டுப் பெரியவர்கள்.

பரம்பரை பரம்பரையாய் ஊர் பண்ணையாரின் வீட்டில் பெண் கொடுத்து பெண் எடுப்பது ஒ வீடுதான். அது வள்ளிநாயகியின் பிறந்த வீடு. அவ மணமுடித்து வந்த பின் அண்ணன் மகளையே த மகனுக்கு மணம் முடித்து வைத்தாள். அதுபோ வசுந்தராவின் அண்ணன் வசந்தனுக்கே சகுந்தலாவை மணம் முடித்துக் கொடுக்க ஏற்பாடுகளைச் செய் ஆரம்பித்தனர்.

அப்போதுதான் சகுந்தலா குண்டைத் தூக்கி அந்த குடும்பத்தின் மத்தியில் போட்டாள். பின்னாளில் தா எடுத்த முடிவால் தான் தன் பிறந்த வீட்டிலிருந்து நி தரமாய் பிரிக்கப்படுவோம் என்பதை அறிந்திருந்தா அவள் அப்படியொரு முடிவிற்கு வந்திருப்பாளே என்னவோ... பின்னாளில் வரப் போவதை முன்னா லேயே அறிந்து விட்டால் வாழ்க்கைப் பாதையி முட்கள் எப்படி வரும்? அதை அறியாத சகுந்தலா



தான் பிரபாகரனை மணக்க விரும்புவதாகக் கூறினாள். குடும்பத்தில் சூறாவளி வீச ஆரம்பித்தது.

சரவணனுக்கு சகுந்தலாவின் முடிவு பிடிக்கவில்லை. அவர் தங்கையின் முடிவை ஏற்றுக் கொள்ள மறுத்தார். வசுந்தராவோ என்ன செய்வது என்று புரியாமல் பதைத்து நின்றாள். குடும்பத்திற்கு கட்டுப்பட்டு வாழும் பிள்ளைகளான அவளும்.. அவளது அண்ணன்மாரும் சிறு வயதிலேயே.. இன்னார்க்கு இன்னார் என்று சொல்லியே வளர்க்கப்பட்டனர்.

அதன்படி வசுந்தராவின் மனதில் சரவணனே நிலைத்து நின்றான். அதுபோல வசுந்தராவின் மூத்த அண்ணன் வசந்தனின் மனதிலும் சகுந்தலாவே வாசம் செய்தாள்.

தமையனின் மனம் அறிந்த வசுந்தரா. கூடப் பிறந்த வனுக்காக பார்ப்பதா.. இல்லை கூடப் பிறந்தவளைப் போல் பேணிக் காத்த நாத்தனாருக்காக பார்ப்பதா என்று புரியாமல் தடுமாறினாள்.

பின் மனதைத் திடம் செய்து கொண்டு கணவனிடம் நாத்தனாருக்காக வாதாடிப் பார்த்தாள்.

''சகுந்தலாவின் ஆசைப்படியே அவளுக்குக் கல் யாணம் பண்ணி வைத்தால்தான் என்ன? அந்த அண்ண னும் நமக்கு தூரத்துச் சொந்தம்தானே.''

இரண்டு வயது சித்தார்த்தனுடன் விளையாடிக் கொண் டிருந்த சரவணன் அதை மூர்க்கமாக மறுத்தான்.

''இது சரி வராது வசு. இதைப் பற்றிய பேச்சை இத் துடன் விட்டுவிடு.''

''அவள் ஆசைப்பட்டு விட்டாளே...''

"உன் அண்ணனும் இவள்மேல் உயிரையே வைத் திருக்கிறாரே.. அதை மறந்து விட்டாயா?"

"ஆனால் சகுந்தலாவின் மனதில் என் அண்ணன் இல்லையே."

"இப்போது இல்லாவிட்டால் என்ன.. கல்யாணத் திற்குப் பின்னால் அவர் அவள் மனதில் குடியேறித் தானே ஆக வேண்டும்."

"அப்படிச் செய்யா விட்டால்தான் என்ன?"

"இது என்ன வசு.. இப்படி ஈஸியாகச் சொல்லுகிறாய்? அந்த பிரபாகரனின் வசதி ரொம்பக் குறைவானது.. நம் வீட்டு வசதிக்கு கிட்டக்கூட அவனால் வர முடியாது.. ஒட்டு வீட்டில் குடியிருந்து கொண்டு... சொந்தமென்று சொல்லிக் கொள்ள ஆறு ஏக்கர் நிலத்தை வைத்துக் கொண்டு பிழைப்பவனுக்குப் போய் என் தங்கையை மணம் முடித்துக் கொடுக்கச் சொல்கிறாயா? அது ஒரு நாளும் நடக்காது... அரண்மனை போன்ற இந்த வீட்டில் பிறந்து வளர்ந்த என் தங்கையை ஒரு ஏழைக்குக் கல் யாணம் பண்ணிக் கொடுக்க நான் சம்மதிக்க மாட்டேன்..."

வசுந்தரா.. கோவிலுக்குப் போகலாமென்று நாத்தனாரை அழைத்துக் கொண்டு போகும் வழியில் அவளுக்கு புத்திமதிகள் சொல்லிப் பார்த்தாள்.

"உன் அண்ணன் பிடிவாதமாய் இருக்கிறார் சகுந்தலா.. நீ உன் காதலை மறந்துவிடு.. அதுதான் நம் குடும்பத் திற்கு நல்லது."

"நான் அண்ணனின் தங்கைதானே அண்ணி. அவ ருக்கு இருக்கும் பிடிவாதத்தில் பாதியாவது எனக்கும் இருக்காதா? என்னால் பிரபாகரனை மறக்க முடியாது..



நான் கல்யாணமென்று பண்ணிக் கொண்டால் அவரைத் தான் பண்ணிக் கொள்வேன்."

வசுந்தரா கூறிய வார்த்தைகள் செவிடன் காதில் ஊதிய சங்காய் மாறியது... சகுந்தலாவின் தீவிரம் கண்டு வசுந்தரா.. எங்கே அவள் வீட்டை விட்டு வெளியேறி.. பிரபாகரனிடம் போய் விடுவாளோ என்று நினைத்துப் பயந்தாள்.

'அப்படி நடந்து விட்டால் குடும்பத்திற்கு தீராத பழியல்லவா ஏற்பட்டு விடும்."

வசுந்தரா மனதைக் கல்லாக்கிக் கொண்டு.. தன் அண்ணன்களிடம் இதைப்பற்றிப் பேசினாள்.

"பெரியண்ணா.. சகுந்தலாவை விட்டுக் கொடுங்க..."

"அது எப்படி முடியும் வசு.. அவள் என் உயிர்."

"ஆனால் அந்த உயிர்.. வேறொருவனை மனதில் நினைத்திருக்கிறதே..."

வசந்தன் பதில் சொல்ல முடியாமல் துயரத்துடன் தம்பியைப் பார்த்தார். வசுந்தராவின் சின்ன அண்ணன்.. பவித்ரன் அண்ணனுக்குப் பரிந்து பேசினார்.

"என்னம்மா நீ இப்படிச் சொல்கிறாய்.. காலம் கால மாய் இதுதான் பொண்ணு.. இதுதான் மாப்பிள்ளைன்னு வளர்ந்து வருவதும்.. அது போலவே கல்யாணம் பண் ணிக் கொள்வதும்தானே நமது வழக்கம்.. நீ இதைப்போய் குலைக்கப் பார்க்கிறாயே..."

"நான் இதைக் குலைக்கா விட்டால் அவள் நம் வீட் டுப் பெருமையை குலைத்து விடுவாள் போல இருக்கே அண்ணா... அவள் வீட்டை விட்டுப் போய் விட்டால் நம் நிலைமை என்ன ஆவது?"

வசந்தனும்.. பவித்ரனும் திகைத்துப் போனார்கள். வசந்தன் நெஞ்சில் உதிரம் கொட்ட.. தன் மனதி இருந்தவளை மறக்க முயல ஒப்புக் கொண்டார்.

வசந்தரா வகுத்துக் கொடுத்த திட்டத்தின்படி.. வசந் னுக்கும்.. பவித்ரனுக்கும் ஒரே நாளில் திருமணம் செய் வைக்க அவளது பிறந்த வீட்டில் முடிவு செய்தன மணமகள்கள் இருவரும் உடன் பிறந்தவர்கள்தான் வசந்தராவின் தாய் மாமனின் மகள்கள்.. திருமண பத்திரிகையுடன் சரவணனின் வீட்டிற்குச் சென்றபோது அவர் முகத்தில் இருள் படிந்தது.

"இது என்ன துரோகம் மாப்பிள்ளை.." அவர் நேர யாய் வசந்தனைக் கேட்க.. அவர் மனதை மறைத்து பதில் சொன்னார்.

"இன்னொருத்தனை கல்யாணம் பண்ணிக் கொள்ள ஆசைப்படும் பெண்ணை நான் கல்யாணம் செய் கொள்ள முடியாது."

சரவணனின் நெஞ்சில் இடி இறங்கியது போலானது

'என் தங்கைக்கு இப்படியொரு அவப் பெயரா...'

அவர் விரைந்து செயல்பட்டார். அதன்படி வசந்தனின் திருமணத்திற்கு முன்னாலேயே .பிரபாகரனுக்கு சகுந் லாவை திருமணம் செய்து வைத்து விட்டார். தங்கை வசந்தன் தட்டிக் கழித்தது போன்ற பேச்சு வராமல்.. சகுந்தலா வசந்தனை விட்டு விட்டு பிரபாகரனை விரும்பி மணந்து கொண்டதாக பேச்சு வரும்படி செய் விட்டார்.

அதில் வசந்தனுக்கு வருத்தமில்லை.. மாறாக தன் நெஞ்சில் நிறைந்தவள் எங்கேயிருந்தாலும் நன்றாக வாழட்டும் என்ற எண்ணம்தான் இருந்தது.



சகுந்தலா திருமணம் முடிந்து போன பின்னால்... அவள் வீட்டிற்குச் சென்ற சரவணன்... தங்கையின் கையில் பணப்பை ஒன்றைக் கொடுத்தார்.

"புதிதாய் வீடு கட்டிக் கொள்ளுங்கள் சகுந்தலா. அது போக உன் கணவர் ஏதாவது வியாபாரம் ஆரம்பிக் கட்டும்.. பணம் போதவில்லை என்றால் இன்னும் கேள்.. நீ ஓட்டு வீட்டில் இருப்பதை நினைத்து அம்மாவும்.. அப்பாவும் வருத்தப்படுகிறார்கள்.."

சகுந்தலா யதார்த்தமாய் பணத்துடன் உள்ளே செல்லத் திரும்ப... பிரபாகரன் முகம் இறுகிப் போனவராய் மனைவியை தடுத்தார்.

"சகுந்தலா... எங்கே போகிறாய்?"

"அண்ணன் கொடுத்த பணத்தை உள்ளே வைத்து விட்டு வருகிறேன்."

"வேண்டாம்.. அதை உன் அண்ணனிடம் திருப்பிக் கொடு..."

சரவணனும்.. சகுந்தலாவும் திகைத்துப் போய் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். பிரபாகரனே.. மனைவியின் கையில் இருந்த பணப்பையை பிடுங்கி மைத்துனரிடம் கொடுத்தார்.

"நான் ஓலைக் குடிசையில் இருந்தாலும் சொந்தக் குடிசையில் வாழணும்னு நினைப்பவன். பெண்டாட்டி வீட்டு தயவில் நான் மாடி வீட்டில் வாழணும்னு ஒரு நாளும் நினைத்ததில்லை.. உங்கள் பணத்தை எடுத்துக் கொண்டு போங்க."

சரவணன் செய்த பண உதவிகளை பிரபாகரன் மறுத்து விட்டார். அதே சமயம்... தன் வீட்டை 'ஓட்டு

வீடு' என்று மைத்துனன் சொல்லிச் சென்றது அ
மனத்தில் குத்தியது... மாடாய் உழைத்தார்... ஒ
வருடத்தில் அவரது மனைவி திலகாவைப் பெற்
போது... புது வீட்டில் அவர்கள் குடியேறி இருந்தன

புது வீட்டிற்கு பால் காய்ச்சிய போது... சரவணன் த
மனைவி மகனுடன் வந்திருந்தார்.

"உங்க தங்கச்சி ஒட்டு வீட்டில் இருக்கிறாள்ன
இனியும் நீங்க வருத்தப்பட வேண்டாம்... அவளுக்
மாடி வீடு கட்டிக் கொடுத்து விட்டேன். இனி உங்
மரியாதைக்கு குறைவு வராது.." என்று பிரபாகரன் கூறி
போது சரவணன் பதில் பேசவில்லை.

அதன் பின் சரவணன் வீட்டு விசேஷங்கள் சில
றிற்கு பிரபாகரனும் சகுந்தலாவும் போயிருந்தபோது
அங்கே தன்னைவிட.. வசந்தனுக்கு முக்கியத்துவ
கொடுக்கப்பட்டதாக பிரபாகரனுக்குத் தோன்றிவி
அவர் மாமனார் வீட்டிற்கு போவதைத் தவிர்த்து விட்டா

"என்ன சகுந்தலா... நீ மட்டும் தனியாய் வந்திரு
கிறாய்?"

"வேறு என்ன அண்ணி செய்வது? நீங்கள்தா
உங்களுக்குப் பிடிக்காத மாப்பிள்ளை இந்த வீட்டிற்
வந்து போகக் கூடாதுன்னு கங்கணம் கட்டி ஜெயித்
விட்டீங்களே..."

"இது என்ன சகுந்தலா.. இப்படி ஒரு பழியைப் போ
கிறாய்?"

"நான் வேண்டுமென்று பழி சொல்லவில்லை
சித்தார்த்தனின் காது குத்தும் விழாவிற்கு நாங்கள்
செய்ய வந்தால்... அதை தடுத்து விட்டு உங்



அண்ணன் வீட்டுச் சீரை முதலில் செய்ய வைத்தீர்களே... அது நியாயமா? என் புருசன் இல்லாதவர்.. உங்க அண்ணன் வசதியானவர்.. இதுதானே உங்கள் எண்ணம்?"

வசந்தரா திகைத்துப் போனாள்.. அது கிராமம்.. கிராமத்தில் தாய் மாமன் வீட்டுச் சீர் வரிசைக்குத்தான் என்றுமே முதலிடம்.. வசந்தன் எவ்வளவு வசதியானவராக இருந்திருந்தாலும்.. பிரபாகரன் தாய்மாமனாக இருந்திருந்தால் அவரது சீர்தான் முதலில் ஏற்றுக் கொள்ளப் பட்டிருக்கும். ஆனால் வசந்தன் தானே சித்தார்த்தனுக்கு தாய் மாமன்?



## 6

"சகுந்தலா... நீ கோபத்தில் ஊர் வழக்கத்தை மறந்துவிட்டுப் பேசுகிறாய்? என் பிள்ளைகளுக்கு என் அண்ணன்தானே தாய்மாமன்?"

வசுந்தராவின் கேள்வியில் இருந்த நியாயம் சகுந்தலாவிற்குப் புரிந்தது. ஆனால் அவள் அதைச் சொல்லி பிரபாகரனிடம் வாதாட முடியாது... ஏனென்றால் அவள் அதை பிரபாகரனிடம் முதலிலேயே சொல்லி விட்டாள். அதற்கு பிரபாகரனிடம் இருந்து வந்த பதில்தான் அவள் மனதை சுட்டுக் கொண்டிருந்தது.

"எங்க... வசந்தன் தானே அண்ணனின் பிள்ளைக்கு தாய் மாமன்...? அப்போது அவருக்குத்தானே முதல் உரிமை தர முடியும்?"

''அதென்ன... வசந்தனுக்கு கிடைக்க வேண்டிய மு... உரிமையில் உனக்கு அவ்வளவு அக்கறை...''

பிரபாகரனின் குரலில் தெரிந்த மாறுபாட்டை உண... சகுந்தலா இறுகிப் போனாள்.

'இது முதல் உரிமையால் ஏற்படும் பிரச்னையில்லை... என்று அவளது உள் உணர்வு கூறியது.

அவளது கணக்குப் பிசகவில்லை. குடும்ப வி... களின் போது வசந்தனின் பார்வை சகுந்தலாவின் ... நேசத்தோடு படிவதை பிரபாகரன் கண்டு விட்ட... அதன் பின்னால் வசந்தன் இடம் பெறும் விழாக்க... மனைவியோடு போகாமலிருக்க அவர் கண்டுபிடி... வழி இது.

சகுந்தலா இதை உணர்ந்து கொண்டாள். என... கணவனின் குற்றச்சாட்டை முன் வைத்து அவ... பிறந்த வீட்டின் விழாக்களை புறக்கணிக்கத் துவங்கின...

இதற்கு இடையில் சகுந்தலாவின் வயிற்றில் தி... விற்குப் பின் இரண்டு வருட இடைவெளியில் தின... பிறந்து விட்டான். சரவணனுக்கு சித்தார்த்தன் மட்... ஒற்றைப் பிள்ளையாய் வளர்ந்து வந்தான். பனிரெ... வருட இடைவெளியில் தங்கையாய் சித்ரலேகா பிற... சித்தார்த்தனை அண்ணனாக்கினாள்.

சித்தார்த்தனுக்கு தங்கையின் மேல் பாசம் அதி... அவனுக்கு விவரம் நன்கு தெரிந்த பனிரெண்டு வய... பிறந்த குழந்தையாயிற்றே சித்ரலேகா... அ... தங்கையைத் தூக்கிக் கொண்டே திரிவான்... மெல்... மெல்ல சித்ரலேகா.. சித்தார்த்தனுக்கு உயிரா... போனாள்.



சித்தார்த்தனின் இருபத்தி நான்காம் வயதில் அவனுக்குத் திருமணப் பேச்சு ஆரம்பித்தபோது.. அவனது தங்கை சித்ரலேகாவிற்கு பனிரெண்டு வயது.. சகுந்தலாவின் மகள் திலகாவிற்கு இருபத்தி இரண்டு வயது.. தினகரனுக்கு இருபது வயது.

குடும்ப கௌரவம்.. வசதி என்று தன்மானத்தில் சிறிது காயப்பட்டுப் போயிருந்த பிரபாகரன் உழைத்து முன்னேறியிருந்தார். ஆறு ஏக்கர் நிலத்தை பதினைந்து ஏக்கர்களாக்கி இருந்தார். அருகிலிருந்த டவுனில் ஆட்டோமொபைல் ஷாப் ஒன்றையும் நடத்தி வந்தார். பண வசதி அவரிடம் பெருக ஆரம்பித்திருந்தது.

சித்தார்த்தன் திலகாவை திருமணம் செய்து கொள்ள விரும்பினான். தங்கையின் மீது உள்ள பாசத்தால்.. அதை சரவணனும் ஆதரித்தார். மைத்துனன் மேல் தீராத பகையேதும் இல்லாத பிரபாகரனும் பெண் கொடுக்கத் தயாராகவே இருந்தார்.. திலகாவிற்கும் சித்தார்த்தன் மீது ஒரு ஈர்ப்பு இருந்தது.

இப்படியே கதை போயிருந்தால் நன்றாகத்தான் இருந்திருக்கும்.. ஆனால் நினைத்தது எல்லாம் நடந்து விட்டால்... தெய்வத்தை யார் நினைப்பார்கள்..? அதனால் விதி விளையாடியது.. பிரபாகரனின் தங்கை செண்பகத்தின் மகன் ஜெகனின் ரூபத்தில்...

இருபத்தி ஒரு வயதில் இருந்த ஜெகன் திலகாவை அடைய ஆசைப்பட்டான். ஆனால்... அவளை சித்தார்த்தனுக்கு மணம் முடித்துக் கொடுக்கப் போவதாகப் பேச்சு எழுந்ததும் அவன் மனதிற்குள் கொதித்துப் போய் விட்டான். அவனுடைய மாமன் மகளை வேறு ஒருவனுக்கு விட்டுக் கொடுப்பதா? போர்க்கொடியைத் தூக்க

முடியாமல்... போட்டிக்கு வருபவனும் திலகாவின் மே உரிமை கொண்டவனாக இருந்து தொலைத்தான்.

'என்ன செய்வது..' என்று யோசித்தான் ஜெகன். பிரபாகரன் நியாயம் பேசுபவர்.. மகளின் மனதிற்கு மாறா எதையும் செய்ய மாட்டார். அவரே காதல் திருமண செய்து கொண்டவர்தானே...

எனவே.. திலகாவின் வாயிலிருந்து.. தான் ஜெக அத்தானைத்தான் கல்யாணம் பண்ணிக் கொள்வே னென்ற வார்த்தைகளை வரவழைக்க வேண்டும் 'அதற்கு என்ன வழி' என்று யோசித்த ஜெகன்.. நிதா மாய் திட்டம் தீட்டினான்.

அதன்படி.. ஓர் மழை நாளில்.. மொட்டை மாடியில் உலர்ந்து கொண்டிருந்த துணிகளை எடுத்துக் கொண் டிருந்த திலகாவை கட்டி அணைத்து முத்தமிட்டு விட் டான் அவன்.

திலகா திகைத்துப் போனாள். அவனைத் தள் விட்டுவிட்டு... கீழே இறங்கி ஓடி விட்டாள். ஆனா நடந்த சம்பவம் அவள் மனதில் பதிந்து விட்டது.

மறுநாள் திலகாவை தனிமையில் சந்தித்த ஜெக மன்னிப்புக் கேட்டான்.

"உன் மேல் உயிரையே வைத்திருக்கிறேன் திலகா."

"அதற்காக... இப்படியா நடந்து கொள்வீர்கள்?"

"ஏன்.. உன்னைத் தொட எனக்கு உரிமையில்லையா? நாளைக்கு நான் தானே உன் கழுத்தில் தாலி கட்ட போகிறேன்?"

"வீண் கனவு காணாதீர்கள் அத்தான். என் வீட்டில் என்னை சித்தார்த்த அத்தானுக்குக் கல்யாணம் பண்ணி கொடுக்க முடிவு செய்திருக்கிறார்கள்."



தான் தொட்டு.. கட்டி அணைத்து முத்தமிட்ட பின்னும் அவள் சித்தார்த்தனை மணக்கப் போவதைப் பற்றிப் பேசிய அன்றுதான் ஜெகனின் மனதிற்குள் தீப்பற்றிக் கொண்டது.

அன்று அவன் மனதிற்குள் சூளுரைத்துக் கொண்டான்.

'உங்க ரெண்டு குடும்பத்தையும் ஒருவருக்கு ஒருவர் ஆக விடாமல் கடைசி வரைக்கும் அடித்துக் கொண்டு சாகும்படி செய்கிறேண்டி...'

உடனடி காரியம் திலகாவை மணப்பதுதான். அதற் கான வேலைகளில் இறங்கினான் ஜெகன்.

முதலில் திலகாவின் மனதில் சித்தார்த்தனைப் பற்றி இருந்த 'நேர்மையாளன்..' என்ற பிம்பத்தை அழித்தான்.

"யாரைக் கல்யாணம் பண்ணிக்கப் போகிற.. அந்த சித்தார்த்தனையா.. அவன் தினத்துக்கும் குடித்து விட்டு.. கண்டபடி அலைகிறவன் ஆச்சே..."

"அவரைப் பற்றி எனக்குத் தெரியும்... அபாண்டமாய் பேசாதீர்கள்.."

"உனக்கு என்ன தெரியும்.. அவன் அவனுடைய மாமன் மகளைத்தான் கட்டிக் கொள்ளப் போவதாக ஊருக்குள் சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். நீ உனக்குத்தான் அவன்னு நினைத்து கனவு காண்கிறாயே... இதில் என்னைக் கனவு காண வேண்டாம் என்று வேறு சொல் கிறாய்."

"பொய்..."

"மெய்..."

ஒரே பொய்யைத் திரும்பத் திரும்பச் சொன்னால்.. பொய்யும்.. மெய்யாகி விடும் என்பது கோயபல்ஸின்

சாதுர்யம்.. அதை ஜெகன் பின்பற்றினான். திலகாவின் மனதில் சந்தேக விதை விழுந்து விட்டது... அதற்கு நீர் ஊற்றுவது போல.. அவள் கோவிலுக்குச் சென்றிருந்த போது சித்தார்த்தன் சென்னையில் படித்துக் கொண்டிருக்கும் அவனுடைய மாமன் மகளைக் கோவிலுக்கு தன் புல்லட்டின் பின்னால் அமர வைத்து அழைத்துக் கொண்டு வந்திருந்தான். அவள் சித்தார்த்தனின் தோளை தழுவி அமர்ந்திருக்க திலகாவின் மேனியெங்கும் அனல் பரவியது... அவள் சித்தார்த்தனை மடக்கி கேள்வி கேட்டாள்.

''யார் அவள்?''

சித்தார்த்தன் வாயை வைத்துக் கொண்டு ஒழுங்காய் இருந்திருக்கலாம். பெண்களைச் சீண்டி விட்டு.. அவர்களின் பொறாமைத் தீயில் குளிர்காய விரும்பும் ஆண்களின் உல்லாச மனோபாவம் அவனுக்கும் வந்து விட்டது.



# 7

சித்தார்த்தன் சென்னையில் படித்தவன்.. திலகாவோ பிளஸ் டூவிற்கு மேல் படிக்க மாட்டேன் என்று சொல்லி வீட்டுக்குள் அடைந்து விட்டாள். ஆனால் அவளது அந்த அறியாமை கலந்த அழகே சித்தார்த்தனை அவள்பால் கவர்ந்து இழுத்தது. அந்த அறியாமையே அவனையும்.. அவளையும் பிரித்தும் விட்டது.



''யார் அவள்'' என்று திலகா கேட்டதும்..

''ம்ம்.. கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிறவள்..'' என்று தான் சித்தார்த்தன் சொன்னான்.

சொல்லிவிட்டு அவளது முக மாறுதலை ரசிக்கவும் செய்தான். ஒரு நொடி அவன் 'கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிறவள்' என்று தானே சொன்னான். 'நான் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிறவள்' என்று சொல்லவில்லையே என்பதை திலகா யோசித்திருந்தால்.. அவனுக்கும்.. அவளுக்குமான பிரிவே நேர்ந்திருக்காது.

ஆனால் திலகாவின் புத்திக்கு அது எட்டவில்லை. அவளுக்கு ஏற்கனவே சித்தார்த்தனின் மாமன் மகளின் நாகரிகத் தோற்றம் கண்டு ஒருவித தாழ்வு மனப்பான்மை ஏற்பட்டிருந்தது. அவளது சுடிதாரைக் கண்டு அதன் முன் தன் பாவாடை தாவணி அலங்காரம் நிற்காதோ என்று பயந்து போயிருந்தாள். முடியை விரித்துப் போட்டிருந்தவளின் ஸ்டைலின் முன்னால் தனது நீண்ட பின்னல் பட்டிக்காட்டுத்தனமாய் தோன்றுகிறதோ என்று கலங்கிப் போயிருந்தாள். ஒப்பனை செய்யப்பட்டிருந்த அவளின் முகத்தின் முன்னால் நெற்றியில் பொட்டும்.. தலையில் பூச்சரமுமாக நிற்கும் தன் தோற்றம் எடுபடாது என்ற முடிவுக்கு வந்திருந்தாள். சித்தார்த்தன் அவளது மருளும் விழிகளை வைத்தே அவளது மனப் போக்கை எடை போட்டு விட்டான். அவளது பெண்மை ததும்பும் முகத்தையும் அவளது அகன்ற பெரிய விழிகளில் தெரிந்த அச்சத்தையும் பார்த்து அவனுக்குச் சிரிப்புத்தான் வந்தது.

'இவள்தான் எவ்வளவு இன்னொஸன்டாக இருக்கிறாள். இவளை விடவா இன்னொருத்தி அழகாக இருக்க

"முடியும்?" அவனுக்கு அவள் மேல் அபரிதமான கூ வந்தது.

"அவள் யார்ன்னு சொன்னீர்கள்..." கோபத்தில் அ கண்கள் சிவந்திருந்தன.

"அதுதான் சொன்னேனே..." அவன் குரலில் நகை இருந்தது.

"உண்மையாகச் சொல்கிறீர்களா.."

"பொய் சொல்லவில்லை..."

சித்தார்த்தன் கூறியது உண்மைதான். அவனுடை தாய் மாமன் வசந்தனின் மகள் காவ்யாவிற்கு திரும நிச்சயம் ஆகியிருந்தது. அமெரிக்க மாப்பிள்ளை.. அ தான் சித்தார்த்தன் கூறினான். அதை உணராத தி மனதில் அடி வாங்கினாள்.

"என்னைவிட அவள் உயர்வானவளா..?" தி மூச்சு வாங்கிக் கொண்டே கேட்டாள்...

சித்தார்த்தனுக்கு அவளது கோபத்தைக் கண்டு சி வந்தது.

'இந்தப் பெண்கள்தான் எவ்வளவு எளிதில் ஏமா விடுகிறார்கள்.'

தான் வாழ்க்கையில் ஏமாறப் போகிறோம். திலகா ஜெகன் என்னும் நயவஞ்சகனிடம் தோற்கப் போ றோம்.. அதனால் இரு குடும்பத்தின் நிம்மதியை இழக்கப் போகிறோம் என்பதை அறியாத சித்தார்த் தன்னை விட்டு அவள் எங்கே போய்விடப் போகிற என்ற மிதப்பில் மீண்டும் அவளைச் சீண்ட நினை தான்.



திலகாவை விட காவ்யா.. ஒரு அங்குலம் அதிகமான உயரம் கொண்டவள்.. காவ்யாவை விட திலகா கொஞ்சம் குள்ளம்தான். எனவே அதை மனதில் வைத்த சித்தார்த்தன்... சிரிக்காமல் முகத்தை வைத்துக் கொண்டு..

"நிச்சயமாய்.. அவள் உன்னைவிட உயர்வானவள் தான்..." என்று கூறி விட்டான்.

அவ்வளவுதான்.. திலகா பொங்கி வந்த அழுகையை அடக்க வாயைக் கையால் மறைத்தபடி வெளியே ஓடி விட்டாள். சித்தார்த்தன் அதை எதிர்பார்க்கவில்லை. அவள் கோபம் கொண்டு இன்னும் சண்டை போடு வாள். கொஞ்ச நேரம் அதை ரசித்துவிட்டு... அவளை சமாதானப்படுத்தலாம். அவள்.. 'அத்தான்..' என்று ஆனந்தத்தோடு ஓடி வந்து தன்னைக் கட்டிக் கொள்வாள் என்று நினைத்துக் கொண்டிருந்தவனுக்கு. அவள் அழுது கொண்டே ஓடி விடவும் அதிர்ச்சியாகி விட்டது. அவளைத் தொடர்ந்து.

"திலகா... திலகா.. நில்லு திலகா.. நான் சொல்வதைக் கொஞ்சம் கேளு..." என்றபடி ஓடியவனுக்கு... மேலும் அதிர்ச்சி காத்திருந்தது.

கோவிலுக்கு வெளியே இருந்த பெரிய ஆலமரத்தின் அடியினில் ஜெகனின் மார்பில் சாய்ந்து திலகா அழுது கொண்டிருந்தாள். ஜெகன் அவளை ஆறுதலாய் அணைத்துக் கொள்வது போல் இறுக்கி அணைத்துக் கொண்டிருந்தான்.

சித்தார்த்தனுக்கு தன் கண்களையே நம்ப முடியவில்லை.

'திலகாவா இப்படிச் செய்கிறாள்?'

அவன் தவறே செய்திருந்தாலும் தட்டிக் கேட்பதை விட்டு விட்டு.. இன்னொருவனிடம் அவள் தஞ்சம் புகுந்ததை சித்தார்த்தனால் ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை. அதைவிட அவளை அணைத்தவாறு நிமிர்ந்து அவனை ஜெகன் பார்த்த வெற்றிப் பார்வையை தாங்கிக் கொள்ள முடியவில்லை...

சித்தார்த்தன் திரும்பிச் சென்று விட்டான். சில நாட்களில் காவ்யாவின் திருமணம் நடந்து முடிந்தது. திலகா திகைத்துப் போனாள்.

அப்படியானால் சித்தார்த்தனுடன் காவ்யாவுக்குத் திருமணம் நடக்கவில்லையா? அப்புறம் ஏன் அவன் அன்று அவ்வாறு சொன்னான்.

யோசித்த திலகாவிற்கு அன்று கேட்ட வாக்கியங்களின் அர்த்தம் இன்று விளங்கியது... அது புரியாமல் அவன் மேல் கோபித்துக் கொண்டு விட்டாளே... இப்போது எப்படி அவன் முகம் பார்த்துப் பேசுவது?

தவித்துக் கொண்டிருந்தவளுக்கு அவன் முகம் பார்த்துப் பேசும் தருணம் தற்செயலாக வாய்த்தது.

சரவணன் சொல்லி விட்ட செய்தியொன்றை சகுந்தலாவிடம் தெரிவித்து விட்டுப் போக சித்தார்த்தன் வந்திருந்தான். அவன் வந்த நேரத்தில் வீட்டில் யாரும் இல்லை.

''அத்தை...'' என்று அழைத்தபடி அவன் வர... ஆனந்தமாய் எதிரே ஓடி வந்து நின்ற திலகா.. ஆசையுடன் அவன் முகம் பார்த்தாள்.

அவன் முகத்தைத் திருப்பிக் கொண்டான். அவள் முகம் வாடினாள்.

''அத்தை இல்லையா.''

''ஏன்.. நான் இருக்கிறேனே.. என்னிடம் பேச மாட்டீர்களா..''



''உன்னிடம் பேச இனி என்ன இருக்கிறது.''

''எதுவுமே இல்லையா?''

''இல்லை... என்று நீ என் கண் முன்னாலேயே அந்த ஜெகனைக் கட்டிக் கொண்டு நின்றாயோ.. அன்றே நீ என் மனதைவிட்டுப் போய் விட்டாய்... அது என்ன... கட்டிக் கொள்ளப் போகிறவன் விளையாட்டாய் ஒரு வார்த்தை பேசினால் கூடக் குற்றமா? உடனே வேறு ஒருவனை தேடி விடுவாயா?''

''அத்தான்.''

திலகா கூவினாள்.

'என்ன வார்த்தை சொல்லி விட்டான்.'

அன்று நடந்தது திலகாவைப் பொறுத்தவரை தற்செயலான விசயம். அவள் அழுது கொண்டே கோவிலை விட்டு வெளியே வந்து மரத்தின் மேல் சாய்ந்து நின்று அழுதபோது.. அவள் தோள் மீது ஒரு கை விழுந்தது. திரும்பிப் பார்த்தாள். ஜெகன் நின்றிருந்தான். அவன் கண்களில் பரிதாபம் தெரிந்தது. கிரக்கத்துடன் அவளைப் பார்த்தபடி,

''என்ன.. திலகா.. உண்மை தெரிந்து விட்டதா?'' என்று கேட்டான்.

ஆதரவாய் அவன் வினவிய விதத்தில்.. அவள் இன்னும் அழுதாள். அவன் சமாதானப்படுத்துகிறேன் என்று நெருங்கி நின்றதையோ.. அது சற்று தொலைவில் இருந்து பார்த்த சித்தார்த்தனுக்கு அணைப்பாய் தெரிந்ததையோ அவள் அறியவில்லை.

அவள் மனதில் நின்றதெல்லாம் இதுதான்... வெறுமனே நெருங்கி நின்று அழுததற்கே இவ்வளவு பெரிய

வார்த்தைகளைச் சொல்பவன்.. அவளுடைய விரு மில்லாமல்... ஜெகன் அவளை முத்தமிட்டு விட்ட அறிந்தால் இன்னும் என்னவெல்லாம் சொ மாட்டான்?



# 8

ஜெகன் ஜெயித்து விட்டான். திலகா தன் வா லேயே.. பிரபாகரனிடம் "நான் ஜெகன் அத்தானை தான் கல்யாணம் பண்ணிக் கொள்வேன்.." என் சொல்லி விட்டாள்.

சகுந்தலாவால் தன் காதுகளையே நம்ப முடியவி லையே. தன் மகளுக்கும் அண்ணன் மகனுக் இடையே இருந்த நேசம் அவளுக்குத் தெரியும். பி என் திலகா இப்படிச் சொல்கிறாள்..?

உண்மையை அறிய விரும்பியவள் மகளை விசா தாள்.

"திலகா.. அவசரப்பட்டு எதையும் முடிவு பண்ணா ஆற.. அமர யோசித்து முடிவு செய்.. இது உன் வாழ்க்கை

"யோசித்துத்தான் சொல்கிறேன் அம்மா."

"நீ சித்தார்த்தனை விரும்பினாயே..."

"இப்போது ஜெகன் அத்தானை விரும்புகிறேன் அம்

'என் மகளா இப்படிப் பேசுகிறாள்?' சகுந்தலா தி தாள். சித்தார்த்தனை அழைத்துப் பேசிப் பார்த்தாள்.



ஒரு இளமாலைப் பொழுதில் தன் வீட்டு மொட்டை மாடியில் நின்று கொண்டு அண்ணன் மகனிடம் பேசினாள் சகுந்தலா. அந்தி வெயிலின் செந்நிறம் வானத்தில் சிவந்திருக்க... அதே சிவப்பு சித்தார்த்தனின் முகத்திலும் இருந்தது.

"உனக்கும்.. திலகாவிற்கும் இடையே என்ன பிரச்னை சித்தார்த்தா..."

"ஒன்றுமில்லையே அத்தை."

"பின்.. ஏன் அவள் உன்னை விட்டு விட்டு ஜெகனைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போவதாகச் சொல்கிறாள்?"

சித்தார்த்தனின் முகம் இருண்டு கொண்டிருந்த வானத்தைப் போல் இருண்டு போனது.

"அவளது விருப்பம் எதுவோ.. அதைச் சொல்லியிருக்கிறாள்."

"நேற்று உன்னை விரும்பியவள் இன்று ஜெகனை விரும்பக் காரணம் என்ன? எனக்கு ஒன்றும் புரியவில்லையே..."

"எனக்கும்தான் புரியவில்லை. பெண்களின் மனம் ஆழ்கடல் என்பார்கள்.. அது உண்மை என்பதை உங்கள் பெண் நிரூபித்து விட்டாள். ஒன்றிற்கு மாற்றாய் இன்னொன்றைத் தேடிப் போகிறவளிடம் நியாயம் பேசி பிரயோஜனமில்லை அத்தை..."

மொட்டை மாடியில் உலர்ந்து கொண்டிருந்த துணிகளை எடுக்க வந்த திலகா.. மீண்டும் மனதில் அடி வாங்கினாள். அவள் நின்று கொண்டிருப்பதை அறியாமல் சித்தார்த்தன் பேசிக் கொண்டிருந்தான்.

"என்னைவிட அவன் அவளை நன்றாக வை கொள்வான் அத்தை. நீங்கள் கவலைப்படாதீ கல்யாணத்தை நடத்தி விடுங்கள்."

'அவ்வளவுதானா? எளிதாய் அவளைக் கை க விட்டானா? அவளது விருப்பமில்லாமல் தெ அவளைத் தொட்டு விட்டதற்காக.. ஜெகனிடம் அ தாரை வார்த்துக் கொடுத்து விட்டானா.

திலகா இடிந்து போய் விட்டாள். அவள் மனதி சிறு மூலையில் கடைசி வினாடியில் சித்தார் அவளைத் தேடி வந்து விட மாட்டானா என்ற பார்ப்பு இருந்தது. அதுவும் பொய்த்து விட்டது.

ஜெகனுடன் திலகாவின் திருமணம் நடந்தே விட் திலகா.. மனதை மாற்றிக் கொண்டு ஜெகனுடன் வ திணறிக் கொண்டிருக்கையில்.. சித்தார்த்தனு அவனுடைய இளைய தாய் மாமன் பவித்ரனின் ம திவ்யாவை திருமணம் பேசி முடித்திருந்த செய்தி கா வாக்கில் வந்து அவள் காதுகளில் நுழைந்தது.

அதைச் சொன்னவன் ஜெகன்தான். அவன் திலகா மனதை நன்கு அறிவான். எனவே சொல்லும் வித சித்தார்த்தனின் திருமணச் செய்தியைச் சொன்னா

"திலகா.. சேதி தெரியுமா?"

"சொல்லுங்க..."

ஆர்வமாக தான் பேசியும் அசுவாரஸ்யமாய் ப சொன்ன மனைவியை சினந்து பார்த்தான் அவன்.

'இன்னும் உனக்கு என் பெண்டாட்டியென்ற நின வரவில்லையாடி.'



"சித்தார்த்தனுக்குக் கல்யாணமாம்."

அவன் எதிர்பார்த்தது போல திலகா உடனே அவன் முகம் பார்த்தாள். அவசரமாய் கேள்வியும் கேட்டாள்.

"பெண் யாராம்?"

'இதைத் தெரிந்து கொள்ள மட்டும் ஆர்வம் காட்டு.'

"அவனுடைய தாய் மாமன் மகள்தான்."

"அவளுக்குத்தான் கல்யாணமாகி விட்டதே..."

"அவள் வசந்தன் மாமாவின் மகள். இவள் திருச்சியில் இருக்கும் பவித்ரன் மாமாவின் மகள். இவளைத்தான் சித்தார்த்தன் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போவ தாய் இரண்டு வருடத்திற்கு முன்னாலேயே பேசி முடித்து விட்டார்களாம். நான் கூட உன்னிடம் சொன்னேனே..."

"அது காவ்யாவைப் பற்றி இல்லையா?"

"இல்லையே... திவ்யாவைத்தான் சொன்னேன். இந்தப் பெண் எம்.எஸ்ஸி படித்திருக்கிறாளாம். நூறு பவுன் நகையாம்.. வெளிநாட்டுக் காராம். சீதனமாய் கொட்டிக் கொடுக்கப் போகிறார்களாம். அவள் ஒரே பெண் தானாமே. அதுதான்.. தூண்டிலை வீசிப் பிடித்து விட்டார்கள்."

திலகா பித்துப் பிடித்தாற் போல் ஆகிவிட்டாள். சித் தார்த்தன் திவ்யாவைத் திருமணம் செய்து கொள்வதற் காக வேண்டுமென்றே அவளை தவிர்த்து விட்டான் என்று நினைத்து விட்டாள்.

'இதனால்தான் என் மீது பழி போட்டாயா.. நான் விலகி ஓட வேண்மென்று விளையாட்டாய் பேசுவது போல் வேண்டுமென்றே வினையாகப் பேசினாயா.. என்

மனதை சுக்கு நூறாக்கி விட்டு.. நீ மட்டும் அவனுடன் உல்லாசமாய் வாழ்ந்து விடுவாயா?'

திலகாவின் மனதில் சித்தார்த்தனின் மேல் வன்மம் உருவாகி விட்டது... அதை அறிந்த ஜெகனின் மனம் ஆனந்தக் கூத்தாடியது.. சித்தார்த்தனின் திருமணத்திற்கு போவதை அவர்கள் இருவருமே தவிர்த்தனர். ஒரு நாள் மாலையில் ஜெகன் ரத்தம் சொட்டும் தலையோடு வீட்டுக்கு வந்தான். என்னவென்று பதறி விசாரித்தாள் திலகா.

''நான் டவுனுக்குப் போய் விட்டு வரும்போது சித்தார்த்தன் வேண்டுமென்றே என்னை வழிமறித்து உன்னை தகாத வார்த்தைகள் சொல்லித் திட்டினான் திலகா.. பொறுக்க முடியாமல் அவன் மேல் பாய்ந்து விட்டேன். அவன் ரத்தம் கொட்ட.. என் தலையை உடைத்து விட்டான்.''

''நீங்கள் பதிலுக்கு அவன் மண்டையை உடைக்க வேண்டியது தானே.''

''எப்படிச் செய்வது திலகா.. உன் அம்மாவிற்கு அவன் அண்ணன் மகன் ஆயிற்றே...''

''அதற்காக நாம் ஏன் பார்க்க வேண்டும். நமக்கு வேண்டாதவர்களை அவங்க உறவு கொண்டாடினால் அவர்களையே நாம் விலக்கி வைப்போம்.''

வார்த்தைக்கு வார்த்தை அவள் 'நாம்' என்று சொல்ல.. ஜெகன் மனம் நிறைந்து விட்டான்... அதே நேரத்தில் தலையில் வழியும் ரத்தத்தோடு சித்தார்த்தன். சரவணனின் முன்னால் நின்று கொண்டிருந்தான்.



''என்னடா சித்தார்த்தா... இது எப்படி ஆனது.. எவன் உன்மேல் கைவைத்தது.. சொல்.. அவன் உடம்பில் தலை இல்லாமல் பண்ணி விடுகிறேன்.''

''விடுங்கப்பா... டாக்டரிடம் போய் விட்டு வருகிறேன்.. சரியாகி விடும்.''

''என்னடா இப்படி ஈஸியாகச் சொல்கிறாய்? உன் மேல் ஒருவன் கை வைக்க அவனை உயிரோடு நான் விடுவதா?''

''நாம் விட்டுத்தான் ஆக வேண்டும்.. வேறு வழியில்லை.''

''ஏண்டா...''

''அடித்தது நம் திலகாவின் புருசன்ப்பா.. ஜெகன்.. அவனை எப்படிப்பா... நான் திருப்பி அடிப்பேன்?''

சித்தார்த்தன் கண் கலங்க தகப்பனிடம் கேட்க.. அவர் உதட்டைக் கடித்துக் கொண்டார். ஆறுதலாய் மகனின் தோள் தட்டியவர்... காரை எடுத்துக் கொண்டு.. மகனை டாக்டரின் வீட்டிற்கு அழைத்துச் சென்றார்.

'காமாலைக் கண்ணுக்கு கண்டதெல்லாம் மஞ்சள்' என்பார்கள். திலகா பகை உணர்வோடு சித்தார்த்தனைப் பார்த்தாள். அவன் பகையாளியாகத் தெரிந்தான். உண்மையை அறிந்தால் திலகா என்ன சொல்வாளோ...?

## 9

சித்தார்த்தன் டவுனுக்குப் போய் விட்டு தன் புல்லட்டில் வந்து கொண்டிருந்தபோது வழியில் ஜெகன்...

தன் வண்டியை நிறுத்திவிட்டு அதன் அருகில் உ காத்திருப்பதைக் கண்டான்.

வேண்டுமென்றே தன்னுடன் வார்த்தையை வளர் வண்டி ரிப்பேர் போல் வேசம் போட்டுக் கொண் அவன் அமர்ந்திருப்பதை அறியாமல் சித்தார்த்த ஜெகனின் அருகே தன் புல்லட்டை நிறுத்தி விசா தான்

''என்ன பிரச்னை ஜெகன்..?''

''நீதான் பிரச்னை.. இத்தனை நாள் என்னைக் கண்டு காணாதவன் போல் பணத்திமிருடன் போவாய்.. இ றைக்கு என்ன.. புதிதாய் கரிசனம் காட்டுகிறாய்.. இந் கரிசனம் யாருக்காக?''

''ஜெகன்... நாக்கை அடக்கிப் பேசு.. நேற்றுக் கா நேற்றோடு. இன்றைக்கு நீ அத்தை மகளின் கணவன்''

''அதுதான். உன் அத்தையின் மகளை நான் கட் கெண்டு விட்டேனே... இன்னும் என்ன உரிமை கொ டாடுகிறாய்...''

''யார் உரிமை கொண்டாடியது?''

''நீதான்.. வேறு யார்..? என் பெண்டாட்டியின் மே உனக்கென்ன கரிசனம்.''

''ஜெகன்... அசிங்கமாய் பேசாதே... திலகா உன் மனை

''நான் அவளைக் கல்யாணம் பண்ணிக் கொ ஆயிரம் தகிடுதத்தம் பண்ண வேண்டியிருந்தது. இல் விட்டால் அவள் இப்போது உன் மனைவியாகத்தா இருந்திருப்பாள்.''

''என்ன உளறுகிறாய்.''



''உண்மையைச் சொல்கிறேன். ஒருத்தியின் மேல் ஆசைப்பட்டால் மட்டும் போதாது. அவளை அடைய முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். அதற்காக எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் இறங்கலாம். நான் இறங்கினேன். நீ மலையேறினாய்.. அதனால் திலகா எனக்கு சொந்தமாகி விட்டாள்.''

''ஜெகன்...''

''சும்மா கத்தாதே சித்தார்த்தா.. நான் அவளைத் தொட்டு முத்தமிட்டு விட்டேன். அவளுடைய விருப்ப மில்லாமல் தான் தொட்டேன். அவள் விலகி ஓடி விட் டாள். அதன் பின்னாலும் உன்னையேதான் நினைத்துக் கொண்டு உன் பின்னால் சுற்றினாள். அன்றைக்கு கோவிலில் இருந்து அழுது கொண்டு வந்தவள் மரத்தின் மீது தான் சாய்ந்து நின்றாள். நான் தான் நீ வருவது தெரிந்ததும் என் மீது சாய்த்துக் கொண்டேன்.''

''அடப்பாவி...''

சித்தார்த்தனுக்கு சகலமும் விளங்கி விட்டது... ஏன் திலகா ஜெகனைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளும் முடிவை எடுத்தாள் என்பது புரிந்தது.

தன்னையறியாமல் புல்லட்டை விட்டு இறங்கி.. ஜெகனின் சட்டையை பிடித்து விட்டான். ஜெகன் எதிர்பார்த்ததும் அதைத்தானே.. அவன் ரோட்டில் கிடந்த கல்லை எடுத்து சித்தார்த்தனின் தலையில் அடித்து விட்டான்.

அவனுக்குத் தெரியும்.. சித்தார்த்தன் பதிலுக்கு அடிக்க மாட்டான் என்பது. அவன் எதிர்பார்த்தது போலவே.. தலையில் ரத்தம் வழிய சித்தார்த்தன் புல்லட்டைக் கிளப்பிக் கொண்டு போய் விட்டான்.

ஜெகன் அருகிலிருந்த மின் விளக்கு கம்பத்தில் த தலையை மோதிக் கொண்டு.. ரத்தம் கசிய வைத்து கொண்டான். வீட்டிற்குச் சென்றான். திலகாவி கதையை மாற்றிச் சொன்னான்.

திலகா துடித்து விட்டாள்.

'என்னைப் பற்றி தகாத வார்த்தைகளைப் பே சித்தார்த்தனுக்கு எப்படி மனம் வந்தது...'

தனக்காக போராடியதாய் வந்து நின்ற கணவன் மே அவளுக்குள் காதல் சுரந்தது.. சித்தார்த்தனின் மே வெறுப்பு மிகுந்தது.

பிரச்னையை பிரபாகரனிடம் கொண்டு சென்றா

''அப்பா... இதற்கு நீங்களே ஒரு நியாயத்தை சொல்லுங்கள்.. அம்மாவின் அண்ணன் மகன் என்னை வாழவிடக் கூடாது என்று கங்கணம் கட்டிக் கொ டிருக்கிறானா..?''

சகுந்தலா வியப்பும்.. கோபமும் ஒன்று சேர மகளை பார்த்தாள். அப்போது தினகரனும் வீட்டில் இருந்தா

''அவன்... இவனென்று சித்தார்த்தனைப் பேச எ போது பழகினாய் திலகா?''

''ஆமாம் அம்மா.. இப்போது உன் அண்ணன் மகனு நான் மரியாதை கொடுக்காததுதான் உனக்கு ரொ முக்கியம். என் புருசனின் மண்டையை உடைத்திரு கிறான் உன் அண்ணன் மகன்... அவனுக்கு மரியா ஒரு கேடா...?''

பிரபாகரன் பொங்கி எழுந்தார். அவருடைய தங் செண்பகம் கணவனை இழந்தவள். அவளுக்கு ஜெக மட்டும் தான் ஆதரவு.



ஒரு பக்கம் விதவைத் தங்கையின் ஒரே மகன்.. மறு பக்கம் அவருடைய செல்ல மகளின் கணவன்... அவருக்கு தலை ஆடாதா?

''சகுந்தலா... என்ன நினைத்துக் கொண்டிருக்கிறான் உன் அண்ணன் மகன்... கேட்பதற்கு ஆள் இல்லையென்று நினைத்தானா... எப்படி அவன் என் மருமகனின் மேல் கை வைக்கலாம்?''

''அதை ஏன் அம்மாவிடம் கேட்கிறீர்கள் அப்பா.. அம்மா தன்னோட அண்ணன் மகனுக்குத்தான் சப்போர்ட்டாய் பேசும்.. இப்போது அம்மா பேசியதை கேட்டுக் கொண்டுதானே இருந்தீங்க... அம்மாவுடைய நியாயம் இப்படித்தான் இருக்கும்.''

பிரபாகரன் எழுந்து.. சகுந்தலா தடுக்கத் தடுக்க சட்டையை மாற்றிக் கொண்டு கிளம்பினார். உடன் போகப் போன தினகரனை சகுந்தலா ஓர் பார்வை மூலம் தடுத்து விட்டாள். அதைக் கவனத்தில் கொண்ட ஜெகன் திலகாவின் காதைக் கடித்தான்.

''பார்த்தியா திலகா... உன் அம்மாவிற்கு இருக்கும் ஓர வஞ்சனையை.. மருமகன் அடிபட்டு நிற்கையில்.. நியாயம் கேட்க.. மகனை அனுப்பவில்லையே..''

''அம்மா அப்படித்தான் செய்யும்.. அதுதான் அப்பா போயிருக்கிறாரே. என்ன நடக்கிறது என்று பார்ப்போம்.''

பிரபாகரன் போனபோது... அப்போதுதான் நெற்றியில் கட்டோடு இருந்த சித்தார்த்தனுடன் காரில் இருந்து இறங்கிக் கொண்டிருந்தார் சரவணன்.

பிரபாகரனைப் பார்த்ததும்,

''இது நியாயமா மாப்பிள்ளை...'' என்று கேட்டா

பிரபாகரனின் வேகம் தடைபட்டது... அவர் நியா கேட்க வந்தால்... இவர்கள் அவரிடமே நியாயம் கே கிறார்களே.

''என்ன விளையாடுகிறீர்களா?''

''நாங்கள் விளையாடவில்லை. திலகாவின் புரு தான் விளையாடிப் பார்க்கிறான்... என் மகனின் தலை யில் ரத்தம் வரும்படி அடித்திருக்கிறானே.. எவ்வள தைரியம் இருந்தால் இதைச் செய்திருப்பான். இ மடையன் ரத்தம் கொட்டக் கொட்ட... வீட்டுக்கு வ நிற்கிறான்... அந்த ஜெகனைத் தூக்கிப் போட்டு நா மிதி மிதிக்க நான் கிளம்பினால் என்னைத் தடுக்கிறா கேட்டால் அடித்தது நம் திலகாவின் புருசன்ப்பா.. நா எப்படி திருப்பி அடிப்பேன் என்கிறான்.''

பிரபாகரனின் புருவங்கள் சுருங்கின. அங்கே ஜெ னும் ரத்தக் காயம்பட்டு நிற்கிறான். இங்கேயும் இந் கதைதான். என்னதான் நடந்தது..?

''ஒன்றுமே நடக்கவில்லை மாமா.. நீங்க போங்க.'' என்றான் சித்தார்த்தன்.

எவ்வளவுதான் கேட்டாலும் அவன் எதனால் அவனு கும்.. ஜெகனுக்கும் இடையே தகராறு வந்தது என்ப சொல்ல மறுத்து விட்டான்.

அதுதானே ஜெகனின் திட்டமே.. அவனுக்கு ந ராகத் தெரியும். நடந்தவைகளை சித்தார்த்தன் தன் ம திற்குள் போட்டுப் புதைத்துக் கொள்வான். ஒரு போது ஜெகனை காட்டிக் கொடுக்க மாட்டான் என்பதை அவ நன்கு அறிவான்.



சொன்னால் அது திலகாவின் செவிகளை எட்டி விடும். அதன் பின் அவள் முழுமனதாய் ஜெகனுடன் வாழ மாட்டாள் என்பதால் சித்தார்த்தன் தனக்கு நேர்பவைகளை பொறுத்துக் கொள்ள ஆரம்பித்தான்.



# 10

உண்மையான காதல் என்பது.. காதலித்தவரை வாழ வைத்துப் பார்ப்பது.. சித்தார்த்தன் அதைத்தான் செய்தான்... வாழ்க்கையின் போக்கில்... விதியின் விளையாட்டால்.. திலகா அவனது கை நழுவி.. ஜெகனின் வாழ்க்கைத் துணையாகி விட்டாள். அதற்கு சித்தார்த்தனே காரணமும் ஆகிவிட்டான்.

இப்போது போய் அவளிடம் நடந்தவைகளைக் கூறினால் திலகா ஜெகனை வெறுத்து விடுவாள். அதன் பின் அவளது வாழ்க்கை என்ன ஆவது?

அவள் ஜெகனின் மனைவி... சித்தார்த்தன் திவ்யாவின் கணவன்... என்பது மாற்ற முடியாத நிகழ்வுகளாகி விட்டன. இனிப் போய் உண்மையைச் சொல்வதால் யாருக்கு என்ன லாபம்?

மனப்பூர்வமாய் தன்னை நேசித்தவளின் மனதைப் புண்படுத்தி... ஜெகனைப் போன்ற ஒருவனை மணந்து கொள்ளும் முடிவை எடுக்க வைத்ததற்கு... தான் எத்தனை தண்டனைகள் அடைந்தாலும் தகும். என்பதே சித்தார்த்தனின் மனக் குமுறலாக இருந்தது...

அதன் பின்... ஜெகனுக்கும்.. சித்தார்த்தனுக்
இடையே அடிக்கடி தகராறு மூள ஆரம்பித்தது.. மெ
அதன் தாக்கம் பிரபாகரனிடமும். சரவணனிட
பரவியது.

இரு வீட்டாரும்.. எலியும் பூனையுமாக மாறி
றனர். தனக்கு வேண்டிய ஆட்களை விட்டு.. இரு
யும் ரத்தம் வரும்படி அடிக்க வைப்பான் ஜெகன்.
லாய் மோதிக் கொண்டதில்... யார் அடித்தார்கள் எ
புரிபடாமல் போக.. பிரபாகரன் தன்னை அடித்
சரவணனின் ஆட்கள் என்று நினைப்பார். சரவ
தான் ரத்தம் சிந்த பிரபாகரனின் ஆட்களே கார
என்று சொல்வார்.

சித்தார்த்தனுக்கு மட்டுமே... இருவரையும் அடிப்
ஜெகன்தான் என்பது தெரியும். அதை அவன் ஜெ
னிடம் கேட்கப் போனால் அவன் சித்தார்த்தனை அடி
விட்டு.. தான் அடிபட்டதாய் திலகாவிடம் போய் சொ
அழுவான்.

செய்வது அறியாமல் தவித்தான் சித்தார்த்தன். இ
நிலையில் சகுந்தலா ஓர் நாள் யாருக்கும் தெரியா
பண்ணை வீட்டிற்கு வந்து சித்தார்த்தனை சந்தித்தா

'என்ன நடக்கிறது?' என்ற கேள்வியுடன் நின்ற அத்
யிடம் எப்படிச் சொல்வது என்று புரியாமல் கல
நின்றான் சித்தார்த்தன்.

திலகா ஜெகனின் குழந்தைகளுக்கு தாய் ஆ
விட்டாள்.. சித்தார்த்தனுக்கும் திவ்யாவிற்கும் குழந்தை
பிறந்து வளர்ந்து வந்தன. இப்போது போய் கடந்த கா
நிகழ்வுகளை எப்படிச் சொல்வது?



''எதையும் மறைக்காதே...'' என்றாள் சகுந்தலா.

''அத்தை...'' என்று தவித்துப் பார்த்தவனிடம்..

''அன்றே உன்னிடம் என்ன நடந்ததுன்னு கேட்டேன். நீ எதுவும் சொல்லாமல் போய் விட்டாய். இப்போது நம் இரண்டு வீட்டிற்கும் நடுவில் தீப்பற்றி எரிகிறது. இதனால் பாதிக்கப்படுவது என் அண்ணனும் அண்ணன் மகனும் தானே... எனக்குத் தெரியும் சித்தார்த்தா.. என் அண்ணனால் தங்கையின் புருசனை அடிக்க முடியாது. உன்னால் திலகாவின் புருசனை கை தொடவும் முடியாது.. இடையில் எதுவோ நடக்கிறது. அது என்ன என்பதை மறைக்காமல் சொல்லு.. இது உன் அத்தையின் ஆணை. இதை மீறினால்... நான் செத்தாலும் நீ என் முகத்தில் விழிக்காதே...'' என்று கூறி விட்டாள் சகுந்தலா.

''இப்போதே.. நான் உங்கள் முகத்தில் விழிக்க தகுதியில்லாதவனாகத்தானே நிற்கிறேன் அத்தை...'' சித்தார்த்தன் குமுறினான்.

''என்ன நடந்தது சித்தார்த்தா...''

''சொல்கிறேன் அத்தை... என் மனதில் இருக்கும் துயரத்தைச் சொல்கிறேன். ஆண் பிள்ளையின் அவசர புத்தியில் காதலித்தவளை கை நழுவ விட்டுவிட்டு நான் துடித்துக் கொண்டிருப்பதைச் சொல்லுகிறேன். மெல்லவும் முடியாமல்... விழுங்கவும் முடியாமல்... நான் வதை பட்டுக் கொண்டிருப்பதைச் சொல்லுகிறேன். அத்தை.. திலகா ஏன் என்னை விட்டுவிட்டு ஜெகனைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளத் தீர்மானித்தாள் தெரியுமா?''

''அது தெரியாமல்தானே அன்றைக்கும் நான் தவித்தேன்.. இன்றைக்கும் தவிக்கிறேன். நீங்கள் இருவரும்

பிரிந்ததால் இந்த இரண்டு குடும்பமும் அடித்து கொண்டு நிற்கிறதே...''

சித்தார்த்தன் சொன்னான். சகலத்தையும் சொன்னா

''இந்த ராஸ்கல் திலகாவை அவள் எதிர்பாராதபோ முத்தமிட்டு விட்டான் போல அத்தை. எனக்கு இது தெ யாது. அவள் என்னிடம் இதைச் சொல்லவும் இல்லை அவள் சொல்லியிருந்தால்... அவளை நான் சமாதா படுத்தி இருப்பேன். அவளுடைய விருப்பம் இல்லா நடந்த தவறை நான் பெரிதாக எடுத்துக் கொள்ள ம டேன் என்பதை புரிய வைத்திருப்பேன். அவள் சொ வில்லை. அதே சமயம் என்னை மறக்கவும் இல்லை.

''ஜெகன் இப்படிப்பட்ட ஆளா...''

''ம்ம்.. இதை நானும் அறியாமல் போனேன். அ னிடம் அவன் நான் என் மாமன் மகளைத்தான் க யாணம் பண்ணிக் கொள்வேன் என்று ஊர் முழுவ சொல்லிக் கொண்டிருப்பதாக சொல்லி விட்டான். அ கேற்றாற் போல்... நான் நம் காவ்யாவை கோவிலு அழைத்துக் கொண்டு வந்ததை உங்கள் மகள் பார் விட்டாள்...''

சகுந்தலாவிற்குள் துயரம் பொங்கியது. அடு என்ன நடந்திருக்கும் என்பதை அவளால் அனுமானி முடிந்தது.

''அவள் யாரென்று உங்கள் மகள் என்னிடம் கே டாள் அத்தை.''

''காவ்யா.. அவளுடைய தாய்வழித் தாத்தா வீட்டில் சென்னையிலேயே வளர்ந்தவள். நம் தில பார்த்திருக்க மாட்டாள்.''



''அதுவேதான். நான் வாயை வைத்துக் கொண்டு சும்மாயிருந்திருக்கலாம் காவ்யாவிற்கு அப்போது கல்யாணம் நிச்சயமாகி இருந்தது இல்லையா. அதை மனதில் வைத்துக் கொண்டு.. உங்கள் மகளிடம் விளை யாடிப் பார்க்க நினைத்து கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிறவள்..'ன்னு மொட்டையாகச் சொல்லி விட் டேன்...''

''என்ன காரியம் செய்து விட்டாய் சித்தார்த்தா?''

''அத்தை.. அத்துடனும் நான் விட்டுத் தொலைக்க வில்லை... 'அவள் என்னை விட உயர்வா'ன்னு உங்கள் மகள் சண்டை போட்டாள். காவ்யா திலகாவை விட வளர்த்தியானவள்.. அதை மனதில் வைத்து... 'ஆமாம்'ன்னு சொல்லி திலகாவை வம்புக்கு இழுத்தேன்..''

''எதில்தான் விளையாடுவது என்று இல்லையா சித்தார்த்தா.. இதை ஏன் என்னிடம் நீ சொல்லாமல் மறைத்தாய்? அப்போதே சொல்லியிருந்தால் அவளை நான் சமாதானப்படுத்தி இருப்பேனே...''

''முட்டாள்தனம் செய்துவிட்டேன் அத்தை.. கோவிலை விட்டு திலகா அழுது கொண்டே வெளியில் ஓடினாள். அவளை சமாதானப்படுத்த நான் பின்னாலேயே ஓடினேன்.''

''சமாதானப் படுத்தினாயா...''

''இல்லை அத்தை...''

''ஏன் சித்தார்த்தா...''

''அங்கே நான் பார்த்த காட்சி என்னை அவளிடம் பேச விடாமல் செய்து விட்டது. திலகா ஜெகனின் மேல் சாய்ந்து அழுது கொண்டிருந்தாள் அவன் அவளைச்

சமாதானப்படுத்துகிறேன் பேர்வழின்னு கட்டிப் பிடித்து கொண்டிருந்தான்...''

சகுந்தலா சோர்ந்து போய் அங்கிருந்த கயிற் கட்டிலில் அமர்ந்து விட்டாள். அவளது நிலை கண்ட சித்தார்த்தனின் நெஞ்சம் பிசைந்தது. இத காரணம் அவனல்லவா.. அவன் கண்ணில் நீர்ம அவள் அருகே அமர்ந்தான். அவன் பேசிய வார்த் களில் தோற்று விட்ட சோகம் தெரிந்தது.

''திலகா மரத்தின் மீதுதான் சாய்ந்திருக்கிறாள். ஜெ தானாக அவளருகே நெருங்கி நின்றிருக்கிறான். அ தெரியாமல் நான் அவள்தான் அவன் மேல் சாய் அழுகிறாள் என்று நினைத்துக் கொண்டு அவ பேசாமல் போய் விட்டேன்.''

'இதுதான் ஆண்களா...' என்றிருந்தது சகுந்தலாவிற்

காதலித்து திருமணம் செய்து கொண்ட பின் வசந்தனின் பார்வை சகுந்தலாவின் மேல் பரிவு படிவதை பொறுத்துக் கொள்ளாத பிரபாகரன் மாம வீட்டிற்குப் போவதையே தவிர்த்தது அவளது நினை ஆடியது.

# 11

''காவ்யாவின் கல்யாணம் முடிந்த பின்னால் மையை அறிந்த திலகா என்னிடம் பேச ஆவலாய் தாள் அத்தை. அப்போது நான் அவளை அவளு



செயலுக்காக கண்டித்திருக்கலாம்.. என் கைதொட்டு அடித்திருக்கலாம்.. நான் என்ன செய்திருந்தாலும் அவள் தாங்கிக் கொண்டிருப்பாள். அதை விட்டு விட்டு.. என் கண் முன்னாலேயே.. ஜெகன் உன்னை தொட்டுக் கொண்டு நின்றானே... நான் விளையாட்டாய் பேசியதற்கு நீ வேறு ஒருவனைத் தேடிக் கொண்டு விட்டாயான்னு கேட்டு விட்டேன்.''

தான் அவ்வளவு தூரம் விசாரித்தும் ஏன் திலகா ஜெகனைத் திருமணம் செய்து கொள்ள முடிவு செய்த தற்கான காரணத்தைச் சொல்ல மறுத்தாள் என்பது இப்போது சகுந்தலாவிற்கு தெளிவாகப் புரிந்தது.

''அன்றைக்கு அவள் அதிர்ச்சியோடு என்னைப் பார்த்த பார்வை இன்றைக்கும் என் மனதில் நிற்கிறது அத்தை. அவள் ஒரு பாவமும் அறியாதவள். சிறு பெண். அவளை அந்த ராஸ்கல் பலவந்தமாய் முத்தமிட்டு விட்டதை என்னிடம் சொல்லாமல் மறைத்தவளுக்கு.. அதுவும் தெரிந்தால் நான் அவளை ஏற்றுக் கொள்ள மாட்டேன் என்று தோன்றி விட்டது. அதனால்தான் ஜெகனையே கல்யாணம் பண்ணிக் கொள்ளும் முடிவை எடுத்து விட்டாள்...''

சகுந்தலா.. சுழித்தோடும் வாய்க்கால் நீரில் தெரியும் நீர் சுழல்களையே உற்றுப் பார்த்துக் கொண்டு இருந் தாள்.

அவள் மகளின் வாழ்விலும் இத்தனை சுழல்களா? அதை வெளியில் சொல்ல முடியாமல் தெரிந்தே ஓர் கயவனுக்கு மாலையிட அவள் சம்மதித்தாளா?

''அத்தை... அன்றைக்கு திலகாவிடம் நான் பேசியது கோபத்தால் தான். அப்போதே... அவள் என்னிடம்

ஆவலாய் வந்து பேசியபோதே... எனக்கு அவள் செ
பிழையை மன்னிக்கும் மனம் வந்து விட்டது. ஏ
ஆறுதலுக்கு... சொந்தக்காரன் என்பதால் தன்னை
அறியாமல் அவன் தோள் சாய்ந்து அழுது விட்டா
நான் கோபம் கொள்வதை அறிந்தால் இனி கவன
இருப்பாள் என்றுதான் நினைத்தேன். ஆனால் தில
ஜெகனைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளும் முடிவை
எடுத்து விட்டாள் என்பதைக் கேட்டபோது என் நெஞ்
உடைந்து விட்டது அத்தை... அவளை நான் வெறு
விட்டேன். விலகி விட்டேன்.''

சகுந்தலாவின் கண்கள் கலங்கின. சித்தார்த்
வழியும் விழி நீரைத் துடைத்துக் கொண்டே மீண்
பேசினான்.

''நான் உண்மையிலேயே அவளைக் காதலித்தி
தால் என்ன செய்திருக்க வேண்டும்? அவள் கன்னத்
நான்கு அறை விட்டு ஏண்டி இப்படிச் செய்தாய்
கேட்டிருக்க வேண்டும். அவளைத் தூக்கிக் கொ
போய் தாலிகட்டியிருக்க வேண்டும். நான் இ
செய்யவில்லையே... குற்றவாளி ஜெகன் இல்
அத்தை.. நான்தான்... அதற்காகத்தான் இப்போது இந்
தண்டனைகளை ஏற்றுக் கொள்கிறேன். ஜெகன் என்
அடித்தால்.. திருப்பி அடிக்க என்னால் முடிவதில்
எனக்கு அவன் முகத்தைப் பார்த்தால்.. அதில் தில
வின் முகம்தான் தெரிகிறது. அவளது புருசனை ந
எப்படியத்தை அடிப்பேன்...''

சகுந்தலா... முந்தானையால் தன் கண்ணீ
துடைத்துக் கொண்டாள்.



''அத்தை... திலகா பலவந்தமாய் கற்பழிக்கப்பட்டிருந்தாலும் நான் அவளை ஏற்றுக் கொண்டிருப்பேன். நான் காதலித்தது அவளை.. அவள் மனதை... உடலை இல்லை... இதை அவள் அறியாமல் போனாள். நடந்து விட்ட இந்தக் கொடுமைகளுக்கு நானே காரணமாகி விட்டேன். ஜெகன் வேண்டுமென்றே நம் இரு குடும்பங்களுக்கும் இடையே பகையை வளர்க்கிறான். இதை வெளியே சொல்ல முடியாமல்.. வாயிருந்தும் நான் ஊமையாகிப் போனேன்...''

சகுந்தலா புரிந்து கொண்ட பாவனையில் தலையை ஆட்டினாள்..

''எனக்குத் தெரியும் அத்தை... திலகா நிர்பந்தத்தில் இப்படியொரு முடிவை எடுத்திருப்பாளே தவிர.. மனம் விரும்பி ஜெகனுடன் வாழ்ந்திருக்க மாட்டாள்.. என்னை அவள் மறக்க வேண்டுமென்றால்.. அவள் என்னைப் பகையாளியாக பார்க்க வேண்டும். இதைத்தான் ஜெகன் செய்கிறான். ஒரு வகையில் இதில் எனக்கு சந்தோசம் தான். திலகா வாழ வேண்டும் அத்தை... நல்லவனோ.. கெட்டவனோ.. ஜெகன் அவளது கணவனாகி விட்டான்... அவனுடன்தான் அவள் வாழ்ந்தாக வேண்டும். உண்மையை இப்போது சொன்னால்... அதன் பின் திலகா அவனோடு வாழ்வாளா? எனக்கு திலகாவின் வாழ்க்கை தான் முக்கியம் அத்தை.''

சித்தார்த்தன் தான் சிலுவையை சுமப்பதற்கான காரணத்தைக் கூறினான்... கடப்பாரையை ஜீரணித்துக் கொண்ட சகுந்தலா வீடு திரும்பினாள். கணவனிடம் உண்மையைச் சொல்ல முடியாமல்... அவரை பகை வளர்ப்பதிலிருந்து தடுக்கவும் முடியாமல் தடுமாறியவளுக்கு மகனைத் தடுப்பது எளிதாக இருந்தது.

ஆனால் அதுவே ஜெகனுக்கு பெரும் இடியா இருந்தது... தினகரன் திருமணத்திற்கு தயாராக உள்ளா சரவணனின் மகள் சித்ரலேகாவும் வளர்ந்து விட்டா தினகரனுக்கு சித்ரலேகாவை பிடித்துப் போய் ம முடித்து விட்டால் என்ன செய்வது..?

மனைவியிடம் பேசும் விதத்தில் பேசினான்.

"தினாவுக்கு பெண் பார்க்க ஆரம்பி திலகா..."

"அவன் கல்யாணத்திற்கு இப்போது என்ன அவசரம்?"

"அவசரம்தான் திலகா.. அவன் பாட்டுக்கு அ சித்தார்த்தனின் தங்கையை கல்யாணம் செய்து கொள் போகிறேன்னு கை காட்டி விட்டால் நம்மால் என் செய்ய முடியும்? அந்த சித்தார்த்தன் நம் வீட்டிற்கு வ போக ஆரம்பித்து விடுவான். உன் அப்பாவின் வீ உனக்குச் சொந்தமானதாக இருக்காது. அது அவனுடை தங்கையின் வீடாக மாறிவிடும். அவன் ஏற்கனவே உன்னை மரியாதையில்லாமல் தான் பார்ப்பான். அவ தங்கையிடம் உன்னைப் பற்றி என்னவெல்லாம் சொல் வைத்திருக்கிறானோ..."

ஜெகன் மூட்டிய அனல் திலகாவின் அடிவயிற்றி பற்றிக் கொண்டது. அவள் தினகரனுக்கு பெண் தே ஆரம்பித்தாள்.

"அப்பா... நம்ம வேதாச்சலம் மாமாவின் பெண் ப டிகிரி படித்திருக்கிறாள். நன்றாகப் பாடுவாள். அவர்க நாம் கேட்கும் சீரை விட அதிகமாகவே செய்வார் அந்தப் பெண்ணை நம் தினாவுக்கு முடிக்கலாமா?"

"அதற்கென்ன இப்போது அவசரம் திலகா.."



"என்னப்பா இப்படிச் சொல்கிறீங்க. தினாவுக்கு கல்யாண வயது வந்து விடவில்லையா...?"

"ஆமாம்... அவனுக்குக் கல்யாண வயது வந்து விட்டது தான். ஆனால் அவன் கல்யாணத்தில் அவன் விருப்பம் முக்கியமில்லையா. நான் இப்போதுதான் வேலைக்குச் சேர்ந்திருக்கிறேன். கல்யாணத்துக்கு இப்போது என்ன அவசரம்ன்னு அவன் கேட்கிறானே..."

"அவன் அப்படித்தான் சொல்வான் அப்பா.. வயது இருபத்தி ஐந்தாகிறது.. இப்போது அவனுக்கு அவசரமில்லையா? நாம்தான் அவனுக்கு எடுத்துச் சொல்லி சம்மதிக்க வைக்க வேண்டும்..."

"அது தப்பு திலகா... உன் கல்யாணத்தில் நாங்கள் உன்னை வற்புறுத்தவில்லை... உன் விருப்பப்படிதான் உன் கல்யாணம் நடந்தது."

'என் விருப்பப்படியா...' திலகா மனம் கசந்தாள்.

'சூழ்நிலையின் விருப்பப்படி நடந்தது...' அவள் பதில் பேசாமல் எழுந்து கொள்ள... மனைவியின் முக மாற்றத்தையே கவனித்துக் கொண்டிருந்த ஜெகன் முகம் கருத்தான்.

கல்யாணத்தைப் பற்றிப் பேசினாலே இவள் முகம் மாறி விடுகிறாள். என் குழந்தைகளுக்கு தாயான பின்னாலும்.. இன்னும் இவள் மனம் மாறவில்லையா...'

திலகாவின் மனம் சித்தார்த்தனிடம் இருப்பதை தெரிந்தே திருமணம் செய்து கொண்ட ஜெகன் தவித்தான். திலகாவின் மனதில் தன் மீது காதல் வர வேண்டும் என்று நினைத்தான். சித்தார்த்தனள் மேல் பகை வளர்ந்தால் தான் தன்னால் நிம்மதியாய் வாழ முடியும் என்ற

முடிவில் அவன் தீர்மானமாய் இருந்தான். அதன் வி…
வாக அந்த இரு குடும்பங்களுக்கும் இடையே ந…
சண்டை தீவிரமானது. தினகரன் நிம்மதி இ…
நின்றான்.

# 12

தெரு அடங்கி எங்கும் நிசப்தம் பரவியிரு… இரவு வண்டுகளின் ரீங்கார சப்தம் மட்டும் கே… கொண்டிருந்தது. எங்கோ... ரோந்து சுற்றிக் கொ… டிருந்த கூர்க்காவின் விசில் ஓசை காற்றில் தவ… வந்தது.

தினகரன் புரண்டு படுத்தான். சாப்பிடாத வெ… வயிறு பசித்தது. எழுந்து பிரிட்ஜைத் திறந்து எதைய… வயிற்றில் போட்டுக் கொள்ள வேண்டும் என்ற எ… யில்லாமல் அவன் இருளில் கடந்த காலத்தை தே… னாய் நினைவுக் குவியலில் புதைந்து கிடந்தான்…

விரியூரில் இரு குடும்பங்களுக்கும் இடையே … எரிந்த தீ ஒரு நாள் உச்சத்தை அடைந்து வி… தங்கையின் மீதுள்ள பாசத்தால் பொறுமை காத்து … சரவணன்.. பொறுமையை கை விட்டார்.

களத்து மேட்டில் சித்தார்த்தனுடன் ஜெகன் ச… புரண்டு கொண்டிருப்பதாக தகவல் வந்ததும் பிர… அவசரமாய் அங்கே ஓடினார். உடன் தொட…



தினகரன்... தாயின் பார்வையைத் தாங்க முடியாமல் தலையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்து விட்டான்.

சண்டையை விலக்கி விட பிரபாகரன் போனது போலவே...

சரவணனும் அங்கே வந்தார். அன்று வெறியின் உச்சத்தில் இருந்த ஜெகன்.. சித்தார்த்தனை சரவணனின் கண் முன்னே அடித்து விட... கோபம் கொண்ட சரவணன் ஜெகனை அடித்த அடியில் அவன் சட்டை கிழிந்து கந்தல் கந்தலாகி விட்டது.

பதறிப் போன சித்தார்த்தன்.. தகப்பனை பிடித்து நிறுத்த முயன்று கொண்டிருக்க... அப்போதுதான் அங்கே வந்த பிரபாகரனிடம் ஜெகன் கதறி அழுதான்.

"மாமா... அப்பனும்.. மகனும் சேர்ந்துக்கிட்டு என்னை அடித்து நொறுக்குகிறாங்க மாமா.. என் சட்டையை கிழித்து கந்தல் கந்தலாக்கிட்டாங்க மாமா.. என்னைக் கொல்லப் பார்க்கிறாங்க மாமா."

பிரபாகரன் கண் சிவக்க தான் என்ன செய்கிறோம் என்பதை உணராமல் சரவணனின் மேல் பாய்ந்து விட்டார்.

முதன் முறையாக.. மைத்துனர் மேல் அவரும் அவர் மேல் சரவணனும் கை வைத்து விட்டனர்...

எது நடக்கக் கூடாது என்று சகுந்தலா பயந்தாளோ.. அது நடந்தே விட்டது. இரு வீட்டுக்கும் இடையே இருந்த விரிசல் அன்று பள்ளமாகி விட்டது.

ஜெகன் கிழிந்த சட்டையுடன் வீடு வந்து சேர.. திலகா பொங்கி அழுதாள். கணவனுக்கு நடந்த அவமானத்தை

சொல்லிச் சொல்லிப் புலம்பினாள். முகம் வீங்கிப் போ
ருந்த பிரபாகரன்... இறுகிப் போயிருந்தார்.

"சட்டையை கிழிச்சிருக்காங்கடா தினா... உன் ம
வின் சட்டையை அந்த சித்தார்த்தனும் அவனுடை
அப்பாவும் சேர்ந்து கிழிச்சிருக்காங்க... இதை எப்படி
பண்ணுவேன்... எந்தக் காலத்திலும் இது தீர
அவமானம்டா தினா... இது தீர்ந்தால்தானே என் கட்
வேகும்.. அப்பாவைப் பாருடா.. பெண்டாட்டியோட அ
ணன் கிட்ட அடி வாங்கிக்கிட்டு வந்திருக்கிறார். எங்
யாவது இந்தக் கொடுமை நடக்குமாடா.. பொண்
கொடுத்த வீட்டில் ஒரு மனிதன் கை வைப்பானா
அந்த ஆளெல்லாம் ஒரு மனுசனா? அவனைக் கேட்
ஒரு நாதியில்லாமல் போனேனே."

தமக்கை சிந்திய ஒவ்வொரு கண்ணீர்த் துளியு
தினகரனின் நெஞ்சில் கூர் வாளாய் இறங்கின... தக
னுக்கு நடந்த அவமரியாதைக்கு பதில் கேட்காவிட்டா
தான் அவருடைய மகன் என்பதில் அர்த்தம் இல்லை.
தமக்கையின் கணவனுக்கு நடந்த அவமானத்
துடைக்கா விட்டால் அவளுடைய கூடப் பிறந்தவ
என்று சொல்லத் தனக்குத் தகுதியில்லை என்
முடிவிற்கு தினகரன் வந்து விட்டான்.

அதன் பின்னால் அவன் செய்த செயல்கள் எல்லாமே
திட்டமிட்டவை... சித்ரலேகா பிளஸ் டூ படிப்பை முடித்
விட்டு டிகிரி படிக்க விழுப்புரம் காலேஜில்... ஹாஸ்ட
லில் சேர்ந்தாள்.

ஒரு ஞாயிறு மாலையில்... அவளைப் பார்க்க சொந்த
காரர் வந்திருப்பதாக அவளது அறைத் தோழி கூறினாள்.



'யாராக இருக்கும்... அண்ணனும்.. அண்ணியும்
காலையில் தானே வந்து பார்த்து விட்டுப் போனாங்க...'
யோசனையுடன் வரவேற்பறைக்குப் போனவளுக்கு
ஆச்சரியம் காத்திருந்தது...

அங்கே தினகரன் அவளுக்காக காத்துக் கொண்டிருந்
தான்.

"நீங்களா...?" என்றாள் அவள் ஆச்சரியத்துடன்.

"நானேதான்... ஏன் நான் வரக்கூடாதா?" அவன்
அமர்த்தலான குரலில் வினவினான்.

"அது.. அது.. வந்து..." அவளுக்கு.. என்ன பதில்
சொல்வதென்று தெரியவில்லை.

"எது.. எது.. வந்து..." அவளைப் போலவே பேசிக்
காட்டினான் அவன்.

அவளது முகம் சிவந்து விட்டது. அடிக் கண்களால்
அவனைப் பார்த்தவாறு தன் துப்பட்டாவின் முனையை
திருகிக் கொண்டிருந்தாள். அவளது பரபரப்பு வெளிப்
படையாகத் தெரிந்தது.

தினகரன் அவளது பரபரப்பைக் கண்டும் காணாதவன்
போல் இயல்பாக அவளுடன் பேசிக் கொண்டிருந்தான்.

சித்ரலேகாவிற்கு அவன் மேல் ஓர் மயக்கம் உண்டு
என்பதை அவன் நன்கு அறிவான்.

விரியூரில்.. அவள் போகும் பாதையில் பல முறை
தினகரனைச் சந்தித்து இருக்கிறாள். அதுவும் அவளுடைய
ஸ்கூட்டியை அவன் ஸ்டார்ட் பண்ணித் தந்த பின்
னால்... அவனைப் பார்க்கும் போதெல்லாம் வெட்கப்
புன்முறுவல் ஒன்றை உதிர்த்து வைப்பாள்.

சில சமயம் தினகரன் அவளிடம் பேச்சுக் கொ பான்.

''என்ன மேடம்... இப்போதுதான் ஸ்கூலுக்குப் போ றீர்களா...?''

''மேடமா.. நானா..?''

''ஏன் உன்னை மேடம்ன்னு கூப்பிடக் கூடாதா?''

''என் பெயர் சித்ரலேகாதானே.. அப்புறம் ஏ மேடம்ன்னு கூப்பிடுகிறீங்க.''

''ஓ.கே... ஓ.கே... உன்னை லேகான்னே கூப்பி கிறேன்.''

''என் பெயர் சித்ரலேகான்னு சொன்னேன்.''

''எனக்கு நீ 'லேகா'தான்...''

அவன் லேசாய் கண் சிமிட்ட அவள் முகம் செ வானமாகி விடும்.. பதில் பேசாமல் மௌனித்து விடு

''என்ன லேகா.. என் மேல் கோபமா..? என்னு பேச மாட்டாயா?''

''அதெல்லாம் ஒன்றுமில்லை...''

''உன் ஸ்கூட்டி என்ன சொல்கிறது? உதை வேணு கேட்கிறதா...''

''அதெல்லாம் கேட்கவில்லை... நான் போய் வ கிறேன்.''

அவள் ஸ்கூட்டியில் பறந்து விடுவாள். அவளை கடந்து போன பின் திரும்பி ஓர் மின்னல் பார்வை அவன் மேல் செலுத்தி விட்டுத்தான் பறப்பாள்.



''ஏன் உங்கள் வீட்டிலிருப்பவர்கள்.. எங்கள் வீட்டோடு சண்டைக்கு வருகிறார்கள்..''

இந்தக் கேள்வியை ஒரு நாள் தினகரனிடம் கேட்டாள் சித்ரலேகா... அவன் அவளையே ஒரு கணம் கூர்ந்து பார்த்தான். அவள் முகத்தில் அப்பாவித்தனம் தெரிந்தது.

''இதை உங்கள் வீட்டு ஆட்களிடம் போய் கேட்பது தானே...''

''சண்டைக்கு வருவது நீங்கள்தானே..''

அவள் இயல்பாகச் சொன்னாள். அவனுக்குள் கோபம் பீறிட்டெழுந்தது. அடக்கிக் கொண்டான்.

'பெண்ணிடம் வீரத்தைக் காட்டக் கூடாது...'

''நான் உங்கள் வீட்டாரிடம் சண்டை போட்டதில்லையே...'' அவன் உண்மையைச் சொன்னான்.

''அதனால்தான் உங்களை என் வீட்டாருக்கு ரொம்பவும் பிடிக்கும்...'' அவள் முகம் மலர்ந்தாள்.

'ஆமாண்டி.. உன் வீட்டு ஜென்மங்களுக்கு என்னைப் பிடிக்க வேண்டும்ன்னுதான் நான் தவம் கிடக்கிறேன்.'

அவன் புருவங்கள் முடிச்சிட அவளையே பார்க்க... அவன் மனதில் இருப்பதை அறியாமல் அவள் வெள்ளையாகச் சிரித்தாள்.

தினகரன் தன்னை வேட்டையாட நினைக்கும் வேங்கை என்பதை அறியாமல்... அந்தப் புள்ளிமான் அவனிடம் உறவு கொண்டாட ஆரம்பித்தது.

# 13

"உன் வீட்டாருக்குத்தான் என்னைப் பிடிக்கு... உனக்குப் பிடிக்காதா?"

தினகரன் அவளைக் கூர்மையாய் பார்த்தபடி வி... விதத்தில் சித்ரலேகா பேச்சிழந்து நின்றாள். அ... வயிற்றில் பட்டாம் பூச்சிகள் பறந்தன... உடலெங்... ஒரு விதப் பரபரப்பு தோன்ற அவள் அவனை நே... பார்க்க இயலாமல் தவித்தாள்...

சித்ரலேகாவிற்கு தினகரனை மிகவும் பிடிக்கும்.. மே... நிலைப் பள்ளியில் இரண்டாமாண்டு படிக்கும் பதி... வயது சிறுமி அவள்.

அவள் மனதை உயரமாய்.. கம்பீரமாய்.. க... ததும்பும் முகத்துடன்.. எதையும் இலகுவாகப் பே... தன்மையுடன்.. ஆண்மை ததும்ப நின்ற தின... ஆகர்ஷித்தான்.

இளம் வயதுப் பிராயத்தில் அவள் இதயத்... பதிந்தது அவன் முகம்தான்.. சித்ரலேகா.. தினகர... மயங்கிப் போனாள். அவளது மயக்கத்தை உண... தினகரன் வேண்டுமென்றே அவளைச் சந்திக்க ... டான். பின் திடீரென்று ஓர் நாள் போய் அவள் முன்... நிற்பான்.

அப்போது அவளது கண்களில் தெறிக்கும் மின்ன... அவளது உடலில் தெரியும் பரபரப்பு. அவ...



பார்த்துவிட்ட ஆனந்தத்தில் அவள் விழிகள் பேசும் பேச்சு.. எல்லாவற்றையும் பார்த்தும் பார்க்காதவன் போல் இயல்பாய் அவளிடம் நலம் விசாரிப்பான்.

அவள் விழுப்புரம் காலேஜில் சேர்ந்த பின்னால்.. அவன் வருவது அதுதான் முதல் முறை என்றாலும் என்னவோ வாரா.. வாரம் வந்து பார்த்து விட்டுப் போகிறவன் போல அவளிடம் பேசிக் கொண்டிருந்தான்.

"சாப்பிட்டு விட்டாயா."

"ம்ம்..."

"காலையில் யார் உன்னைப் பார்க்க வந்தது."

"அண்ணனும்... அண்ணியும்."

"என்ன சொன்னாங்க."

"நன்றாகப் படின்னு சொன்னாங்க."

"இதைத் தவிர வேறு எதையும் படிக்கிற பெண்களிடம் சொல்ல மாட்டாங்களா?"

"வேறு என்ன சொல்லணும்னு சொல்ல வர்றீங்க.. தினம் ஒரு சினிமாவுக்குப் போ.. ஊரைச் சுற்றுன்னா சொல்வாங்க? படின்னு தானே சொல்வாங்க?"

"அடேங்கப்பா... உன் அண்ணன் அண்ணியை ஒரு வார்த்தை சொல்லிவிடக் கூடாது போல.. கோபம் பொத்துக் கொண்டு வருகிறதே..."

அவன் கேலி போல் சொன்னாலும்... உள்ளூர அவளுக்கு தன் அண்ணன் குடும்பத்தின் மேல் இருக்கும் பிடிப்பை நினைத்து எரிச்சல் பட்டான்.

"ஆமாம்.. அவர் என்னவோ உங்களைப் பற்றி உயர்வாகவே பேசுகிறார். நீங்கள் மட்டும் அவரைப் பற்றி கிண்டல் பண்ணிப் பேசினால் எப்படி?"

'சித்தார்த்தன்.. என்னைப் பற்றி உயர்வாய் நினை
கிறானா? இது என்ன புதுக்கதை...'

மனதிற்குள் வியந்தாலும்.. அதைப் பற்றிய நினை
அவன் ஒதுக்கித் தள்ளினான். அவன் கண் முன் நின்
திலகாவின் அழுகையும்.. ஜெகனின் சட்டை கிழி
கோலமும்.. தகப்பனாரின் வீங்கின முகமும் தான்.

''நீங்கள் எப்படி இங்கு வந்தீர்கள்?''

''தவழ்ந்து வந்தேன்.''

''விளையாடாதீர்கள் அத்தான்.''

அவள் சிணுங்கினாள். அவன் உதட்டை மடித்து
கொண்டான். அவனது மனதை என்னவோ பண்ணிய
அந்த அந்தி நேரத்துக் காற்றும்... மஞ்சள் வெயிலு
ஒரு தேவதை போல் எதிரே நின்ற அவளது அழ
தோற்றமும்... எதிரியின் வீட்டைச் சேர்ந்தவன் எ
பயமோ.. தயக்கமோ சந்தேகமோ, இல்லாமல் அவள் பே
விதமும்.. அவளது அறியாமை நிறைந்த குழந்
தனமும்.. அவனை அவளிடம் ஈர்த்தன.

'தினகரா.. ஜாக்கிரதை.. அவளுக்கு காதல் வ
விரித்து விட்டு.. அவளுக்கு முன்னால் நீயே அந்தக் க
வலையில் மாட்டிக் கொள்வாய் போல இருக்கிறதே'

மனம் குரல் கொடுக்க... தன்னைக் கட்டுப்படுத்
கொண்டான்.

''நீயும்.. நானும் என்ன சிறு பிள்ளைகளா.. ஓ
பிடித்து விளையாட?''

''ம்ம்... போங்க அத்தான்..''

'அத்தான்..' என்ற அவளது அழைப்பு அவனை ம
...வந்திருக்கிறே



என்பதை தனக்குத்தானே அவன் அடிக்கடி நினைவு
படுத்திக் கொள்ள வேண்டியிருந்தது.

''எங்கேயிருந்து வருகிறீர்கள் அத்தான்.''

''திருச்சியில் இருந்துதான் மூன்றரை மணி நேரப்
பயணம்தான்.''

''ஓ... அப்போ... நீங்கள் வாராவாரம் வருவீர்கள்
தானே.''

அவனது வரவை அவள் எதிர்பார்ப்பது அவனுக்கும்
புரிந்தது. அவனது வருகையை உறுதிப்படுத்திக் கொள்ள
அவள் விழைவதும் தெரிந்தது.

''நீ என்ன சொல்கிறாய்?'' அவன் அவள் மேலிருந்த
பார்வையை அகற்றாமல் கேட்டான்.

''நான் என்ன சொல்ல...'' அவனது பார்வையைச்
சந்திக்க முடியாமல் அவள் நாணி நிலம் பார்த்தாள்.

''வாரா.. வாரம் நீ என்னை வரச் சொல்கிறாயா?''
அவன் நேரடியாய் கேட்டான்.

''இப்படிக் கேட்டால் எப்படி அத்தான்...'' அவள் மனம்
படபடக்க வினவினாள்.

''இல்லை லேகா.. இது விளையாட்டில்லை.. நம் இரு
குடும்பத்திற்கும் ஆகாது.. இதில் நான் உன்னை அடிக்கடி
பார்த்துப் பழகுவது சரியில்லை..'' அவன் நல்லகுடி
மாசானம் போல் நடித்தான்.

''அப்புறம்.. இப்போது மட்டும் ஏன் என்னைப் பார்க்க
வந்தீர்கள்..?'' அவள் அவனை நிமிர்ந்து நேருக்கு நேர்
பார்த்துக் கேட்டாள்.

"அது.. ஊரில் உன்னைப் பார்க்க முடியவில்லை..
என் கண்ணுக்குள்ளேயே நின்றாய்.. அதுதான்..
முறை பார்த்து விட்டுப் போகலாமென்று வந்தே
அவன் கதை பிணைந்தான்.

அவள் மனம் சிறகடித்தது.. மயக்கத்துடன் அவ
பார்த்தாள்.

"அப்புறம் ஏன் தயங்குகிறீர்கள்.." என்று கேட்

"லேகா.. இதற்குப் பதில் சொல்... நான் உன்னை
வாரம் பார்க்க வரவேண்டுமென்று நீ விரும்புகிறாயா

"நீங்கள் விரும்பவில்லையா?"

"உன் விருப்பம்தான் எனக்கு முக்கியம்."

"நான் விரும்பவில்லையென்று சொன்னால்?"

அவள் கேள்வி கேட்டதும் அவன் பதிலே சொ
மல் அவள் விழியோடு விழி கலந்தான். அவன்
வையை எதிர் நோக்க இயலாமல் அவள் தவித்
போனாள். அவள் மனதில் வெற்றிப் பெருமிதம் வந்

'நீயாவது.. என்னை விரும்பாமல் இருப்பதாவது'

தினகரனுக்கு கர்வம் வந்தது. வரியூரிலேயே அ
பெண் என்று முன்பு திலகாவைச் சொல்வார்
தற்போது சித்ரலேகாவைச் சொல்கிறார்கள்.. அப்ப
பட்ட அழகியின் மனதை வென்று விட்ட மமதை அ
நெஞ்சில் நிறைந்தது.

"நீ விரும்பவில்லையென்று சொன்னால் இனி நீ
கும் திசைப் பக்கம் கூடத் திரும்பிப் பார்க்க மாட்டே

அவன் கிளம்புவது போல் ஓர் எட்டு எடுத்து வை
தான். சித்ரலேகா பதறிப் போய் அவன் கரம் பிடி



"அத்தான்.. போய் விடாதீர்கள்.."

அவன் மௌனமாக.. தன் கையைப் பிடித்திருந்த அவளின் கையைப் பார்த்தான். பின் அவளது முகத்தையே பார்த்தான்.

அவள் முகம் சிவக்க தன் கரத்தை விலக்கிக் கொண்டாள்.

"லேகா.. யோசித்துப் பதில் சொல்... நான் வாரா வாரம் வந்து உன்னைப் பார்க்க வேண்டுமென்று நீ விரும்பினால் மட்டுமே நான் வருவேன்.. இல்லையென்றால் வரமாட்டேன். சொல்.. நான் வாராவாரம் வரவேண்டுமா?"

அவன் அவளையே பார்த்துக் கொண்டு கேட்க...

"ஆமாம்... நீங்கள் வாராவாரம் வர வேண்டும்..." என்று அவள் பதில் சொல்லி விட்டாள்.

அவன் எடுத்து வைத்த முதல் அடியில் வெற்றி பெற்று விட்டான்.



# 14

தினகரன் வாரா வாரம் சித்ரலேகாவைப் பார்க்க வந்தான். மதிய நேரத்திலோ... இல்லை மாலை நேரத்திலோதான் அவன் வருவான். அதனால் காலையில் வரும் சித்ரலேகாவின் வீட்டினருக்கு அவனது வருகை பற்றித் தெரியாமலே இருந்தது.

உறவு பலப்பட்டது. தினகரன் அவளுக்காக உடை
வாங்கி வந்தான். அவற்றை மறு வாரம் அ
வரும்போது அணிந்து காண்பித்தாள் சித்ரலே
பரிசுகள் வளர்ந்து.. நகையில் வந்து நின்றது.

அழகிய நெக்லஸ்.. அதற்கு இணையான காதணி
வளையல்கள்... மோதிரம்.. இவை சேர்ந்த செட்
நகைப் பெட்டியைக் கொண்டு வந்து அவ
கொடுத்தான் தினகரன்.

சித்ரலேகா அப்போது கல்லூரியில் இறுதியா
படித்துக் கொண்டிருந்தாள். நகையைப் பார்த்துத் த
கினாள்.

"வேண்டாம் அத்தான்."

"ஏன் வேண்டாம்.. உனக்கு நான் நகை வாங்
கொடுக்கக் கூடாதா?"

"அப்படியில்லை அத்தான். இது விலை அ
மானது."

"அதனால் என்ன..? உன் அத்தானும் அதிகம்
பாதிப்பவன்தான்."

"நான் அதற்குச் சொல்லவில்லை."

"வேறு எதற்குச் சொல்கிறாய்..?"

"இதுவரை நீங்கள் வாங்கிக் கொடுத்த டிரஸ்களை
நான் என் பாக்கெட் மணியில் வாங்கிக் கொண்ட
வீட்டில் சொல்லியிருக்கிறேன். இதை எப்படி அப்ப
சொல்ல முடியும்?"

"எனக்கு அதெல்லாம் தெரியாது.. இதை நீ மறுத்தா
என்னை மறுத்தது போல.. இதை நீ தொலைத்து வி
டாலும் என்னை தொலைத்தது போ



"ஏன் பெரிய வார்த்தைகளைப் பேசுகிறீர்கள்..."

சித்ரலேகா சட்டென்று அந்த நகைப் பெட்டியை வாங்கிக் கொண்டாள். தினகரன் மனதிற்குள் சிரித்துக் கொண்டான்.

அவனது திட்டத்தின் அடுத்த கட்டமும் வெற்றிதான்.

"போட்டுக் காட்டு."

அவள் சுற்று முற்றும் பார்த்து விட்டு அணிந்து காண்பித்தாள்.

'முதன் முதலாய் நான் வாங்கிக் கொடுத்த நகைகளை அணிந்திருக்கிறாள்.' அவனது மனம் கனிந்தது.

"ஹாஸ்டலில் இவற்றை வைத்துக் கொள்ளாதே லேகா.. தொலைந்தாலும் தொலைந்து விடும்."

தலையை ஆட்டி அவன் சொன்னதை ஏற்றுக் கொண்ட சித்ரலேகா.. அடுத்த விடுமுறைக்கு வீட்டிற்குச் சென்றபோது.. நகைப் பெட்டியையும் உடன் எடுத்துச் சென்று.. தன் பீரோவில் வைத்து விட்டு வந்தாள்.

அந்த வாரம் அவளைப் பார்க்க வந்த தினகரன் கனகாரியமாய் நகையைப் பற்றி விசாரித்தான்.

"வீட்டில் வைத்து விட்டு வந்திருக்கிறேன்."

"நல்ல வேலை செய்தாய். ஆனால் அதை உன் வீட்டார் பார்த்து விட மாட்டார்களா?"

"என் பீரோவை மற்றவர்கள் திறக்க மாட்டார்கள்."

"சாவி யாரிடம் இருக்கும்?"

"ஏன் கேட்கிறீர்கள்? அம்மாவிடம்தான் இருக்கும்."

"சும்மா கேட்டேன்."

தினகரன் மழுப்பி விட்டான். அவன் எதிர்பார்த்தது அடுத்த இரு வாரங்களில் நடந்து விட்டது.

மகளின் பீரோவில் துணிகளை அடுக்கி வைக்க போன வசுந்தரா பீரோவைத் திறந்தாள். துணிகளுக் அடியில் மறைவாக வைக்கப்பட்டிருந்த நகைப் பெட் அவளது கவனத்தில் பட்டுவிட்டது.

'சித்ரா எதை மறைத்து வைத்திருக்கிறாள்.'

யோசனையுடன் அதை எடுத்துத் திறந்து பார்த் வளுக்கு அதிர்ச்சி காத்திருந்தது.

'இந்த நகைகள் ஏது? சித்ராவிடம் இவை எப்ப வந்தன? ஏன் அதை அவள் யாருக்கும் தெரியாம ஒளித்து வைத்தாள்?'

அந்த வாரம் அவள் மட்டும் டிரைவரை அழைத்து கொண்டு காரில் சித்ரலேகாவைப் பார்க்க வந்தாள்.

அன்னை மட்டும் தனியாக வந்திருப்பதைக் கண்ட சித்ரலேகா என்னவோ.. ஏதோ.. என்று பதறிப் போனாள்.

''என்னம்மா.. நீங்க மட்டும் தனியாய் வந்திருக்கீங்க அப்பா நன்றாகத்தானே இருக்கிறார்?''

''அவர் நன்றாகத்தான் இருக்கிறார். நீ செய்யும் காரியம்தான்.. நன்றாக இல்லை...''

'அகப்பட்டுக் கொண்டோம்..' என்று சித்ரலேகாவின் உள் மனம் கூறியது...

''என்னம்மா...?''

''என்னவென்று கேட்கத்தானே.. நான் தனியாகக் கிளம்பி வந்திருக்கிறேன்.. இது என்

வசுந்தரா நகைப் பெட்டியை மகளின் முன்னால் நீட்டினாள். சித்ரலேகா கையும் களவுமாய் அகப்பட்டுக் கொண்டாள்.

''அம்மா.. அம்மா..'' அவள் தடுமாறினாள்.

''சொல்லு...'' வசுந்தராவின் முகம் இறுகியிருந்தது.

சித்ரலேகா சொல்லச் சொல்ல.. வசுந்தராவிற்குள் குளிர் எடுத்தது. அன்று சகுந்தலா செய்த வேலையினால்... வசுந்தராவின் குடும்பம் இன்று வரை நிம்மதி இல்லாமல் இருக்கிறது.. இன்று சித்ரலேகாவா? இது எங்கே போய் முடியும்?

''அம்மா... இது அத்தான் வாங்கிக் கொடுத்ததும்மா...''

''அத்தான் என்றால்.. நம் மனோகரனைச் சொல்கிறாயா?''

''இல்லையம்மா.. இது.. தினா அத்தான் வாங்கிக் கொடுத்தது.''

''சித்ரா.. நீ தினகரனையா சொல்கிறாயா?''

''ஆமாம்மா.''

''அவன் எப்படி இங்கு வந்தான்?''

''இந்த மூன்று வருசமும் அவர் என்னைப் பார்க்க வாராவாரம் வருவார்ம்மா.''

''அறிவு கெட்டவளே.. இதை என்னிடம் முதலிலேயே சொல்லவில்லை?''

''சொன்னால் நீங்கள் இதை அனுமதிக்க மாட்டீர்கள்.''

''அனுமதிக்க மாட்டோம் என்பதை தெரிந்துமா நீ

"ஆமாம்."

"ஏன்டி.. உனக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறதா

"தினா அத்தானைப் பிடித்திருக்கிறது.."

"சித்ரா.. அன்று உன் அத்தை பிடிவாதம் செய்து பிரபாகரனைக் கல்யாணம் செய்து கொண்டு போ அதன் பின்.. அவளும் நிம்மதியாக இல்லை.. ந நிம்மதியாக இல்லை. வேண்டாம்.. இது சரி வ அவனை நீ மறந்து விடு."

"அது முடியாதும்மா."

"உனக்கு எங்கள் மேல் பாசமில்லையா?"

"உங்களுக்கு என் மேல் பாசமில்லையா?"

"அவன் குடும்பத்திற்கும்.. நம் குடும்பத்திற் ஆகாதும்மா."

"அவருக்கும்.. எனக்கும் ஆகுமே.. கல்யாணம் எ இருவருக்கும்தானே.. இரு குடும்பத்திற்கும் இடை இல்லையே..."

"அவர்கள் முகத்தில் நாம் விழிப்பதா?"

"அப்படியென்றால் எனக்குக் கல்யாணமே வேண்டா

சகுந்தலா கூறிய அதே பதில்.. வசுந்தரா துயரத்தே திரும்பி வந்தாள்.

அன்று மாலை சித்ரலேகாவைப் பார்க்க வந்த தி னின் கூரிய விழிகள் அவளது முக வாட்டத்தைக் க பிடித்து விட்டன.

"என்ன ஆச்சு... என் மாமன் வீட்டில் கண்டுபிடி விட்டார்களா..."



"ஆமாம்..." என்றாள் சித்ரலேகா..

"எப்படி..."

"எல்லாம்.. நீங்கள் வாங்கிக் கொடுத்த நகைகளைப் பார்த்துத்தான்.."

"அடடா..." என்று போலியாக அனுதாபப்பட்டான் தினகரன்.

"பரவாயில்லை.. விடுங்கள்.. நீங்கள் ஒன்றும் வருத்தப்பட வேண்டாம் என்றைக்கு இருந்தாலும் தெரிய வேண்டிய விசயம்தானே..."

அவள் இலகுவாகக் கூறினாள்.

'அது சீக்கிரமே உன் வீட்டுக்குத் தெரிய வேண்டும் என்று தானே நான் காய் நகர்த்தினேன்.'

தினகரன் மனதிற்குள் கூறிக் கொண்டான்.



# 15

சித்ரலேகா படிப்பை முடித்துவிட்டு விரியூருக்குத் திரும்பியதும் அவளது திருமணப் பேச்சு ஆரம்பித்தது... அவளுடைய தாய் மாமன் வசந்தனின் மகன் மனோகரனுக்குத்தான் அவளை திருமணம் செய்து கொடுக்க வேண்டுமென்று சரவணன் விரும்பினார். வசுந்தராவின் இரண்டு அண்ணன்களில் மூத்த அண்ணன் வசந்தனின் மகள் காவ்யாவை வெளியே கொடுத்து விட்டார்கள். ...ராவின் சின்ன அண்ணன்

பவித்ரனின் ஒரே மகளான திவ்யாவை மணம் செய்
வைத்திருந்தார்கள். இப்போது பெரிய அண்ணன்
வீட்டில் பெண் கொடுத்து விட்டால்.. தனது இரண்
அண்ணன்களுமே தனக்குச் சம்பந்தி ஆகி விடுவார்
என்று வசுந்தரா ஆசைப்பட்டு சரவணனிடம் கூறியிரு
தாள்.

ஆனால் சரவணன் சித்ரலேகாவை மனோகரனுக்
திருமணம் செய்து கொடுக்கும் பேச்சை ஆரம்பித்தது
வசுந்தரா அதற்கு தடை போட்டாள்.

"கொஞ்சம் யோசித்துச் செய்யலாம் பொறுங்கள்.."

"ஏண்டி.. மாப்பிள்ளையின் வீட்டைப் பற்றி விசாரி
வேண்டுமா? அவர்களின் வாழ்க்கத் தரம் எப்படி
குணம் எப்படின்னு பயமாய் இருக்கிறதா? அறியாத
களின் வீட்டில் போய் நம் பெண் எப்படி வாழ
போகிறாளோ என்று கவலையாய் இருக்கிறதா? ஹா
ஹா..."

சரவணன் நகைச்சுவையாய் பேசிவிட்டு அவர
நகைச்சுவையை அவரே ரசித்துச் சிரித்தார். ஆனா
வசுந்தரா கூடச் சேர்ந்து சிரிக்கவில்லை.

மனைவியின் மௌனம் அவரது கருத்தில் பட அவர
புருவம் சுருங்கியது.. விழிகளால் மனைவியை அருகி
அழைத்தார்.

"வசு... என்னடி.. என்னத்தை நினைத்துக் குழம்பு
கிறாய்..."

"இந்தக் கல்யாணம் வேண்டாங்க..."

"ஏண்டி.. உன் அண்ணன் மகனை நீயே நிராகரி
கிறாய்...?"



"நான் வாங்கி வந்த வரம் அப்படி.. அதைவிட என்
பெரியண்ணன் வாங்கியிருக்கும் சாபம் அப்படி.. இந்த
வீட்டிலிருந்து பெண் கட்ட அவருக்கும் கொடுப்பினை
இல்லை. அவர் மகனுக்கும் கொடுப்பினை இல்லை."

"வசு..."

"என் பெரியண்ணன் காணக் கிடைக்காத சொக்கத்
தங்கம். அவர் மகன் மனோகரன் அவரைப் போலவே
பிறந்து வந்திருக்கிறான். இருந்தும் என்ன செய்ய? என்
அண்ணனின் அருமை உங்கள் தங்கைக்கும் புரிய
வில்லை. என் அண்ணன் மகனின் பெருமை உங்கள்
மகளுக்கும் தெரியவில்லை. விட்டு விடுங்கள்."

"என்னடி சொல்கிறாய்...?"

"மனோகரனைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள நம்
சித்ராவிற்கு விருப்பமில்லை..."

"என்ன சொன்னாய்? மனோகரனை அவள் கல்
யாணம் செய்து கொள்ள மாட்டாளாமா...? வேறு
யாரைக் கல்யாணம் செய்து கொள்ள உத்தேசித்திருக்
கிறாள். சித்ரா.. ஏய்.. சித்ரா.."

சரவணன் ருத்ர அதாரம் எடுத்தார். சித்ரலேகா நடுங்
கிப் போனாள். அவர் முன்னால் வரப் பயந்து வசுந்த
ராவின் முதுகிற்குப் பின்னால் ஒளிந்து கொண்டாள்.

சரவணன் போட்ட சத்தத்தில்.. கீழே கணக்குப்
பிள்ளையுடன் பேசிக் கொண்டிருந்த சித்தார்த்தன்
புருவம் உயர்த்தினான். கணக்குப் பிள்ளையை அனுப்பி
விட்டு.. மனைவியை அழைத்தான்.

"திவ்யா.. மாடியில் என்னடி சத்தம்?"

"மாமா.. சித்ராவை விசாரித்துக் கொண்டிருக்கி…

"எதற்கு..."

"சித்ராவிற்கு மனோ அண்ணனைக் கல்யா… பண்ணிக் கொள்ள விருப்பமில்லையாம்."

"இது என்னடி புதுக் கதையாய் இருக்கு. இது உ… ஏற்கனவே தெரியுமா?"

"தெரியும்.. அத்தை சொல்லி அழுதாங்க."

"ஏன் திவ்யா...?"

"ஒவ்வொரு பூவிலும் வாசம் உண்டு. மல்லிகை… வாசத்தைவிட முல்லையின் வாசம் குறைந்ததில்லை… என்ன மல்லிகையை மறந்து முல்லையை விரு… ஆரம்பிக்க வேண்டும்."

சித்தார்த்தனுக்குப் புரிந்தது.. கடமையாய் வரா… காதலுடன் வா.. என்கிறாள்.. சித்தார்த்தன் திவ்யா… கவனிக்க ஆரம்பித்தான்.

திலகாவிடம் அறியாமை இருந்தது.. திவ்யாவி… ஆழ்ந்த அறிவு இருந்தது. திலகா யார் என்ன சொ… னாலும் உடனே நம்பி விடுவாள். திவ்யா புருவ… உயர்த்திக் கேட்பாள். சிரித்துக் கொண்டே அகன்… விடுவாள். உண்மை எதுவென்று உடனே கண்டுபிடித்… விடும் வல்லமை படைத்தவள் திவ்யா.. திலகாவிற்… சட்டென்று கோபம் வந்து விடும். படபடவென்… பேசுவாள். திவ்யாவிடம் ஆழ்ந்த அமைதி இருக்கும்… பேசும் வார்த்தைகளை யோசித்து குறைவாகப் பே… வாள். திலகாவிடம் அதீதமான அழகு இருக்கும். அ… ளுக்கு இணையான அழகி சித்ரலேகாதான். அது.. பர… பரையாய் வந்த குடும்பச் சொத்து..



சரவணனும் ஒரே ஜாடையில் அழகாக இருப்பார்கள்.. சகுந்தலாவிடமிருந்த அழகு தாயின் ஜாடையில் இருந்த திலகாவிற்கு வாய்த்திருந்தது. சரவணனிடமிருந்த அழகு தந்தையின் ஜாடையில் இருந்த சித்ரலேகாவிற்கு வாய்த்திருந்தது. திலகாவுடன் ஒப்பிடும்போது திவ்யா வின் அழகு குறைவுதான். ஆனால் தனித்துவம் நிறைந்த வசீகரம் திவ்யாவிடம் தென்படும். அவளது அடர்ந்த இமைகளும்.. சிறிய நீள்வடிவமான கண்களும்.. வேறு ஒரு வகையில் சித்தார்த்தனை கவர்ந்தன.

திலகாவின் நினைவை புறம் தள்ளும் சக்தி திவ்யா விற்கு இருந்ததை ஆச்சரியத்துடன் உணர்ந்தான் சித்தார்த்தன்.

காதலில் தோல்வியுற்ற அவனின் மனக் காயத்தை ஆற்றும் வலிமை திவ்யாவின் அணைப்பிற்கு இருந்தது.

சித்தார்த்தன் ஒரு நாள் விருப்பத்துடன் மனைவியை தழுவிக் கொண்டான். அவள் மறுப்பே சொல்லாமல் அவன் கைகளுக்குள் அடங்கிக் கொண்டாள். காதலாய் மனைவியுடன் வாழக் கற்றுக் கொண்டான் சித்தார்த்தன் அதைக் கற்றுக் கொடுத்தவள் திவ்யா.

இன்னொருத்தியை காதலித்தவன் என்று தெரிந்தும் குடும்பத்திற்காக தன் அத்தையின் மகனை மணந்தாள். அதே சமயம் அந்த இன்னொருத்தியின் நினைவு களுடன் அவன் தன்னைத் தொடக்கூடாது என்ற சுய மரியாதையுடனும் இருந்தாள். காதலித்தவளை மறந்து.. கட்டினவளை மனம் பூராவும் நிரப்பிக் கொண்டு கணவன் வந்து தொட்டபோது மனமார அவனை ஏற்றுக் கொண்டாள். மறந்தும்.. கடந்த கால காதல் நினைவுகள் அவன் மனதில் வந்து விடாமல் இருக்கும் வண்ணம்

முழு மனதாய் தன் காதலைக் கொட்டி அதில் அவ
மூழ்கடித்தாள்.

திவ்யா சித்தார்த்தனுக்கு கிடைத்த பெரும் வர

அன்று பார்த்த அதே பார்வையை இன்றும் மன பார்க்கிறாள் என்றால் விசயம் பெரிதானதாக இரு வேண்டும். திவ்யாவின் ஆழ்ந்த அமைதி என்பது கடலின் அமைதியைப் போன்றது. இப்படி ஓர் அமை யான தோற்றத்துடன் அவள் இருக்கிறாள் என்ற அவள் உள்ளத்தில் புயல் அடித்துக் கொண்டிருக் என்று அர்த்தம்.

# 16

"என்ன விசயம் திவ்யா..?"

"எதைக் கேட்கிறீர்கள்..?"

"சித்ராவைப் பற்றித்தான் கேட்கிறேன். அம் உன்னிடம் சொல்லியிருப்பார்களே."

திவ்யா உதட்டைக் கடித்துக் கொண்டாள். அதே சம மாடியிலிருந்து அதிகமான சத்தம் வரவும்.. இருவ ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். சித்தார்த் வேகத்துடன் மாடி ஏறினான். அடுப்பை அணை விட்டு திவ்யா அவனைப் பின் தொடர்ந்தாள்.

"என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாய்? இந் குடும்பத்தின் நிம்மதியை குழி தோ



வேண்டும் என்று எத்தனை நாளாய் திட்டம் போட்டு இருந்தாய்? நீ நான் பெற்ற மகளா.. இல்லை.. இதோ நிற்கிறானே உன் அண்ணன்.. இவனுக்குத்தான் தங்கையா?"

சரவணன் ஆவேசம் வந்தவர் போல் இரைந்தார். சித்ரலேகா கன்னத்தைப் பிடித்துக் கொண்டு அழுது கொண்டிருந்தாள். அவளைத் தகப்பனார் அடித்திருக்க வேண்டும் என்பதை புரிந்து கொண்டான் சித்தார்த்தன்.

"சித்ராவை அடித்தீங்களாப்பா?"

"அட.. ஆமாண்டா."

"ஏன்..?"

"அவள் செய்த காரியத்திற்கு வெட்டிப் போட வேண்டும்."

"அப்படி என்னப்பா தவறு செய்து விட்டாள்? அவள் கல்யாணத்தில் அவளுடைய விருப்பத்தைச் சொல்லியிருக்கிறாள். அவ்வளவுதானே..."

சித்தார்த்தன் தங்கையின் மேல் அதிகம் பாசம் கொண்டவன். அவளை வசுந்தரா கண்டித்தாலே பொறுத்துக் கொள்ள மாட்டான். தாயைக் கண்டிப்பான். இன்று சரவணன் அடித்து வைத்திருக்கவும்.. அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

ஆனால் தன் வார்த்தைகளைக் கேட்டதும் திவ்யா விழி உயர்த்தி தன்னை ஏன் அந்தப் பார்வை பார்த்தாள் என்பதுதான் அவனுக்குப் புரியவில்லை.

"டேய்.. உன் தங்கை மனோவைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள மாட்டாளாம். அவனுக்கு என்னடா

''அப்பா.. மனோவைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள மாட்டேன் என்று சித்ரா சொன்னால்... மனோவிடம் குறையிருக்கிறது என்றுதான் அர்த்தமா? ஏதேனும் காரணத்தால் மனோவை அவள் கல்யாணம் பண்ணிக் கொள்வதைத் தவிர்க்க நினைக்கலாம் இல்லையா..''

''அந்தக் காரணத்திற்காகத்தான் அவளை அடித்தேன்.''

''அப்படி என்னப்பா காரணத்தை கண்டு விட்டீர்கள்?''

''சித்தார்த்தா... உன் தங்கை மனோவை வேண்டாமென்று சொல்வதற்கு காரணம் என்ன தெரியுமாடா.. அவள் வேறு ஒருவனை விரும்புகிறாள்.''

சித்தார்த்தன் திகைத்தான். சித்ரலேகாவின் மனதில் காதல் இருக்கிறதா. தங்கையை இது நாள் வரை குழந்தையாய்ப் பார்த்து வந்தவன்.. முதன் முறையாக வியப்புடன் அவளைப் பார்த்தான்.

சித்தார்த்தனை விட பனிரெண்டு வயது இளையவள் சித்ரலேகா... அவளைத் தன் கைகளில் தூக்கி வளர்த்தவன் சித்தார்த்தன்.

'இவள் காதல் செய்யும் அளவிற்கு வளர்ந்து விட்டாளா..?'

தங்கையை குறு நகையுடன் பார்த்தவன்.. சரவணனிடம் பேசினான்.

''அதனால் என்னப்பா.. அவள் விரும்புகிற பையனுக்கே அவளைக் கல்யாணம் செய்து கொடுத்து விட வேண்டியதுதானே.''

திவ்யா மீண்டும் தன் பிரத்யேக பார்வையைப் பார்த்து வைக்க சரவணன் மீண்டும் ஆவேசமானார். வசுந்தரா விசும்ப ஆரம்பித்தாள்.



''அது கனவிலும் நடக்காதுடா மகனே.. நான் நடக்க விடமாட்டேன்.''

''ஏன்.. அப்பா.. எதற்காக இந்தப் பிடிவாதம்? பையன் ஏழையா? அதனால் என்னப்பா.. நம் சொத்தில் பாதியை சித்ராவிற்கு கொடுப்போம். அதன் பின் அவனும் நம்மைப் போல் பணக்காரன் ஆகி விடுவானே...''

''சித்தார்த்தா.. உன் தங்கை காதலிப்பது யாரைத் தெரியுமா?''

''யாரைக் காதலிக்கிறாள்?''

''அந்தத் தினகரனைக் காதலிக்கிறாள்.''

''என்ன...?''

சித்தார்த்தனின் முகம் மாறியது. மனைவியை சட்டென்று பார்த்தான். அவள் பார்வையைத் திருப்பிக் கொண்டாள். மனைவியின் பார்வைக்கு பொருள் இப்போது அவனுக்கு விளங்கி விட்டது.

'தினகரன்.. திலகாவின் தம்பி.'

சித்தார்த்தன் யோசனையானான்... சித்ரலேகாவின் காதலால் ஏற்படப் போகும் குழப்பங்களையும்.. விளைவுகளையும் யோசித்தான்.

நிச்சயம் ஜெகன் சும்மாயிருக்க மாட்டான். தினகரனை தூண்டி விடுவான். இரு குடும்பங்களும் ஒற்றுமை ஆவதை அவன் எப்போதுமே விரும்ப மாட்டான். தினகரன் இதுவரை சித்தார்த்தனிடமும்.. சரவணனிடமும் நேரடியாய் மோதியதில்லை. அதற்குக் காரணம் சகுந்தலாதான் என்பது சித்தார்த்தனின் யூகம். இப்போது சித்ரலேகா தினகரனின் மனைவியாகி விட்டால்...

தினகரனை ஜெகன் தூண்டிவிட்டு.. சித்ரலேகா...
கொடுமை செய்யச் சொல்லலாம்... நிச்சயம் அ...
அதைச் செய்யாமல் இருக்க மாட்டான். தவிர.. தில...
தன் தங்கைக்கு நாத்தனார் ஆவது சரி வராத விசய...
சித்தார்த்தனும்.. திலகாவும்.. வேறு வேறு து...
களுடன்.. வாழ்வுப் பாதையில் பிரிந்து பயணிக்கும்போ...
குடும்ப விழாக்களில் சந்தித்துக் கொள்ள நேர்வது.. இ...
வரின் குடும்ப வாழ்விலும் சிக்கல்களை உண்டாக்கு...
திலகா இப்போதுதான் மனம் ஆறி இருப்பாள்.. மீண்டு...
அவள் கண் முன் ஏன் நடமாட வேண்டும்? தினக...
திலகாவின் தம்பி என்பதற்கே முகம் மாறி விடும் தி...
எந்த அளவிற்கு பொறுமை காப்பாள்? அவளுக்கு ...
மரியாதை அதிகம். மீண்டும் அவளை சோதனையி...
ஆழ்த்த சித்தார்த்தன் விரும்பவில்லை.

இத்தனை சிக்கல்களை உருவாக்கும் திருமணத்தி...
தெரிந்தே போய் விழ வேண்டுமா?

சித்தார்த்தனுக்கு சரவணனின் கோபத்தில் உள்...
நியாயம் பிடிபட்டது. ஆனால் தங்கையின் மன...
காதலில் சிக்கியிருக்கிறதே.

முள்ளில் விழுந்து விட்ட ஆடையை சேதாரம் இ...
லாமல் எடுக்க வேண்டியது அவசியம் ஆயிற்றே.

சித்தார்த்தன் தங்கையைப் பார்த்தான். அவளது முக...
வீங்கியிருந்தது. இரு கன்னங்களிலும்.. சரவணனி...
விரல் பட்ட தடயங்கள் பதிந்து இருந்தன. அவள் க...
களில் இருந்து தாரை.. தாரையாய் கண்ணீர் பெருகி...
கொண்டிருந்தது.

சித்தார்த்தனின் மனதில் தங்கையின் மேல் இரக்க...
சுரந்தது.



'இந்தப் பாழாய் போன காதலை நீ ஏம்மா உன் மனதில் கொண்டாய்..? இது ஆளைக் கொல்லும் சக்தி படைத்தது... நீ அறியாக் குழந்தையாயிற்றே!'

தங்கையின் அருகே சென்று அவளை அணைத்துக் கொண்டான். அவள் தமையனின் மார்பில் முகம் புதைத்து தேம்பி அழுதாள். அவளது கண்ணீரைத் துடைத்து சமாதானப்படுத்தினான்.

''அழாதே சித்ரா.. அழக்கூடாது. நீ தைரியமாக இரு.. இப்போதைக்கு இதைப் பற்றிப் பேச வேண்டாம். நீ உன் ரூமிற்கு போ.''

''அவளை ஏன் போகச் சொல்கிறாய்? அவள் இருக்கட்டும். எனக்கு இரண்டில் ஒன்று தெரிய வேண்டும்.''

''அப்பா.. அவள் போகட்டும். பிறகு பேசிக் கொள்ளலாம்.''

''இல்லை சித்தார்த்தா.. இன்றைக்கே இதற்கு ஒரு முடிவு கட்ட வேண்டும். இதை வளர விடக்கூடாது.''

தந்தையின் பேச்சைக் கேட்டு சித்தார்த்தனுக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை.

'காதல் என்பது வெட்ட... வெட்ட அதிகமாக தழைக்கும் தன்மை கொண்டது. இது ஏன் அப்பாவிற்கு புரியவில்லை...'

''அப்பா இது ஒரே நாளில் பேசித் தீர்க்கக் கூடிய விசயமில்லை.''

''அதற்காக இவள் இஷ்டப்படி விடச் சொல்கிறாயா?''

''நான் அப்படிச் சொன்னேனா..?''

''... நீ பேசுவது அப்படித்தானே இருக்கிறது.''

''அவளே அழுது கொண்டிருக்கிறாள். இப்போது நா நியாயம் பேசினால் அது அவள் காதுகளில் ஏறும விட்டுப் பிடிப்போம் அப்பா.''

சரவணன் சிங்கம் போல் ஓர் உறுமல் உறுமி விட் கோபத்துடன் போய் விட்டார். அழுது சிவந்திருந் விழிகளுடன் நின்று கொண்டிருந்த தங்கை கனிவுடன் பார்த்த சித்தார்த்தன்.

''நீ போம்மா...'' என்றான்.

சித்ரலேகா போனதும் தாயைப் பார்த்தான். அவளு விழிகளில் தெரிந்த சோகம் அவனை வாட்டியது.

பணக்கார வீட்டில்... அண்ணன்களின் செல்ல தங்கையாக வளர்ந்தவள். சரவணனைக் கைப்பிடித் வந்த பின் கண்ட நிம்மதிதான் என்ன?

சித்தார்த்தன் மனதிற்குள் தாயை நினைத்து வேதனை பட்டான்.

# 17

வசுந்தராவும் ஊரில் உள்ள மற்ற பெண்கள் போல் பிறந்த வீட்டின் மேல் அதிக அளவில் பாசம் கொண் டவள்தான்.. ஆனால் அவள் சரவணனின் மனைவி யாகி... ஏகாம்பரம்... வள்ளி நாயகியின் மருமகளாக புகுந்த வீட்டிற்குள் நுழைந்த பின்பு... அவள் செய்த செயல்கள் யாவும் அவளது பிறந்த வீட்டினருக்கு பாதகமாகவே அமைந்தன.



புகுந்த வீட்டின் அமைதியைக் காப்பாற்ற வேறு வழியில்லாமல் கூடப் பிறந்த அண்ணனின் காதலை விட்டு விடச் சொன்னாள்... வசந்தன் மௌனமாக சகுந்தலாவை விட்டுக் கொடுத்துவிட்டு.. அவளைத் தட்டிக் கழித்து விட்டதாக பழியை ஏற்றுக் கொண்டார்...

அடுத்து சித்தார்த்தனுக்கு திருமண வயது வந்த போது.. தன் மகள் காவ்யாவை அவனுக்கு மணம் முடித்துத் தர ஆசைப்பட்டார்... ஆனால் சித்தார்த்தனின் மனதில் திலகா இருப்பதை அறிந்ததும்.. மகளுக்கு வேறு இடத்தில் மணம் முடித்து கொடுத்துவிட்டு... சிரித்த முகமாகவே இருந்த வசந்தனைப் பார்க்கும் போதெல்லாம் வசுந்தராவின் மனம் வலிக்கும்.

சித்தார்த்தனை புறக்கணித்து திலகா ஜெகனை மணந்து கொண்டதும்... தங்கையை விட்டுக் கொடுக் காமல் தாங்கிப் பிடிக்க... வசுந்தராவின் அண்ணன்கள் உடனே வந்தனர்.. வசுந்தராவின் இரண்டாவது அண்ணன் பவித்ரன் தன் ஒரே மகளான திவ்யாவை தயங்காமல் சித்தார்த்தனுக்கு மணம் செய்து வைத்தார்.. வசந்தன் அந்தத் திருமணத்தை முன்னே நின்று நடத்தி னார்.

ஒரு வார்த்தை... ஒரே ஒரு வார்த்தை.. 'நீ என் மகளை விட்டு விட்டு.. உன் நாத்தனார் மகளை மருமகளாக்கிக் கொள்ள நினைத்தாயே... இப்போது நடந்தது என்ன..?' என்று வசந்தன் கேட்கவில்லை... சிரித்த முகமாய் திருமணத்தில் வளைய வந்தார்.

இப்போது மனோகரனை சித்ரலேகா மறுக்கிறாள்... இ[illegible] பின்னாலும் வசந்தன் தங்கையிடம்

கோபித்துக் கொள்ள மாட்டார்... அமைதியாய் அதையும் ஜீரணித்துக் கொள்வார்.

ஆனால் வசுந்தரா... மனம் புழுங்கிப் புழுங்கி... தவிப்பாளே... சித்தார்த்தன் வேதனைப்பட்டான்...

ஒரு குடும்பத்தில் பொறுப்புள்ள மருமகளாய் இருப்பதுதான் எவ்வளவு கஷ்டமான விசயம்.. பிறந்த வீட்டை ஒதுக்கித் தள்ளினால் தான் புகுந்த வீட்டின் நிம்மதி கெடாது என்ற நிலையில்... ஒரு பெண்ணை நிறுத்துவது எவ்வளவு வேதனைக்குரிய விசயம்.

வசுந்தரா தன் கடமையைச் செய்தாள்... அதே சமயம் பாதிக்கப்பட்ட அவளது பிறந்த வீடு அவளைத் தூற்றாமல் போற்றியது... அவள் உயர்ந்து நின்ற போது ஒதுங்கி நின்று... தாழ்ந்த போது கை தூக்கி விட்டு... அவளை மீண்டும் உயர் நிலையில் வைத்து அழகு பார்த்து... பிறந்த வீடு அவளை என்றும் தாங்கி நின்றது.

ஆனால் அவளும்தான் எத்தனை முறை பிறந்த வீட்டின் நிம்மதியை கொல்வாள்... இதற்கு முடிவே கிடையாதா..?

வசுந்தரா சோர்ந்து போய் அங்கிருந்த சோபாவில் தலையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்து விட்டாள்.. திவ்யா தன் அத்தையின் அருகே அமர்ந்து தாழ்ந்த குரலில் பேசி சமாதானப்படுத்த முயன்று கொண்டிருந்தாள்.

அன்று இரவு அந்த வீட்டில் யாருமே சரியாகச் சாப்பிடவில்லை... அடுத்த இரண்டு நாள்கள் விசயத்தை ஆறப் போட்ட சித்தார்த்தன்... முதலில் தங்கையை தனியே அழைத்து வைத்துப் பேசினான்.



மொட்டைமாடியில்... தோட்டத்தில் வளர்ந்திருந்த தென்னை மரத்தின் கீற்றுக்கள் படிந்த மூலையில் சேர்களைப் போட்டுக் கொண்டு அண்ணனும்... தங்கையும் அமர்ந்திருந்தனர்.

திவ்யா காபித் தம்ளர்களை அவர்கள் இருவரிடமும் கொடுத்துவிட்டு மௌனமாக கீழே இறங்கிச் சென்று விட்டாள்.

மனைவியின் இதமான செய்கை மனதைத் தொட... போகிறவளைப் பார்த்துக் கொண்டிருந்த சித்தார்த்தன் அவள் சென்றதும் தங்கையின் பக்கம் திரும்பினான்.

"காபியைக் குடி சித்ரா..."

"ம்ம்..."

"தினகரனை எங்கே பார்த்தாய்...?"

"நம் ஊரில்... அப்புறம் விழுப்புரம் காலேஜ் ஹாஸ்டலில்..."

"ம்ம்... ஏதோ அத்தை மகன்.. சொந்தம் என்று நினைத்துப் பழகியிருப்பாய்.. அப்புறம் ஹாஸ்டலில் ஹோம்சிக் இருந்திருக்கும்.. நம் சொந்தமென்று யார் பார்க்க வந்திருந்தாலும் மனதிற்கு மகிழ்வாய்த்தான் இருக்கும்... இதையெல்லாம் வைத்து அவனை நீ காதலிப்பதாய் முடிவு பண்ணி விட்டாயா?"

"அண்ணா... காதல் என்பது ஓர் உணர்வு.. வெறும் சொந்தமல்ல..."

'என்னிடமே இதை நீ சொல்கிறாயா..' சித்தார்த்தனுக்கு மனம் வலித்தது. சுதாரித்துக் கொண்டு மேலே

"அப்படி இல்லைம்மா.. இப்போது மனோ உன் மே
உயிரையே வைத்திருக்கிறான்.. வீட்டாருக்கு கட்
பட்டு அவன் உன்னிடம் தனிமையில் பேச முடிய
தில்லை... இதனால் அவன் காதலில் தோற்றுவிடுவா

"மனோ அத்தானை எனக்கு ரொம்பப் பிடிக்கு
அண்ணா..."

"அப்புறம் என்ன?"

"ஆனால் அவர் மேல் எனக்கு பாசம்தான் வருகிற
காதல் வரவில்லையே நான் என்ன செய்யட்டும்?"

சின்னஞ்சிறு மழலையாய் விழி விரித்துக் கேட்
தங்கையின் இந்தக் கேள்விக்கு என்ன பதில் சொல்
என்று தெரியாமல் திகைத்தான்.

"இப்படிச் சொன்னால் எப்படிம்மா...?"

"நான் என் மனதில் உள்ளதைத் தானே பேச முடியு
வேறு பேச முடியாதே.. எனக்கு மனோ அத்தான்
மேல் மதிப்பும்.. மரியாதையும் அதிகம் இருக்கிற
ஆனால் காதல் இல்லை... அது தினகரன் அத்தான்
மேல்தான் வருகிறது.. எனக்கு என்ன செய்வதென்
தெரியவில்லை அண்ணா..."

சித்தார்த்தன் யோசித்தான்... இருளும்... வெளிச்சமும்
கலந்து நின்ற அந்த மாலை மங்கிய நேரத்தில் தங்
யிடம் அவன் கூறினான்.

"சித்ரா... கொஞ்சம் பொறுமையாய் இரு... நா
யோசிக்க எனக்கு அவகாசம் கொடு.. உன் கல்யாண
நம் அம்மா.. அப்பா இருவருக்குமே மன நிம்மதியை
கொடுப்பதாக இருக்க வேண்டும்... அது நீ



கல்யாணம் பண்ணிக் கொண்டால் நடக்காது... நீ
அதையும் பார்க்க வேண்டும்..."

"நான்தான் எனக்குக் கல்யாணமே வேண்டாமென்று
தானே அண்ணா சொல்கிறேன்.. என்னை தினகரன்
அத்தானுக்கு கல்யாணம் பண்ணி வையுங்கள் என்று
நான் கேட்கவே இல்லையே... மனோ அத்தானைக்
கல்யாணம் பண்ணிக் கொள்ள மாட்டேன் என்று தானே
சொல்கிறேன்..."

'இப்படிக் குழந்தையாய் பேசுகிறவளிடம் என்ன
சொல்லிப் புரிய வைப்பது' சித்தார்த்தனுக்கு மலைப்பாக
இருந்தது.

"தினகரன் குடும்பத்திற்கும்... நம் குடும்பத்திற்கும்
தீராத பகை இருக்கிறது சித்ரா... அதை நீ மறந்து விடக்
கூடாது..."

"ஆனால்.. தினா ரொம்ப நல்லவர் அண்ணா..."

"நானும் அதை இல்லையென்று சொல்லவில்லை
சித்ரா... உன் கல்யாணம் உங்கள் இருவரின் தனிப்பட்ட
நிகழ்வு இல்லையம்மா.. அது இரு குடும்பங்களின்
சங்கமம்.. அது இப்போது சாத்தியமாகாது..."

"அதனால் பரவாயில்லை அண்ணா... நான்
இப்படியே இருந்து விடுகிறேன்... நம் அப்பாவிற்கும்..
உங்களுக்கும் மனம் வருத்தம் தரும் செயலை நான்
செய்ய மாட்டேன் அண்ணா..."

'இதை விடப் பெரிதாய் வேறு என்ன நீ செய்துவிட
முடியும்..' என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டான்

"உன் கல்யாணத்தைப் பற்றி அப்பா ஆயிரம் ம கோட்டைகள் கட்டி இருக்கிறார் சித்ரா..."

"வேண்டாம் அண்ணா... எனக்குக் கல்யாணமே வே டாம்.."

"சித்ரலேகா.. கண்ணீர் இல்லாமல்.. கலக்கம் இல் மல்.. தெளிவான குரலில் உறுதியாகப் பேசினா

தங்கையின் மன உறுதியைக் கண்ட சித்தார்த் இனி அவளைப் பேசி சரி பண்ண முடியாது என்பது புரிந்து கொண்டான்.. மௌனமாய் எழுந்தான்.

"என்மேல் கோபமா அண்ணா..."

'இல்லை'யென்பதாய் தங்கையிடம் தலையை ஆ னான். இவளிடம் கோபித்து என்ன ஆகப்போகி என்று இருந்தது அவனுக்கு

# 18

தென்னை மரத்திலிருந்து பறித்துப் போடப்ப காய்கள் கீழே விழும் சத்தம் ஒரு புறம் கேட்டு கொண்டிருக்க.. அவற்றை எண்ணி குவியலாய் போடு போது வரும் சப்தம் இன்னொரு புறம் கேட்டு கொண்டிருந்தது.. சித்தார்த்தன்... தென்னந்தோப்பி ஓரமாய் இருந்த பண்ணை வீட்டின் முன்னால் நடை பழகிக்கொண்டு காத்திருந்தான்.

தூரத்தில் சகுந்தலா வருவது தெரிந்தது.. நடை நிறுத்தி விட்டு அவளுக்காக காத்திரு



அருகே வந்ததும்.. தோட்டக்கார சின்னானைப் பார்த்தான். அவன் தயாராக வெட்டி வைத்திருந்த இளநீரை செம்பில் ஊற்றிக் குடுத்தான்.

"குடிங்க அத்தை.. வெயிலில் வந்திருக்கிறீங்க.. களைப்பாய் இருக்கும்.."

மறுப்புச் சொல்லாமல் அதை வாங்கிக் குடித்து விட்டு.. சகுந்தலா தன் அண்ணன் மகனைப் பார்த்தாள்.

"என்ன விசயம் சித்தார்த்தா.. ஏன் அவசரமாய் என்னைப் பார்க்க நினைத்தாய்?"

"முதலில் உட்காருங்க அத்தை... சொல்கிறேன்.."

சகுந்தலா அங்கே கிடந்த கயிற்றுக் கட்டிலில் அமர்ந்தாள்.. சித்தார்த்தன் அவள் முன்னே கை கட்டி ஒரு தென்னை மரத்தின் மீது சாய்ந்து நின்றவாறு நடந்தவைகளைச் சொன்னான்.

'இவ்வளவு நடந்திருக்கிறதா.. தினகரன் என்னிடம் சொல்லவே இல்லையே...' சகுந்தலா திகைத்துப் போய் அமர்ந்திருந்தாள்.

"சித்ரா பிடிவாதமாய் இருக்கிறாள் அத்தை.. நாங்கள் எவ்வளவு சொன்னாலும் கேட்க மாட்டேன் என்கிறாள்.. அப்பா அவளை அடி அடியென்று அடித்துவிட்டார்... அம்மா இடிந்து போய் உட்கார்ந்திருக்கிறாங்க.. எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை.. அதனால்தான் உங்களை வரச் சொன்னேன்..."

"இது எதுவும் எனக்குத் தெரியாது சித்தார்த்தா..."

"எனக்கும் அது தெரியும் அத்தை.. சித்ரா ஒரு பெண்.. அவளே இதை இத்தனை நாளாய் மறைத்திருக்கிறாள்..

அம்மாவாய் கண்டுபிடித்து இருக்கிறாங்க எனும் போ
தினகரன் மறைத்ததில்.. அது உங்களுக்குத் தெரியா
இருந்ததில் ஆச்சரியம் இல்லை...''

''இப்போது என்னதான் செய்வது?''

''அதை உங்களிடம் கேட்கத்தானே வரச் சொல்
யிருக்கிறேன்...''

''சித்ரா என் அண்ணன் மகள்.. அவளைக் கல்யாண
பண்ணிக் கொள்ள என் மகனுக்கு உரிமையில்லைய
அவளும் என் மகன் மேல் ஆசைப்படும்போது இந்
கல்யாணத்தை நடத்தி வைத்து விடலாமே...''

''அத்தை.. இப்போது உரிமையைப் பற்றிய பேச்
இல்லை... இந்தக் கல்யாணம் நடந்தால் நிறை
பேரின் மன நிம்மதி கெட்டுவிடும்... நான் என்ன சொ
வருகிறேன் என்பது உங்களுக்குப் புரிந்திருக்கும்...''

சகுந்தலாவிற்குப் புரிந்தது...

''நான் ஜெகனின் கைக்கு எட்டாத தூரத்தில் இ
கிறேன் அத்தை. இருந்தும் அவன் என்னை நிம்மதி
வாழ விடவில்லை.. என் தங்கை அவன் கண் மு
னால்.. அவனுடைய மைத்துனன் கூட நிம்மதியாய் வ
முடியுமா... அவன் விட்டு விடுவானா..?''

அவன் கேள்வியில் இருந்த நியாயம் சகுந்தலா
குப் புரிந்தது.

''சித்ரா சிறு குழந்தை அத்தை... எனக்கு எது நே
தாலும் நான் பொறுத்துக் கொள்வேன்.. ஆனால் சி
வின் மேல் தூசி படிவதையும் நான் பொறுத்துக் கொ
மாட்டேன்.. எனக்கு என் தங்கை மிகவும் முக்
மானவள் அத்தை..''



சித்தார்த்தனின் நிலை சகுந்தலாவிற்குப் புரிந்தது.

''அத்தை... ஜெகனை நான் ஏன் தொடுவதில்லை? அவன் என்ன வீரமானவனா? நான் என்ன கோழையா? ஏன் அவன் அடிக்க.. அடிக்க விலகிப் போகிறேன்? ஏன் அவனைப் பொறுத்துக் கொள்கிறேன்..? உங்களுக்குக் காரணம் தெரியும் அத்தை...''

அவன் மறைமுகமாய் கூறும் காரணம் சகுந்தலாவிற்கு புரிந்தது.

''ஆனால்.. ஜெகனால் என் தங்கைக்கு சிறு துன்பம் நேர்ந்தாலும் நான் சும்மாயிருக்க மாட்டேன்.. ஜெகனை பந்தாடி விடுவேன்... அதன் பின் நடக்கும் விளைவுகளை நினைத்துப் பாருங்கள்.. அதனால்தான் சொல்கிறேன்.. சித்ரா - தினகரன் கல்யாணம் நடக்க வேண்டாம்...''

சித்தார்த்தன் மறுப்பது சரிதான் என்பது சகுந்தலாவிற்கு புரிந்தது.

''என்னடா... நம் அண்ணன் மகன் இப்படிச் சொல்கிறானே என்று நீங்கள் நினைக்க வேண்டாம்.. எனக்கு வேறு வழியில்லை... சித்ராவிடம் நான் பேசிப் பார்த்து விட்டேன்.. அவள் என்னைப் புரிந்து கொள்ள மறுக்கிறாள்.. அப்பா அடித்துப் பார்த்துவிட்டார்.. அவர் அவள் கண்களுக்கு வில்லனாகத் தெரிகிறார்... இந்த நிலையில் நான் என்ன செய்ய முடியும்? அதனால்தான் உங்களிடம் வந்து நிற்கிறேன்.. அத்தை.. அம்மா அடிக்கடி ஒரு விசயம் சொல்வார்கள்.. நீங்கள் வசந்தன் மாமாவை கல்யாணம் பண்ணிக் கொள்ள மாட்டேன்.. பிரபாகரன் மாமாவைத்தான் கல்யாணம் பண்ணிக் கொள்வேன்னு தீர்மானமாய் சொல்லிட்டீர்களாம்.. அப்பாவுக்கும்...

தாத்தாவுக்கும் அதில் துளிக் கூட விருப்பமில்லை
அப்போது அம்மாதான் நிலைமையை சமாளித்
களாம்.. எப்படித் தெரியுமா? வசந்தன் மாமாவிடம் பே
அவரது காதலை விட்டுக் கொடுத்துவிட்டு.. வில
கொள்ளச் சொன்னாங்கலாம்... வசந்தன் மாமாவு
விலகிப் போய் வேறொரு பெண்ணைக் கல்யாண
செய்து கொண்டு விட்டாராம். இதை நான் என்
களிடம் சொல்கிறேனென்று புரிகிறதா...''

சகுந்தலாவிற்குப் புரிந்தது.. அவள் எழுந்து கொ
டாள்...

''கூடப் பிறந்த அண்ணனை குடும்பம் நன்மைக்காக
விலகி விடும்படி என் அண்ணி சொல்லியிருக்கு
போது.. நான் என் மகனிடம் அந்த வார்த்தைகளை
சொல்ல மாட்டேனா..? கவலைப்படாதே.. தினகரனு
சீக்கிரமே வேறு ஒரு பெண்ணைப் பார்த்து கல்யாண
பண்ணி வைத்து விடுகிறேன்...''

சகுந்தலா விடுவிடென்று போய் விட்டாள்.. அவ
மனம் கொந்தளித்துக் கொண்டிருந்தது.

'உடம்பெல்லாம் எண்ணெயைப் பூசிக் கொண்
உருண்டு புரண்டாலும் ஒட்டுகிற மண்தானே ஒட்டும்..
என் மகளை என் அண்ணன் மகனுக்கு கட்டிக் கொடு
நினைத்தேன்... அது கனவாகிப் போய்விட்டது... இ
போது என் மகனுக்கு என் அண்ணன் மகளைக் கல்
யாணம் பண்ணிக் கொள்ளும் கொடுப்பினையும் இல்
லாமல் போய்விட்டது. என் அண்ணனை தூக்கி எறிந்
விட்டு வந்ததற்கு கை மேல் பலன் கி



சகுந்தலா... வயலின் ஊடே நடந்து வந்து கொண்டிருப்
பதை தொலைவில் மெயின் ரோட்டில் வந்து கொண்
டிருந்த தினகரன் பார்த்துவிட்டான்.. அவனது புருவங்கள்
உயர்ந்தன.

'சித்ரலேகாவின் வயலுக்குள் அம்மா ஏன் போய் வந்து
கொண்டிருக்கிறாங்க.. இவங்களுக்கு அங்கே என்ன
வேலை...'

உற்றுப் பார்த்தான்.. தூரத்தில் தோப்பில்... சித்தார்த்
தனது நடமாட்டம் தெரிந்தது.. தினகரனுக்கு புரிந்து
விட்டது.

'ஓஹோ.. உன் அத்தையைக் கூப்பிட்டு... ஓதி
அனுப்புகிறாயா..?''

நான் என் அம்மா கிழித்த கோட்டைத் தாண்ட
மாட்டேன்தான்.. ஆனால் அவர்கள் கோடு போடுவதற்குள்
நான் ரோடு போட்டுவிட்டால் நீ என்ன செய்வாய்? என்
அம்மாதான் என்ன செய்வார்கள்?'

தினகரன் தன் புல்லட்டில் வீடு நோக்கி விரைந்
தான்.... அன்றும் மறுநாளும் அவனுக்கு லீவ் என்பதால்
விரியூரில் தங்கியிருந்தான். சகுந்தலா திரும்பி வந்த
பின்... தினகரனிடம் தனிமையில் பேச பிரம்ம பிரயத்
தனங்கள் செய்தாள்... அவளது முயற்சி பலிக்கவில்லை.
தினகரன் தகப்பனாருடன் வயலுக்குப் போனான்.
தமக்கையின் கணவனுடன் அக்காவின் வீட்டிற்கு
போனான்.. நண்பர்களைச் சந்திக்க வெளியில் போனான்.
தன் அம்மாவைச் சந்திக்க வீட்டிற்கு மட்டும் போகவே

# 19

ஐகை... கால்.. முகம் கழுவிவிட்டு இரவு உ
உண்ண தட்டின் முன் அமர்ந்த பிரபாகரனிடம் சகுந்
தினகரன் எங்கே என்று விசாரித்தாள்.

''அவன் என்னவோ... நம் ஊர் டெண்டு கொ
கையில் இரண்டாம் ஆட்டம் சினிமாப் பார்க்க அ
னுடைய நண்பர்களுடன் போகிறானாம். சினிமாவு
போய் விட்டு வந்து நம் திலகாவின் வீட்டில் படுத்
கொள்கிறேன்னு சொன்னான்.. நானும் சரின்னு செ
லிட்டேன்...''

''நம் வீடு கடல் போல இருக்கு.. ஏன் நம் மக
வீட்டில் போய் அவன் தூங்க வேண்டும்...''

''உனக்கோ உடம்பு சரியில்லை.. உன் ராத்தூக்
கெடும்ன்னு நினைத்திருப்பான்.. இது ஒரு பிரச்சனை
சோற்றைப் போடு...''

''ராத்திரி சாப்பிடக் கூட பிள்ளை வரவில்லையே

''திலகா தம்பி வந்திருக்கான்னு கோழி அடிச்சு வறு
வைத்திருக்கிறாள்.. நீ தண்ணி சாம்பார்தானே வை
திருக்கிற.. அது தான்.. அவன் அங்கேயே சாப்பிட்
கிறேன்னு சொல்லிவிட்டான்...''

சகுந்தலா கணவனை முறைத்தாள்.

''இந்தத் தண்ணிச் சாம்பரை சாப்பிட நீங்கள் மட்டு
ஏன் ஓடி வந்தீங்க..? நீங்களும் அங்கேயே சாப்பிட்டிரு
வேண்டியதுதானே...''



''எண்டி.. ஆறுசுவை விருந்தே போட்டாலும்.. உன் கையில் கொடுக்கும் பச்சைத் தண்ணியைத்தானே நான் சாப்பிடுவேன்.. இது உனக்குத் தெரியாதா...''

இயல்பாய் கூறிக் கொண்டே பிரபாகரன் சாப்பிட சகுந்தலாவின் உள்ளம் நெகிழ்ந்தது.

முதன் முதலாய் காதல் சொன்ன போது பிரபாகரனின் கண்களில் இருந்த காதல்.. இப்போது திலகாவிற்கு திருமணம் ஆகி பேரன் பேத்தி எடுத்த பின்னாலும் அணுவளவும் குறையவில்லை என்பதை உணரும்போது.. அவள் உள்ளம் உருகியது.

இந்தக் காதலுக்கு அடிமையாகித்தானே.. அவள் அண்ணன் மீது அவளுக்கிருந்த பாசத்தைத் தூக்கி எறிந்தாள்.

''என்னடி.. என்னையே பார்த்துக்கிட்டு உட்கார்ந்திருக்கிற... சோறு போட மாட்டாயா...''

அவசரமாய் கணவனுக்கு உணவை பரிமாறினாள்.. ஊர் நிலவரம்... உலக நிலவரம் என்று அனைத்தையும் பேசிக் கொண்டே சாப்பிட்ட பிரபாகரன் கை கழுவ எழுந்த போது அது நிகழ்ந்தது.

அவர்களது தோட்டத்தில் வேலை செய்யும் சுப்பையா ஓடி வந்து தகவல் சொன்னான்.

''ஐயா.. பெரிய வீட்டில் ஒரே கலவரமாய் இருக்குங்க.. ஊரே ஒன்று கூடி நிற்குது.. பெரிய வீட்டாளுக அங்கே ஓடி இருக்காங்க..''

சகுந்தலா பதறிப்போய் பாத்திரத்தை போட்டுவிட்டு வாசலுக்கு வந்தாள்.

''என்ன சுப்பையா... என்ன தகராறாம்..'' என்று அவன்

"உன் அண்ணன் வீட்டில்.. ஜெகன் மீதும்.. என் மீ
தானே பாய்வார்கள். நான் இங்கே இருக்கிறேன்.. ஜெ
இப்போதுதானே வீட்டிற்கு போனான்..'' என்று பி
கரன் சொல்லிக் கொண்டிருக்க... சுப்பையா இடைமறி
தான்.

"ஐயா.. இது கதையே வேறங்க...''

"என்ன கதை சுப்பையா...''

"நம்ம ஊர் எல்லையில் இருக்கும் வயலுக்குள்
பேசிக்கிட்டு இருந்ததாக ஒரு ஜோடி மாட்டியிருக்கு..''

"நம் ஊரில் காதல் ஜோடியா..? நமக்குத் தெரியாமல
ஏண்டி சகுந்தலா... நாம்தான் கல்யாணம் பண்ணி
கொண்டோமே... இது யாராக இருக்கும்? அதுச
அவங்க மாட்டிக்கிட்டால்... உன் அண்ணன் வீட்டில் ஏ
பதறி ஓடுகிறாங்க...?''

சகுந்தலாவின் அடி வயிறு கலங்கியது.

'அப்படியும் இருக்குமோ.. மாட்டிக் கொண்டிருப்பது
தினகரனும்.. சித்ரலேகாவும் தானா..?'

அவளது சந்தேகம் உண்மையானது.

"ஐயா.. அங்கே பேசிக் கொண்டிருந்தது... நம்ம
சின்னய்யாவும்.. சித்ரலேகா அம்மாவும் தானுங்க...''

"என்னது...''

பிரபாகரன் பதறிவிட்டார்... அவசரமாய் சட்டையை மாட்டிக் கொண்டு அவர் தெருவில் இறங்கி விரைய.. சகுந்தலா பின் தொடர்ந்தாள்.. ஜெகன் எதிரே ஓடி வந்து கொண்டிருந்தான்.. அவன் பின்னாலேயே திலகா தெரிந்தாள்.



"மாமா.. சேதி கேட்டிங்களா...''

"அங்கே தான் போய் கொண்டிருக்கிறேன்...''

"இது எத்தனை நாளாய் நடக்குது?''

"எனக்கே இப்போதுதான் தெரியும்ப்பா...''

"இதை என்னை நம்பச் சொல்கிறீர்களா..''

பிரபாகரன் திரும்பி முறைத்த முறைப்பில் ஜெகன் அடங்கிவிட்டான்... ஊர் கோவிலின் முன்னே பஞ்சாயத்துக் கூடியிருந்தது. ஊரே கூடி இருக்க.. தினகரனும்.. சித்ரலேகாவும் முன்னே நின்று கொண்டிருந்தார்கள்.

சரவணன் சித்ரலேகாவை அடிக்க ஆரம்பிக்க.. ஊர் கூடி விலக்கிவிட்டது.

"பொறுங்க ஐயா.. நீங்க ஊர் பண்ணையார்.. நீங்களே பொறுமையை கை விட்டால் எப்படி.. பஞ்சாயத்து கூட்டும்... நடந்தது என்னன்னு விசாரிப்போம்...''

சரவணன் வீட்டுப் பிரச்சனை என்பதால்.. பஞ்சாயத்தில் தலைவராக அவர் உட்கார மறுத்து விட்டார்.. ஊர் பெரியவர்கள் பஞ்சாயத்து தலைமைப் பொறுப்பை ஏற்று மேடையில் அமர்ந்தனர்.

பிரபாகரன் தினகரனின் பக்கத்தில் போய் நிற்க.. வசந்தன் குடும்பம்.. வந்து சேர்ந்தது.

மனோகரன் சித்ரலேகாவை... 'நீயா இப்படிச் செய்தாய்...' என்று பார்வையால் கேட்டான். அவனது கண்கள் கலங்கி சிவந்திருந்தன.

சித்தார்த்தன் செய்வது அறியாது.. பொங்கும் எரிமலையை மனதில் அடக்கிக் கொண்டு நின்றிருந்தான்.

எது நடக்கக் கூடாது என்று நினைத்தோமோ... அ நடந்து விட்டதே என்ற பரிதவிப்பில் ஜெகன் இருந்

பஞ்சாயத்து தொடங்கியது.. பஞ்சாயத்தார் நீ கரனைப் பார்த்து கேள்வி கேட்டார்கள்.

"ஏம்பா.. ஊர் வழக்கம் தெரிந்தவன் நீ.. உன் மக மகளிடம் பகலில் பேசாமல்.. ராத்திரி நேரத்தில் வ காட்டுக்குள் பேச வேண்டிய அவசியம் என்னப்ப நம்ம ஊருக்குன்னு சில சட்ட திட்டம் இருக்கில அதை நீ மதிக்க வேண்டாமா?"

"ஐயா.. நானும் சரி.. லேகாவும் சரி.. தப்புத் தண் விற்கு போகும் ஆள்கள் இல்லைங்க.. நாங்க ஒருத்தரு கொருத்தர் விரும்புகிறோம்.. ஆனால் குடும்பப் பகை குறுக்கே நிற்குது. லேகாவை அவள் வீட்டில் எனக்கு கட்டித் தர முடியாதுன்னு சொல்லிட்டாங்களாம்.. அதை சொல்லி விட்டுப் போக அவள் வந்திருந்தாள்.. அவ் வளவுதான்..."

"ஏம்மா.. நீ என்ன சொல்கிறாய்..."

"ஐயா.. எனக்கு மனோ அத்தானைப் பிடிக்கும்.. ஆனால் கல்யாணம்ன்னு வரும்போது என்னால் தினா அத்தானைத் தவிர வேறு யாரையும் கல்யாணம் பண்ணிக் கொள்ள முடியாது. ஆனால் தினா அத்தானுக்கு என்னைக் கட்டிக் கொடுக்க என் வீட்டில் விருப்பப்படலை... அதனால் நான் கல்யாணம் வேண்டாம்கிற முடிவுக்கு வந்து விட்டேன்.. அதைச் சொல்லி.. தினா அத்தானை வேறு யாரையாவது கல்யாணம் பண்ணிக்கங்கன்னு சொல்லி விட்டுப் போகத்தான் நான் வந்தேன். பகலில் பே என்னை அனுமதிக்க மாட்டார்கள்.. அதனால் இ



சந்தித்தோம்.. இதைத் தவிர வேறு உள்நோக்கம் எதுவுமில்லை..."

"இதை எப்படிம்மா நாங்கள் நம்புவது..?"

களங்கமில்லாத பச்சைக் குழந்தையைப் போன்ற முகத்துடன் நின்று கொண்டிருந்தவளைப் பார்த்து.. பஞ்சாயத்தார் இப்படி ஒரு கேள்வியைக் கேட்டதும்... சித்தார்த்தன் தாங்க முடியாத வேதனையுடன் கண்களை மூடிக் கொண்டான்.

# 20

சரவணனின் மனம் துடித்துக் கொண்டிருந்தது.. இந்தப் பஞ்சாயத்தில் மேடையில் அமர்ந்து தீர்ப்பு சொல்லித்தான் அவருக்கு வழக்கம்.. முதன் முறையாக அவர் மேடையின் முன் நிற்கிறார்... அவருடைய செல்ல மகளை பஞ்சாயத்தார் கேள்வி கேட்கிறார்கள்.

தகப்பனும்.. தனயனும் துடித்துக் கொண்டிருக்கையில்.. ஓர் உரத்த குரல் பிரபாகரனிடமிருந்து எழும்பியது.

"யோவ்.. நீங்கள் நம்பினால் நம்புங்க.. நம்பாவிட்டால் போங்க.. முதலில் எதற்கு இந்தப் பஞ்சாயத்தை கூட்டியிருக்கீங்கன்னு எனக்கு ஒரு பதிலைச் சொல்லுங்க..."

மேடையில் அமர்ந்திருந்த பெரிசுகளில் ஒருவர் பதில் சொன்னார்.

''என்ன பிரபாகரா.. விடிய... விடிய கதை கேட்
விட்டு.. சீதைக்கு ராமன் சித்தப்பனாங்கிற..''

''அந்த ராமாயணக் கதையெல்லாம் இங்கே வேண
டாம்.. சீதைக்கு ராமன் என்னவாக வேண்டுமானாலு
இருந்துவிட்டுப் போகட்டும்.. இந்தப் பிள்ளைகளை
பெத்த அப்பன்கள் குத்துக் கல்லாட்டம் நிற்கிறோ
மில்ல.. எங்க வீட்டுப் பஞ்சாயத்தை நாங்க பார்த்து
கிறோம்.. நீங்க பஞ்சாயத்தை கலைத்து விட்டு அவரவ
வீடுகளுக்குப் போய் சேருங்க...''

பிரபாகரன் வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டு
சப்தமாய் பேசிய விதத்தில்... சரவணனும்.. சித்தார்
தனும் உயிர் வரப் பெற்றனர்... அவர்கள் மனதி
பிரபாகரனின் மேல் நன்றியுணர்வு எழுந்தது.. வசுந்தரா
சங்கடத்துடன் நின்று கொண்டிருந்தவள்.. சங்கட
நீங்கப் பெற்றவளாய்.. நிமிர்ந்து நின்றாள்.. சகுந்தலா
விற்கு தன் கணவன் மேல் எப்போதும் இருந்த காதலை
விட... இந்த நிமிடம்... வீரனாக அவர் நிமிர்ந்து நின்று
குடும்ப மானம் காத்த போது.. அதிகமான காதல் உண்
டானது.

''என்னப்பா.. இது.. ஊர் நியாயம்ன்னு ஒன்னு இருக்
கில்ல...''

''இப்ப அதுக்கு என்னய்யா கேடு வந்து விட்டது...?
என் மகன் யார் வீட்டிலாவது கொள்ளை அடித்தானா..
இல்லை யார் வீட்டுக் கூரை மேலாவது கொள்ளியைத்
தான் வைத்தானா..? கட்டிக்க நினைச்ச தாய் மாமன்
மகளை இருட்டில் சந்திச்சான்.. இது ஒரு குத்தமுன்னு
பஞ்சாயத்த பண்ண உட்கார்ந்துட்டிங்களே.. உங்களுக்
கெல்லாம் வேலை.. வெட்டி இல்லையா...



மேடையில் அமர்ந்திருந்தவர்கள்.. தங்களுக்குள்
சலசலவென்று பேசிக் கொண்டார்கள்.. பின் அவர்
களில் ஒருவர் பிரபாகரனைப் பார்த்துக் கேட்டார்.

''இங்கே பாருப்பா.. ஊருக்கு ஒரு நியாயம்.. உனக்கு
ஒரு நியாயம்ன்னு இல்லை.. இருட்டுக்குள்ள.. வயல்
காட்டில்... சின்னஞ்சிறுசுகள்.. தன்னந்தனியாய் பேசிக்
கிட்டு இருந்தால் பஞ்சாயத்தைக் கூட்டாமல் என்ன
செய்வாங்க...''

''எங்க வீட்டுப் பிள்ளைகள்.. எங்கே வேணும்னாலும்
போயி.. எந்த நேரத்தில் வேணும்னாலும் பேசுவாங்க..
இதில் உங்களுக்கென்ன நஷ்டக் கழுதை வந்துவிட்டது..?
தப்பு பண்ணுகிறவங்க.. இருட்டில்தான் தப்புப் பண்
ணனும்னு இல்லை... பட்டப் பகலில்.. மளிகைக் கடை
யில் கூடத் தப்பு பண்ணலாம்... என்ன பெரியசாமி.. நான்
சொல்றது சரிதானே...''

மேடையில் அமர்ந்திருந்த மளிகைக் கடை பெரிய
சாமி நெளிந்தார்... வீட்டின் முன்புறம் மளிகைக் கடை
அமைந்திருந்த அவரது வீட்டில் ஊரிலிருந்து வந்திருந்த
உறவுக்கார பெண்மணி ஒருவரின் கையை பட்டப்
பகலில் அவர் பிடித்து இழுத்து விட்டதாகவும்.. அந்தப்
பெண்மணி.. போட்ட சத்தத்தில் பெரியசாமியின்
மனைவி வந்து உலக்கையை எடுத்து கணவனை நையப்
புடைத்ததாகவும் ஊருக்குள் ஒரு செய்தி உண்டு...

பிரபாகரன் தொடர்ந்து.. மேடையில் நியாயம் பேசின
வர்களின் வண்டவாளங்களை... தண்டவாளத்தில்
ஏற்றிக் கொண்டிருந்தார்.

''கம்மாக்கரையில் பொம்பளைங்க குளிக்கும் போது..
... எடுத்துக் கொடுத்துவிட்டு மாத்து

வாங்கினவனுங்களுக்கு எல்லாம்... பச்சைப் புள்ள
மூஞ்சியைப் பார்த்தால் பலவிதமாய்தான் தோ
தோணும்.. யோக்கியனுக்குத்தானே.. ஒழுங்கான சிந்த
தோணும்... என்னய்யா தங்கய்யா... நான் சொல்வது
தானேய்யா...''

கம்மாக்கரையில் அடிவாங்கிய தங்கய்யன் வா
மூடிக் கொண்டார்.

''அப்புறம்.. யாரு... என் மருமகளைப் பார்த்து நா
மேல பல்லைப் போட்டு.. இதை எப்படி நம்புகிறது
கேட்டது..? ம்ம்.. கனகரத்தினம்.. நீ பெத்து வச்சிரு
சிங்காரத்தை நம்பு... என் வீட்டு பிள்ளைகளை நம்ப
மெட்ராஸுக்கு பொழைக்கப் போனவன்.. அங்கே ஒ
திக்கு தாலியைக் கட்டி... குடும்பம் நடத்தி.. பிள்ளை
யும் பெத்து விட்டு... இங்கே வந்து.. நீ பார்த்து வ
பொண்ணுக்கு தாலியைக் கட்டப் போனானே... அ
அழகுத் திருமகனைப் பெற்ற அப்பன் நீ.. என் வீட்
பெண்ணைப் பார்த்து கேள்வி கேட்கிற... அன்றை
உன் மருமகள்.. கையில் பிள்ளையோட வந்து க
யாணத்தை நிறுத்திவிட்டு நியாயம் கேட்டப்ப... உ
பிள்ளை அவளைத் தெரியவே தெரியாதுன்னு சாதிச்சா
அப்ப.. அவன் சொன்னதை நம்பின ஆளாச்சே நீ
போலீஸ் வந்து முட்டிக்கு முட்டி தட்டியதும்.. உ
பிள்ளை உண்மையை ஒத்துக்கிட்டான்.. அவனை
போல மத்தவங்களை நினைச்சயா...''

கனகரத்தினம்.. அந்த இரவு நேரத்திலும் வியர்த்
போனவராய் தோளில் கிடந்த துண்டை எடுத்து மு
துடைத்துக் கொண்டார்.



மீதி இருந்த பெரிசுகள் இன்னும் சற்று நேரம் பிரபா
சனைப் பேசவிட்டால்... அவர்கள் வீட்டு விவகாரங்
களையும் அம்பலப் படுத்திவிடுவார் என்பதால் வெற்றி
கரமாய் சமாதானக் கொடியைப் பிடித்தார்கள்.

''இப்ப எதுக்கு பிரபாகரா இவ்வளவு கோபப்படறே.
உனக்கு தெரியாத நல்லது.. கெட்டதையா நாங்க சொல்
லப் போகிறோம்? நீ நாலும் தெரிந்தவன்.. நல்லவன்.
வல்லவன்.. உன் வீட்டு விவகாரத்தை நீயே பார்த்துக்க...''

''என்னது.. விவகாரமா?... என்ன விவகாரத்தை
கண்டுவிட்ட?''

''அட என்னப்பா நீ.. உனக்கு பொசுக்கு.. பொசுக்
குன்னு இம்புட்டுக் கோவம் வருதே... ஒரு பேச்சுக்கு
சொன்னேன்ப்பா...''

''பேச்செல்லாம் ஒழுங்காய் வரணும்...''

''சரிப்பா.. நான் சொன்னது தப்புத்தான்...''

''அது...''

''உன் வீட்டு விசயத்தை நீயே பார்த்துக்க... நாங்க என்
உன் வீட்டு விசயத்தில் தலையிடப் போகிறோம்..?
என்னப்பா.. நான் சொல்கிறது சரிதானே.. பஞ்சாயத்து
கலையுதுப்பா...''

மேடையில் அமர்ந்திருந்தவர்கள் தப்பித்தோம்..
பிழைத்தோம் என்று இறங்கி படுவேகமாய் சென்று
விட.. கூட்டம்.. தினகரன்.. சித்ரலேகா விசயத்தை விட்டு
விட்டு.. மேடையில் அமர்ந்திருந்தவர்களின் ரகசியங்
... கலைந்து சென்று விட்டது.

பிரபாகரன்... சரவணனைப் பார்த்தார். சித்ரலேகாவின் கையைப் பிடித்து சரவணனின் கைகளில் ஒப்படைத்தார்.

“என் பிள்ளை.. என் பேச்சை மீறமாட்டான். நீங்க உங்க பெண்ணை யாருக்குக் கல்யாணம் பண்ணிக் கொடுக்கணும்னு நினைக்கிறீங்களோ.. அவனுக்கே கல்யாணம் பண்ணிக் கொடுங்க.. என் மகன் மறுக்கமாட்டான். இல்லை.. இப்படியோர் பேச்சு வந்து விட்டதுன்னு நினைத்தால்.. எப்ப நான் என் மகனுக்கு உங்க மகளை பரிசம் போட வரணும்னு சொல்லுங்க.. அப்ப வந்து பரிசம் போடுகிறோம்.. எதுவானாலும் உங்க விருப்பம் போல செய்யுங்க.. இது பெண் பிள்ளை விவகாரம். எங்களால் உங்க வீட்டுப் பெண்ணுக்கு ஒரு கெடுதலும் வராது.. நமக்குள் ஆயிரம் சண்டை... சச்சரவுகள் இருக்கலாம்.. நாம் அடித்துக் கொள்ளலாம்.. ஆனால் மத்தவங்க நம் வீட்டை பார்த்து ஒரு சொல் சொல்லி விடக்கூடாது. நடந்ததில் என் மகனுக்கும் பங்கிருக்கு.. அவன் அவசரப்பட்டுவிட்டான்.. எனக்கு இது தெரியாது.. தெரிந்திருந்தால்.. முறையாய் நான் பெண் கேட்டு வந்திருப்பேன்..”

சரவணன் திகைத்துப் போய் விட்டார்... அந்த நிலைமையில்.. ஊருக்கு முன்னால் விட்டுக் கொடுக்காமல் நின்ற பிரபாகரனின் துணிச்சல்.. தன் மகனைக் காதலிப்பவள் என்று தெரிந்தும்... ‘உன் மகள்.. உனக்கு சொந்தம்..’ என்று அவளது கையைப் பிடித்து அவரிடம் ஒப்படைத்த பாங்கு... ‘நீ அனுமதி கொடுத்தால் பெண் கேட்டு வருகிறேன்...’ என்று தன் விருப்பத்தை பிரபாகரன் வெளிப்படுத்திய முறை.. எல்லாமே அவரை கவர்ந்துவிட்டது.





# 21

ஓர் நொடியில் கண்ணுக்குத் தெரியாத மந்திரக் கோலை எடுத்து சுழற்றி நிலைமையை கட்டுக்குள் கொண்டு வந்து விட்ட தன் தங்கையின் கணவனை மரியாதையுடன் பார்த்தார் சரவணன்.

“இனிப் பேச என்ன இருக்கு பிரபாகரா.. நீங்க பெண் கேட்டு வாங்க...”

“நாளைக்கு நல்ல நாள் தான்... நாளைக்கே பெண் கேட்டு வந்து விடவா...”

“அதுக்கென்ன... வாங்க.. அப்படியே பரிசமும் போட்டு விட்டு கல்யாண நாளையும் குறித்து விட்டுப் போங்க..”

வினாடிப் பொழுதில் தினகரன்-சித்ரலேகாவின் திருமணம் முடிவாகிவிட்டது... தடுக்க வழியில்லாமல் சகுந்தலாவும்.. சித்தார்த்தனும் ஊமையாகிப் போனார்கள்.

தோற்று விட்ட சோகத்தில் இருந்த மனோகரனின் தோளை.. ஆறுதலாய் அணைத்து அமைதிப்படுத்தியது வசந்தனின் கரம்...

பிரித்து விட்டதாய் நினைத்த மைத்துனனின் உறவை தாய் மாமன் பலப்படுத்திக் கொண்டதோடு நில்லாமல் சித்தார்த்தனின் தங்கையையே... தினகரனுக்கு திருமணம் செய்து வைக்கப் போவதைக் கண்டு ஜெகன் அனலில் விழுந்த புழுவாய் துடித்தான்.

தன் காதல் நிறைவேறாமல் போனாலும்... தம்பியின் காதலாவது நிறைவேறுகிறதே என்று ஆறுதல் அடைந்தாள் திலகா.

எப்போதும் அதிகம் பேசாத திவ்யா... இப்போது சுத்தமாய் பேச்சை நிறுத்தி மௌனியாகி விட்டாள்.

நடப்பவை நாராயணன் செயல் என்று தத்துவ பாதையில் போனவளாய் தன் மனதை தேற்றிக் கொண்டாள் வசுந்தரா.

தன் மனதுப் பிரகாரம்.. தன் மனதுக்குப் பிடித்தவனுக்கே மாலை சூட்டப் போவதை எண்ணி.. எண்ணி மகிழ்ந்து போனாள் சித்ரலேகா.

இவை எல்லாவற்றையும் சாதித்த தினகரனின் மனதில் மட்டும்.. வெற்றிகரமாய் மூன்றாம் அடியை திட்டமிட்டபடி எடுத்து வைத்து விட்ட நிறைவு இருந்தது.

வயலின் நடுவே வரப்பில் நடந்து வந்து கொண்டிருந்த சகுந்தலாவைப் பார்த்ததும் தினகரன் தாய் தடுக்கும் முன்னர் தான் நினைத்ததை சாதித்து விட வேண்டும் என்று முடிவு செய்து விட்டான்.

அதன்படி.. சகுந்தலாவின் அருகாமையிலிருந்து அகன்று கொண்டு சித்ரலேகாவிற்கு போன் செய்தான்.

விழுப்புரத்தில் அவளை கடைசி முறை சந்தித்த போதே.. அவன் செல்போன் ஒன்றை வாங்கி அவளுக்கு பரிசளித்து இருந்தான்.

''இது உனக்கும் எனக்குமான உறவுப் பாலம் லேகா...''

''ஏன் அத்தான் அப்படிச் சொல்கிறீங்க..''



''நீ விரியூருக்கு போன பின்னால் என்னால் உன்னோடு பேச முடியாமல் போகலாம்... அப்போது நான் இந்த செல்போனில் அழைப்பேன்.. நீ பேசு... இதை மத்தவங்களுக்கு காட்டாமல் மறைவாய் வைத்துக் கொள்..''

அதன்படி.. சித்ரலேகா அந்த செல்போனில் யாருக்கும் தெரியாமல் தினகரனுடன் பேசி வந்தாள்.. அன்றைக்கும் தினகரன் அழைத்ததும்.. தன் அறைக்கதவைச் சாத்திக் கொண்டு பேசினாள்.

''அத்தான்.. நானே உங்களைக் கூப்பிடலாம் என்றிருந்தேன்..''

''எதற்காக லேகா..?''

''ஒரு முக்கியமான விசயம் அத்தான்.. நம் விசயம்...'' என்று சித்ரலேகா ஆரம்பித்த போதே.. தினகரன் இடைமறித்தான்.

''அதை விட முக்கியமான விசயம் ஒன்றைச் சொல்ல வேண்டும் லேகா.. என்னை பூனாவிற்கு டிரான்ஸ்பர் பண்ணி இருக்கிறார்கள்.. நான் இன்றைக்கு நைட் கிளம்புகிறேன்...''

சித்ரலேகா தன் விசயத்தை மறந்தாள்.

'அவன் ஊருக்குப் போகிறானா.. போனால் எப்போது திரும்பி வருவான்..?'

அவன் அவளது தவிப்பை எதிர்பார்த்துத்தானே இதைச் சொன்னான்.. எனவே...

''எப்போது வருவேன் என்று தெரியவில்லை லேகா..'' என்று சரடு விட்டான்.

"என்ன அத்தான் திடீர்னு இப்படி ஒரு குண்… தூக்கிப் போடுகிறீர்கள்..."

"நானே எதிர்பார்க்கவில்லை லேகா.. போவதற்… முன்னால்... உன்னைப் பார்த்து விட்டுப் போகலாம்… நினைக்கிறேன்.. நீ வருவாயா..."

"இங்கேயா.. நம் ஊரிலா.. எப்படி அத்தான்..."

"அப்போ.. உன்னைப் பார்க்கவே முடியாது… உன்னைப் பார்க்காமலே தான் நான் பூனாவிற்கு போ… வேண்டுமா? திரும்பி நான் வரும் வரை எனக்… காத்திருப்பாயா.."

"அத்தான்.. நிஜமாகவே நீங்கள் பூனாவிற்கு போ… போகிறீர்களா..."

"ஆமாம் லேகா... உன்னைப் பார்க்க வேண்டுமென்… தான் ஓடி வந்தேன்..."

"இப்போது கோவிலுக்கு போவேன்.. அங்கே நீங்… வந்து விடுகிறீர்களா?"

'சாயங்காலத்தில் பார்த்தால் ஊருக்குள் எப்படிப் பே… பரவும்?'

"ஊஹூம்.. இருட்டிய பின்னால் வா..."

"இருட்டிலா... எனக்குப் பயமாய் இருக்குமே.."

"நான் உன் அருகில் இருக்கும் போது எதற்குப் பயம்…"

அந்த வார்த்தைகள் அவளை ஈர்த்தன. அவள் இதம… உணர்ந்தாள்.

"வருகிறேன் அத்தான்.. எங்கே வர..?"

அவன் சொன்னபடி அவள் வந்தாள்.. வீட்டில் நட… தவைகளை விவரித்தாள்... அவன் தைரியம் சொன்னா…



"அப்பாவிற்கு பிடிக்காததை நான் செய்து பழக்க மில்லை அத்தான்..."

'இப்போது இருட்டில் வந்து என்னுடன் குழாவு கிறாயே.. இது மட்டும் உன் அப்பனுக்கு பிடிக்குமா...'

"அவர் மனம் கோண நடப்பதில்லையென்று தீர்மானித்து இருக்கிறேன்..."

'இப்போதுதான் நடந்து கொண்டிருக்கிறாயே...'

"உங்களைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள அவர் சம்மதிக்க மாட்டேன் என்று சொல்லிவிட்டார்..."

'இன்னும் கொஞ்ச நேரத்தில் ஊரே இங்கு கூடப் போகிறது.. அப்புறம் உன் அப்பனும்.. அண்ணனும் சம்மதித்துத்தானே ஆக வேண்டும்..'

"அதனால்... நான் கல்யாணமே வேண்டாம் என்று முடிவு செய்திருக்கிறேன்..."

'அதை நீ முடிவு செய்யாதே.. ஊர் முடிவு செய்யும்...'

"என்ன அத்தான்... நான் பாட்டுக்கு பேசிக் கொண் டிருக்கிறேன்.. நீங்கள் பேசாமலே இருக்கிறீர்கள்..."

"ம்ம்... நான் மனதில் உன்னோடுதான் பேசிக் கொண் டிருந்தேன் லேகா..."

தினகரன்.. அவனது நண்பர்கள் வருகிறார்களா என்று பார்த்தபடி அவளுக்குப் பதில் கூறினான்.

'என்ன செய்கிறார்கள்.. இந்த மடையன்கள்... இன்னும் வரவில்லையே...'

தூரத்தில் பேச்சுக் குரல்கள் கேட்டன... தினகரன் நிம்மதி அடைந்தான்.. கனகாரியமாய் சித்ரலேகாவுடன் பேச ஆரம்பித்தான்.

''நீ பயப்படாதே லேகா... உனக்கு நான்தான்.. எனக்கு நீ தான்..''

அதற்குள் சாலையில் வந்து நின்ற அந்த ஆறு பேரும்...

''யாருடா அது...'' என்று குரல் கொடுத்தனர்.

''தினகரன்ம்பா..'' என்றான் அவர்களில் ஒருவன்.

''கூட இருக்கிறது.. சரவணன் ஐயாவோட பொண்ணுப்பா..'' என்றான் இன்னொருவன்.

'இருட்டில் நாங்கள்தான் என்று எப்படி அவர்கள் கண்டுபிடித்தார்கள்' என்று சித்ரலேகா யோசித்துக் கொண்டிருக்கும்போது.. அவர்களில் இருவர் ஊரை நோக்கி கத்திக் கொண்டே ஓடினர்... மற்ற நால்வரும் வயலுக்குள் இறங்கி அவர்கள் இருவரையும் சுற்றி வளைத்துக் கொண்டனர்.

'கெட்டிக்காரன்கள்..' தினகரன் மனதிற்குள் பாராட்டிக் கொண்டான்.

''என் மாமன் மகளுக்கும் எனக்கும் காதல்டா.. உங்களுக்குத்தான் தெரியுமே.. இரண்டு வீட்டிலும் சண்டை.. இதில் என் காதல் எப்படி நிறைவேறுவது? அதனால் நானும் அவளும் பேசிக் கொண்டிருக்கும் போது நீங்கள் பிடித்து ஊர் பஞ்சாயத்தில் எங்களை நிறுத்தி விடுங்கள்.. அப்புறம் எங்கள் கல்யாணம் நடந்துதானே ஆக வேண்டும்?''

தினகரன் காதல் நிறைவேற உதவி கேட்டால்... எந்த நண்பர்களாவது மறுப்பார்களா? அவர்கள் உற்சாகமாய் களம் இறங்கி.. ஊரைக் கூட்டி அவர்களை ஒப்படைத்து விட்டார்கள்.. தினகரன் நினைத்ததை நடத்தி





# 22

நாதஸ்வர ஓசை களைகட்டிக் கொண்டிருந்தது... கள்ளக்குறிச்சியிலேயே பெரிய திருமண மண்டபமான 'மகாலட்சுமி திருமண மஹாலில்' தினகரனின் திருமண விழா நடைபெற்றுக் கொண்டிருந்தது.

திருமண மஹாலில் முன்னாலிருந்த அகன்ற கார் பாதையின் இரு பக்கமும் வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு ஜொலித்தன... 'மகாலட்சுமி திருமண மண்டபத்தை' ஒட்டியிருந்த 'மகாலட்சுமி தியேட்டரில்' படம் பார்க்க.. விரியூரில் இருந்து திருமணத்திற்கு வந்திருந்த ஜாதி சனம் சென்று விட்டனர்.

விடிந்தால் திருமணம்... மண்டபத்தின் வாசலில் நின்று கொண்டு வருகிறவர்களை வரவேற்றுக் கொண்டிருந்தாள் சகுந்தலா.. பின்னால் யாரோ வருகின்ற அரவம் கேட்டது.. திரும்பிப் பார்த்தாள்.. சித்தார்த்தன் வந்து கொண்டிருந்தான்.

''என்னப்பா...''

''என்னத்தை.. நாம் ஒன்று நினைக்க... தெய்வம் வேறு ஒன்றை நினைத்து விட்டதே...''

''நீயே இது தெய்வத்தின் திருவிளையாடல்ன்னு ஒத்துக்கிட்ட.. இனி கடவுள் விட்ட வழின்னு நிம்மதியாய் இருப்போம்...''

''எப்படி அத்தை.. விடிந்தால் கல்யாணம்... எ
பக்கு.. பக்குன்னு இருக்கு.. நீங்க எப்படித்தான் கவ
யில்லாமல் இருக்கீங்களோ..''

''என்னப்பா செய்வது... நீ பெண்ணுடன் பிறந்த
கவலைப்படுகிறாய்.. நான் பிள்ளையைப் பெற்றவ
கவலையில்லாமல் நிற்கிறேன்..''

''என்ன அத்தை.... இப்படிச் சொல்கிறீங்க..''

''வேறு என்ன சொல்வது..? சித்தார்த்தா... நீயே
கவலைப்படுகிறாய்.. சித்ரா என் மருமகளாக என்
னுடன் வாழப் போகிறாள்.. அவளை ஜெகனால் என்ன
செய்து விட முடியும்? நான் அதற்கு இடம் கொடு
பேனா? தினகரன்தான் அவனை சும்மா விட்டு வி
வானா... தினகரனின் அப்பா பேசிய பேச்சை கேட்க
யில்லையா? அவர் நியாயவாதி.. அவர் வீட்டில் வ
வந்த பெண்ணின் அமைதியைக் குலைக்க அவருடைய
தங்கை மகனால் முடியாது...''

சித்தார்த்தன் ஒரு வழியாய் சமாதானம் அடைந்
உள்ளே சென்று விட்டான்.

அதிகாலையில்... சுபயோக.. சுப முகூர்த்த நேரத்தி
சித்ரலேகாவின் கழுத்தில் தினகரன்... மூன்று முடிச்
போட்டான்.. அவர்கள் அக்கினியை வலம் வந்
முடித்து.. பெரியவர்களை வணங்கி எழுந்தனர். கால
விருந்து.. மதிய விருந்து முடிந்து.. நெருங்கிய உறவின
தவிர.. மற்றவர்கள் சென்றுவிட்டனர்.

எல்லாத் திருமணங்களும் முடிந்த பின் கவிழு
பரபரப்பில்லாத அமைதி அங்கும் சூழ்ந்தது... மண்ட
பத்தை காலி செய்து விட்டு.. மணமக்களுடன் அவர்க
கிளம்பத் தயாரானார்கள்.



''பெண்ணும்.. மாப்பிள்ளையும் ரெடியா..'' என்றபடி
சித்ரலேகாவின் தாய்மாமன் பவித்ரன் வந்தார்.

''ம்ம்.. இவங்க எப்பவோ ரெடி..'' என்றாள் சகுந்தலா.

''கிளம்பலாமா..'' என்று சித்தார்த்தன் வினவ.

''எங்கே...'' என்றான் தினகரன்.

சித்தார்த்தனின் மனதில் மணியடித்தது... எதுவோ
நடக்கப் போகிறது என்று அவனது உள்ளுணர்வு கூறியது.

''உங்கள் வீட்டிற்குத்தான்...''

''அங்கே நான் மட்டும் தான் போகப் போகிறேன்..
உங்கள் தங்கை என்னுடன் வரவில்லை...''

தினகரன் சப்தமாய் கூறினான்.. சுற்றி நின்ற அனை
வரின் முகத்திலும் அதிர்ச்சி அப்பட்டமாய் தெரிந்தது..
ஜெகன் மட்டும் மனதிற்குள்,

'சபாஷ்..' என்று சொல்லிக் கொண்டான்.

''என்ன சொல்கிறீங்க மாப்பிள்ளை..''

''இந்த மாப்பிள்ளை உறவுமுறை சொல்கிற வேலை
யெல்லாம் என்னிடம் வேண்டாம்.. யாருக்கு... யார்
மாப்பிள்ளை?''

சித்தார்த்தன் சகுந்தலாவின் முகம் பார்க்க.. அவள்
மகனின் கன்னத்தில் ஓங்கி ஓர் அறைவிட்டாள்.. தின
கரன் அடியை வாங்கிக் கொண்டு அலட்டிக் கொள்ளாமல்
நின்றான்.

''இப்போ என்னடா சொல்கிற?''

''அம்மா... இவள் என்னுடன் வந்து.. என்னுடன் வாழ

கிழித்த இந்த சித்தார்த்தன்.. என் அக்கா கண காலில் விழுந்து மன்னிப்பு கேட்க வேண்டும்.. என் அப்பாவை ரத்தம் கொட்டும்படி அடித்த இவனு அப்பா.. என் அப்பாவின் காலில் விழுந்து மன் கேட்க வேண்டும்.. அது நடந்தால் மட்டுமே.. இவள் பெண்டாட்டி.. இல்லையென்றால் இவள் யாரோ.. நா யாரோ..''

தினகரன் பேசப் பேச.. திலகாவின் விழிகள் விரிந்த அவள் மனம் பூவாய் மலர்ந்தது.

''அப்படிச் சொல்லுடா.. என் சிங்கக்குட்டி... என்ன என் தம்பி போய் இந்த வீட்டில் பெண் கட்டுகி னேன்னு நினைத்தேன்.. நீ என் தம்பிங்கிறதை நிரூபி விட்டாய்டா...'' திலகா ஆர்ப்பரித்தாள்.

''விழுங்கடா... அப்பனும்... மகனும்.. எங்க கால்க விழுங்க... அப்பத்தான் உங்க வீட்டு பெண்ணுக்கு மச்சினன் வாழ்க்கைப் பிச்சை கொடுப்பான்... விழு கடா..'' ஜெகன் விரலைச் சொடுக்கி சரவணனை கா விழுகச் சொன்னான்.

காரணமேயில்லாமல் ஆயிரம் சண்டைகளை இ பவனுக்கு காரணம் கிடைத்து விட்டால் சும்மா இ பானா?

ஜெகனுக்கு எதிராளியை எப்படி வார்த்தைகளா காயப்படுத்த வேண்டும் என்பது கை வந்த கல ஆயிற்றே.. அவன் ஆடித் தீர்த்துவிட்டான்.

''என் மச்சினனை பொம்பளையைக் காட்டி கவ முடியாதுடா.. இப்ப உங்க வீட்டுப் பெண்ணை பெ டாட்டின்னு அவன் வீட்டுக்கு கூப்பிட்டுப் போக



மின்னா.. நீங்க இரண்டு பேரும் எங்க காலில் விழுந்து மன்னிப்புக் கேட்கணும்.. நாளைக்கு என் மச்சினன் உங்க வீட்டுப் பெண்ணோட குடும்பம் நடத்தனுமின்னா... நீங்க ரெண்டு பேரும் வந்து எங்க கையைக் காலை பிடித்து விடணும்... என் மச்சானுக்கு எப்போதெல்லாம் கோபம் வருதோ.. அப்போதெல்லாம்.. நீங்கள் மண் வெட்டியை எடுத்துக் கொண்டு எங்க காடுகரையில் வேலை செய்யவும் தயாராய் இருக்கணும்..''

சரவணனின் சர்வாங்கமும் பதறியது.

'நல்லவேளை.. அம்மாவையும்... அப்பாவையும் காலையிலேயே ஊருக்கு அனுப்பி விட்டோம்..' என்று நினைத்துக் கொண்டார்.

'அவர்கள் இருந்திருந்தால் இந்த வார்த்தைகளைத் தாங்கிக் கொள்ள மாட்டார்கள்..'

சித்தார்த்தன் சகுந்தலாவைப் பார்த்த பார்வையில்...

'நான் சொன்னேனே.. கேட்டாயா?' என்ற கேள்வி இருந்தது. வசுந்தரா நெஞ்சைப் பிடித்துக் கொண்டு தரையில் சரிய.. திவ்யா தன் அத்தையின் தலையை மடியில் தாங்கிக் கொண்டாள். பவித்ரனும்.. வசந்தனும் அவள் அருகில் ஓடினர்... அவர்களது மனைவிமார்கள் நாத்தனாருக்கு என்ன ஆனது என்று கவனித்து கொண்டிருந்தனர்.

மனோகரன் தினகரனைப் பார்த்துச் சீறினான்.

''டேய்... இதற்காகத்தான் திட்டம் போட்டு என் அத்தை மகளைக் காதலிப்பது போல் நடித்து ஏமாற்றி னாயா.. உன்னையே நம்பி வந்தவள்டா அவள்... அவளுடைய பாவம் உன்னைச் சும்மா விடாதுடா...''

அந்த நிலையிலும்... சித்ரலேகாவிற்காக மனோகரன் தன்னிடம் நியாயம் கேட்டதை தினகரனால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

"நீ யார் அதைக் கேட்க.. இது எனக்கும் அவனுக்கு மான பிரச்சனை.. நீ ஊடே வராதே..."

அமெரிக்காவில் இருந்து அத்தை மகளின் திருமணத் தில் கலந்து கொள்ள வந்திருந்த மனோகரனின் தங்கை காவ்யா சகுந்தலாவை சாடினாள்.

"உங்களுக்கும்... உங்கள் குடும்பத்தாருக்கும் என் அத்தை வீட்டை நிம்மதியில்லாமல் அடிப்பதே வேலை யாகப் போய்விட்டது... நீங்கள் என் மாமாவுடன் கூடப் பிறக்காமலே இருந்திருக்கலாம்."

சகுந்தலா அதிர்ச்சியுடன் காவ்யாவைப் பார்த்தாள். அதற்குள் வசுந்தராவின் மயக்கம் தெளிந்து விட் டிருந்தது.. அவள் கண் விழித்தாள்.

# 23

வசுந்தராவிற்கு நினைவு திரும்பியதும்.. தடுமாறி எழுந்தாள்... கைத்தாங்கலாய் பிடித்துக் கொள்ள வந்தவர் களின் கைகளைத் தட்டி விட்டாள்... நேராக சகுந்தலா வின் முன்னால் போய் நின்றாள்.

"பாவி.. சண்டாளி... இப்போது உனக்குத் திருப்தியா? உன் கல்யாணத்தின் போதே உனக்குப் படித்துப் ...



சொன்னேனேடி... நீ கேட்டாயா? உன்னால் என் அண்ணன்.. என் புருசனிடம் கெட்ட பெயர் வாங்கிக் கொண்டு விலகிப் போனார்.. என் பிள்ளை நிம்மதி யில்லாமல் நின்றான்.. இப்போது என் பெண்ணின் வாழ்க்கையை உன் மகன் பணயப் பொருளாக்குகிறான்.. இதற்கா உன்னை நான் வளர்த்தேன்?"

"அண்ணி..."

"என்னை உன் வாயால் அண்ணின்னு கூப்பிடாதே.. உனக்கு அந்த அருகதை கிடையாது.. உன் புருசன் காலிலும்.. உன் மருமகன் காலிலும் என் புருசனும்.. மகனும் விழுகணுமா? எதற்கு...? உன் மருமகன் தேவை யில்லாமல் தேடித்தேடி என் பிள்ளையிடம் வம்பு வளர்த்தானே.. அதற்கா? இல்லை... மகன் அவமானப் பட்டு வந்து நிற்கும் போதெல்லாம் என் புருசன் கோபப் பட்டு நியாயம் கேட்கக் கிளம்பும்போது... என் மகன் அப்பா... அது நம் திலகாவின் புருசன்ப்பா... என்று கெஞ்சி நிறுத்தி விடுவானே... அதற்கா மன்னிப்புக் கேட்கச் சொல்கிறாய்?"

திலகா... 'என்னது..?' என்ற பாவனையில் சித்தார்த் தனைப் பார்க்க... திவ்யாவும்... ஜெகனும் மனம் துடித்துப் போனார்கள்.

"உன் வீட்டு ஆண் பிள்ளைகள் கால்களில் என் வீட்டு ஆண் பிள்ளைகள் விழுவதைப் பார்க்கும் சக்தி எனக்கில்லை... அவர்களுக்குப் பதில்... நான் உன் காலிலும்.. உன் வீட்டார் கால்களிலும்.. இன்னும் உன் வீட்டில் இருக்கும் நாய்.. பேய்.. நண்டு.. சிண்டு.. ஆடு.. மாடு..ன்னு அனைத்து ஜீவன்களின் கால்களிலும் ... என் மகள் பச்சை மண்.. வாழ வேண்டிய

இளங்குருத்து... அவளை ஊர் பஞ்சாயத்தில் நிற
உன் மகன் அசிங்கப்படுத்தியது போதும்.. இ
அசிங்கப்படுத்த வேண்டாம்...''

வசுந்தரா கை கூப்ப முனைந்த போது... சித்ரலே
தாயின் கையைப் பிடித்து தட்டி விட்டாள். அவ
தள்ளி விட்டாள்.

''அம்மா... போதும்... நான் பச்சை மண் இல்லை..
வாழ்க்கையை நான் தீர்மானிக்கும் வயதில்
இருக்கிறேன்.. இது என் வாழ்க்கைப் பிரச்சனை.. இ
நீங்கள் யாரும் தலையிடக்கூடாது...''

''சித்ரா..''

''அம்மா... என்மேல் ஆணை.. நீங்களோ.. அப்பாவே
அண்ணனோ... இல்லை மற்றவர்களோ இந்தப் பிர
சனையில் வாயைத் திறக்கக் கூடாது... வெறும் வ
வார்த்தையால் நீங்கள் மன்னிப்புக் கேட்டால் கூட அ
வினாடியில் நான் செத்து விடுவேன்...''

வசுந்தரா... ''ஐயோ...'' என்று வாய் பொத்தி பின்
நகர்ந்தாள்... சரவணனும்.. சித்தார்த்தனும்... வாயை
திறக்க வழியில்லாமல் திகைத்து நின்றனர்.

சித்ரலேகா... தன் கழுத்தில் கிடந்த மாலையை
கழற்றி அங்கிருந்த சேரில் போட்டாள்... தினகரனை
பார்த்தாள்.. நிதானமாகப் பேசினாள்.

''உங்கள் மேல் எவ்வளவு மதிப்பும்.. மரியாதையு
வைத்திருந்தேன் தெரியுமா? அத்தனையும் இப்போ
காணாமல் போய் விட்டது அத்தான்.. உங்களுக்கா
நான் என் பெற்றவர்களையும்.. அண்ணனையும் எதிர்த்
நின்றேன்... உங்களைப் பார்க்க.. ஊர் எல்...





ஊரார் முன்னிலையில் பஞ்சாயத்தில் நின்றேன்..
அத்தனையும் விழலுக்கு இறைத்த நீராய் வீணாகிப்
போய் விட்டதே. என் குடும்பத்தைப் பழிவாங்கவா
என்னை நீங்கள் காதலிப்பது போல் நடித்தீர்கள்? இந்தக்
கல்யாணமும் அதற்குத்தானா? அப்படியென்றால்
கேட்டுக் கொள்ளுங்கள்.. நீங்கள் தோற்று விட்டீர்கள்
அத்தான்... என் உயிர் இருக்கும் வரை... என்னை
பகடைக் காயாக வைத்து என் குடும்பத்தை நீங்கள்
அவமானப்படுத்த நான் விடமாட்டேன்.''

''அப்படியென்றால் என்னோடு நீ வாழ முடியாது...''

''யாருக்கு வேண்டும் அப்படியொரு வாழ்க்கை..
உங்களுக்கு என்னைக் கல்யாணம் செய்து தரமாட்டே
னென்று என் அப்பா கூறிய போது.. நான் கல்யாணத்தை
ஒதுக்கிவிட்டு... கடைசிவரை தனியாக வாழ்ந்து
விடத்தான் நினைத்தேன்.. ஒரு போதும் என் வீட்டை
மீறி உங்களுடன் ஓடி வந்துவிட வேண்டுமென்று
நினைக்கவில்லை... அப்போது எடுத்த முடிவைத்தான்
இப்போதும் எடுக்கிறேன்.. உங்களுடன் வாழ எனக்கு
விருப்பமில்லை... நீங்கள் என்ன என்னை தள்ளி வைப்
பது? நான் உங்களைத் தள்ளி வைக்கிறேன்.. நீங்கள்
என்னை உங்கள் பெண்டாட்டியென்று சொல்லவே
வேண்டாம்.. நான் அந்த உரிமையைக் கேட்க மாட்டேன்.''

''கடைசி வரை இப்படியே தான் நீ இருக்க வேண்டும்.''

''இதைத்தானே நானும் முடிவு செய்திருந்தேன்..?

''இதைத்தானே நானும் முடிவு செய்திருந்தேன்..? இல்லாமல் தனித்து நின்
என்ன... கழுத்தில் தாலி இல்லாமல் தனித்து நின்
என்ன... கழுத்தில் தாலியோடு தனித்து
திருப்பேன்.. இப்போது கழுத்தில் தாலியோடு தனித்து
... வித்தியாசம்..?''

''லேகா... இதற்கெல்லாம் நீ அனுபவிக்கப் போகிறாய்..''

''அப்படியெல்லாம் மனப்பால் குடிக்காதீர்கள்.. நான் ஒன்றும் ஆகிவிட மாட்டேன்.. என்னை.. என் காதலை.. என் தியாகத்தை.. அவமரியாதை செய்த உங்களுடன் வாழ் வதை விட... தனித்து வாழும் வாழ்க்கையே சிறந்தது..''

''எத்தனை நாள் நீ பிடிவாதமாக இருப்பாய்...?''

''நீங்களாக வாய் திறந்து உங்களின் பெண்டாட்டி யென்று என்னைச் சொல்லுகிற வரை நான் இப்படித்தான் இருப்பேன்.''

''கனவிலும் அது நடக்காது...''

''தாராளமாய் நடக்காமல் போகட்டும்.. உங்கள் காதலுக்காக நான் தவம் கிடந்த காலமெல்லாம் மலை யேறிப் போய் விட்டது.. இனி என் வாழ்வில் சுயமரி யாதை மட்டும்தான் இருக்கும்... கிளம்புங்க அம்மா...''

''லேகா... இது எனக்கும்... உன் வீட்டுக்குமான பிரச் சனை நீயேன் ஊடே வருகிறாய்..?''

''ஹலோ... இது எனக்கும்.. உங்களுக்குமான பிரச் சனை.. இதில் என் வீட்டை ஊடே இழுத்திருப்பது நீங்கள்தான்... அது நினைவிருக்கட்டும்...''

''முடிவாக என்னதான் சொல்கிறாய்?''

''என் வீட்டில் ஒரு போதும் மன்னிப்புக் கேட்க மாட் டார்கள்.. அதைப் போல்.. நானும் உங்களை மன்னிக்க மாட்டேன்...''

''நீ.. என்னை மன்னிப்பதா? என்னடி திமிரா..?''

''திமிர்தான் அத்தான்.. நீங்கள் கட்டிய தாலியை கழுத்தில் போட்டிருக்கிறேனே அந்தத் திமிர் இ...



அறிய... உலகறிய.. பத்திரிக்கை அடித்து மூன்று நாள்கள் விருந்து வைத்து சட்டப்படி ரெஜிஸ்டர் செய்து... சாஸ்திரப்படி.. அக்கினி வளர்த்து.. அருந்ததி பார்த்து.. என் கழுத்தில் நீங்கள் மூன்று முடிச்சுப் போட்டு நடந்த கல்யாணம்.. இதிலிருந்து அவ்வளவு எளிதாக நீங்கள் தப்பி விட முடியாது...''

''என்னடி பயமுறுத்துகிறாயா...''

''இல்லையென்று சொல்வேனா அத்தான்.. ஆமாம்... பயமுறுத்துகிறேன்... இப்போது நான் போய் போலீஸ் ஸ்டேசனில் உங்கள்மேல் வரதட்சணை கேட்பதாக ஒரு புகார் கொடுத்தேன்னு வையுங்க.. உங்கள் கதை கந்தல்தான்...''

''என்னது.. நான் வரதட்சணை கேட்டேனா..?''

''பின்னே இல்லையா? வரதட்சணை என்று பணமாய் கேட்கவில்லையே தவிர.. என் அப்பாவின் தன் மானத் தையும்.. என் அண்ணனின் மரியாதையும்... வரதட்சணை யாய் கேட்டீர்களா.. இல்லையா...? ரொக்கம் கொடுத் தால்தான் உங்கள் பெண்ணை வைத்து வாழ்வேன் என்று சொல்வதும்.. மன்னிப்புக் கேட்டால்தான்.. குடும்பம் நடத்துவேன் என்று நீங்கள் சொல்வதும் ஒன்றுதானே...''

''உன் அண்ணனும்.. அப்பாவும் ஆடுவார்கள்.. அதை நான் பார்த்துக் கொண்டு பேசாமல் இருக்க வேண்டும் அப்படித்தானே...''

''என் அண்ணனும்... அப்பாவும் உங்களுக்கு எதிரி கள்ன்னா நீங்கள் நேருக்கு நேர் அவர்களிடம் மோதி யிருக்க வேண்டும்... என்னை பணயமாக்கி அவர்களை பணிய வைக்க நினைத்து இருக்கக் கூடாது..''

சரவணனும்... சித்தார்த்தனும்.. வசந்தராவும்.. என்
அவர்கள் குடும்பத்தைச் சேர்ந்த அனைவருமே திறந்த
வாயை மூடாமல் சித்ரலேகா பேசுவதை ஆச்சரியமாய்
பார்த்துக் கொண்டு நின்றனர்.

அதுவரை குழந்தைத்தனமாய்... வெகுளியாய்..
வெளியுலகம் தெரியாமல் இருந்த சித்ரலேகா... அன்று
பெண்சிங்கமாய் மாறினாள்.

# 24

விரியூர் நோக்கிச் சென்று கொண்டிருந்த காரில்
அமர்ந்திருந்தவர்கள் எதைப் பற்றிப் பேசினாலும்.. அது
சித்ரலேகாவின் தைரியமான முடிவிலேயே வந்து
நின்றது.

வசந்தனின் மனைவியும் வசந்தனும் பின் சீட்டில்
அமர்ந்திருக்க... அருகில் அமர்ந்திருந்த தங்கை காவ்யா
விடம் பேசியவாறு காரை ஓட்டிக் கொண்டிருந்தான்
மனோகரன் இடையிடையே பேச்சில் பெரியவர்களும்
கலந்து கொண்டனர்.

''நான் நினைத்துக் கூடப் பார்க்கவில்லை அண்ணா..
நம்ம சித்ராவா இப்படிப் பேசினாள்.. நீயாய் வந்து
என்னைக் கூப்பிடாதவரை நான் உன்னுடன் வாழ
மாட்டேன்.. நீ என்னை விட்டு விட்டு வேறு கல்யாணம்
பண்ணிக் கொண்டால்.. வரதட்சணை கேட்டு என்னைத்
தள்ளி வைத்திருக்கிறாய் என்று போலீஸில் புகார்



கொடுப்பேன்னு போட்டாளே ஒரு போடு.. தினகரன்
முகம் பேஸ்தடித்தது போல் ஆகிவிட்டது...''

...சாலையில் கவனமாய் இருந்த மனோகரன் பல்லைக்
...கடித்தான்.

''சித்ராவை போன்ற பெண்ணின் காதல் கிடைக்க
அவன் கொடுத்து வைத்திருக்க வேண்டும். அவளைத்
தங்கத் தாம்பாளத்தில் வைத்துத் தாங்குவதை விட்டு
விட்டு.. தள்ளி வைக்கிறானே.. இவனெல்லாம் ஓர்
மனிதனா..? சித்ராவும் இவனும் உயிருக்குயிராய் காதலிப்ப
தாய் நான் நம்பி ஏமாந்துவிட்டேன்.. எனக்கு மட்டும்
உண்மை தெரிந்திருந்தால்.. என்மேல் பழி வந்தாலும்
பரவாயில்லைன்னு அவளைத் தூக்கிக் கொண்டு வந்து
தாலி கட்டியிருப்பேன்.. சித்ராவின் மனதில் அவன்
வந்துவிட்டானேன்னு விலகிப் போனால்.. இப்படி
ஆகிவிட்டதே...''

காருக்குள் மௌனம் சூழ்ந்தது.. வசந்தன் அதைக்
கலைத்தார்.

''மனோ.. நல்லதோ... கெட்டதோ... சித்ராவிற்கு
கல்யாணம் ஆகிவிட்டது. இனி அவள் தினகரனின்
மனைவி... மறந்தும் இது போன்ற வார்த்தைகளை இனி
மேல் பேசாதே.. அவளுடைய வாழ்க்கைப் போராட்
டத்தை அவளே பார்த்துக் கொள்வாள்.. நாம் அவளுக்கு
சப்போர்ட் பண்ணுவோம்.. ஆனால் போனதை நினைத்து
புலம்பக் கூடாது...''

மனோகரன் பதில் கூறவில்லை... சித்தார்த்தன் ஓட்டிச்
சென்ற காரில்.. பின் சீட்டில் குழந்தைகளுடன் திவ்யா
அமர்ந்திருந்தாள். வழக்கம் போல் அவள் பேசாமலே
வந்தாள்.. சித்தார்த்தன் பேச்சுக் கொடுத்தான்.

''குழந்தைகள் தூங்கி விட்டார்களா..?''

''ம்ம்...''

''அம்மா.. பாவம்.. ரொம்பக் கலங்கிப் போய்...
கிறாங்க..''

''ம்ம்..''

''அப்பாவால் நம் சித்ரா பேசியதை நம்பவே மு...
வில்லை...''

''ம்ம்...''

சித்தார்த்தனுக்கு தலையை பிய்த்துக் கொள்ள வே...
டும் போல் இருந்தது. எது பேசினாலும் 'ம்ம்..' தா...

'பேசேண்டி... பேசாமல் ஏன் என்னைக் கொல்கிறா...
உன் மனதில் என்ன இருக்கிறதுன்னு வாயைத் திற...
சொல்லேன்...'

சித்தார்த்தன்.. காரின் முன் பக்க கண்ணாடியை...
செய்து.. அதன் வழியே.. பின் சீட்டில் அமர்ந்திரு...
வளைப் பார்த்தான்.

திருமண வீட்டிற்கான பிரத்யேக அலங்காரங்க...
நெற்றியில் ஸ்டிக்கர் பொட்டிற்கு மேல் சிறு சந்த...
கீற்றுடன்.. பட்டுப் புடவையும் பூவுமாக.. வைர ந...
களுடன் இருந்தாள் திவ்யா.. கண்களில் மெலிதா...
சோகம் தெரிந்தது.

''எதைப் பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறாய் திவ்யா..''

''ஒன்றுமில்லை...''

''ஒன்றுமில்லாததற்கு இவ்வளவு தூரம் யோசிக்...
ஆள் நீ இல்லையே...''




''ம்ம்...''

''சித்ரா எடுத்திருக்கும் முடிவைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்?''

''நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்..''

''நானென்ன நினைக்க... ஆசைப்பட்டவனையே கல்யாணம் செய்து கொண்டிருக்கிறாள்.. சந்தோசமாய் வாழ்வாள்ன்னு நினைத்தேன்.. கடைசியில் இப்படி ஆகிவிட்டதே...''

திவ்யாவின் விழிகள் மின்னலென சித்தார்த்தனின் மேல் பதிந்து விலகியதை கண்ணாடியில் அவனால் காண முடிந்தது.

'நான் என்ன சொல்லிவிட்டேனென்று இந்தப் பார்வை பார்க்கிறாள்...'

''ஆசைப்பட்டவங்களை கல்யாணம் பண்ணிக்க முடியாத வேதனையைத்தான் நீங்கள் அனுபவித்து இருக்கீங்களே.. உங்களுக்கு தெரியாதா என்ன?''

'ஓ... நீ அப்படி வருகிறாயா..'

''அதனால் நான் ஒன்றும் குறைந்து விடவில்லையே திவ்யா.. என்னைப் போல் சந்தோசமான குடும்ப வாழ்வு வாழும் பாக்கியம் திலகாவிற்குத்தான் கிடைக்கவில்லை...''

திவ்யாவின் முகத்தில் சிறு சுடர் ஏற்றி வைத்தது போல் மெலிதான வெளிச்சம் பரவியது... அதைப் பார்த்தவாறே சித்தார்த்தன் தொடர்ந்து சொன்னான்.

''அந்த இரக்கம்தான் அவள்மேல் எனக்கு இருக்கிறது.. ஜெகனைப் போன்ற ஒருவனுடன் அவள் வாழ்க்கை நடத்த வேண்டியதாகிவிட்டதே என்பதுதான் எனக்கு...

வேறு எந்த வித உணர்வும் எனக்கு இல்லை.. என்னை
நினைத்துத் தான்.. என்னைப் போல நிம்மதியான கல்
யாண வாழ்க்கை சித்ராவிற்கும் கிடைக்கட்டும் என்று
தான்.. நான் அத்தையிடம் போய் பேசினேன்.. அவங்
களும் தினகரனுக்கு வேறு இடத்தில் பெண் பார்த்து
முடித்து விடுவதாக சொன்னாங்க... அதற்குள் காரியம்
கை மீறிவிட்டது.. இல்லாவிட்டால்.. சித்ராவை தினக
னுக்கு ஒரு போதும் கொடுத்திருக்க மாட்டேன்.."

சித்தார்த்தனின் வார்த்தைகளில் உண்மை இருந்தது..
தெரிந்தே தங்கையின் வாழ்வை பாழடித்து விட்டோ
மென்ற வருத்தம் இருந்தது.. திவ்யா அவளது மனதில்
சூழ்ந்திருந்த சந்தேக மேக மூட்டம் விலகி இயல்பானாள்.

"நடந்ததை நினைத்து இனி வருத்தப்பட்டு பிரயோஜ
மில்லை.. சித்ரா இந்த அளவு தெளிவான பெண்ணாக
இருப்பாள்ன்னு நான் கூட நினைத்துப் பார்க்கவில்லை
அத்தான்..."

"எனக்காகவும்... அப்பாவிற்காகவும்.. அவள் தன்
வாழ்வை பணயம் வைக்கிறாளே.."

திவ்யா அதை மறுத்தாள்.

"தப்பு அத்தான்.. அவள் தனக்காகத்தான் இப்போது
போராடுகிறாள்.. உங்களுக்காகவும்.. மாமாவிற்காகவு
மில்லை... இதை முதலில் புரிந்து கொள்ளுங்கள்.."

"என்ன நீ.. என்னையும்.. அப்பாவையும் மன்னிப்பு
கேட்கச் சொன்னதற்காகத்தானே.. அவள் தினகரனை
எதிர்த்து நிற்கிறாள்?"

"இதைத்தான் நீங்கள் சரியாக புரிந்து கொள்ள
வில்லை.. அவள் தினகரனை உண்மை...



னைந்தவள்.. அவனை அவனுக்காக நேசித்தவள்.. அவ
னுக்காக.. தம் வீட்டை விட்டு வெளியே போய்... இருட்
டில்.. வயல் காட்டில் அவனை சந்தித்தவள்... அப்படி
இருக்க.. அவளை தினகரன் பகடைக் காயாய் பயன்
படுத்த முனைந்தால் அவள் அதை ஏற்றுக் கொள்
வாளா? ஒரு பெண்ணை காதலிக்கிறவனாக இருந்தாலும்
சரி.. கை பிடிக்கிறவனாக இருந்தாலும் சரி.. அவளை
அவளுக்காக நேசிக்க வேண்டும்... அவள் தான் அவ
னுடைய வாழ்க்கையென்று வாழ வேண்டும்... தினகரன்
அதைச் செய்யவில்லை... சித்ரா விலகி வந்துவிட்டாள்..."

சித்தார்த்தன் மௌனமானான்... திருமணமான புதிதில்
'என்னை... எனக்காக நேசி..' என்று விலகியிருந்தவள்
தானே இந்த திவ்யா. இவள் சொல்வதிலும் உண்மை
இருக்கிறது.

டிரைவர் காரை ஓட்ட... சரவணன் அருகில் அமர்ந்து
பின் சீட்டில் வசுந்தராவின் தோள் மீது சாய்ந்து கண்களை
மூடிக் கொண்டு வந்த சித்ரலேகாவையே... பார்த்துக்
கொண்டிருந்தார்.. வசுந்தராவின் விழிகள் நீரில் மிதப்ப
தையும்... அவளுடைய உதடுகள் துடிப்பதையும் கண்ட
வரின் நெஞ்சம் வலித்தது.

'என்னை கை பிடித்து.. இவள் என்ன சுகத்தைக் கண்
டாள்..'

"வசு..." அவர் நாத்தழுதழுக்க அழைக்க.. வசுந்தரா..
டிரைவர் இருப்பதை விழி ஜாடையால் உணர்த்தினாள்.

அந்த நிலையிலும்.. அடுத்தவர் முன்னிலையில் வீட்
டுப் பேச்சை பேசக்கூடாது என்று அறிவுறுத்திய மனை
வியைப் பார்க்கையில் கண்கள் பனித்தன சரவணனுக்கு.

# 25

திருமண மண்டபத்தை விட்டு சித்ரலேகா அ
ளுடைய பிறந்த வீட்டினருடன் செல்வதற்கு மு
பேசிய வார்த்தைகள்.. சகுந்தலாவின் மனதில் எ
ரொலித்துக் கொண்டிருந்தன.

''என்னைத் தேடி வந்து காதலித்தது நீங்கள்தா
என்னை இந்தக் கல்யாணம் வரை கொண்டு வந்த
நீங்கள்தான்... நீங்களே ஒரு நாள் என்னை உங்க வீ
டிற்கு கூப்பிட்டுக் கொண்டு போகத்தான் போறீங்க
அதுவரை நான் உங்கள் வீடு இருக்கும் திசைப்பக்
கூட வரமாட்டேன்... என்னைத் தவிர வேறு ஒ
பெண்ணை நீங்கள் மனதால் நினைத்தால் கூட நா
போலீஸின் உதவியை நாடி விடுவேன்.. ஜாக்கிரதை
வாழாமல் தனியாய் இருக்கப் போவது நான் மட்
மில்லை... நீங்களும்தான்... அதை மறந்து விடாதீர்க
என்னைப் பணயமாய் வைத்து என் வீட்டாரை பண
வைக்க நினைக்காதீர்கள்.. என் உடம்பில் உ
இருக்கும்வரை நான் அதை நடக்க விடமாட்டேன்... எ
வீட்டார் நீங்கள் இருக்கும் பக்கம்... பாவமாய் ஒ
பார்வை பார்த்தால் கூட செத்துவிடுவேன்... இ
அவர்களும் நினைவில் வைத்துக் கொள்ளட்டு
பார்த்துவிடலாம்.. இந்த ஜென்மம் முழுவதும் நா
தனியாக வாழ்ந்தாலும் வாழ்வேனே தவிர.. உங்க
எண்ணம் நிறைவேற விட மாட்டே



ஜென்மம் முழுவதும் பெண்டாட்டி என்ற ஒருத்தியின்
துணை இல்லாமல் நீங்களும் வாழ வேண்டியிருக்கும்...
இதை நீங்களும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்...
வருகிறேன்...''

சித்ரா எல்லோருக்கும் முதலில் சென்று காரில் ஏறிக்
கொண்டாள். சித்தார்த்தன்.. தினகரனை குற்றவாளி
போல் பார்த்துக் கொண்டே சென்று விட்டான்.. மனோ
கர் முறைத்த முறைப்பை விறைப்பாய் எதிர் கொள்ள
மட்டும் தினகரன் மறக்கவில்லை.

'இவன் யார்.. எனக்கும் லேகாவிற்கும் நடுவில் வர...?'

சரவணன் சகுந்தலாவை தீர்க்கமாய் பார்த்து சொன்
னார்.

''நீ அன்று என் பேச்சை மீறியதால் வந்த வினைகளை
பார்த்தாயா?''

பிரபாகரனின் தசை இதைக் கேட்டதும் துடித்தது...

கணவனைப் பின் தொடர்ந்து செல்லும் முன் வசந்
தா சகுந்தலாவைப் பார்த்து ஒரே ஒரு வார்த்தை தான்
கேட்டுவிட்டுச் சென்றாள்... அந்த ஒரு வார்த்தையில்
சகுந்தலா துடித்து விட்டாள்.

''திருப்தியா..?'' என்று கேட்டு விட்டு வசந்தா
சென்று விட்டாள்.

சகுந்தலா அப்படியே சரிந்து திருமண மண்டபத்தில்
அமர்ந்து விட்டாள்.. சற்று முன் கலகலப்பாய் இருந்த
அந்தத் திருமண மண்டபம் இப்போது வெறிச்சோடிக்
கிடந்தது.

ஜெகன் மட்டும் தினகரனைத் தட்டிக் கொடுத்து

''சாதிச்சிட்ட மாப்பிள்ளை.. சாதிச்சுட்ட... அவனு மூஞ்சியில் கரியை பூசிட்ட.. இனி நம்ம ஊரில் அவனு தலை நிமிர்ந்து நடப்பானுகளா.. எனக்கு இது போது மாப்பிள்ளை.. அவனுக கொட்டத்தை அடக்கிட்டப்பா.. என் மச்சான் நீ என்பதை நிருபிச்சிட்ட.. என் மன குளிர்ந்து போச்சு மாப்பிள்ளை.. அவனுக மன்னிப்பு கேட்காவிட்டால் போயிட்டுப் போகிறானுக.. என்றைக்கு இருந்தாலும் உன் காலடியில் வந்து விழுவானு மாப்பிள்ளை.. நீ பார்த்துக் கொண்டேயிரு... மனை இப்போது போலவே திடமாய் வைத்துக்கிட்டு நிமிர்ந்து நில்லு... விட்டுக் கொடுத்து விடாதே...''

வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டு தினகரனுக்கு உபதேசம் பண்ணிக் கொண்டிருந்த ஜெகனின் தோ மேல் தட்டினார் பிரபாகரன்... திரும்பிப் பார்த்தவனிடம் வாயில் ஒரு விரலை வைத்து... 'அடங்கியிரு' என்று சமிக்ஞை செய்து விட்டு... 'போ' என்பதாய் தலையை ஆட்டினார்.. மகனை கூர்ந்து பார்த்துவிட்டு மனைவியை நாடிச் சென்றார்.

''திலகா.. அம்மாவிற்கு சூடாய் ஏதாச்சும் கொடும்மா..''

''கொஞ்சம் விசம் இருந்தால் கொடுக்கச் சொல்கிறீங்களா...''

சகுந்தலா கணவனை நிமிர்ந்து பார்த்துக் கேட்டாள்.. பிரபாகரனின் முகம் மாறியது.

''ஏண்டி இப்படிப் பேசுகிற...?''

''வேறு எப்படிப் பேச..? உங்களையே நம்பி வந்த எனக்கு நல்ல பெயர் வாங்கிக் கொடுத்துட்டிங்க.. உங்க மகனும் உங்களைப் போல...



விதையொன்று போட்டால் சுரையொன்றா முளைக் கும்?''

''சகுந்தலா... தினா பண்ணிய தவறுக்கு நான் எப்படி பொறுப்பாவேன்?''

''பகையை வளர்க்காதீங்கன்னு நான் தலைதலையாய் அடித்துக்கிட்டேன். நீங்க கேட்டீங்களா...''

கணவனும் மனைவியும் வாதாடிக் கொண்டிருப் பதைப் பார்த்த ஜெகனுக்கு பேச்சு போகும் திசை பிடிக்க வில்லை.

'ஆஹா... அத்தைகாரம்மா... என் மாமனின் மனசை கலைக்கப் பார்க்குதே...'

அவசரமாய் ஊடே புகுந்து வாயைத் திறந்தான் ஜெகன்.

''அத்தை... மாமாவையே குற்றம் சொல்லாதீங்க.. அவர் தங்கமான மனுஷன்..''

''ஆனா பித்தளை கூடச் சேர்ந்து விட்டாரே..''

தன்னைத்தான் சொல்கிறாள் என்று ஜெகனுக்கு நன்றாகப் புரிந்தது. ஆனால் 'யாரைச் சொல்கிறாய்..' என்று கேட்க இது நேரமில்லை... என்றைக்கும் பெண் டாட்டியின் முந்தானையைப் பிடித்துக் கொண்டு திரியும் மாமன் இன்றைக்கு அதிகமாய் பெண்டாட்டியிடம் பாசம் காட்டிக் கொண்டிருக்கிறார்.. அவனையும் அடக்கி வாசிக்கச் சொல்லியிருக்கிறார்... எனவே... யோசனை யுடன் நிதானமாய் பேசினான்.

''என்னவோ அத்தை.. நீங்க என்ன சொல்ல வரீங்க.. எனக்குப் புரியலை...''

''திலகா... தினகரனுக்கு மூத்தவள்... தினாவின் குணம் அப்படியே திலகாவிடம் உண்டு... ஒன்றை வேண்டாமென்று தள்ளி வைத்துவிட்டால் திரும்பிக் கூட பார்க்க மாட்டாள்.. நான் அவளுக்காக பார்க்கிறேன்...''

ஜெகன் பொறியில் அடிபட்டாள் போல் கலங்கிப் போனான்... அந்த வார்த்தைகள் உரைத்த சேதி அவனுக்கு தெளிவாகப் புரிந்தது.. பதறிப் போய் மனைவியைப் பார்த்தான்.. இரண்டு குழந்தைகளைப் பெற்றவள் போலில்லாமல் அன்றுதான் மலர்ந்த பூவைப் போல் இருந்தாள், அவள்...

'இவள் என்னை வெறுத்து விடக் கூடாது..' வாயை மூடிக் கொண்டான். பிரபாகரன் புருவம் உயர்த்தினார்.

''ஏண்டி... சம்பந்தம் இல்லாமல் பேசுகிற...?''

''சம்பந்தம் இருக்கிறது..''

''எனக்கு ஒன்றும் புரியவில்லை...''

''புரிய வேண்டியவர்களுக்கு புரிந்தால் சரி...''

மீண்டும் எதையோ கேட்கப் போன பிரபாகரனைத் தடுத்தான் ஜெகன்.

''ஏன் மாமா. அத்தையைக் கஷ்டப்படுத்தறீங்க.. அவங்களே சோர்ந்து போய் இருக்கிறாங்க.''

'இவனுக்கு ஏன் இத்தனை கரிசனம்.'

மனதில் ஜெகனின் பதட்டத்தைக் குறித்துக் கொண்ட பிரபாகரன் மனைவியின் கரத்தைப் பற்றினார்...



''சகுந்தலா.. நான் என்ன செய்தேனென்று உன் மகனின் மேலிருக்கும் கோபத்தை என்மேல் காட்டுகிறாய்.''

''யார் மீதும் நான் கோபத்தைக் காட்டவில்லை. என்னைத் தனியே விடுங்க.''

தினகரன்.. தாயின் கோபத்தைக் கண்டு உதட்டைக் கடித்தான். பின் அவளின் அருகே அமர்ந்தான்.

''அம்மா..''

''அவனைப் போகச் சொல்லுங்க.''

''அம்மா...''

''அவன் என்கூடப் பேசக்கூடாது.''

சகுந்தலா சட்டென்று எழுந்து மண்டபத்தை விட்டு வெளியேறினாள். தினகரன் துக்கத்துடன் தந்தையைப் பார்த்தான். அவன் ஆதரவாய் அவனது தோளைத் தட்டினார்.

''தினா.. நீ செய்தது சரின்னு நான் சொல்ல மாட்டேன். ஆனால் நீ என் மகன். உன்னை என்னால் விட்டுக் கொடுக்க முடியாது. நீ அந்தப் பெண்ணை உண்மையாய் காதலிக்கிறாய்ன்னுதான் நான் நினைத்தேன். இப்படி ஓர் எண்ணத்தை மனதில் வைத்திருப்பாய்ன்னு எனக்குத் தெரியாது. தெரிந்திருந்தால் இப்படி ஓர் அநியாயத்தை நீ செய்ய நான் துணை வந்திருக்க மாட்டேன்.''

''அப்பா.''

யாருக்காக தினகரன் தன் வாழ்வை பயணம் வைத்தானோ.. அவர் தன் மகனை வன்மையாகக் கண்டித்...

# 26

"தினகரா.. உன்னை நம்பி ஒரு பெண் பெத்த களையும் கூடப் பிறந்தவங்களையும் தூக்கி எறி விட்டு வந்திருக்கிறாள். நீ அவளை வைத்து அவளுடைய அப்பனுக்கும்.. அண்ணனுக்கும் நிபந்த போடுகிறாய் என்பதை நினைக்கும்போது எனக்கு ம தாங்கவில்லைடா. எப்படி நீ இதற்கு மனம் து தாய்..?"

"அப்பா.. உங்களுக்கும்.. மாமாவுக்கும் அவ பண்ணிய கொடுமைகளை மறந்து விட்டீர்களா?"

"அதற்குப் பழி வாங்க வேண்டுமென்று நீ நினை திருந்தால் அப்போதே ஒரு அரிவாளைத் தூக் கொண்டு போய் அவர்களை வெட்டிச் சாய்த்திரு வேண்டும். அதை விட்டுவிட்டு.. உன் பெண்டாட்டி மனதை வெட்டிச் சாய்த்திருக்கிறாயே..."

"அவர்களுடன் சண்டை போடக்கூடாதுன்னு அ தடுத்து விட்டாங்களே."

"இப்போது மட்டும் உன் அம்மா நீ செய்த இந் செயலைச் செய்யச் சொல்லி உன்னை ஏவினாளா?"

"அவர்களுக்குத் தெரிந்தால் கல்யாணத்தை தடுத்திருப்பார்கள்."

"அதனால் அவளை ஏமாற்றி நீ நினைத்ததை நடத் விட்டியாக்கும். ஒன்றைப் புரிந்து கொள்...



மாற்றவில்லை. உன்னை நீயே ஏமாற்றிக் கொண்டிருக் கிறாய்..."

"அப்பா..."

"நீ பிரபாகரனின் மகனாக நடந்து கொள்ளவில்லை. அவர்கள் யார்? என் மாமனார்.. மைத்துனன்.. மைத் துனன் மகன். அவர்கள் என் காலில் ஏன் விழ வேண் டும்? அவர்கள் அடித்த அடிக்கு பதில் அடி நான் அடித்து விட்ட பின் பகை எங்கேயிருந்து வந்தது?"

"அப்பா."

"உலகத்தில் எதை வேண்டுமானாலும் நீ விட்டுக் கொடுக்கலாம்... உன்னையே நம்பி வந்த பெண்ணை விட்டுக் கொடுக்கக் கூடாது. அதை நீ செய்து விட்டாய். இதுவரை என் மேல் உன் அம்மா இவ்வளவு கோபம் காட்டியதில்லை. காட்டுமாறு நானும் நடந்து கொண்ட தில்லை. இன்றைக்கு.. எனக்காகத்தான் இந்த அநியா யத்தை அவளுடைய அண்ணன் மகளுக்கு செய்யத் துணிந்தாய் என்று என்னிடம் கோபம் காட்டுகிறாள். தினகரா.. நீ செய்த காரியத்தினால் எல்லோருக்கும் அமைதி போய் விட்டது... இப்போது ஊரில் நீ உன் பெண்டாட்டியை தள்ளி வைத்திருக்கிறாய்ன்னு சொல்ல மாட்டாங்க. உன் பெண்டாட்டி உன்னுடன் வாழ மறுத்து விட்டாள்ன்னுதான் சொல்வாங்க... ஏன்னா.. கல்யாண மண்டபத்தைவிட்டு முதலில் வெளியேறியது நீயில்லை. உன் மனைவி."

பிரபாகரன் வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டு வெளியே போய் விட்டார். திருமண மண்டபத்தை காலி செய்துவிட்டு வேனில் அனைவரும் ஏறி அமர்ந்தார்கள்.

காரில் ஏற கால் வைத்தபோது சகுந்தலா கண்டிப்பாக கூறிவிட்டாள்.

"அவனை திருச்சிக்கு போகச் சொல்லுங்க."

"சகுந்தலா பொறுமையாய் இரு..."

"நான் பொறுத்ததெல்லாம் போதும். இவன் மட்டும் தனியே இறங்கி நம் வீட்டிற்குள் வந்தால்.. ஊரில் கேள்வி கேட்கிறவங்களின் வாயை அடைக்க முடியாது. இது இவனாகத் தேடிக் கொண்ட வினைதானே.. இவனே தனியே கிடந்து அனுபவிக்கட்டும். நம் வீட்டிற்குள் இவன் இனிமேல் நுழைவதாக இருந்தால் அவனுடைய பெண்டாட்டியோடு நுழையட்டும்... இல்லையென்றால் திருச்சியிலேயே கிடக்கட்டும்."

"அம்மா..."

"என்றைக்கு இவன் பெண்டாட்டி என் வீட்டிற்குள் வந்து விளகேற்றுகிறாளோ.. அன்றைக்கு இவன் என்னோடு பேசட்டும்."

பிரபாகரன் மகனின் முகத்தைப் பார்த்தார். அவன் பதில் பேசாமல்.. காத்திருந்த காரில் ஏறிக் கொண்டான்.

வேன் விரியூர் நோக்கிப் பறந்தது.. கார் திருச்சியை நோக்கி விரைந்தது. அன்று திருச்சிக்கு வந்தவன்தான்.. பதினைந்து மாதங்கள்.. ஆகிவிட்டன. இந்த ஒன்றேகால் வருசமாய்.. பிறந்த ஊரை அவன் மிதிக்கவில்லை... பெற்றவர்களைப் பார்க்கவில்லை. தினமும் போனில் பேசுவான்... எல்லோரும் பேசுவார்கள். சகுந்தலா பேச மறுத்து விடுவாள்.

தினகரனின் மனதில் சித்ரலேகாவின் மேல் கோபம் எழும். 'இவன் மட்டும், அன்று ...



திருந்தால்.. நான் நினைத்தது நடந்திருக்கும். இப்போதும் ஒன்றும் கெட்டுப் போகவில்லையே. அவளுடைய அன்னையும்.. அப்பனையும்.. மன்னிப்புக் கேட்கச் சொன்னால்.. பிரச்னை தீர்ந்து விட்டதே. இவளுடன் ஜோடியாக என் வீட்டிற்குப் போனால்... என் அம்மாவின் கோபம் ஓடி விடுமே.. இவள் அதைச் செய்ய விட மாட்டேன் என்கிறாளே...'

இரவில் அவனது தூக்கம் கெட்டது. விடிய விடிய விழித்துக் கொண்டிருந்து விட்டு.. விடியற்காலையில் தூங்குவது அவனுக்கு வழக்கமாகிப் போனது.

இதைவிடக் கொடுமை என்னவென்றால்... திருமணம் முடிந்தவனை 'கட்டைப் பிரம்மச்சாரி' என்று அலுவலகத்திலும்... அக்கம் பக்க வீடுகளில் உள்ளவர்களும் நினைத்துக் கொண்டிருந்தனர்.

அவசரத் திருமணம் என்பதாலும்.. திருமண மண்டபத்தில் சித்ரலேகாவின் வீட்டாரை காலில் விழ வைக்க வேண்டுமென்பதாலும் தினகரன் தன் திருமணத்தைப் பற்றி திருச்சியில் மூச்சு விடவில்லை.

அதுவும் நல்லதுதான் என்று பின்னாளில் அடிக்கடி அவன் நினைத்திருக்கிறான்.

சித்ரலேகா திருமண மண்டபத்தை விட்டு வெளியேறியது யாருக்கும் தெரியாமல் போனதே. இல்லையென்றால் அதைச் சொல்லி அவனை மட்டம் தட்டியிருக்க மாட்டார்களா..?

அன்று போனவள்.. இன்று ஏன் வந்திருக்கிறாள்?

... என்ன?

தினகரனும் என்றும் போல் அன்றும்.. இரவு பூராவும் விழித்திருந்து விட்டு விடியற்காலம் கண் அசந்தான்.

நேரம் கழித்து எழுந்து.. அரக்கப் பரக்க கீழே இறங்கி வந்தபோது விசாலாட்சி பால் பாத்திரத்தைக் கொண்டு வந்து தந்தாள்.

''நானே பால் வாங்கி வைத்து விட்டேன். தலைவலி தேவலையா?''

''ம்ம்...''

அவசரமாய் கிளம்பி.. அலுவலகம் சென்றான். சித்ர லேகாவைக் கடக்கும்போது.. அவள் கம்ப்யூட்டரில் கவனமாக இருந்தாள்.

'கொழுப்பு.. நிமிர்ந்து கூடப் பார்க்க மாட்டாளாம்.'

அவள் முகம் தெளிவாய்.. அமைதியாய்.. அழகாய் இருந்தது.

'இருக்காதா.. விடிய விடிய தூங்காமல் கிடப்பது நான்தானே... இவள் குறட்டை விட்டு கும்பகர்ணி போல் தூங்கியிருப்பாள்.'

வேலையை ஆரம்பித்த சற்று நேரத்தில்... அவனிடம் கையெழுத்து வாங்க சித்ரலேகா வந்து நின்றாள்.

''குட்மார்னிங் சார்..''

''சாரா...?'' அவளை முறைத்தான். அவள் அமைதியாகப் பார்த்தாள்.

''இப்போது மணி என்ன?''

''பதினொன்று நாற்பது.''

''இதுதான் நீ குட்மார்னிங் ...



''இப்போதுதானே உங்களைப் பார்க்கிறேன்.''

''உன்னைக் கடந்துதானே வந்தேன்.. உன் பக்கத்தில் இருப்பவர்கள் எல்லாம் விஷ் பண்ணினார்கள். நீ கம்ப்யூட்டரை ரிஸர்ச் பண்ணிக் கொண்டிருந்தாய்..''

''வேலையாய் இருந்திருப்பேன்.. அதனால் கவனிக்கவில்லை.''

''கவனிக்கவில்லையா.. உன்னை.. என்னைக் கவனிக்க வைக்கிறேன் பார்.''

அவன் அவளையே ஒருவிதமாய் பார்த்தான். அவன் உதடுகளில் மர்மப் புன்முறுவல் வந்தது.

''உட்கார்..'' என்றான்.

''எனக்கு வேலையிருக்கிறது...'' என்றாள் அவள்.

''பொறும்மா.. நீ அறிவாளி.. தைரியசாலி.. உன்னிடம் ஒரு ஆலோசனை கேட்கலாம் என்று நினைத்தால் பறக்கிறாயே... உட்கார்...''

அவன் ஆலோசனை கேட்டான்.. அவள் பல்லைக் கடித்தாள்.

# 27

''லேகா.... இந்த டீன்ஏஜ் பெண்கள் இருக்கிறார்களே.... அவர்களுக்கு பிடிவாதம் ஜாஸ்தி....'' தினகரன்

"இதைச் சொல்லத்தான் என் வேலையைக் கெடுக்கிறீர்களா?"

"முழுவதும் கேள்... அது என்னவோ... இந்த டீன்ஏஜ் பெண்களுக்கு அவர்களை விட வயதில் அதிகம் மூத்த ஆண்கள் மேல்தான் காதல் வருகிறது....."

"ஓஹோ... எனக்கு இது தெரியாது..."

"தெரியாதா.. யாரிடம் கதை விடுகிறாய்? உன் டீன் ஏஜில் உன்னை விட எட்டு வயது மூத்தவனான என் மேல் உருகி வழிந்தாயே...."

"அதற்குத்தான் நன்றாக அனுபவித்துக் கொண்டிருக்கிறேனே..."

"என்னத்தை அனுபவித்தாய்.... இன்னும் நீ அனுபவிக்க வேண்டியது நிறைய இருக்கிறதே.. அதற்குள் அலுத்துக் கொண்டால் எப்படி?"

"இதைச் சொல்லத்தான் என் வேலையைக் கெடுத்துக் கொண்டு இருக்கிறீர்களா?"

"இதைப் பாருடா.. நேற்று இந்நேரம் வேலைக்கு சேர்ந்த அம்மணி அலட்டிக் கொள்வதை.. ஹலோ.. இங்கே எனக்கு எத்தனை வருச சர்வீஸ் தெரியுமா?"

"அதைப்பிறகு தெரிந்து கொள்கிறேன்.. இப்போது கையெழுத்துப் போட்டுக் கொடுக்கிறீர்களா? எனக்கு நேரமாகிறது.."

"இதோ பார்.. என் பிரச்னைக்கு ஓர் யோசனை சொல்லு... நான் கையெழுத்துப் போடுகிறேன்.. இல்லாவிட்டால் நீ என் கையெழுத்து இல்லாமலே இதை அனுப்பிப் பாரேன்..."



சித்ரலேகா அவனைச் 'சொல்' என்பது போல் வெட்டும் பார்வை ஒன்றைப் பார்த்தாள்..

'என் மாமன் மகள் ஆளே மாறிவிட்டாளே... முதலில் எல்லாம் மோகினிப் பார்வை பார்ப்பாள்.. இப்போது காளியைப் போல் பார்க்கிறாளே.' அவன் டேபிள் வெயிட்டை உருட்டியபடி அவளையே பார்த்தவாறு பேசினான்.

"என் எதிர்வீட்டில் ஒரு டீன்ஏஜ் பெண்... பதினெட்டு வயது பருவக் கொடி"

"அவளுக்கு என்னவாம்?"

"அவளுக்கு என்மேல் காதலாம்..?"

"பாவம்.. அறியாப் பெண்.."

சித்ரலேகா 'சூள்' கொட்டினாள்.. தினகரனின் முகம் மாறியது..

'இவன் அவளைக் கடுப்படிக்கப் பார்த்தால்.. அவள் இவனைக் கடுப்படிக்கிறாளே...'

"ஏன்... அந்தப் பெண்ணிற்கு என்ன வந்தது?"

"நீங்கள் சொல்வது சரி தான்.. டீன்ஏஜ் பெண்களுக்கு நல்லது கெட்டது தெரிவதில்லை.. வெளுத்ததெல்லாம் பால் என்று நம்பிவிடுகிறார்கள்.. ஒருவரின் வெளித் தோற்றத்தை வைத்து யாரையும் எடை போடக்கூடாது என்பது அவர்களுக்கு தெரியவில்லை.."

"உனக்கு ரொம்பத் தெரிந்து விட்டதாக்கும்.."

"காலம் கடந்து தெரிந்திருக்கிறது.. இனித்தெரிந்து

''உன் கதையை விடு.. நான் அவளுக்கு என்ன பதிலைச் சொல்ல..?''

''இதையேன் என்னிடம் கேட்கிறீர்கள்..?''

''ஒரு ஐடியா சொல்வாய் என்றுதான்..''

''ஓஹோ.. நான் அந்தப் பெண்ணின் காதலை ஏற்றுக் கொள்ளச் சொன்னால்.. உடனே ஏற்றுக் கொள்வீர்களா..?''

''பின்னே...? ஒரு பெண்ணின் மனதை உடைக்கக் கூடாதில்லையா?''

''ஆணின் மனதை மட்டும் உடைக்கலாமா..?''

சித்ரலேகா முகத்தை சாதாரணமாய் வைத்துக் கொண்டு வினவ.. தினகரன் யோசனையாய் அவளைப் பார்த்தான்..

'இவள் எங்கே வருகிறாள்...?'

''நீ என்ன சொல்கிறாய்..?''

''இல்லை.. எனக்கு மனோ அத்தான்.. மனோ அத்தான்.. என்று ஒரு தாய் மாமனின் மகன் உண்டு..''

''அவனுக்கென்ன...''

''அவர் கல்யாணமே வேண்டாமென்று.. நாளை ஓட்டிக் கொண்டிருக்கிறார்..''

கணப் பொழுதில் அவள் எங்கே வருகிறாள் என்பது தினகரனுக்குப் புரிந்து விட்டது.. அனல் பார்வையோடு சீறினான்..

''லேகா.. என்ன வாய் நீள்கிற...



''இதென்ன சார்.. நீங்கள் என்னிடம் ஒரு யோசனை கேட்டீர்கள்.. நானும் பதிலுக்கு உங்களிடம் ஒரு யோசனை கேட்டேன்.. இது ஒரு தப்பா..?''

''உனக்கு இது தப்பாகத் தெரியாதுதான்..''

''உங்களுக்கு.. ஒரு டீன்ஏஜ் பெண்ணை சைட் அடிப்பது தப்பாகத் தெரியவில்லையே...''

''பதிலுக்குப் பதிலா..?''

''நீங்கள் அப்படித்தானே என்னை பழக்கி வைத்திருக்கிறீர்கள்..''

''நீ பைலைக் கொடு கையெழுத்துப் போடுகிறேன்..''

''இதை முதலிலேயே செய்திருக்கலாமே...''

அவன் முகம் இறுக கையெழுத்தைப் போட்டான்.. வெளியேறும் முன் சித்ரலேகா நின்று அவனை ஓர் பார்வை பார்த்தாள்.

''என்ன...''

''உண்மையிலேயே அந்தப் பெண்ணின் மேல் உங்களுக்கு அபெக்ஷன் எதுவும் இருக்கிறதா...?''

தினகரன் பதில் சொல்லாமல் அவளையே பார்த்தான்..

''நீங்கள் அந்தப் பெண்ணை காதலிக்கிறீங்களோ.. இல்லை சைட் அடிக்கிறீர்களோ.. எனக்கு அதைப்பற்றி கவலையில்லை..''

''அதுசரி.. நீ என்றுதான் என்னைப் பற்றிக் கவலைப் பட்டாய்? உனக்கு உன் வீட்டாரைப் பற்றி மட்டும்தானே கவலை?''

...ங்களைப் பற்றியும் கவலை உண்டு..''

''கவலைப்பட்டு என்னத்தை கிழித்தாய்..? நான்
கேட்டதை செய்தாயா?''

''எப்போதுமே பெண்டாட்டி கேட்பதைத்தான் புருசன்
செய்ய வேண்டும்.. புருசன் கேட்பதை.. பெண்டாட்டி
செய்வது என்பது அந்த புருசனுக்கு பெருமையைத்
தராது...''

''சரிடி.. நீ எனக்கு பெருமை சேர்த்துக் கொண்டே
யிரு..''

''நிச்சயம் நான் உங்களுக்கு பெருமையைத்தான்
சேர்ப்பேன்... நீங்கள் டீன் ஏஜ் பெண்ணைப் பற்றி
நினைத்தாலும்.. நான் எந்த நினைவும் இல்லாமல் தான்
வாழ்வேன்....''

சித்ரலேகா அறையை விட்டு வெளியேறி விட்
டாள்....

'இப்போது கூட எந்த நினைவும் இல்லாமல்தான்
இருப்பேன் என்கிறாளே.... தவிர.... உங்கள் நினைவோடு
தான் இருப்பேன் என்று சொல்லவில்லையே... திமிர்
பிடித்தவள்.....'

தினகரன் சுழல் நாற்காலியில் சுழன்றான்.. மதிய
உணவு நேரத்தின் போது... இவனுக்கு அவள் நினைவு
வந்து விட... எழுந்து அறைக்கதவை லேசாக திறந்து
பார்த்தான்...

சித்ரலேகா... கிருஷ்ணனுடன் சுவாரஸ்யமாய் பேசிக்
கொண்டிருந்தாள். அவன் அவளருகே சேரை இழுத்துப்
போட்டுக் கொண்டு... கம்ப்யூட்டர் திரையைப் பார்த்துக்
கொண்டே...



சிரித்தாள்.. இடையிடையே அவன் சொல்வதற்கு...
சிரித்துக்கொண்டு வேறு இருந்தாள்...

கிருஷ்ணன் நகைச்சுவையாய் பேசுவதில் வல்லவன்..
அதற்காக ஒரு ரசிகைகள் கூட்டமே அவனுக்கு அலு
வலகத்தில் உண்டு...

'அதென்ன... பெண்களிடம் மட்டும் இவன் இப்படி
ஜோக் அடிக்கிறான்..' எரிச்சலுடன் தன் இருக்கைக்கு
போய் அமர்ந்த தினகரனால் சாப்பிட முடியவில்லை.

'இவள் சாப்பிடப் போகாமல் இவனுடன் என்ன
பேசிக் கொண்டிருக்கிறாள்?'

தினகரன் மீண்டும் எழுந்து அறைக் கதவை லேசாகத்
திறந்து பார்த்தான்... சித்ரலேகாவும்.... கிருஷ்ணனும்
மும்முரமாய் பேசிக் கொண்டே கம்ப்யூட்டரை கவனித்துக்
கொண்டிருந்தனர்... அவர்கள் சாப்பிடக் கிளம்புவ
தற்கான அறிகுறியே தென்படவில்லை..

'லன்ச் டயத்தில்... பக்கத்தில் ஆட்கள் இல்லாத
போது அவனிடம் என்ன இவளுக்கு இவ்வளவு பேச்சும்...
சிரிப்பும் வேண்டிக் கிடக்கு...'

தினகரன் பொறுக்க முடியாமல் அறைக் கதவை
திறந்து கொண்டு வெளியில் வந்தான்.... அவன் வந்து
நிற்பதைக் கூடக் கவனிக்காமல் அவர்கள் பேச்சில்
ஆழ்ந்திருந்தனர்...

தினகரன் தொண்டையைச் செருமினான்... அவர்கள்

# 28

தினகரனின் கூரிய பார்வை சித்ரலேகாவைத் துளைத்தது... அவள் அதை உணராதவள் போல் இயல் பாய் அவனைப் பார்த்தாள்... கிருஷ்ணன் வியப்புடன் தினகரனைப் பார்த்து....

"என்ன சார்...." என்று வினவினான்....

"சாப்பிடப் போகவில்லையா...?"

"போக வேண்டும் சார்.... சித்ராவிற்கு ஆபீஸ் வொர் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்கிறேன்... இதை முடித்து விட்டுப் போக வேண்டும்..."

"ஏன்.. மேரி சொல்லிக் கொடுக்கவில்லையா....?"

"அவங்க சொல்லிக் கொடுக்காததை.. நான் சொல் லிக் கொடுக்கிறேன்.. நீங்கள் சாப்பிட்டு விட்டீர்களா சார்?"

'எங்கே நான் சாப்பிடுவது? நீ என் பொண்டாட்டியின் பக்கத்தில் உட்கார்ந்து கடலை போட்டுக் கொண்டிருப் பதைப் பார்த்த பின்னால் எனக்கு சோறு.. தண்ணி.. தொண்டைக்குள் இறங்குமா?'

"சாப்பிட வேண்டும் கிருஷ்ணன்..."

"ஓ.கே சார்.. நாங்க எங்க வேலையைப் பார்க் கிறோம்..."



அவன் 'இடத்தைக் காலிபண்ணு' என்று சொல்லா மல் சொல்லிவிட்டு சித்ரலேகாவிடம் பேச ஆரம்பிக்க... தினகரன் பல்லைக்கடித்தான்...

'இவளாவது எழுந்து போகிறாளா... என் முன்னாலேயே அவனிடம் இழைகிறாளே.. இவளை என்ன செய்தால் தகும்..'

தினகரன் சித்ரலேகாவை முறைக்க... அவள் அதை கண்டு கொள்ளாமல் கிருஷ்ணனிடம் சந்தேகம் கேட்டுக் கொண்டிருந்தாள்.

"இந்த ஆப்சனில் போய் கிளிக் பண்ணுங்க சித்ரா... கம்ப்யூட்டர் சொன்னதைக் கேட்டு விடும்..."

"நான் இதில்தானே போனேன்... எனக்கு வரவில் லையே..."

"கரெக்டா போனால் வராமல் எங்கே போகப்போகி றது... கம்ப்யூட்டருக்கு என்ன அம்மா வீடு இருக்கிறதா என்ன...? கோபித்துக் கொண்டு அங்கே போய் உட் கார்ந்து கொள்ள...?"

கிருஷ்ணன் சொல்லிய விதத்தில் சித்ரலேகா வாய் விட்டுச் சிரித்தாள். சிரிக்கும்போது தெரிந்த அவளது அழகிய பல்வரிசை கண்டு தினகரன் மயங்கினான். கிருஷ்ணன் இயல்பாக அவளைப் பார்த்து பதிலுக்குச் சிரித்தான்..

"அதனால்தான் சொல்கிறேன் சித்ரா.. அதற்கு நம்மை விட்டால் வேறுகதி கிடையாது.. அதனால் கரெக்ட் பாஸ் வொர்டில் போய்... கரெக்ட் ஆப்சனில் கிளிக் பண்ணுங்க... ...விடும்...."

தினகரன் அங்கிருந்து நகர முடியாமல் நிற்க கிருஷ்ணன் வியப்புடன் தினகரனைப் பார்த்தான்.

''என்ன ஆச்சு சார்...''

''ஒன்றுமில்லை...''

தினகரன் வேறு வழியில்லாமல் தன் கேபினுக்குள் நுழைந்தபோது... வையாபுரி அந்த ஹாலிற்குள் வந்தான்...

''என்ன கிருஷ்ணன்.. நீ சாப்பிடப் போகவில்லையா?''

''நீ ஒரு ஆள்தான் பாக்கி... நீயும் கேட்டுவிட்டாயா?''

''ஏன்... எனக்கு முன்னால் யார் உன்னை இந்தக் கேள்வியைக் கேட்டது?''

''நம்ம ஏ.ஒ சார்தான்...''

''அது சரி.. அவர் சித்ரலேகாவிடம் பேச வந்திருப்பார்.. நீ நந்தி போல் வழியை மறைத்துக் கொண்டு உட்கார்ந்து கொண்டால்.. அவருக்கு கோபம் வராதா? ஏன் சாப்பிடப் போகவில்லையென்று உன்னிடம் கேட்க மாட்டாரா....?''

''வையாபுரி.... இப்படியெல்லாம் கமெண்ட் பண்ணாதே.... எனக்குப் பிடிக்காது...''

''ஏன்ப்பா... உன்னைத்தானே சொல்கிறேன்...''

வையாபுரி... வழக்கம் போல் பேனாவை எடுத்துக் கொண்டு சென்றுவிட்டான். கிருஷ்ணன் அவன் முதுகை கோபத்துடன் வெறித்துவிட்டு சித்ரலேகாவின் பக்கம் திரும்பினான்....



''அவன் ஒரு உளருவாய்... அவன் சொல்வதையெல்லாம் நீங்கள் மைண்ட் பண்ணிக்காதீங்க....''

''அப்படியா... அவர் என்ன சொன்னார்?''

கிருஷ்ணன் வியப்பாய் பார்க்க சித்ரலேகா சிரித்தாள்...

''பரவாயில்லை.. நீங்கள் புத்திசாலிதான்....''

''அப்புறம் என்னை... கூமுட்டைன்னு நினைத்தீங்களா...''

சற்று நேரத்தில் கிருஷ்ணன் கிளம்பிவிட... சித்ரலேகா... தன் சாப்பாட்டுக் கேரியரை எடுத்துக் கொண்டு கிளம்பினாள்.. தினகரன் வழிமறிப்பது போல் வந்து நின்றான்.

''இப்போதுதான் கிருஷ்ணன் போனானா?''

''ஆமாம்....''

''அவனிடம் பல்லைக் காட்டி சிரிக்கிறாயே.. உனக்கு வெட்கமாயில்லை?''

''இல்லையே... சிரித்தால் பல் தெரியத்தானே செய்யும்?''

''இதற்குத்தான் வேலைக்கு வந்தாயா?''

''எதற்கு என்றும் சொல்லி விடுங்கள்...''

''கண்டவனிடமும் பல்லைக் காட்டுவதற்கு....''

''மைண்ட் யுவர் வெர்ட்ஸ்....''

''முதலில் நீ சரியாய் நடந்துகொள்....''

''என்னைப் பற்றிப் பேசும் வேலையெல்லாம் வேண்டாம்...''

"நீயும் நான் பேசும்படி நடந்துகொள்ளாதே..."

"இது ஆபீஸ்.... எனக்கு ஆணும்... பெண்ணும் ஒன்று போல் பிரண்ட்ஸ்ஸாகத்தான் தெரிவார்கள்..."

"எனக்கு அப்படித் தெரியவில்லை.. அவர்கள் உன்னிடம் வழிவது போல் தெரிகின்றது..."

"தெரிந்தால் சுவரில் போய் முட்டிக் கொள்ளுங்கள்.."

"எதற்காக...? உன்னைப் போன்ற ஒருத்தியை கட வுள்... என் கண்ணில் காட்டியதற்காகவா?"

"உங்களையும் தான் அதே கடவுள் என் கண்ணில் காட்டிவைத்தார்...."

"ஏன்... எனக்கென்ன குறைச்சல்.."

"புத்தி.. கோணல் புத்தி.... நேர் புத்தியில்லை... அதுதான் குறைச்சல்...."

"இப்போது சிரித்துச் சிரித்துப் பேசிக் கொண்டிருந் தாயே... கிருஷ்ணன்.... அவனுக்கு மட்டும் நேர்பு த்தியா...?"

"கூட வேலை பார்ப்பவர்களிடம் சிரித்துப் பேசுவ தற்கு கண்டபடி அர்த்தம் கற்பித்துக் கொள்ளாதீர்கள்.. நான் இயல்பாகத்தான் பேசினேன்..."

"அப்போது... என் பார்வையில்தான் கோளாறு என் கிறாயா?"

"நிச்சயமாய்.. காமாலை கண்ணுக்கு கண்டதெல்லாம் மஞ்சள்தானே..."

'சித்ரலேகா அவனைத் தொட்டு.. தள்ளி.. விலக்கி விட்டு சாப்பிடப் போய் விட்டாள்... தினகரன் அவள் தொட்ட இடத்தை தொட்டுப் பார்த்துக் கொண்டான்



'ம்ம்... அவளுடைய கைதான் எவ்வளவு மென்மை யாய் இருக்கிறது..'

அன்று இரவு தூங்கும் போது... அவள் தொட்டு அணைப்பது போல் கனவு வந்தது.. விழித்துக் கொண்டே தினகரன் தாபத்துடன் தலையணையை அணைத்துக் கொண்டு...

"லேகா..." என்று முணுமுணுத்தான்.

'பாவி.. என் கண் சிரித்து மயக்குகிறாளே.. நான் கேட்டதை செய்து விட்டு என்னுடன் குடும்பம் நடத்துடி என்றால் மாட்டாளாம்.. என் கண் முன் வந்த நின்று.. இன்னொருவனிடம் சிரித்துப் பேசுவாளாம்...'

எரிச்சலுடன் பல்லைக் கடித்துக் கொண்டு தூங்கிப் போனான் தினகரன்.. மறுநாள் அதிகாலையிலேயே விழிப்பு வர எழுந்து கொண்டான் செல்போனில் செய்தி வந்திருந்தது...

'தன்னைப் போல் பிறரையும் நினை

என்றார் யேசு...

நீ உன்னைப் போல் என்னையும்

நினைத்து விட்டாயே...

எப்படியிருக்கிறாள்....

உன் எதிர்வீட்டு டீன் ஏஜ் கிளி....'

சித்ரலேகாவின் செய்தியைக் கண்டு தினகரனின் முகம் மலர்ந்தது... உதட்டில் புன்முறுவல் வந்தது..... விசிலடித்துக் கொண்டே அவன் மாடிப்படியில் இறங் கும்போது... எதிர் வீட்டிலிருந்து சுகன்யா அவனைப் பார்த்தாள்.

# 29

“ஹாய் தினா.. என்னடா.. இன்றைக்கு சீக்கிரமாய் ஆபீஸ் பக்கம் வந்து விட்டாய்...” கலகலத்த ராம்குமார்.. கருநீலத்தில் சட்டையும்.. வெள்ளை நிற பேன்டுமாக ஜம்மென்று இருந்தான்...

“நான் என் ஆபீஸ் பக்கம் வந்தது இருக்கட்டும்.. நீயென்ன இந்தப் பக்கம் வந்திருக்கிறாய்...” என்று கறார் குரலில் கேட்டான் தினகரன்...

சீக்கிரமாய் வந்து சித்ரலேகாவின் காதைப் பிடித்துத் திருகலாம் என்றால் இவன் வந்த மறிக்கிறானே என்று இருந்தது அவனுக்கு....

“வேலையில்லாமல் வர.... நான் என்ன உன்னைப் போல் கட்டைப் பிரம்மச்சாரியா...?” என்று சிரித்த ராம்குமார்... கம்யூட்டரை விட்டு பார்வையை உயர்த்திய சித்ரலேகாவைக் கண்டு..

“என்ன மேடம்..?” என்று விசாரித்தான்...

“ஒன்றுமில்லை...” என்றபடி ஒரு புரியாத பார்வை பார்த்துவிட்டு வேலையில் ஆழ்ந்தாள் சித்ரலேகா...

“யாருடா இந்தப் பைங்கிளி....”

“இவள்தான் புதிதாக வந்திருப்பவள்...”

“ஏண்டா கிளி.. ஒரு மார்க்கமாய் பார்க்கிறது...”



‘அவள் தாண்டா... என் பெண்டாட்டி.. அவனுக்கு முன்னால் நின்று கொண்டு என்னை கட்டை பிரம்மச் சாரி என்று சொன்னால் உன்னை ஒரு மார்க்கமாய் பார்க்காமல் வேறு என்ன செய்வாள்....’ என்று நினைத் துக் கொண்டான் தினகரன்.

“எந்த ஊராம்..?”

“திருவண்ணாமலைக்கு பக்கத்தில் ஒருகிராமம்....”

“ம்ஹீம்.. எவ்வளவு அழகாக இருக்கிறாள்.. இவள் பெயர்தானே சித்ரலேகா.....?”

“ஆமாம்...”

“சித்திரம் போலவே இருக்கிறாள்... எனக்கு கல் யாணம் ஆவதற்கு முன்னால் இது போன்ற பெண்கள் எல்லோரும் என் கண்ணில் படுகிறார்களா.. ம்ஹீம்... நான் கொடுத்து வைத்தது அவ்வளவுதான்.. தினா.. செல்போனும்.. மனைவியும்... ஒருவிதத்தில் ஒன்றுடா... எதில் தெரியுமா...?”

“எதில்ன்னு சொல்லித் தொலை.....”

“இன்னும் கொஞ்சம் லேட்டாய் வாங்கியிருக்க லாமோ.. என்று நினைக்க வைப்பதில்...ஹா...ஹா.. ஜோக் எப்படியிருக்கு?”

“சகிக்கவில்லை...” என்றான் தினகரன் எரிச்சலுடன்... கட்டின மனைவியைப் பற்றி... கணவனிடம் விவரிக்கும் விவரம் தெரியாமல் இவன் பாட்டுக்கு உளறித் தள்ளு கிறானே.. என்று இருந்தது அவனுக்கு...

ராம்குமார் வந்த வேலை முடிந்து சென்று விட்டான்... வேலையில் அழகே உருவாய் அமர்ந்

திருந்த சித்ரலேகாவை... ஆற்றாமையுடம் பார்த்தபடி தினகரன் தன் கேபினுக்குள் சென்று விட்டான்...

அவன் சீட்டில் அமர்ந்தவுடன்.. அவனது அலைபேசியில் செய்தி வந்தது... சித்ரலேகாதான் அனுப்பியிருந்தான்....

'எத்தனை பேருக்கு... இது போல் வாய்க்கும்?..

கட்டின மனைவியை.....

மற்றவர் வர்ணிப்பதை கேட்பதற்கு.....'

தினகரன் பல்லைக் கடித்துக் கொண்டு அவளுக்கு பதில் செய்தி அனுப்பினான்.

'கட்டின கணவனை...

கட்டைப் பிரம்மச்சாரியாக்கிவிட்டு.....

எட்ட நின்றிருப்பவள்...

இதைக் கேட்கக் கூடாது.....'

சற்று நேரத்தில் அலைபேசியில்... பதில் செய்தி வந்து விட்டது...

'கட்டைப் பிரம்மச்சாரியாக வேண்டுமென்று

கணவன் பிடிவாதம் பிடித்தால்....

எட்ட நிற்காமல்....

கிட்டே வரமுடியுமா?'

தினகரனின் உடல் ஓர் மின்சாரம் பரவியது.. அலைபேசியை எடுத்து அடுத்த செய்தியை அனுப்பினான்....

'கிட்டே வரச்சொன்னால்..



...ந்து விடுவாயா....?'

...வளிடமிருந்து பதில் செய்தி வரவில்லை... ...ள் ஏமாற்றம் பரவியது.. அலைபேசியில் அவளை ...த்தான்...

"என்ன....?"

"என்னவோ மெசேஜிற்கு மேல் மெசேஜ் அனுப்பி ...ய்.. இப்போது என்ன மௌனமாகி விட்டாய்... ...ட்டே வர பயமா?"

"எனக்கென்ன பயம்....? கூப்பிடுவது என் கணவன் ...தானே...."

"அப்புறம் ஏன் பதில் சொல்லவில்லை?"

"என்ன சொல்ல?"

"நான் கேட்டதற்கு பதில் சொல்லு..."

"நீங்கள் கூப்பிடும் விதத்தில் கூப்பிட்டால் வரு...வேன்...."

"நீ நான் கேட்டதை உன் வீட்டில் செய்ய அனுமதித்...தால்.... நானும் கூப்பிடும் விதத்தில் உன்னை கூப்...பிட்டுக் கொள்வேன்..."

"அது நடக்காத காரியம்... எங்கே ஆரம்பித்தாலும் நம் பேச்சு இங்கே வந்துதான் முடியப்போகிறது... அப்புறம் ...ன் வேஸ்டாகப் பேசிக் கொள்ள வேண்டும்..... அத...னால்தான் பதில் செய்தி அனுப்பவில்லை."

"நீ தப்பித்துக் கொள்ளப்பார்க்கிறாய்...."

"எதிலிருந்து... இல்லை யாரிடமிருந்து?"

''ஏய்ய்... உன்னை யார் என் முன் வரச்சொன்னது?''

''வந்தால் உங்களுக்கென்ன கஷ்டம்?''

''என் கஷ்டம் எனக்குத்தாண்டி தெரியும்...''

''உங்களுக்கு இப்போது என்னதான் வேண்டும்?''

''நீ வேண்டும்... கொடுக்க முடியுமா?''

சித்ரலேகா உதட்டைக் கடித்து தன் உணர்வுகளைக் கட்டுக்குள் கொண்டு வந்தாள்.... கணவனின் குரலில் பொங்கி வழிந்த தாகம் அவளுள் இறங்கியது. பதில் சொல்லாமல் அலைபேசியை அணைத்தாள்...

அன்று மாலை... வீட்டிற்கு கிளம்பியபோது.... பவித்ர னிடமிருந்து அவளுக்கு தகவல் வந்தது....

''சித்ரா... கம்பெனியில் கொஞ்சம் வேலை இருக் கிறது.. காரை அனுப்ப கொஞ்சம் தாமதம் ஆகும்.. வெயிட் பண்ணு...''

''சரி மாமா........''

சித்ரலேகா மட்டும் இருப்பதைக் கவனித்த தினகரன். அவளைக் கடந்து செல்லாமல் தேங்கி நின்றான்... கைக்கடிகாரத்தை திருப்பி மணி பார்த்தான்...

''என்ன... வீட்டிற்கு கிளம்பும் நினைவில்லையா?''

''மாமாவுக்கு வேலையிருக்கிறதாம்... கார் வர லேட் டாகும்...''

''அதுவரை இங்கேயே உட்கார்ந்திருக்கப் போகி றாயா?''

''வேறு என்ன செய்வது?''



''என்னுடன் கூட வருவது...''

''எங்கே....''

''ம்ம்.. ஊர் சுற்றத்தான்..''

தினகரனின் விழிகளில் அழைப்புத் தெரிந்தது.. சித்ரலேகா அவனது உள் நோக்கத்தை புரிந்து கொண் டாள்.....

'இவன் மீண்டும் எனக்குத் தூண்டில் வீசுகிறான்.... இவன் மயக்கினால் நான் மயங்கி விடுவேனாம்... இவன் கால்களில் விழுந்து.. என் அண்ணனையும்.. அப்பா வையும் சேர்ந்து விழவைப்பேனாம்... என்ன ஒரு தன் னம்பிக்கை... ஏன்... இவன் என்னிடம் மயங்க மாட் டானா.. என் கைப்பிடிக்குள் அடங்க மாட்டானா? பார்ப் போம்.... இவன் ஜெயிக்கிறானா... இல்லை நான் ஜெயிக் கிறேனோ என்று...'

சித்ரலேகா தன் அலைபேசியை எடுத்தாள்.. மாமனை அழைத்தாள். ''மாமா... நான் என் பிரண்ட் வீட்டிற்கு போய் விட்டு அங்கிருந்து ஆட்டோ பிடித்துக் கொண்டு வந்து விடுகிறேன்....''

தினகரனை பார்த்தவாறே எழுந்து தன் கைப்பையை எடுத்துக் கொண்டாள்.

''போகலாமா....''

''ம்ம்.... தைரியம்தான்...வா..''

தினகரன் அவளை அழைத்துக் கொண்டு காரில் ஏறினான்... திருச்சியின் அகன்ற சாலைப் போக்குவரத்

# 30

தினகரன் ஓரக்கண்களால் தன் அருகில் இருந்த வளைப் பார்த்துக் கொண்டான். அவன் மனதில் சந் தோசம் முகிழ்ந்து கொண்டிருந்தது..

'உன்னை எப்படி வளைக்க வேண்டும் என்பது எனக் குத் தெரியும்..வா..உன்னை வீழ்த்தி.. உன் வீட்டை ஜெயித்துக் காட்டுகிறேன்...'

சித்ரலேகா.. நேராகத் திரும்பி... கம்பீரம் நிறைந்த அவன் முகத்தைப் பார்த்தாள்.

'என்னை வீழ்த்த நினைக்கிறாயா.. வீழ்வது நானாக இருந்தாலும்.. வெல்வதும் நானாகத்தான் இருப்பேன்... பெண்ணென்றால் உனக்கு அவ்வளவு எளிதாக போய் விட்டதா? என்னை தோற்கடிக்க நினைக்கிறாயா? பெண்கள் தோற்றுக் கொண்டே ஜெயிப்பவர்கள்... அதை உனக்கு உணர்த்துகிறேன்....'

''எங்கே போகலாம்....'' என்று கேட்டான் தினகரன்..

''திருச்சியில் இத்தனை வருடங்களாக இருந்து கொண்டு.... இப்படி ஒரு கேள்வியைக் கேட்கிறீர்கள்.. உச்சிப் பிள்ளையார் கோவிலுக்குத்தான் முதலில் போக வேண்டும்....''

''ரொம்ப பக்திப் பழமாகிவிட்டாய்..''



...உங்களைக் கல்யாணம் பண்ணிக் கொண்டபின் ...ராய் கடவுள் நம்பிக்கை வந்துவிட்டது....''

...இப்படி ஒரு அருமையான புருசனுக்கு மனைவியாகி ...விடமென்றா...?''

''ஹூம்.... இனி நான் என்ன கதி ஆவேனோ.. நீதான் ...ற்ற வேண்டும் என்றுதான்...''

தினகரன் பேச்சை நிறுத்திக் கொண்டான்... இருவரும் ...யேறும்போது ஏனோ அவன் மனம் சிலிர்த்தது.

...வேண்டாம்.. சென்டிமென்டில் சிக்கிக்கொள்ளாதே... ...க்குள் கூறிக் கொண்டான்....

...பிள்ளையாரை வணங்கிவிட்டு... படியிறங்கினார் ...ள்.

''அப்புறம்.... எங்கே போகலாம்...''

''என் மாமாவின் வீட்டிற்குத்தான்...''

''அதற்கு வேறு ஆளைப்பார்...''

''அசிங்கமாய் பேசாதீர்கள்.....''

அவன் அவளைத் திரும்பி ஓர் பார்வை பார்த்தான்... ...அதன் பொருள் புரியாமல் அவள் யோசிக்கும் போது ...ர் தினகரனின் வீட்டிற்கு முன்னால் சென்று நின்றது...

வாசலில் பூக்காரம்மாளிடம் பூவாங்கிக் கொண் ...ருந்த விசாலாட்சியும்... அது தினகரன் வரும் நேரம் ...என்பதால்.. வேண்டுமென்றே விசாலாட்சியுடன் வாய் ...வளர்த்துக் கொண்டிருந்த சுகன்யாவும்.... காரிலிருந்து தினகரனுடன் இறங்கிய சித்ரலேகாவை ஆச்சரியத் ...துடன் பார்த்தார்கள்... அவர்கள் விழிகளில் கேள்விக் குறி தெரிந்தது.

"இந்தப் பெண் யார்... தினகரா.... உனக்குச் சொந்தமா...?" என்று விசாலாட்சி விசாரித்தாள்....

சுகன்யாவின் கண்களோ... சித்ரலேகாவின் அழகை பொறாமையுடன் பார்த்துக் கொண்டிருந்தன.

"இது சித்ரலேகா..." தினகரன் மொட்டையாக கூறினான்...

"உனக்கு என்ன வேணும்..." விசாலாட்சி விடாப்பிடியாய் கேட்டான்.

"நாங்க இரண்டு பேரும் ஒரே ஆபிஸில் வேலை பார்க்கிறோம் அக்கா..."

தினகரன் சாமர்த்தியமாய் பதில் கூறினான்.. மறந்தும் தன்னை அவன் மனைவியென்று அறிமுகப்படுத்தவில்லை என்பதை சித்ரலேகா கவனித்துக் கொண்டுதான் இருந்தாள்...

"லேகா.. இவங்க... என் ஹவுஸ் ஓனர்... என் கூடப்பிறக்காத அக்கான்னு நான் அடிக்கடி சொல்வேனில்லை.. அது இவங்கதான்... என்மேல் அப்படி ஒரு பாசம்... அன்பு... நம்பிக்கை....."

கடைசி வார்த்தையை அழுத்தமாக அவன் சொன்ன தினுசில் விசாலாட்சி விசாரணையை நிறுத்திக்கொண்டாள்...

"இது யார்....." சித்ரலேகா சுகன்யாவைக் காட்டி தினகரனிடம் வினவினாள்.

"எதிர் வீட்டில் குடியிருக்கிறவங்க..." தினகரனின் கண்களில் ரகசியப் புன்னகை ஒளிர்ந்த



'ஓ... அந்த எதிர் வீட்டு டீன் ஏஜ் கிளி இவள்தானா...' த்ரலேகாவின் பார்வை யோசனையுடன் சுகன்யாவின் ல் படிந்தது. அவள் மனம் தினகரனின் வார்த்தை ளில் எந்த அளவிற்கு உண்மை இருக்கக் கூடும் என்ற ராய்ச்சியில் இறங்கியிருந்தது....

ஆனால் சந்தேகத்திற்கே இடமின்றி சுகன்யாவின் ர்வை ஒரு வித வெறுப்புடனும்.... எல்லையற்ற பொறாமையுடனும் சித்ரலேகாவின் பார்வையை ந்தித்தது.....

தினகரன் சொன்னது உண்மைதான் என்பதை ணர்ந்தவளாய் சித்ரலேகா... அவளைப் பார்த்து...

"ஹலோ..." என்றாள்...

அவள் பதிலுக்கு எதுவும் சொல்லாமல்.... தினகரனை விழுங்கிவிடுவது போல் பார்த்துக் கொண்டே... அவள் வீட்டிற்கு சென்று விட்டாள்.

"ஏன் இப்படிப் போகிறாள்...?" என்று விசாலாட்சி வியப்புடன் சுகன்யா போவதைப் பார்த்துக் கொண்டே கூறினாள்...

"ஷை டைப்பாய் இருப்பாள் போல..." என்றாள் சித்ரலேகா...

"அதெல்லாம் இல்லை... ஊர்பட்ட வாயடிப்பாள்.. நீ வீட்டிற்கு வந்து விட்டு போம்மா..." விசாலாட்சி அழைத்தாள்...

"இன்னொரு நாள் வருகிறேங்க...." சித்ரலேகா சிரித்தாள்.

"அப்படியா சரி....." விசாலாட்சி அவளது வீட்டிற்குள்

"வா... என் வீட்டிற்குப் போகலாம்." என்று படியேறிக் கொண்டே அழைத்தான் தினகரன்.

'நம் வீடு இல்லையாம்... என் வீடாம்...' புகைந்தபடி சித்ரலேகா அவனைப் பின் தொடர்ந்தாள்.

தினகரன் வாசல் கதவைத் திறந்தான்... சித்ரலேகா வலது காலை எடுத்து வைத்து அவனது வீட்டிற்குள் நுழைந்தாள்... வீட்டைச் சுற்றி அவளது பார்வை ஓடியது..

"ம்ம்... வீடு அழகாகத்தான் இருக்கிறது...."

"நான் இருக்கிறேன் இல்லையா..?"

"அதுதான் ஆச்சரியமாய் இருக்கிறது..... நீங்கள் இருந்துமா வீடு இவ்வளவு அழகா இருக்கிறது?"

சித்ரலேகாவின் உதடுகளில் விசமப் புன்முறுவல் உதிக்க... தினகரன் அவளை ஓர் பார்வை பார்த்தான்...

'எப்படிப் போட்டுத் தாக்குகிறாள் பார்.. என் மாமன் மகளுக்கு வாய் வளர்ந்து விட்டது... இந்த இடக்கும் கிண்டலும் முதலில் எல்லாம் இவளிடம் இருக்காதே. எங்கிருந்து வந்தது இவ்வளவும்...'

"என்ன சார் யோசிக்கிறீங்க.. 'உங்கள்' வீட்டிற்கு அழைத்துக் கொண்டு வந்திருக்கிறீர்கள்... ஒரு காபி கூட கிடையாதா?"

சித்ரலேகாவின் குரல் கேட்டு தன்னிலைக்குத் திரும்பியவன்... அவளை ஆழமாய் ஓர் பார்வை பார்த்தான்..

'இந்தப் பார்வைக் கொன்றும் குறைச்சல் இல்லை. வந்ததில் இருந்து வகை... வகையாய் பார்த்தாகிறது



செய்கையில் ஒன்றையும் காணோம்...' என்று நினைத்தபடி சித்ரலேகா புருவத்தை உணர்த்தினாள்...

"ஏன் நான்தான் உனக்குக் காபி போட்டுத் தரவேண்டுமா? நீ எனக்கு போட்டுத் தர மாட்டாயா....?" அவன் குரலில் எதுவோ இருந்தது..

அந்த 'எது...' என்ன என்று ஆராய்வதை விட்டு விட்டு....

"போடலாம்... ஆனால் இது 'உங்கள்' வீடாயிற்றே...." என்றாள் சித்ரலேகா... அந்த 'உங்களில்' அழுத்தம் கொடுத்து...

"ம்ம்... இன்றைக்கு ஒருநாள்... என் வீட்டை.. உன் வீடாய்... நினைத்துக் கொள்ளேன்...." தினகரனின் பார்வையில் எதுவோ வந்தது...

கணப்பொழுதில் சித்ரலேகாவிற்கு... அந்த 'எது'... எது என்று புரிந்து விட்டது...

'ஓ. ஹோ.. அப்படியா விசயம்... இன்றைக்கு ஒரு நாள் மட்டும் உன் வீட்டை என் வீடாய் நினைத்துக் கொள்ள வேண்டுமா...? உன் வீட்டை என் வீடாய் நினைத்துக் கொள்ள வேண்டும்.. சரி... உன்னை என்னவென்று நினைக்கச் சொல்கிறாய்... இன்றைக்கு ஒரு நாள் கணவனா...நீ...?'

தினகரனின் போக்கிலேயே சித்ரலேகாவும் போனாள்... அவனது பேச்சிற்கு பதில் சொன்னாள்... அங்கே ஒரு காதல்களம் போட்டி களமாய் உருவானது....

# 31

"என்ன ஒரு தாராள மனம் உங்களுக்கு.." சித்ரலேகா மெச்சுதலாய் கூறினாள்.

"இது மட்டுமா... இன்னும் நிறைய இருக்கிறது... நீ பார்க்கத்தானே போகிறாய்...."

தினகரனின் வார்த்தைகளில் இருந்த மறைபொருளை... சித்ரலேகா உணராமல் இல்லை... அது புரியாமல் இருக்க... அவள் பழைய சித்ரலேகா இல்லையே.. அறியாத சிறுமியாய் இருந்தவளை... உலகம் அறிந்த பெண்ணாய்.. தினகரன் மாற்றி விட்டிருந்தானே...

எனவே.... அவள் நகைத்தபடி பதில் கூறினாள்....

"பார்த்து விட்டால் போகிறது.... இப்போது எனக்கு இதைச் சொல்லுங்கள்..."

"கேளுடி.. சொல்லுகிறேன்...."

அவன் அவளை நெருங்கி நின்று பேசினான்... அவன் வார்த்தைகளில் தொனித்த உரிமை கலந்த நெருக்கத்தை அவள் கவனித்தாள்... அவன் நெருங்கி நின்ற போது.. அவன் மேலிருந்து எழுந்த இதமான பெர்ப்யூம் வாசனை.. அவளை என்னவோ செய்தது...

அதேசமயம் அவளிடமிருந்து வந்த நறுமணம் அவனை கிளர்ச்சியுறச் செய்தது... அவன் அவளை இன்னும்





நெருங்கினான்..மனதிற்குள் அவளை மயக்குவதற்கா... நெருங்குவதாய் தனக்குத்தானே சமாதானமும் சொ... கொண்டான்.

சித்ரலேகா... பின் வாங்கி சுவர் மேல் சாய்ந்து நிற்க.. மாது இருபுறமும் கைநீட்டி அவளைத் தன் கை... றைக்குள் கொண்டு வந்த தினகரன்.. அவளது முக... நோக்கிக் குனிந்தான்...

சித்ரலேகா.... தாளமுடியாத இன்ப வேதனையை உணர்ந்தாள்.. அவளது கண்கள் லேசாகக் கலங்கின... தான் தோற்க ஆரம்பிப்பதை உணர்ந்து கொண்டாள்.. அவள் கண்கள் அவனது கண்களுடன் கலந்தன.. அவ... து கண்களில் அழைப்பு இருந்தது... அதை அறிந்தும் விலகாமல் அவள் உடன்பட்டு நின்றாள்.

தினகரன் அவளது முகம் நோக்கிக் குனிந்தான்.. காதலித்த காலங்களில் அவளது கைவிரலைக் கூட அவன் தொட்டதில்லை.. சித்ரலேகாவின் மருளும் பார்வையைக் கண்டு விலகியே நிற்பான்... அவள் பயந்து போய்விட்டால் காரியம் கெட்டுவிடும் என்ற கவலை அவனுக்கு... அத்தோடு.... வெறும் பார்வையிலேயே... சொக்கிப்போய் நிற்கிறவளிடம்.. தொட்டு விளையாட வேண்டிய அவசியமே இல்லையே என்று... அன்று நினைத்தான்....

இன்றோ... அவனது பார்வையை... சித்ரலேகாவின் பார்வை எளிதாக இனம் கண்டு கொண்டு வீழ்த்தியது.. பார்வையில் மயங்காதவளை... மயக்குவதற்கு வேறு வழியைக் கையாள்கிறேன் பேர்வழி யென்று.... தன் தாபத்தை தணித்துக் கொள்ள தினகரன் அவளைத்

தன்னோடு இறுக்கி அணைத்து அவள் இதழோடு இத
பதித்தான்.

முதன் முதலாய் ஒருவரை ஒருவர் தொட்டு அணை
துக் கொண்ட அந்தக் கணவன்...மனைவி இருவரு
குள்ளும் உணர்வுகள் அலையாய் பொங்கின... தங்களை
யறியாமல்.. தங்கள் தேடலைத் தொடங்கியவர்க
அதற்கு ஒருவரை ஒருவர் வீழ்த்த நினைப்பதாக அர்த்த
கற்பித்துக் கொண்டனர்....

தினகரனின் கரங்கள் ஆவேசத்துடன் சித்ரலேகாவி
தோள் தழுவின.... அவள் திணறினாள்..... அவ
துடிப்பதை உணர்ந்து கொண்ட தினகரனின் மனதி
திருப்தி எழுந்தது... அவளது முகத்திலிருந்து விலகி
அவளது கழுத்து வளைவில் தன் முகம் புதைத்து
கொண்டான் தினகரன்.

சித்ரலேகா.. மெல்ல... அவனது மார்பிற்குள் அட
கிப் போனாள்... அவளது கைகள் அவளையறியாம
அவனது முதுகின் மேல் படர்ந்து பரவி... இறுகின..

தாலிகட்டி மனைவியாக்கிக் கொண்டவளை... ஒன்
கால் வருடம் கழித்துத் தொட்ட தினகரன்.. அவ
கூந்தலில் தன் முகத்தைப் புதைத்துக் கொண்டான்
தனக்குள் அடங்கியிருக்கும் அவளது உடல் நடுங்குவ
அவனுக்குப் புரிந்தது.. அவன்மனம் கலங்கியது...

'இவள் மட்டும்... என் எதிர்பார்ப்பை நிறைவேற்
யிருந்தால் இத்தனை மாதப் பிரிவே எனக்கும் இவளுக்கு
மிடையே வந்திருக்காதே.. என்னைவிட இவளுக்
இவளது அண்ணனும்... அப்பாவும் முக்கியமாய் போ



கைகளுக்குள் கரைகிறாளே... இவளோடு இணைபிரி
யாமல் குடும்பம் நடத்த முடியாமல் நிற்கிறேனே....
இவள் ஏன் என்னைப் புரிந்து கொள்ள மாட்டேன்
என்கிறாள்... இவளை ஏமாற்றி காதலித்தாலும்... இவளை
மட்டும்தானே நான் காதலித்தேன்... என்னிடம் இவளை
மயங்க வைத்தாலும்.. இவளை மட்டும்தானே நான்
மயக்கினேன்... அன்றும்.. இன்றும்... என்றும்.. என்
மனதில் குடியிருப்பது இவள் மட்டும்தானே... அது
இவளுக்குப் புரியுமா? என்னவோ... என்னை ஒரு
ராட்சசன் போல் பார்த்துக்கொண்டு விலகிச் சென்
றாளே... எனக்கும் ஓர் மனம் இருக்கிறது... அதில் இவள்
மட்டும்தான் இருக்கிறாள் என்பது இவளுக்குப் தெரி
யுமா?'

தினகரன் தன் மார்பில் தலை புதைத்திருந்தவளின்
முகத்தை தன் கைகளில் ஏந்தி... அவளது நெற்றியில்
முத்தமிட்டான்.. அவள் கண் கிறங்கி.... இமைமூட....
அவளது மூடிய இமைகளின் மேல் முத்தமிட்டான்...
அவர்கள் இருவர் மட்டும் இருந்த அந்த உலகில்...
அவர்கள் மட்டும் அனுபவித்த அந்த மோன நிலையைக்
கலைப்பது போல் வாசலில் விசாலாட்சியின் குரல்
கேட்டது..

''தினகரா.. பால் பாத்திரத்தை எடுத்துக் கொள்ளாமல்
வந்து விட்டாயே... இந்தாப்பா.....''

அவசரமாய் பிணைந்திருந்த இருவரும் விலகி
நின்றனர்.. சித்ரலேகாவின் மூச்சு திணற.. முகம் சிவந்து
நின்றாள்.. அவள் இப்போதிருக்கும் நிலையில் விசா
லாட்சியை எப்படி எதிர்கொள்வது என்று தவித்துப்

அவளது முகம் பார்த்த தினகரன்.. அவளது தவிப்பைப் புரிந்து கொண்டான்.. சட்டென்று வாசலுக்குச் சென்று.. பாதிப்படிகள் ஏறி விட்ட விசாலாட்சியின் அருகே இறங்கிச் சென்றான்..

''ஸாரிக்கா.. உங்களை படியேற வைத்து விட்டேன்..''

''பரவாயில்லை.. அடுப்பில் பாலைக் காய்ச்சினேன்.. அப்படியே உன் நினைவு வந்து விட்டது.. வீட்டுக்கு விருந்தாளி வந்திருக்காங்க.. ஒரு காபி போட்டுக் குடுக்க பால் வேண்டாமான்னு எடுத்துக் கொண்டு வந்தேன்.. பிடி.. எனக்குக் கீழே வேலையிருக்கிறது.. பிள்ளைகளுக்கு காபி கலந்து கொடுக்கவேண்டும்..''

விசாலாட்சி தன்வீட்டு வேலைகளின் நினைவில்.. மடமடவென்று கீழே இறங்கிச் சென்று விட்டாள்..

தினகரன் விலகிச் சென்றவுடனேயே.. சித்ரலேகா தன்னிலைக்கு வந்து விட்டாள்.. வேகமூச்சுக்களை விட்டு தன்னை சமாளித்துக் கொண்டு நின்றாள்..

தினகரன் பால் பாத்திரத்துடன் உள்ளே வந்தான்.. அவனை நிமிர்ந்து பார்க்க விடாமல் சித்ரலேகாவை சங்கடம் சூழ்ந்தது.. அவள் தலையைக் கவிழ்ந்து கொண்டவளாய்.. சமையலறைக்குள் சென்று.. அடுப்பைப் பற்ற வைக்க.. லைட்டரைத் தேடினாள்..

அவளது சங்கடம் கண்ட தினகரனின் கண்கள் மின்னின.. உதடுகளில் உல்லாசப் புன்னகை வந்தது.. அவளை வெற்றி கொண்டு விட்ட பெருமிதம் அவன் மனதிற்குள் உதயமானது..

அவள் பின்னாலேயே போய்.. பால் பாத்திரத்தை



"என்ன தேடுகிறாய்..'' என்று வினவினான்..

"லைட்டர் எங்கே..?'' அவன் முகம் பார்க்காமல் ...ரினாள்..

"இதோ இருக்கிறது பார்..'' என்று எடுத்துக் கொடுத் ...ன் அவளது பார்வையை சந்திக்க முயன்றான்..

அவளோ பார்வையை தாழ்த்திக் கொண்டவளாய் லைட்டரை வாங்கி அடுப்பை பற்ற வைத்து பால் ...த்திரத்தை அடுப்பில் வைத்தாள்..

"லேகா..'' தினகரன் அவளை நெருங்க முயன்றான்..

குனிந்த தலை நிமிராமல் அவனிடமிருந்து விலகிச் சென்ற சித்ரலேகா சர்க்கரையையும்.. காபி பொடியையும் கண்டுபிடித்து எடுத்து வந்து காபி கலக்குவதில் முனைந் தாள்..

# 32

காபியை நுரை பொங்க ஆற்றி கோப்பைகளில் ஊற்றிக் கொண்டிருந்த சித்ரலேகாவைப் பார்க்கும் பொழுது.. தினகரனுக்கு மனம் நிறைவாக இருந்தது..

குனிந்திருந்த அவள் முகத்தில் இமைகள்.. இரண்டும் பட்டாம் பூச்சிகள் போல படபடத்துக் கொண்டிருந்தன.. வட்டமுகத்தின் நெற்றியில் வட்டவடிவ ஸ்டிக்கர் ... கொண்டிருந்தது.. செதுக்கிய நாசியும்

சீரான முகவடிவும்.. அவளை அழகியென்று பறை சாற்றின..

அம்மாவைப் போல் பெண் வேண்டுமென்று ஆசைப் பட்ட விநாயகர் குளத்தங்கரையில் இன்னும் பிரம்மச் சாரியாய் வீற்றிருக்கிறார். பார்வதியைப் போன்ற பெண் அவருக்கு கிடைக்கவில்லை.. ஆனால் தினகரனுக்கு தாய் சகுந்தலாவைப் போன்ற அழகிய பெண் கிடைத்து விட்டாள்..

'கிடைத்து என்ன பண்ண.. இப்போதுதான் தொட்டு ஒரு முத்தமிடும் வாய்ப்பு கிடைத்திருக்கிறது.. இதுவரை தூர நின்று ரசிக்கக் கூட முடியவில்லையே..' ஓர் பெருமூச்சு தினகரனிடமிருந்து கிளம்பியது..

அவனது பெருமூச்சை உணர்ந்த சித்ரலேகா மனம் படபடத்தாள். 'ஏன் இப்படி ஏங்க வேண்டும்? நான் அவனுடையவள்தானே.. தொட்டுத் தாலிகட்டின மனைவியை பெண்டாளும் உரிமையில்லாமல் தள்ளி அவன் நின்று கொண்டிருப்பதற்கு காரணம் நானா..? அவன்தானே..'

அவள் நிமிர்ந்து அவனது விழிகளை சந்தித்தாள். தினகரனின் பார்வை அவளுள் ஊடுருவி சிலிர்ப்பை ஏற்படுத்தியது.. சற்று முன் தொட நினைத்த சிகரத்தை தொட்டு விட மனம் தவித்தது.. அவள் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்..

''காபி சாப்பிடுங்க..''

''தேங்க்ஸ்..''

''எதற்கு..?''



சித்ரலேகாவின் முகம் சிவந்தது.. அவள் விழிகளை மறுபுறம் திருப்பிக் கொண்டு சமையல் மேடையில் சாய்ந்து நின்று கொண்டு காபியை உறிஞ்சினாள்..

தினகரன் காலிக் கோப்பையை சிங்க்கில் போட்டான்.. அவன் அருகில் சென்று தோள் பற்றினான்.. அவள் விலகி சிங்க்கின் அருகே சென்று காபி கலந்த பாத்திரங்களை கழுவ ஆரம்பித்தாள்..

'தன் வீடு போல் எவ்வளவு இயல்பாய் வேலை செய்கிறாள்..' என்று எண்ணியவனுக்கு..

'இது அவள் வீடுதானே....' என்ற உண்மை உரைத்தது.

பின்னால் சென்று அவளது தோள் தழுவி கூந்தலில் முகம் புதைத்தான்.. சிங்க்கிலிருந்து பாத்திரங்களை எடுத்துக் கவிழ்த்துக் கொண்டிருந்தவள்.. கிளர்ந்தாள்.. மனம் தளர்ந்தாள்.. ஓர் நொடி அசையாமல் அவன் அணைப்பில் கட்டுண்டு இசைவாக நின்றாள்..

அவன் மனம் துள்ளியது.. அவளைத் தன்புறம் திருப்ப முயன்றான்.. அவள் விலகி வெளியில் சென்றாள்.. தினகரனுக்கு தன் தாபம் தீராததால் கோபம் வந்தது..

"லேகா.." என்றான் அதட்டலாய்

"ம்ம்.."

"இங்கேவா..."

அழைத்த குரலில் இருந்த ஆர்வம் அவளை என்னவோ செய்தது.. அங்கேயே நின்றால் அவனிடம் தோற்று விடுவோம் என்ற பயம் வரவும்.. பால்கனிக்கு சென்று அங்கே தொங்கிக் கொண்டிருந்த மர ஊஞ்சலில் அமர்ந்து லேசாக ஆடிப் பார்த்தாள்..

''உன்னை...'' என்றவாறு வேகமாக வந்த தினகரனின் நடை தடைபட்டது..

எதிர்வீட்டின் மாடி பால்கனியிலிருந்து சுகன்யா இவர்களையே பார்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

தினகரனின் திடீர் மௌனத்தை கண்ட சித்ரலேகா அவனது பார்வை போன திசையில் தானும் பார்த்தாள்.

''ஓ.. உங்களின் காதலி நிற்கிறாள் போல இருக் கிறதே..'' என்றாள் கிண்டலாய்..

தினகரனுக்கு ஏனோ 'சுள்'ளென்று கோபம் வந்து விட்டது.

''உளராதே..'' என்றான் எரிச்சல் மண்டிய குரலில்..

''ஏன்.. என்னவாயிற்று.. உங்கள் இருவருக்கும் இடையில் ஏதும் தகராறா? நான் வேண்டுமானால் உங் களுக்காக அந்தப் பெண்ணிடம் சமாதானத் தூத் போகட்டுமா?'' அவள் அறியாதவள் போல் வினவி னாள்..

சற்று முன் தன்னைக் கட்டியணைத்து.. இதழில் முத்தம் பதிக்க இசைந்து நின்றதை மறந்து விட்டாள் போல அவள் பேசவும்.. தினகரனுக்கு கோபம் அதிக மானது..

''உள்ளே வாடி.. உன்னை பேசிக் கொள்கிறேன்..''

''ஏன் இங்கேயே பேசலாமே..''

''நீ உள்ளே வா.. என்கிறேனில்லை.. உள்ளே வா..''

''எனக்கு இங்கேதான் வசதியாய் இருக்கிறது.. புரி தினகர் இந்த மாலைநேரக் காற்று.. பால்கனியில் மரஊஞ்சல்.. எதிர் வீட்டில் ஒரு ஊஞ்சல்..



வெறும் ஊஞ்சலில்லை.. டீன் ஏஜ் ஊஞ்சல்.. வாழ்க் கையை நன்றாக அனுபவித்து இருக்கிறீர்கள்.. ரசனை யானவர்தான்.. அந்தப் பெண்ணுக்கு பதினேழு வயது தானே.. உங்களுக்கு பதினேழு வயதுப் பெண்களிடம் கடலை போடத்தானே மிகவும் பிடிக்கும்.. அதை மறந்து விட்டுப் பேசுகிறேனே..''

'தினகர்' என்று அவனது பெயரைச் சொல்லி அழைக் காதவள் முதன் முறையாய் அழைக்கவும் அவன் அவளை முறைத்தான்.

அவளது சீண்டல்களை அவன் சட்டை செய்யாமல் போயிருப்பான்.. சற்று முன் அவன் மட்டும் அவளை கட்டியணைத்து முத்தமிடாமல் இருந்திருந்தால்.. இப் போதோ.. அவள் பேசப்பேச அவன் மேனி எரிவது போல் இருந்தது..

''பெயரையா சொல்லுகிறாய்.. அடித்து பல்லைக் கழற்றிவிடுவேன்..''

''ஏன்.. நான் உங்கள் பெயரைச் சொல்லக்கூடாதா? புருசன் பெயரைச் சொல்லக் கூடாது என்பதெல்லாம் ஓல்டு பேசன்..''

''முதலில் நீ என் பெண்டாட்டி போல் நடந்து கொள்..''

''அதுதான் எப்படி என்று தெரியவில்லையே..''

''உள்ளே வா.. சொல்லித் தருகிறேன்..''

அதுவரை எதுவும் நடக்காதது போல் இயல்பாய் வாயடித்துக் கொண்டு இருந்தவள்.. உதட்டைக் கடித்துக் கொண்டு மௌனமாகிப் போனாள்.. அவள் முகம் சிவந்து விட்டது..

'என்னவெல்லாம் பேசுகிறாள்.. இவளை என்னதான் செய்வது..'

அவளது முகமாற்றத்தை ரசித்தவன் அவள் அருகே வந்து அமர்ந்தான். அவனது கண்களில் சிரிப்பு இருந்தது..

''என்னடி பேச்சைக் காணோம்..''

''நான் வீட்டிற்குப் போக வேண்டும்..''

''அதற்குள் என்ன அவசரம்..''

''வீட்டில் தேடுவார்கள்..''

''என்னோடு இருந்தேன் என்று சொல்லு..''

''எதற்கு? திட்டு வாங்குவதற்கா..?''

''ஏன்.. என்னோடு நீ இருந்தாயென்று வெளியே தெரிந்தால்.. ஒருவனும் உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள வரமாட்டானா..?''

அவன் கோபத்துடன் கேட்டான்.. அவள் மீண்டும் உதட்டைக் கடித்தாள்..

''இனிமேல் இப்படி அபத்தமாய் உளராதே..''

''என் வாழ்வே அபத்தமாகத்தானே போய் விட்டது..''

''ஏன் அப்படிப் போக விடுகிறாய்? உன் வீட்டில்.. என் வீட்டிற்கு அநியாயம் செய்தார்கள்.. அதற்கு அவர்களை மன்னிப்பு கேட்கவிடு.. அதன்பின் காலமெல்லாம் நான் உன் கைப்பிடியில்தானே..''

அவன் பார்வை அவளிடம் கொஞ்சி விளையாடியது.. சித்ரலேகா நிதானமாக அவனை நிமிர்ந்து பார்த்



...என் அண்ணனையும்.. அப்பாவையும் உங்கள் ...டியில் தள்ளி விட்டு.. நான் உங்களை என் கைப் ...க்குள் வைத்திருக்க வேண்டிய அவசியமில்லை.. ...யன்.. நான் உங்கள் மனைவி.. அந்த கடமைக்காக ... ஒரு காலத்தில் நீங்கள் என்னை காதலித்ததற்காக ... நீங்கள் என்னை அழைத்தால்.. நான் உங்களுடன் ...ந்து குடும்பம் நடத்துவேன். அதை விட்டுவிட்டு ...ந்தனை போட்டால்.. நீங்கள் யாரோ.. நான் யாரோ ...ன்..''



# 33

தினகரன் முகத்தில் அறை வாங்கியது போல் உணர்ந் ...ன்.. இவள் அவன் அறிந்த சித்ரலேகாவாய் இல்லை.. அவன் காதலித்த் சித்ரலேகா தினகரன் என்ன சொன் ...னாலும் கண்களை மூடிக்கொண்டு நம்புவாள்.. அவன் ...தைச் செய்யச் சொன்னாலும் கேள்வியே கேட்காமல் செய்வாள்..

''அதோ பார் லேகா.. வெள்ளைக் காக்காய் மல்லாக்கப் பறக்குது..'' என்றால்

''ஆமாம் அத்தான்.. ஹையா என்ன அழகாய் இருக் ...றது..'' என்று வானத்தையே பார்க்காமல் சொல்வாள்..

''வானத்தைப் பார்க்காமல் சொல்கிறாயே..'' என்று

''நீங்கள் என்ன பொய்யாகவா சொல்லப் போகிறீர்கள்?'' என்று அதற்கும் ஓர் விளக்கம் வைத்திருப்பாள்.

அப்படிப்பட்ட சித்ரலேகா.. இன்று நிமிர்வுடன்.. வெட்டு ஒன்று.. துண்டு இரண்டாகப் பேசுகிறாள்.. நான் உன் மனைவி.. இஷ்டமென்றால் சொல் வந்து குடும்பம் நடத்துகிறேன்.. கஷ்டமென்றால் விட்டுவிடு.. அதை விட்டு நிபந்தனை.. கிபந்தனை போட்டால் நீ யாரோ.. நான் யாரோ என்று சவடாலாய் பேசுகிறாள்..

தினகரனின் ஆண்மைக்கு விடுத்த அறைகூவல் அது.. சற்று முன் அவன் கைகளில் பாகாய் உருகியவள்.. கணப்பொழுதில் நீ யாரோ.. நான் யாரோ என்றால் என்ன அர்த்தம்..?

அவள் தினகரனின் மேலிருந்த மயக்கத்தை துறந்து விட்டாள் என்று அர்த்தம்..

தினகரனால் இந்தத் தோல்வியை தாங்கிக் கொள்ள முடியவில்லை.. எதிர்வீட்டைப் பார்த்தான்.. சுகன்யாவும் இங்கேதான் பார்த்துக் கொண்டிருந்தாள்.. தினகரன் சிறு வார்த்தை விளையாட்டை விளையாட முடிவு செய்தான்.

''லேகா...'' என்று தேனொழுக அழைத்தான்.

''ம்ம்...'' என்று யோசனையுடன் அவனைப் பார்த்தாள் சித்ரலேகா.... ஆதாயமில்லாமல் செட்டியார் ஆற்றிலே இறங்க மாட்டாரே என்ற எண்ணம் அவளுக்கு.

அவள் அவனை எடுத்தெறிந்து பேசிய பின்னரும் அவன் அன்புடன் அழைப்பதென்றால் அதற்கு காரணம் இல்லாமலா இருக்கும்?



''அந்த சுகன்யா ரொம்ப அழகாய் இருக்கிறாள் இல்லை...'' என்று கேட்டான் தினகரன்.

''ஓ... நீ இப்படி வருகிறாயா... வா..வா..''

''ஆமாம்... ரொம்ப அழகுதான்...''

''உன்னை விட அழகு....''

''அப்படியா... எனக்குத் தெரியவில்லையே...''

''உனக்கு எப்படித் தெரியும்...? உங்கள் இருவரையும் பார்க்கிற எனக்குத்தான் அது தெரியும்....''

''ஓ..ஐஸீ....ம்ம்... அதற்கு இப்போது என்ன செய்யலாம் என்கிறீர்கள்..?''

''ஒன்றுமில்லை லேகா.. முருகன் தெய்வானையைக் கல்யாணம் பண்ணி கொண்ட பின்னால் வள்ளியை காதலிக்கவில்லையா? அதைப்போல் நானும் ஏன்... உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொண்ட பின்னாலும்.... அவளைக் காதலித்துக் கல்யாணம் பண்ணிக் கொள்ளக் கூடாது?''

''தாராளமாய் செய்யலாமே.. ஆனால் அதில் ஒரு சின்னத் திருத்தம்... தெய்வானையை முருகனுக்கு அவர் வீட்டில் பெண் பார்த்துக் கல்யாணம் பண்ணி வைத்தார்கள்... ஆனால் நீங்கள் என்னைக் காதலித்துக் கல்யாணம் பண்ணிக் கொண்டதாக எனக்கு ஞாபகம்... உங்களுக்கு எப்படி.. அது மறந்து விட்டதா?''

''அதனால் என்ன...? ஓர்முறை காதலித்தால் இன்னொரு முறை காதலிக்க முடியாதா?''

''ஊஹூம்...? நீங்கள் அப்படியா நினைக்கிறீர்கள்...? நான் என்னவோ காதல் உங்கள் மேல்தான் வரும்...

கல்யாணம் ஓர்முறைதான் வாழ்வில் நடக்கும் என்று என் மனோ அத்தானிடம் சொன்னேனே... அது பொய்யா...?''

தினகரன் வாயடைத்துப் போனான்... சித்ரலேகாவின் கூர்மையான பார்வையை சந்திக்க முடியாமல் சாலையைப் பார்த்தான்...

''என்ன பதிலையே காணோம்....''

'என்ன பதிலைச் சொல்வது... இவன் கோலத்தில் புகுந்தால்... அவள் தடுக்கில் வெளியே வருகிறாளே.....'

''ஊம்.. நீ நேரமாகிறது என்றாயே... கிளம்பு....''

''அதனால் என்ன.. நேரமானால் ஆகிவிட்டுப் போகிறது.. நான் என்ன பச்சைக் குழந்தையா.. திருவிழாவில் தொலைந்து போக.. நீங்கள் பேசுங்கள்.. நாம் இந்த விசயத்திற்கு ஒரு முடிவு கட்டுவோம்... அந்தப் பெண்ணும் பாவம்... சின்னப் பெண்... என் மனோ அத்தானைப் போல இவளும் நல்லவள்... சொல்லுங்க அத்தான்.. நாம் என்ன செய்யலாம்....?''

''ஒன்றும் செய்ய வேண்டாம் தாயே... நீ கிளம்புகிற வழியைப் பார்... ஆமாம் அது என்ன... வார்த்தைக்கு வார்த்தை.. என் மனோ அத்தான்... என் மனோ அத்தான்ங்கிற... ஒழுங்காய் பேசமாட்டாயா?''

''அவர் என் தாய் மாமனின் மகன்... உங்கள் காதலியைப் போல் எதிர்வீட்டுப் பெண் என்று நினைத்தீர்களா..''



''போங்க அத்தான்.. நீங்கள் முன்னே மாதிரி இப்போது இல்லை.. நிறைய மாறி விட்டீர்கள்....''

''யார்.. நான் மாறிவிட்டேனா? இதை நீ சொல்கிறாய்.... எல்லாம் என் நேரம்டி... கிளம்பு...கிளம்பு....''

''என்னைக் கிளப்பி விடுவதிலேயே குறியாய் இருங்கள்...''

''இருந்து என்னத்தை கிழிக்கப் போகிறாய்.. கிளம்பு...''

''ஏன் அந்த எதிர் வீட்டு டீன் ஏஜிடம் உங்களைப் பற்றி எடுத்துச் சொல்வேனே....''

''ஒன்றும் வேண்டாம்... வருகிறாயா.. இல்லையா?''

அவளைக் கையைப் பிடித்து இழுக்காத குறையாய் வீட்டுக்குள் அழைத்துச் சென்றான்...

''இருங்க அத்தான்... நான் வீட்டைச் சுற்றிப் பார்க்கவில்லையே....''

அவள் நிதானமாய் அந்த வீட்டைச் சுற்றி வந்தாள்..

''ஓ.... இதுதான் ஹாலா.. பரவாயில்லை.. பெரிதாகத்தான் இருக்கிறது.. இது பூஜை ரூமா.. இது நீங்கள் எக்சர்ஸைஸ் பண்ணும் ரூம் போல் இருக்கிறதே.... ம்ம்.. பெரிய பாடி பில்டர்தான்.. இது.. ம்ம்.. போகலாமா அத்தான்..''

படுக்கையறைக் கதவைத் திறந்தவள் பேச்சை மாற்ற.. தினகரனின் முகத்தில் இறுக்கம் தளர்ந்து மென்மை பரவியது..

''இது.. என்ன ரூம்ன்னு சொல்லவே இல்லையே..''

"எனக்கு நேரமாகிறது.."

"வீட்டைச் சுற்றிப் பார்த்து விளக்கம் சொன்னவள் நீதானே.. பேசாமல் போனால் எப்படி..?"

"என்ன சொல்லச் சொல்கிறீர்கள்.."

"அது என்ன ரூம்?"

"ம்ம்.. தூங்குகிற ரூம்.. போதுமா..."

"போதாது.."

சட்டென்று திரும்பிய தினகரன்.. அவளை அணைத்துத் தூக்கி கைகளில் ஏந்திக் கொண்டு படுக்கையறைக்குள் நுழைந்தான்.. கட்டிலில் கிடத்தினான்.. அவள்மேல் சரிய.. அவள் உருண்டு விலகி.. கட்டிலின் அந்தப் பக்கம் சென்று இறங்கினாள்... அவன் அவளை எட்டிப் பிடிக்கு முன்.. படுக்கையறைக் கதவைத்திறந்து கொண்டு வெளியே சென்று விட்டாள்.

ஏமாற்றத்துடன் எழுந்த தினகரன்.. 'சட்' டென்று கால்களை தரையில் உதைத்துக் கொண்டான்' அறைக்கு வெளியே வந்து பார்த்தபோது வாசல் கதவு திறந்திருந்தது...

'போய் விட்டாள்...'

கோபத்துடன் வீட்டைப் பூட்டி விட்டு தினகரன் கீழே இறங்கிவந்த போது... விசாலாட்சியுடன் வாசல் கேட்டின் அருகே நின்று பேசிக் கொண்டிருந்தாள் சித்ரலேகா.

"அப்படியாம்மா..." என்று கேட்டுக் கொண்டிருந்தாள் விசாலாட்சி...

'என்ன சொல்லிக் கொண்டிருக்கிறாள்....' சந்தேகப் பார்வையுடன் அவள் அருகில் சென்றான் தினகரன்..



"ஏன்... தினகர்.. இந்தப் பெண் உனக்குச் சொந்தக் ...ரப் பெண்ணாமே... உன் வீட்டுக்கும்.. இவங்க வீட் ...க்கும் நல்ல பழக்கம் இருக்கிறதாமே... நான் கூட.... ...ரோ.. எவரோன்னு நினைத்தேன்... போகுதுபோ... ...சொந்தக்கார பெண்ணை வீட்டுக்கு கூப்பிட்டுக் ...கொண்டு வரவா அப்படித் தயங்கினாய்? நல்ல பிள்ளை ...ந்து வாய்த்தே...போ....."

சித்ரலேகா சாதுப் பெண் போல் விசாலாட்சியிடம் ...கரம் கூப்பி விடை பெற்றுக் கொண்டு காரில் ஏறி அமர்ந்தாள்.

# 34

"வீட்டுக்கார அம்மாளிடம் என்ன சரடுவிட்டாய்...?"

"சரடா... உண்மையைத்தானே சொன்னேன்.. நான் உங்களுக்கு சொந்தக்காரப் பெண்தானே.. உங்கள் வீட்டிற்கும்... என் வீட்டிற்கும் நல்லபழக்கம் உண்டு தானே...."

"கெட்டிக்காரத்தனமாக பேசுகிறாய்... நீ என் பகையாளி குடும்பத்தைச் சேர்ந்தவள்.. உன் வீட்டாரும்... என் வீட்டாரும் அடித்துக் கொண்டு இருந்தார்கள்...."

"காரை நிறுத்துகிறீர்களா... என் மாமா வீடு இருக்கும் தெரு வந்து விட்டது.... நான் தெரு முனையிலேயே இறங்கிக் கொள்கிறேன்..."

"...வாசலில் நான் இறக்கிவிட்டால் ஆகாதா?"

"எனக்கு ஆகும்... என் மாமாவிற்கு ஆகாது... அவ ருக்கு என்மேல் பாசம் அதிகம்.... அதனால் உங்கள் மேல் கோபமும் அதிகம்...."

"அதாவது உன் மாமா என்னை அடித்து விடுவார் என்கிறாய்... வா அதையும் பார்த்து விடலாம்...."

"நீங்கள் சண்டைக்கு அலைகிறீர்கள்.. நான் அதற்கு தயாரில்லை...."

சித்ரலேகா காரை விட்டு இறங்கிக் கொண்டாள்.. அவனைத் திரும்பிக் கூடப் பார்க்காமல் வேகமாய் நடந்தாள்.. அவள் போவதையே பார்த்துக் கொண்டிருந்த தினகரனுக்கு மனம் கனத்தது.. இறங்கிச் சென்று அவளது கை பிடித்து தடுக்க வேண்டும் போல் இருந்தது...

'போகாதே லேகா... வந்துவிடு....' என்று மனதிற்குள் கூறிக்கொண்டான் அவளது மனதை அது எட்டியதோ என்னவோ.. அவள் ஓர்முறை திரும்பி அவனைப் பார்த் தாள்.. கேட்டைத் திறந்து உள்ளே சென்று விட்டாள்.

தினகரன் அப்படியே ஸ்டேரிங்கில் தலைசாய்த்து கண்களை மூடிக்கொண்டான்... அவளது தலையில் இருந்து உதிர்ந்திருந்த மல்லிகை மலர்களின் வாசம் காருக்குள் அவனைச் சுற்றிக் கவிழ்ந்திருந்தது...

வீட்டிற்குத் திரும்பி.. கதவைத் திறந்தான்... என்றும் தாக்கும் தனிமையின் தாக்கம் இன்று அதிகமாய் அவனைத் தாக்கியது....

'இங்கேதான் அவள் சுவரோடு சாய்ந்து நின்றிருந்தாள்.. இங்கேதான் அவன் அணைப்பில் அடங்கி நின்றாள்... இந்த இடத்தில் நின்றுதான் காபி போட்டாள்... இந்த தொங் கும் மர ஊஞ்சலில் தான் உட்கார்ந்து அவனை வம்பிழுத் தாள்.. இந்தக் கட்டிலில் இருந்துதான் விலகிச் சென்றாள்...'



அவளது காலடிச் சுவடுகள் பட்ட வீட்டை சுற்றிச் சுற்றி வந்தான் தினகரன்... பால்கனிக்கு வந்த போது.. எதிர் வீட்டு பால்கனியில் படித்துக் கொண்டிருந்த கன்யா தென்பட்டாள்..

'இவளை வைத்துத்தான் அவள் கேலி பேசினாள்...'

பால்கனிக் கதவை அடைத்துவிட்டு வீட்டிற்குள் வந்தான்.. எதுவும் சாப்பிடப் பிடிக்கவில்லை... வெறும் வயிற்றோடு கட்டிலில் விழுந்தான்.. அவனது செல் போன் அலறியது.. எடுத்துப் பார்த்தான்...

'சித்ரலேகா அழைக்கிறாள்' என்றது போன்..

அவசரமாய் பேசினான்.

"சாப்பிட்டீர்களா..?" என்று கேட்டாள் அவள்..

"இல்லையென்றால் வந்து சமைத்துத் தரப் போகி றாயா..?" அவன் கடுகடுத்தான்...

"அப்போ.. சாப்பிடவில்லை.. அப்படித்தானே..."

"ஆமாம்... இப்ப என்னங்கிற.. போனை வை. பெரிய அக்கறை இருக்கிறவள் போல் நடிக்காதே...."

சித்ரலேகா போனை துண்டித்து விட்டாள்.. அவன் ஏமாற்றத்துடன் போனை பார்த்தான்...

'போ என்றால் போய் விடுகிறாள்.. போனை வை என் றால் கட் பண்ணி விடுகிறாள்... கொஞ்சமாவது என் னிடம் அக்கறை இருக்கிறதா' மனதிற்குள் பொறுமித் தீர்த்தான்...

என்றும் இல்லாமல் இன்று அவனை அவள் நினைவு ஆக்ரமிப்பதற்கான காரணத்தை அவன் அறிந்துதான் இருந்தான்...

பெண் வாடையே படாத இடத்தில் அவள் உள்ளே வந்து.. அவன் கையில் காபி போட்டுக் கொடுத்து... அவனுடன் அமர்ந்து உரையாடி விட்டுச் சென்று விட்டாள்...

திருமணம் ஆகியும் பிரம்மச்சாரியாய் வாழ்பவனின் கைகளைத் தொட... அவன் கட்டியணைத்து.. முத்தமிட இடமும் கொடுத்து விட்டு விலகிச் சென்று விட்டாள்..

அவனால்.. அவள் இல்லாத வீட்டில் அமரக்கூட முடியவில்லை... எழுந்து அறைக்குள் குறுக்கும் நெடுக்குமாய் நடந்து கொண்டிருந்தான். அழைப்பு மணி ஒலித்தது.

'யார் இந்த ராத்திரி நேரத்தில் வந்து தொந்தரவு செய்வது?' கோபத்துடன் சென்று கதவைத் திறந்தான்.

"சார்.. பீட்ஸா ஹட்டிலிருந்து வருகிறேன்... உங்களுக்கு பீட்ஸா கொடுக்கும்படி எங்களிடம் ஆர்டர் கொடுத்திருக்கிறார்கள்...."

பீட்ஸா பெட்டியை வழங்கிவிட்டு... வந்தவன் சென்று விட்டான்..

'யார் ஆர்டர் கொடுத்தது....?'

குழப்பத்துடன் கதவை அடைத்து விட்டு தினகரன் உள்ளே வந்தான். செல்போன் ஒலித்தது...

'அவளாக இருக்குமோ..'

அவள்தான் அழைத்தாள்...

"என்ன அத்தான்... பீட்ஸா வந்து விட்டதா?"

"நீயா ஆர்டர் பண்ணினாய்..."

"ஆமாம்... சமைத்துப் தரப்போகிறாயான்னு கேட்டீர்கள்... என்னால் அங்கே வந்து உங்களுக்கு சாப்பாட்டை



கொண்டே சாப்பாடு அனுப்பியிருக்கிறேன்.. சாப்பிடுங்க.."

அவள் போனை அணைத்து விட்டாள்... தினகரன் பீட்ஸாவை எடுத்து சுவைத்து சாப்பிட்டான்... அதில் அவளது அன்பும்... அக்கறையும் தெரிந்தன. சாப்பிட்டு முடித்து படுக்கையில் சரிந்தவனின் வயிறு நிறைந்தது போல் மனமும் நிறைந்திருந்தது....

அவளுக்கு போன் போட்டான். மறு முனையில் அவள் குரல் கேட்டது..

"என்ன அத்தான்.. சாப்பிட்டாகி விட்டதா....?"

"ம்ம்.. சாப்பாட்டை அனுப்பிவிட்டாய்.. தூக்கத்தையும் அனுப்பிவை..."

"புரியவில்லையே...."

"தூக்கம் வர மாட்டேன் என்கிறதுடி...."

"என்ன செய்யட்டும்... எனக்கு தாலாட்டு பாடத்தெரியாதே....."

"வெறுமனே பாடு.. அது போதும்...."

"போனில் போய் யாராவது பாடுவார்களா....?"

"நம்மைப்போல் குடும்பம் நடத்துபவர்கள் பாடலாம்... பாடுடி...." சித்ரலேகா... மெல்லிய குரலில் பாடினாள்... தினகரன்.... கண்கிறங்கி கேட்டுக் கொண்டிருந்தான்..

"காதோடுதான் நான் பாடுவேன்....
மனதோடுதான் நான் பேசுவேன்...
விதியோடுதான் விளையாடுவேன்....
... மடிமீதுதான் கண் மூடுவேன்..."

உண்மையிலேயே சித்ரலேகா வந்து தினகரனின் மார்பின் மேல் தலை சாய்த்து அவனது காதோரம் பாடுவது போல் அவன் உணர்ந்தான்...

"வளர்ந்தாலும் நான் இன்னும் சிறுபிள்ளைதான்...

நான் அறிந்தாலும் அதுகூட நீ சொல்லித்தான்....

உனக்கேற்ற துணையாக எனை மாற்றவா....

குலவிளக்காக நான்வாழ வழிகாட்டவா...."

தினகரன் மெல்ல கண் மூடிக் கொண்டான்... அவனது மனக் கண்ணில் பள்ளிச் சீருடையுடன் சித்ரலேகா வந்து நின்று பாடினாள்....கண்களில் குழந்தைத்தனம் மாறாமல்... அவனது முகத்தை மருளும் விழிகளுடன்.. வெட்கம் நிறைந்த பார்வைபார்த்துக் கொண்டு பாடினாள்....

தினகரனின் கண்களில் நித்திராதேவி வந்து இறங்கினாள்... தினகரன் போனை அணைக்காமலே காதோரம் வைத்துக் கொண்டு.. பாடலைக் கேட்டுக்கொண்டே உறங்கிவிட்டான்.

பாடிமுடித்த சித்ரலேகா... அவனை அழைத்துப் பார்த்தாள்... பதில் வரவில்லை... அவன் தூங்கி விட்டதைப் புரிந்து கொண்டவளாய் தன் போனை அணைத்து விட்டுப் படுத்தாள்.. வெகுநேரம்.. அவளது கண்களில் இருந்து கண்ணீர் நிற்காமல் வழிந்து கொண்டே இருந்தது.



35



...வனுக்கு கொடுத்துவிட்டு... தாமதமாய் தூங்கி... தாமதமாய் கண் விழித்தாள் சித்ரலேகா...

காலையில் அவளை எழுப்பி காபி குடிக்க வைத்த ...த்ரனின் மனைவி கமலம்.. கவலையோடு அவளது நெற்றியைத் தொட்டுப் பார்த்தாள்.

"எனக்கு ஒன்றுமில்லை அத்தை.... ஐ ஆம் நார்மல்...."

"அப்புறம் ஏன் முகமெல்லாம் வீங்கி... கண் சிவந்திருக்கிறது...?"

"அப்படியெல்லாம் இல்லை.. ரொம்ப நேரம் தூங்கி விட்டேனில்லையா... அதனால்தான் அப்படித் தெரிகிறது...."

...மழுப்பிவிட்டு எழுந்து குளிக்கச் சென்றுவிட்டாள் சித்ரலேகா... அவளின் பதிலில் கமலம் திருப்தி அடையவில்லை என்பது... டைனிங்டேபிளில் அவளுக்காக காத்திருந்து பவித்ரன் அவளது முகத்தை ஊன்றிப் பார்த்தபோது தெரிந்தது..

"என்ன மாமா....?" சித்ரலேகா வெள்ளையாய் சிரித்தாள்.

"என்ம்மா.. முகம் ஒரு மாதிரி இருக்கிறது....?"

"ஒன்றுமில்லை மாமா...."

சித்ரலேகா அவசரமாய் சாப்பிட ஆரம்பிக்க.. பவித்ரன் ஆழ்ந்த குரலில் அவளிடம் வினவினார்...

"சித்ரா... நேற்று சாயந்திரம் நீ எங்கே போனாய்...?"

"ஏன்... மாமா... இப்படிக் கேட்கிறீர்கள்...." சித்ரலேகா தடுமாறினாள் அவளது தடுமாற்றத்தை தவறாமல் குறித்துக் கொண்டன பவித்ரனின் கண்கள்.

...கிறேன் என்றுதான் கேட்கிறாய்... எங்கே ...யே என்று சொல்லவில்லை...

ஸோ... நீ ஆபிஸிலிருந்து நேராக வீட்டிற்கு வரவில்லை... இடையில் எங்கோ போயிருக்கிறாய்... ஆம் ஐ கரெக்ட்?''

சித்ரலேகா மெளனம் சாதித்தாள்.

''நீ எங்கே போனாயென்று நான் கேட்கப் போவதில்லை.. நீ சிறு குழந்தையில்லை.. வயது வந்த... வளர்ந்தபெண்.. உன்னைக் கண்காணிக்க வேண்டிய அவசியமில்லை... ஆனால் நீ... நேற்று வெளியில் போனதற்கும்.. இரவில் உன் தூக்கம் கெட்டதற்கும் நிச்சயம் சம்பந்தம் இருக்கவேண்டும்...''

சித்ரலேகா... மெளனத்தை தொடர்ந்தாள்..

''நீ தூக்கம் கெட்டு நிற்பதைக் கண்டால்... நீ தினகரனுடன் பேசச் சென்றிருக்கவேண்டும் என்று நினைக்கிறேன்...''

சித்ரலேகா மெளனப் பெருமூச்சை விட்டாள்.....

''ஏம்மா.. ஏன் இந்த வீண் முயற்சி...? அவனிருக்கும் ஆபிஸிலேயே பிடிவாதமாய் வேலைக்குச் சேர்ந்தாய்.. அதுவே எனக்குப் பிடிக்கவில்லை... இப்போது அவனுடன் பேசி விட்டு தூக்கம் கெட்டு நிற்கிறாய்.. அவன் திருந்துகிற ஜென்மம் இல்லை... பேசாமல் நாங்கள் சொல்வதைக் கேள்.... அவனை மறந்துவிடு... உனக்குக் கல்யாணமாகி ஒன்றேகால் வருடம் ஆகிவிட்டது... நீங்கள் சேர்ந்து வாழாமல் பிரிந்து வாழ்கிறீர்கள்... இது ஒன்று போதும்.. எளிதில் டைவர்ஸ் கிடைத்து விடும்.. நம் மனோ உனக்காக காத்திருக்கிறான்... கொஞ்சம் நான் சொல்வதை யோசிம்மா...''

''வேண்டாம் மாமா... இந்தப் பேச்சை விட்டுவிடுங்கள்.. கல்யாணம் என்பது வாழ்வில் ஒரு முறைதான்...



''இருக்கட்டுமே.. அவர் என்னை ஏமாற்ற நினைத்தவர்தானே.. ஏன் என்னைப் போல் அவரும் தனித்து வாழ்கிறார்?''

''அவன் எப்படி வாழ்ந்தால் நமக்கு என்னம்மா வந்தது?''

''என்னால் அவரை அப்படி விட்டு விட முடியாது மாமா.. அவர் மனதில் அண்ணனும்... அப்பாவும் கொடுமைக்காரர்கள்ன்னு ஒரு தோற்றம் பதிவாகி விட்டது... அதை மாற்ற முயற்சி செய்ய வேண்டுமே தவிர... அவரை மறக்க நான் நினைக்கக் கூடாது.....''

''அவன் மாறமாட்டான் சித்ரா... பிடிவாதக்காரன்....''

''நானும் பிடிவாதக்காரிதான் மாமா..''

''அவனுக்காக நீயேன் ரிஸ்க் எடுக்க வேண்டும்.?''

''ஏனென்றால் எனக்கு அவர் கணவராகிப் போய் விட்டாரே...''

''அதற்காக... அவன் செய்வதையெல்லாம் பொறுத்துக் கொண்டிருக்கப்போகிறாயா.? அவன் பாவிம்மா....''

''இல்லை மாமா... அவர் பாவியில்லை.... பாவம்... எனக்காக அக்கறை எடுத்துக் கவனித்துக் கொள்ள தாத்தா... பாட்டி...அம்மா.. அப்பா... அண்ணன்.... அண்ணி... பெரியமாமா.... அத்தை... நீங்கள்... சின்னத்தை.... என்று இத்தனை பேர் இருக்கிறீர்கள்... அவருக்கென்று யார் அவருடன் இருக்கிறார்கள்? அத்தை வீட்டுக்கு வராதேன்னு சொல்லிட்டாங்க... மாமா.. அத்தை பேச்சுக்கு கட்டுப்பட்டு விட்டார்.. திலகா அண்ணிக்கு விரியூரைத் தாண்டி வேறு ஊரைத் தெரியாது... அவர் பக்கத்தில் யார் இருக்கிறார்கள்? தானாய் சிரித்து... தானாய் அழுது... தனிமை

"இது அவனாகத் தேடிக் கொண்டதுதானே..."

"அப்படி என்னால் நினைக்க முடியவில்லையே..."

பவித்ரன் தன் தங்கை மகளைப் பார்த்து கனிவுடன் புன்னகைத்தார்...

"உன் மனது பால் போன்ற வெள்ளை மனது சித்ரா.. உனக்கு பழிவாங்கத் தெரியாது.. உன் மனதிற்கு உனக்கு ஒரு குறைவும் வராது... சாப்பிடு...."

சித்ரலேகாவை அவளது அலுவலகத்தில் இறக்கி விட்டுவிட்டு அவரது கார் பறந்தது.. அலுவலக வாசல் படிகளில் ஏறப்போனவளை

"ஹாய் சித்ரலேகா...." என்ற குரல் தடுத்து நிறுத்தியது..

நின்று திரும்பிப் பார்த்தாள்... கிருஷ்ணன் வந்து கொண்டிருந்தான்.

"குட்மார்னிங் சார்..."

"இப்போதுதான் வருகிறீர்களா?"

"நீங்கள் எனக்கு முன்னாலேயே வந்து விட்டீர்களா?"

"இல்லை.. நானும் இப்போதுதான் வருகிறேன்...."

"அப்புறம் ஏன் என்னைக் கேள்வி கேட்கிறீர்கள்?"

"தேறிவிட்டிங்க போங்க..."

"எங்கே போவது? ஆபீஸிற்கு நீங்கள் பதில் சொல்லிக் கொள்கிறீர்களா...?"

"இதைப்பாருடா.. ஹா..ஹா...."

இருவரும் சிரித்துக் கொண்டே ஆபிஸிற்குள் நுழையும் போது.. ஏதோ வேலையிருப்பது போல் சித்ரலேகாவை எதிர்பார்த்துக் காத்திருந்த தினகரனின் முகம் கருத்தது...



கிருஷ்ணன் தினகரனைப் பார்த்ததும் காலை வணக் கம் சொன்னான்... சித்ரலேகா தினகரனைப் பார்த்தவாறே அவனது அருகில் சென்றாள்.

தினகரன் திரும்பி கிருஷ்ணனைப் பார்த்தான்... அவன் னது மேஜை டிராயரை ஆராய்ந்து கொண்டிருந்தான்.

தினகரன் சித்ரலேகாவின் காதுகளுக்கு கேட்கும்படி முணுமுணுத்தான்.

"காலங்கார்த்தாலே.... அவனிடம் என்ன சிரிப்பு வேண் டிக்கிடக்கு..."

"அப்போ மதியம் வேண்டுமானால் சிரித்துக் கொள் ளவா.... இல்லை... சாயங்காலமானால் இன்னும் குளிர்ச்சி யான பொழுது... அப்பொழுது சிரித்துக் கொள்ளவா...."

'ஏன் இரவானால் இன்னும் வசதியாக இருக்குமே...' என்று சொல்ல நினைத்த தினகரன்...

'ஓ' அப்படியா.. சரி...' என்று அவள் சொல்லிவிட் டால் என்ன செய்வது என்ற பயத்துடன் வாயை இறுக மூடிக்கொண்டான்.

தினகரனின் முகம் போன போக்கைப் பார்த்துக் கொண்டே தன் இருக்கையில் அமர்ந்த சித்ரலேகா.. சுற்று முற்றும் பார்த்து விட்டு.. தினகரனைப் பார்த்து மெலி தாகக் கண் சிமிட்டினாள்...

விநாடியில் தினகரனின் முகம் ஒளிர்ந்துவிட்டது.

## 36

சித்ரலேகா.. குளிர் நிலவா... இல்லை கொதிக்கும்

னான் தினகரன்... அடுத்து வந்த நாட்களில் சித்ரலேகா... ஆபீஸ் வேலைகளை நன்கு பழகிவிட்டாள்.. கூட வேலை பார்த்தவர்களுடன் சிரித்த முகத்துடன் பேசினாள்... தினகரனிடம் மட்டும்.... அவன் எப்படிப் பேசுகிறானோ... அதே முறையில் பதிலடி கொடுத்தாள்.... அவள் கொடுத்த பதிலடியில் முகம் மாறிப் போன அடுத்த நொடியில் அருகில் ஆள் இருந்தால் ரகசியப் பார்வையுடன்.. அவனுக்கு மட்டும் பிரத்யேகமாய் புன்னகை ஒன்றை உதிர்ப்பாள்.. அருகில் ஆள் இல்லாவிட்டால் லேசாய் அவன் கரம் தொட்டு முத்தமிட்டு விலகிச் செல்வாள்... சிலசமயம் கன்னத்திலே இதழ் பதித்ததும் உண்டு...

'பெண் எனும் மாயப் பிசாசு....'

சித்ரலேகாவைப் பற்றி இப்படி எண்ணக் கூடாது என்று தனக்குத் தானே கட்டுப்படுத்திக் கொண்டாலும்... தினகரனுக்கு அப்படித்தான் எண்ணமிடத் தோன்றியது...

அவனது இரவு நேரத் தூக்கத்தில் ஏக்கப் பெருமூச்சை அளிப்பவளும் அவளாகத்தான் இருந்தாள்.. தூக்கம் வராமல் தவிப்பவனுக்கு போனில் பேசி... கொஞ்சி... தூக்கத்தை அளிப்பவளும் அவளாகவே இருந்தாள்...

அவன் கண் முன் மற்றவரிடம் சிரித்துப் பேசி அவனது பொறாமையை தூண்டிவிட்டு... அந்தப் பொறாமைத் தீயில் குளிர் காய்பவளாய் அவளே இருந்தாள்..... அந்தத் தீயின் தவிப்பில் அனலாய் நிற்பவனின் அருகே வந்து ரகசியமாய் அணைத்து.... அந்தத் தீயை அணைக்கும் குளிர் நீராகவும் அவளே இருந்தாள்.

'நீ வரமா... இல்லை சாபமா?...

நீ தேவதையா? இல்லை மோகினியா...'



என்று குறுஞ்செய்தி ஒன்றை அவளது அலைபேசிக்கு அனுப்பி வைத்தான்...

'நீ எதுவாக நினைக்கிறாயோ....

அதுவே நான்.....'

என்ற பதில் செய்தி உடனே வந்தது... தினகரன் தலையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்துவிட்டான்...

கட்டுக்கடங்காத மோக வெள்ளத்தில் அவனைத் தள்ளி விட்டுவிட்டு கரையில் நின்று கைகொட்டிச் சிரிக்கும் குரூரமானவளாய் அவள் அவனுக்குத் தோன்றினாள்.

தினமும் அவள் பார்க்கும் ரகசியப் பார்வைகளிலும்... அவள் தொட்டு விலகும் ரகசியத் தருணங்களிலும்... அவனுக்குள் கட்டுக்குள் இருந்த ஆண்மை... கட்டவிழ்த்து விடத்துடித்தது.. அவளைத் தொட்டு தழுவி விட வேகம் காட்டியது.. அவளோ.. அவனின் கண்களில் தெரியும் தாபத்தைக் கண்டு கொள்ளாமல் விலகினாள்... தினகரன் தான் மூட்டிவிட்ட தீ.. தன்னையே எரிக்க வருவதைக் கண்டு வெகுண்டு நின்றான்..

போராட்டமான இரண்டு மாதங்கள் ஓடி மறைய.. அன்று காலை கண் விழித்த தினகரன்.. தன் உடல் கொதிப்பதை உணர்ந்தான்... எழுந்திருக்க முடியாமல் சோர்ந்து படுத்தவன்.. ராம்குமாரை அழைத்து ஆபீஸிற்கு லீவ் சொல்லி விடச் சொன்னான்....

''என்னடா உடம்பிற்கு?''

''நத்திங்.... ஜஸ்ட் பீவர்.. டேப்லெட் போட்டுக் கொண்டு ரெஸ்ட் எடுத்தேனென்றால் சரியாகப் போய்விடும்....''

''நான் வேண்டுமென்றால் உன் வீட்டிற்கு வந்து டாக்டரிடம் கூப்பிட்டுக் கொண்டு போகவா.. இதற்குத் ... கல்யாணத்தைப் பண்ணிக்கொள் என்பது...''

'நானா கல்யாணம் ஆகாதவன்.. கொடுமையாய் பேசாதேடா...'

''வேண்டாம்... வேண்டாம்.. ஆபீஸ் இன்ஸார்ஜ் பொறுப்பை மட்டும் பார்த்துக்கொள்... போதும்...'' மனதிற்குள் புழுங்கியவாறு பதில் சொன்ன தினகரன் போனை அணைத்துவிட்டு... எழுந்து கொள்ள வேண்டும் என்று நினைத்தும் எழ முடியாதவனாய்.. படுக்கையில் கண் மூடிக் கொண்டான்...

அவனது அலைபேசி ஒலித்தது... எடுத்துப் பார்த்தான்.. சித்ரலேகா அழைத்தாள்... பேசமுடியாமல்

''ஹலோ...'' என்றான்..

மறுமுனையில் ஓர் கணம் நிசப்தமாக இருந்தது.. மறு கணம்... சித்ரலேகாவின் குரல் கவலையுடன் ஒலித்தது..

''அத்தான் உடம்புக்கு என்ன... உங்கள் குரலே சோர் வாய் இருக்கிறதே...''

''காய்ச்சல் லேகா....''

அவன் பேசிக் கொண்டிருக்கும்போதே அவள் போனை அணைத்து விட்டாள்.. துண்டிக்கப்பட்ட அலைபேசியை பார்த்த தினகரன் விரக்தியாய் சிரித்துக் கொண்டான்.

'இவ்வளவுதானா... உன் விசாரணை?' என்று வெறுமை யாய் நினைத்தபடி கண்மூடிக் கொண்டான்.

சற்று நேரத்தில் வாசலில் அழைப்பு மணி அலறியது..

'கீழ் வீட்டிலிருந்து பால் பாத்திரத்தை கொண்டு வந் திருப்பார்கள்' என்று எண்ணியபடி.. தள்ளாடி எழுந்து சென்று கதவைத் திறந்தான்.

கையில் பால் பாத்திரத்தோடு நின்று கொண்டிருந்தது... விசாலாட்சி அல்ல... சித்ரலேகா....'



தினகரன் கண்களை அகல விரித்தான்.

''லேகா... உன்னை நான் எதிர்பார்க்கவில்லை...''

தினகரன் குரலில் தொனித்த ஆவலை கண்டு கொள் ளாமல் உள்ளே வந்த சித்ரலேகா அவனது நெற்றியைத் தொட்டுப் பார்த்தாள்.. அவளது மிருதுவான கரத்தின் ஸ்பரிசத்தில்.... கொதித்த இடம் குளிர்ந்து போனவனாய் தினகரன் கண் மூடி நின்றான்.

''காய்ச்சல் நெருப்பாய் கொளுத்துகிறதே அத்தான்...'' சித்ரலேகா கவலையுடன் கூறினாள்.

அவளது கையை விலகவிடாமல் இறுக்கி தன் நெற்றி யிலேயே பதிய வைத்துக் கொண்டான் தினகரன்....

''தலை பாரமாய் கனக்குது லேகா...''

''சரி... படுத்துக்கோங்க.... பிரஷ் பண்ணிட்டிங்களா...''

''இல்லை...''

''இப்படி உட்காருங்க.. பேஸ்டும்... பிரஷ்ஷும் எடுத்துக் கொண்டு வருகிறேன்....''

சித்ரலேகா... அவனிடம் பேஸ்டுடன் கூடிய பிரஷ்ஷை நீட்டினாள். அவன் முகம் கழுவி வந்ததும்... அமர வைத்து... சூடான காபியைக் குடிக்க வைத்தாள்...

''பால் கீழ் வீட்டில் இருந்ததே...''

''நான்தான் வாங்கிக் கொண்டு வந்தேன்...''

''உனக்கு ஆபீஸ் இருக்கிறதே....''

''லீவ் போட்டு விட்டு வந்தேன்...''

''ஏன்...?''

''இது என்ன அபத்தமான கேள்வி... எழுந்து சட்டையைப் போட்டுக் கொள்ளுங்கள்.... டாக்டரிடம் போய் விட்டு வரலாம்...''

தினகரன் சோர்வாக எழுந்து கிளம்பிவர.. சித்ரலேகா வாசல் கதவை மூடி... சாவியை தன் கைப்பையில் போட்டுக் கொண்டாள்... படியிறங்கி அவர்கள் வந்தபோது... காய்கறிக் கூடையுடன் விசாலாட்சி எதிரே வந்து கொண்டிருந்தாள்... தினகரனின் தோற்றத்தை கண்டு பதற்றமாய் அருகில் வந்தாள்...

''என்னப்பா.. தினகரா... என்ன செய்யுது...''

''காய்ச்சல்க்கா.....''

''அடடா.... இந்தப் பெண் காலையில் வந்து பாலைக் கேட்கும் போது விசாரிக்க வேண்டுமென்று நினைத்தவள் வேலையிருந்ததால் விட்டு விட்டேன்... அதனால் தான் இந்தப் பெண் காலையிலேயே ஓடி வந்திருக்கிறதா... இதுதான் சொந்தம் என்பது தினகரா... ஆயிரம் தான் அக்கா... அக்கான்னு நீ வாய் நிறைய என்னைக் கூப்பிட்டாலும்.... பக்கத்தில் இருந்த எனக்கு நீ காய்ச்சலில் கிடப்பது தெரிந்ததா... இந்தப் பெண்ணுக்குத்தானே தெரிந்திருக்கிறது...''

தினகரன் காரை எடுத்துக் கொண்டிருந்த சித்ரலேகாவைப் பார்த்தான். அவளோ... அவன் ஏறுவதற்காக கார் கதவை திறந்து விட்டாள்.



## 37

'இதற்குத்தான் ஒரு கல்யாணத்தை பண்ணிக் கொள்



ராம்குமார் சொன்னது நூற்றுக்கு இருநூறு சதவிகிதம் உண்மை என்று நினைத்துக் கொண்டான் தினகரன்...

சித்ரலேகா தானே காரை ஓட்டிக் கொண்டு... தினகரனை டாக்டரிடம் அழைத்துச் சென்றாள்.. அவர் டைபாய்டு ஜுரமாக இருக்கும் என்று சந்தேகப்பட்டு.. பரிசோதனைகள் சிலவற்றை எழுதிக் கொடுத்தார்.. அதை எடுத்துக் கொண்டு.. தினகரனை பரிசோதனைக்கு அழைத்துச் சென்றாள்.. டாக்டர் தினகரனுக்கு வந்திருப்பது வைரஸ் ஜுரம்தான் என்ற உறுதி செய்தார்....

''நல்லவேளை டைபாய்டு பீவர் இல்லை... வைரஸ் பீவர்தான்.. மூன்று நாள்கள் டேப்லெட் எடுத்துக் கொண்டு... ரெஸ்ட் எடுத்தால் சரியாகி விடும்...''

''தேங்க்யு டாக்டர்....''

டாக்டர் எழுதிக் கொடுத்த மாத்திரை மருந்துகளை அவரது மருத்துவமனையில் இருந்த மெடிகல் ஷாப்பிலேயே வாங்கிக் கொண்டு டாக்டர் பீஸையும் கொடுத்துவிட்டு தினகரனை அழைத்துக் கொண்டு வந்து காரில் ஏறச்சொன்னாள் சித்ரலேகா...

அவன் தன் பர்ஸைத் தேடினான்...

''என்ன...?''

''டாக்டர் பீஸ்.. டேப்லெட்டுக்கு பணம்....''

''கொடுத்துவிட்டேன்..''

''நீயேன் கொடுக்கவேண்டும்...''

சித்ரலேகா திரும்பி தினகரனை முறைத்த முறைப்பில் அடங்கிப் போனான் அவன்....

வந்ததும் அவனைப் படுக்க வைத்து

சூடான கஞ்சியுடன் வந்து அவனை எழுப்பி உட்கார வைத்து புகட்டி விட்டாள்.

"வேண்டாம் லேகா...."

"வெறும் வயிற்றில் மாத்திரை சாப்பிடக் கூடாது..."

வற்புறுத்தி அவனைக் குடிக்க வைத்துவிட்டு மாத்திரைகளை எடுத்துக் கொடுத்தாள்.... அவன் விழுங்கிய பின்னால் படுக்க வைத்தாள்.. அவன் கண்மூடி உறங்கும்போது.. அவனது நெற்றியில் அவளது கரம் படிந்து மெதுவாக அழுத்திவிட்டது.. தலைப் பாரத்திற்கு அது இதமாக இருப்பதை உணர்ந்தவனாய்...

"தேங்க்ஸ்...." என்று முணுமுணுத்தான்..

"தூங்குங்க...." என்றாள் அவள் கட்டளையிடும் தொனியில்... அன்று மட்டுமல்ல... அடுத்த இரண்டு நாள்களும் அவளது கட்டளைக்கு கீழ்படிந்தான் அவன்..

சித்ரலேகா காலையில் விடிந்தவுடன் வந்து விடுவாள்... அவனுக்கு தேவையானதை பார்த்துப் பார்த்துச் செய்வாள்... அவனை விட்டு விலகாமல் அருகில் இருந்து கவனித்துக் கொள்வாள்... இரவில் மட்டும் தூங்குவதற்கு பவித்ரனின் வீட்டிற்குப் போய் விடுவாள்...

"இது வேண்டாத வேலை சித்ரா..."

தினகரனுக்காக சித்ரலேகா அவனுடைய வீட்டிற்கு செல்வதை அறிந்த பவித்ரன் ஆட்சேபிக்கத்தான் செய்தார்...

"இது நான் செய்ய வேண்டிய வேலை மாமா.."

"அவனைத் தனியாக விடு... இப்படியெல்லாம் பட்டால்தான் அவனுக்கு புத்திவரும்.. காய்ச்சல் என்று வந்தால்... ஒரு கஞ்சி வைத்துக் கொடுக்கக் கூட ஆள் இல்



"அவருக்கு என் அருமை தெரிவதற்காக.. அவரை நான் கஷ்டப்பட விட வேண்டுமா? அவருக்கு புத்தி வரவேண்டும்தான்... ஆனால் இப்படித் துன்பப்பட்டு புத்தி வர வேண்டுமென்றால்.. அவருக்கு புத்தியே வர வேண்டாம் மாமா... இப்போது போலவே இருந்த விட்டுப் போகட்டும்..."

"அவன் கூடத் திருந்திவிடுவான்.... ஆனால் நீ திருந்த மாட்டாய்.. என்னவோ செய்துகொள்... நான் சொன்னால் நீ கேட்கவா போகிறாய்..?"

அதற்குமேல் வாக்குவாதம் செய்யாமல் அவள் போக்கிலேயே பவித்ரன் விட்டு விட்டார்.

மூன்றாம் நாள் காலையிலேயே தினகரனுக்கு காய்ச்சல் விட்டுவிட்டது... அடிக்கடி மாடிக்கு வந்து பார்த்துவிட்டுப் போன விசாலாட்சி... தினகரனின் உடல்நிலையைப் பற்றிப் பேசிக் கொண்டே சித்ரலேகாவின் சேவையைப் பற்றி சிலாகித்துக் கொண்டாள்.

"இரண்டே நாளில் நீ எழுந்து உட்கார்ந்து விட்டதற்கு டாக்டர் கொடுத்த மருந்து.... மாத்திரை மட்டும் காரணமில்லை தினகரா.. நாள் பூராவும் உன் பக்கத்தில் இருந்து பார்த்துக் கொண்ட இந்தப் பெண்ணும்தான் முக்கியமான காரணம்.. நீயும்தான் கல்யாணம் பண்ணிக் கொள்ளாமல் நாளைத் தள்ளிப் போட்டுக் கொண்டே வருகிறாய்.. காலா காலத்தில் கல்யாணம் பண்ணிக்கொள் தினகரா.... பொண்ணை மட்டும் சித்ராவைப் போலிருக்கிற பெண்ணைப் பார்த்து செலக்ட் பண்ணு.. அது சித்ராவாகவே இருந்தால் இன்னும் பெட்டர்..."

சித்ரலேகாவிற்கு சிரிப்பதா... இல்லை அழுவதா என்றிருந்தது. 'நான்தான் இந்த மனிதனின் பெண்
... வைத்துக்கொண்டே...

என்னைப் போல் ஒருத்தியைக் கல்யாணம் செய்து கொள்ளச் சொல்கிறீர்களே.... அதுவும் நானாக இருந்தால் இன்னும் பெட்டர் என்கிறீர்களே... பேஷ்...பேஷ்... இது ரொம்ப நல்லாவே இருக்கு...'

''என்னம்மா சித்ரா என்ன யோசிக்கிற?''

''நீங்கள் சொன்னதைத்தான் யோசித்துக் கொண்டிருக்கிறேன்...''

''நான் சொன்னது சரிதானே...''

''நீங்கள் என்ன தப்பாகவா சொல்லப் போகிறீர்கள்?''

விசாலாட்சி... தனது புத்தி கூர்மையை தானே மெச்சிக் கொண்டவளாய் எழுந்து கொண்டாள்.. அவளுக்கு என்னவோ... தினகரன் சித்ரலேகாவைக் காதலிக்கிறான் என்று தோன்றியது... அதனால்தான் ஜாடையாக இருவரையும் இணைத்து வைத்துப் பேசி வைத்தாள்.

விசாலாட்சி போனதும்... சித்ரலேகா எழுந்து... சமையலறைக்குள் சென்றாள்... மும்முரமாய் அவள் சமையல் செய்து கொண்டிருக்கும் போது... தினகரன் அவள் பின்னால் வந்து நின்று அணைத்துக் கொண்டான்... சித்ரலேகா திகைத்துப் போனாள்... தினகரன் இப்படித் திடீரென்று பின்னால் வந்து நின்று கட்டிப் பிடிப்பான் என்று கொஞ்சம்கூட அவள் எதிர்பார்க்கவில்லை... உடம்பு சரியில்லாமல் கட்டிலில் படுத்திருந்தவன் எப்படி எழுந்து வந்தான் என்ற யோசனையுடன் அவள் விடுபட முயன்றாள்... தினகரனின் பிடிபலமாக இருந்தது...

''விடுங்கள்... என்ன இது....''

''லேகா.... ப்ளீஸ்....''

''அத்தான்.. உங்களுக்கு உடம்பு சரியில்லை...



''அடுத்தவர் பெண்டாட்டியிடமா அத்து மீறுகிறேன்.. என் பெண்டாட்டியிடம்தானே அத்துமீறுகிறேன்...''

''என்ன சொன்னீர்கள்..''

மோக வெள்ளத்தில் மூழ்கியவனாய்.. தனது தினகரன் மோக வெள்ளத்தில்... கணவன் என்ற உரிமை... மறந்து அவளிடம் தன் கணவன் என்ற உரி...பத்தை மறந்து அவளிடம் தன் கணவன் என்ற உரிமையை நிலை நாட்டினான்.. அவனது வாயால் 'என் பெண்டாட்டி' என்ற அவன் சொல்லியதைக் கேட்டு சித்ரலேகா ஒரு கணம் அசையாமல் நிற்க... தினகரன் அதை தனக்குச் சாதகமாக்கிக் கொண்டான்..

எரியும் அடுப்பை அணைத்தவன்...அவளைத் தழுவி அவளது கன்னத்தில் முத்தமிட்டான்... சித்ரலேகாவால் இப்போது விலக நினைத்தும் விலக முடியாமல் போய்விட்டது...

அவனது கைகள் தொட்டதும் தன் உடல் பாகாய் உருகுவதை அதிர்ச்சியுடன் உணர்ந்தவள்... தன்னை ஆள நினைப்பவனிடமிருந்தே விடுதலையை வேண்டினாள்...

''வேண்டாம் அத்தான்...''

''எனக்கு வேண்டும்..''

''கீழ் வீட்டில் என்ன நினைத்துக் கொள்வார்கள்... அன்றுபோல் இன்றும் அவர்கள் திடீரென்று வந்து விட்டால்....? அதற்காகவாவது என்னை விடுங்கள்...''

சித்ரலேகா தினகரனிடம் கெஞ்சினாள்.

## 38

சித்ரலேகாவிற்கு தெரியாதது ஒன்று இருக்கிறது... விசாலாட்சி ...றைக்குள் சென்றதும்...

வந்து.. தான் ஊருக்குப் போகப் போவதாகவும்.. மறுநாள் தான் வருவதாக இருப்பதாகவும் கூறி.. வேறு எதுவும் உதவி வேண்டுமா என்று தினகரனிடம் விசாரித்தாள்...

''வேண்டாம்க்கா... சித்ரா இருக்கிறாள்... பார்த்துக் கொள்வாள்...'' என்று கூறிய தினகரன் அவள் போனதும் கதவை மூடித் தாழ் போட்டு விட்டுத்தான் சித்ரலேகாவைத் தேடிச் சென்றான்..

அவள் விசாலாட்சியின் பெயரைச் சொல்லி தப்பிக்க முயன்றதும் அவன் உல்லாசமாய் சிரித்தான்..

''அவங்க வரமாட்டாங்க..''

''வந்துவிட்டால்..?''

''அவங்க இப்போதுதான் வந்து ஊருக்குப் போவதாய் சொல்லிவிட்டுப் போனாங்கடி..... நாளைக்குத்தான் திரும்பி வருவாங்க...''

சித்ரலேகா தன் மறுப்பு செயலில்லாமல் போவதை உணர்ந்து தவித்தாள்... இவனிடமிருந்து விடுபட முழு மனதுடன் போராடவேண்டும்... ஆனால் விடுபட மனமில்லாமல் அவனோடு ஒன்றிபோகத் துடிக்கும் உடலையும்... மனதையும் வைத்துக் கொண்டு எப்படி விடுபடுவது? அரைமனதென்ன... கால் மனதாகக்கூட அவளால் போராட முடியாதே..

எதிர்பின்றி அவனது கைகளுக்குள் தொய்ந்து நின்ற வளை அன்றுபோல் இன்றும் அணைத்துக் தூக்கி தன் கைகளில் ஏந்திக் கொண்டான் தினகரன்...

''வேண்டாம்...''

ஏதோ வேண்டுதல் போல் அவள் பலவீனமாய் தன்



ன் வாய்விட்டுச் சிரித்தான். அவளைக் கட்டிலில் கிடத் திய போது... அவள் இன்று உருண்டு விலகவில்லை.. மாறாக அவனது கழுத்தைச் சுற்றித் தன்னை அறியாமல் தன் கைகளை மாலையாக்கினாள்...

அவளது அந்தச் செய்கையில் தினகரன் அணை உடைந்த வெள்ளமாய் அவள் மேல் படர்ந்த அவளை ஆக்கிரமித்தான்.

இப்பேது சித்ரலேகாவின் உதடுகள்.. 'வேண்டாம்' என்ற ஜெபத்தை விட்டு விட்டன... அவள் கண்மூடிக் கிறங்கி... காட்டாற்று வெள்ளத்தில் மூழ்கி அடித்துச் செல்லப்பட்டாள்...

கரையேற விரும்பாத இரு உயிர்களும்... மோக வெள் ளத்தில் மூழ்கித்திளைத்தன... எந்தவித மனத்தளைகளும் இல்லாத ஓர் உலகத்தில் அவர்கள் பிரவேசித்தனர்..

அங்கு இருந்தது எல்லாம்.. ஒருவரிடம் ஒருவர் அளித்து கொள்ளும் பரிசுகள் மட்டும்தான்...

பரிசு என்பது வழங்குவதையும்... வாங்குபவரையும் ஒரு சேர மகிழ்விக்கும் ஒரு விசயம்... பரிசு வழங்கிக் கொள்வதில் இருவருமே தாராளமாக இருந்தனர்..

மாலை மயங்கிய வேளையில்... அரைமனதுடன் சித்ர லேகாவை விடுவித்தான் தினகரன்.. அவள் எதுவும் பேசா மல் குளித்து முடித்து... சமையலறைக்குள் சென்றாள்... சமைத்து வைத்திருந்ததை பரிமாறி அவனைச் சாப்பிடச் சொன்னாள்...

''நீயும் தட்டைப் போட்டுக் கொண்டு உட்கார்.... சொல் கிறேன்.....'' அவன் அவளை அதட்டி உருட்டி சாப்பிட வைத்தான்..

அவனுக்கான மாத்திரைகளை அவள் கொடுத்தபோது வாங்கி வாயில் போட்டுக் கொண்டு தண்ணீர் அருந்திய வன்... அவளை அருகே இழுத்து அணைத்துக் கொண்டான்.

அவள் எதுவும் பேசாமல் அவன் மார்பினில் ஒன்றியிருந் தாள்..

''கோபமா லேகா...''

''இல்லை....''

''பொய் சொல்லாதே.. நீ எனக்காக சொல்கிறாய்..''

''இல்லை... நான் எனக்காகவும்தான் சொல்கிறேன்...''

தினகரனுக்கு அவளது வார்த்தைகள் புரிந்தன.. நடந்து விட்ட நிகழ்வில் அவளுக்கும் பங்கிருக்கிறது என்கிறாள்..

மனநிறைவுடன் அவளைத் தழுவி அவளது நெற்றி யில் முத்தமிட்ட தினகரன்.. அவள் விலகுவதைக் கண்டு....

''ஏன்...'' என்று வினவினான்...

''நைட்டுக்கு இட்டிலி செய்து ஹாட்பேகில் வைத் திருக்கிறேன்.. சாப்பிட்டுக் கொள்ளுங்கள்....''

''நீ எங்கே போகிறாய்....?''

''மாமாவின் வீட்டிற்கு...''

''வேண்டாம்...''

''புரியவில்லை...''

''நீ போக வேண்டாம்...''

கசப்பான ஓர் புன்முறுவல் ஒன்று சித்ரலேகாவின் இதழ்களில் உதித்தது..

''போகாமல்.. என்ன செய்யச் சொல்கிறீர்கள்...''



''ம்ம்... இருக்கிறேன்.. உங்களுடன் இருக்கத்தான் ...றும் ஆசைப்படுகிறேன்.. நீங்கள் என்னை விரியூருக்கு ...ங்கள் வீட்டிற்கு கூப்பிட்டுக் கொண்டு போவதாக ...ருந்தால்... நானும் உங்களோட இருந்து விடுகிறேன்...''

''அது எதற்கு லேகா.. உனக்கு நான்... எனக்கு நீ.. இது போதாதா.. நாம் விரியூருக்குப் போக வேண்டாம்.. இங்கேயே இருப்போம்...''

''எனக்கு அதில் விருப்பமில்லை...''

''வீண் பிடிவாதம் பிடிக்காதே.. நான் உன் கணவன்.. நீ என் மனைவி.. நாம் சேர்ந்து வாழ என்ன தடையிருக்கிறது?''

''அதுதான் சேர்ந்து விட்டோமே...''

''நான் சேர்ந்து வாழ்வதைச் சொன்னேன்... கொஞ்ச நேரத்திற்கு முன் நிகழ்ந்தது மட்டும் வாழ்வில்லை... என்னுடன் இணைபிரியாமல் நீ இருக்க வேண்டும்... அதுதான் வாழ்வு...''

''அதற்கு எனக்குக் கொடுத்து வைத்திருந்தால்.. நீங்கள் நம் ஊருக்கு என்னை உங்கள் மனைவியாக அழைத்துச் செல்வீர்கள்...''

''அந்த ஊரே நமக்கு வேண்டாம் என்கிறேனே....''

''எனக்கு வேண்டும்..''

''எனக்கு வேண்டாதது... உனக்கும் வேண்டாம்..''

''ஊரில் உங்கள் அம்மா அப்பா.. இருக்கிறாங்க.. மறந்துவிட்டீர்களா.''

''மறக்கவில்லை.. அத்துடன் என் மனதில் இருக்கும் ... இருக்கிறது..''

''லேகா.. இப்போதும் சொல்கிறேன்.. இப்படியே என்னுடன் இருந்துவிடு. உன் ஊர்.. அம்மா... அப்பா.. அண்ணன் எல்லோரையும் மறந்துவிட்டு நான் மட்டுமே உன் சொந்தமென்று என்னோடு வாழ்ந்துவிடு...''

''என்னால் அது முடியாது..''

''ஏன்.. என்னைவிட உனக்கு அவர்கள் பெரிதாகப் போய் விட்டார்களா? நான் வேண்டுமென்றால்... நீ உன் அப்பா... அண்ணனை மறந்து விடவேண்டும்.. மறந்தும் அவர்களை நினைத்துக் கூடப் பார்க்கக் கூடாது...''

''இதே கேள்வியை நீங்கள் நம் கல்யாணத்திற்கு முன்னால் கேட்டிருந்தால் நிச்சயம் நான் நீங்கள்தான் வேண்டுமென்ற முடிவுக்கு வந்திருப்பேன்.. ஏன் எனக்கு தாலிகட்டியவுடன்... நீங்கள்.. என்பின்னால் வாடி.. உன் அப்பாவையும் அண்ணனையும் மறந்துவிடுடின்னு... சொல்லியிருந்தால் மறுப்பே சொல்லாமல்.. அவர்களை மறந்து உங்கள் பின்னால் வந்திருப்பேன்.. ஏனென்றால்.. நான் அந்த அளவுக்கு உங்களைக் காதலித்தேன்.. உங்கள் மேல் உயிரையே வைத்திருந்தேன். ஆனால் நீங்கள் என் கழுத்தில் தாலி ஏறியதும் என்னுடன் வாழப் பேரம் பேசினீர்கள் என்னைப் பணயமாக வைத்து உங்கள் குடும்பப் பகையை தீர்த்துக் கொள்ள நினைத்தீர்கள்... எப்போது உங்கள் வாயிலிருந்து அப்படிப்பட்ட வார்த்தைகள் வந்ததோ... அப்போதே... என்காதல் தோற்றுவிட்டது... இப்போது உங்களுடன் சந்தோசமாக இருந்துவிட்டேன்.. அதனால் உங்களுடன் இருக்கச் சொல்லி நீங்கள் சொல்கிறீர்கள்.. ஒருவேளை.. நான் திருச்சிக்கு வராமல் இருந்திருந்தால்... உங்களை திரும்பவும் சந்திக்காமல் இருந்திருந்தால்... இந்தக் கோரிக்கை உங்கள் வாயிலிருந்து வந்திருக்குமா?''



# 39

சித்ரலேகா போய்விட்டாள்... அவனுடன் அந்த வீட்டில் இருந்த உயிர்ப்பும் போய்விட்டது...

தினகரன்.... இருண்டு கிடந்த வீட்டில் தனியாகக் கிடந்தான்.. சற்று முன் நிகழ்ந்த நிகழ்வுகளின் நினைவுகள் அவன் மனதை சலனப்படுத்திக் கொண்டிருந்தன... அவன் மனக்கண்ணில் சித்ரலேகா தோன்றினாள்...

இரவில் தூங்க மறுத்தபோது... காதோரம் பாட்டுப் பாடி தூங்க வைத்த சித்ரலேகா.. அவனுக்கு உடம்பு சரியில்லை என்று தெரிந்த அடுத்த நிமிடம் ஓடி வந்த சித்ரலேகா.... தாயைப் போல் பரிந்து பணிவிடை செய்த சித்ரலேகா.. அவன் இழுத்த இழுப்புக்கு வளைந்து கொடுத்து அவன் அணைப்பில் அடங்கிய சித்ரலேகா... இறுதியில் அவனது வேண்டுகோளை நிராகரித்து பிரிந்து சென்ற சித்ரலேகா...

எண்ணற்ற தோற்றங்களுடன் அவனது நினைவலைகளில் மாறிமாறி வந்தாள் சித்ரலேகா....

போன காய்ச்சல் மீண்டும் வந்துவிடும் போல் தோன்ற தினகரன் கண்ணை மூடி தூங்க முயன்றான்.. முடியவில்லை...

இந்த வேதனை தீர வழியொன்றை சொல்லிவிட்டுச் [illegible] சித்ரலேகா..

தினகரன்... அவளுடன் கணவன்.... மனைவியாக விரியூரில் இருக்கும் அவன் வீட்டில் கால்வைக்க வேண்டும்..

'அது எப்படி என்னால் முடியும்..' தினகரன் பல்லைக் கடித்தான்.

'எத்தனை நாள் நினைவு அது.. நான் நினைத்து.. நினைத்து துடித்த பகையை முடிக்க.. நான் விரித்த வலையில் சிக்காமல் அவர்களை தப்பிக்க வைத்த என் தர்மபத்தினி... என் தோல்வியை ஊாறிய ஒப்புக் கொள்ளச் சொல்கிறாள்... அது மட்டும் ஒருநாளும் நடக்காது...'

தினகரன் மனதில் ஒரு முடிவுடன்... மறுநாள் மாலையில் சித்ரலேகாவை அழைத்தான்....

''வீட்டுக்கு வந்துவிட்டுப் போ....''

சித்ரலேகாவிற்கு அவன் அழைப்பின் நோக்கம் புரிந்தது.. அவள் மறுத்தாள்....

''எனக்கு வேலை இருக்கிறது....''

''இதுவும் வேலைதான்..''

சித்ரலேகா முகம் சிவக்க எழுந்து கொண்டாள்... அவனது அறையை விட்டு வெளியேற அவள் முயன்ற போது.. தினகரனின் குரல் அவளை தடுத்து நிறுத்தியது....

''என்னுடன் வாழவும் வரமாட்டாய்... நிம்மதியாய் இருக்கவும் விடமாட்டாய் என்றால் என்ன அர்த்தம்? நான் திரும்பவும் காய்ச்சலில் விழ வேண்டுமென்ற எண்ணமா உண்டு.....?''

''காய்ச்சலில் ஏன் விழ வேண்டும்...''



''நேற்று ராத்திரி.. நான் சாப்பிடவில்லை...''

''நான்தான் இட்லி செய்து வைத்திருந்தேனே...''

''எனக்கு சாப்பிடத் தோன்றவில்லை...''

''இது என்ன பிடிவாதம்?''

''இது பிடிவாதமில்லை லேகா.. புரிந்துகொள்... எனக்கு சாப்பிடவே தோன்றவில்லை... தூக்கமும் வரவில்லை... இந்த நிலை இப்படியே நீடித்தால் என் நிலை என்ன ஆகுமோ... எனக்கே தெரியவில்லை...''

சித்ரலேகா தயங்கினாள்.. அவன் முகம் பார்த்தாள்... கண்கள் சிவந்து.... தலைகலைந்து... பார்க்கவே பரிதாபமாக இருந்தான்...

அவளுக்கு அவன்மேல் இரக்கம் சுரந்தது....

''ம்ம்... போகலாம்....''

அன்று இரவுக்கான சமையலைச் செய்து அவனை சாப்பிட வைத்து விட்டு அவள் கிளம்புகையில் அவன் அவள் கைபிடித்து இழுத்து அணைத்துக் கொண்டான்...

விலக முடியாமல் சித்ரலேகா... இசைந்து கொடுத்தாள்.. அதுவே தினப்படி வாடிக்கையானது.. தினமும் மாலை வேளைகளில் சித்ரலேகா வருவதையும்... இரவு சமைத்து அவனை சாப்பிட வைத்து விட்டுச் செல்வதையும் விசாலாட்சி தவறாகவே எடுத்துக் கொள்ளவில்லை..

தினகரன் மீண்டும் உயிர்த்தெழுந்தான்.. தினமும் சித்ரலேகா அவனுடன் கழிக்கும் இரவு வேளைக்காக.. அவனது உடலும் மனமும்.. பரபரப்புடன் காத்

நான்கு மாதங்கள் இப்படியே கழிந்தன.. ஒரு நாள் அதிகாலையில் சித்ரலேகா வேலைக்கு வரவில்லை.. அவளது மருத்துவ விடுப்பு கேட்ட கடிதம்தான் வந்தது...

தினகரன் பதறிப் போனான்..

'அவளுக்கு என்ன ஆனது...'

அலைபேசி மூலம் தொடர்பு கொள்ள முயன்றான்... போன் 'ஸ்விட்ச் ஆப்' என்று பதில் வந்தது.... வேறு வழியின்றி அவளுடைய தாய் மாமா பவித்ரனைத் தேடிப் போனான்...

பவித்ரனின் வீடு இருக்கும் தெருமுனையில் சித்ர லேகா இறங்கிச் சென்றது அவனது நினைவில் இருந்தது... அந்தத் தெருவில் காரைச் செழுத்தினான்.. பவித்ரனின் பெயர் பலகை பொறித்த பங்களாவைக் கண்டுபிடித்து விட்டான்.

இறங்கி... அந்த வீட்டுப் படியேறும் போது கால்கள் தயங்கின.. அவனது மனச்சாட்சி அவனைக் கடிந்து கொண்டது.

உன்னைத் தேடி வர அவள் தயங்கினாளா... நீ அவளை கைவிட்ட பின்னும்... உனக்கு உடம்பு சரியில்லை என்றதும் ஓடிவந்தாளே... உன் வீட்டுப்படியை தயங் காமல் மிதித்தாளே.. நீ அணைத்தபோது மறுக்காமல் உடன் பட்டாளே... அவளுக்கு என்ன ஆனது என்று தெரிந்து கொள்ள உனக்கு இவ்வளவு தயக்கமா?'

தயக்கத்தை தூக்கி எறிந்து விட்டு... வாசலில் இருந்த வேலையாளிடம் அவனைப் பற்றிக் கூறினான்... சற்று



''ஐயா.. உங்களை வரச் சொன்னாங்க...'' என்றான்.

தினகரன் வீட்டுக்குள் சென்றான்... பவித்ரன் நின்று கொண்டு இருந்தார் அவரது முகத்தில் ஓர் கடுமை நிலவியது...

'பின்... என்னைப் பார்த்தால் இனிமையாகவா இருக் கும்...' என்று எண்ணமிட்டபடி அவர் முன் நின்றான்..

''வாங்க... தினகரன்... உட்காருங்க....'' என்றார் பவித்ரன்..

தினகரன் அமர்ந்தான்.. பவித்ரனின் மனைவி.... ஜூஸ் தம்ளர்கள் கொண்ட டிரேயுடன் வந்து நின்றாள்...

''எடுத்துக்கங்க...''

''தேங்க்ஸ்...''

அவன் ஜூஸ் குடித்து முடிக்கும் வரை காத்திருந்தவர்...

''என்ன விசயமாய் என்னைத் தேடி வந்தீங்க...?'' என்று கேட்டார்.

''சித்ரலேகாவிற்கு உடம்பு சரியில்லையா...?'' என்று கவலையுடன் வினவினான் தினகரன்..

''ஆமாம்.. இது உங்களுக்குத் தெரியாதா?''

''தெரியாதே.. உடம்பிற்கு என்ன....?''

''அதுவும் உங்களுக்குத் தெரியாதா...''

'இது என்ன இந்த ஆள் இப்படியே கேட்கிறார்.. அவள் முதல்நாள் கூட நன்றாகத்தானே இருந்தாள்.. ஆபீஸ் வந்தாள்...வேலை முடிந்ததும் வழக்கம் போல் என் னுடன் வீட்டிற்கு வந்தாள்... வழக்கம் போல் என்னுடன் சந்தோசமாக இருந்து விட்டுத்தானே சென்றாள்...' தினகரன் குழம்பினான்.

"இல்லைங்க... அவள் நன்றாகத்தானே இருந்தாள்..."

"இப்போதும் நன்றாகத்தான் இருக்கிறாள்..."

"உடம்பு சரியில்லையா என்று கேட்டதற்கு... ஆமாம் என்றீர்களே..."

"அதுவும் உண்மைதான்...."

"என்னங்க... குழப்புகிறீங்க.."

பவித்ரன் தினகரனை சுட்டெரிப்பது போல் பார்த்தான்.. அவரது பார்வைக்கு பொருள் விளங்காமல் தினகரன் திணறினான்... எப்போதும்.. சித்ரலேகாவின் வீட்டைச் சேர்ந்தவர்கள் அவனை ஒழுங்காக பார்க்க மாட்டார்கள்தான்... அதுவும்.... சித்ரலேகாவை அவன் தள்ளி வைத்தபின்.. அனல் பார்வைதான் அவர்களிடமிருந்து வரும். ஆனால் இது என்ன புதுவிதமான பார்வை?

# 40

பவித்ரனின் பார்வைக்கு பொருள் விளங்காமல் திகைத்த தினகரன் அவரிடமே விளக்கம் கேட்டான்.

"என்ன விசயம் சார்?"

"சித்ரலேகாவிற்கு என்ன நிகழ்ந்திருக்கும் என்று உண்மையிலேயே உங்களுக்குத் தெரியவில்லையா? இல்லை தெரியாதது போல் நடிக்கிறீர்களா?"

"இல்லை சார்.. உண்மையிலேயே எனக்குத் தெரி



"அது தெரியாமலா.. மாலை வேலைகளை அவளுடன் கழித்தீர்கள்?"

"நீங்கள் என்ன சொல்ல வருகிறீர்கள்..."

"கட்டின மனைவியை உங்கள் ஊர் அறிய உங்களுடைய வீட்டிற்கு கூப்பிட்டுக் கொண்டு போக மாட்டீர்கள்.... ஊர் அறியாமல் எவளோ ஒருத்தி போல் குடும்பம் நடத்த மட்டும் கூப்பிடுவீர்கள்... இதைச் செய்ய உங்களுக்கு தயக்கமில்லையா... செய்வதையும் செய்து விட்டு அவளுக்கு உடம்புக்கு என்ன.. என்று என்னிடமே அறியாப்பிள்ளைபோல் வந்து நின்று கேட்கிறீங்களே... உங்களை நினைத்தால் எனக்குப் பற்றிக் கொண்டு வருகிறது...."

தினகரனின் மூளையில் மின்னலடித்தது.. அவன் பரபரத்தான்... ஒருவேளை... அப்படியும் இருக்குமோ...? அவசரமாய் வினவினான்...

"சித்ரலேகா கன்சீவ் ஆகியிருக்கிறாளா..."

"ஆமாம்... அவள் நான்கு மாத கர்ப்பிணி..."

"இதை ஏன் அவள் என்னிடம் சொல்லவில்லை?"

"சொல்லியிருந்தால் என்ன கிழித்திருப்பீர்கள்... உங்களைப் பார்க்கக்கூடாது... பேசக்கூடாது என்று நான் சொன்னேன்... அவரைப் பார்த்தால் பாவமாய் இருக்கிறது மாமா என்றாள்... இப்போது அவள் மேல் யார் கருணை காட்டுவது?"

"யாரும் கருணை காட்ட வேண்டிய அவசியம் என்ன இருக்கிறது....? அவள் என் மனைவி.. என் குழந்தைக்கு தாயாகப் போகிறாள்.. இது சந்தோசப் படவேண்டிய செய்தியில்லையா..?"

''இல்லை.. தினகரன்.. நீங்கள் நினைப்பது போல் சித்ரா நினைக்கவில்லை... தாய்மை அடைந்திருப்பதை அவளது அண்ணனும்.... அப்பாவும் அறிந்தால்... தனக்காகவும்.. வயிற்றில் வளரும் தன் பிள்ளைக்காகவும் மன்னிப்பு கேட்டு விடுவார்களோ என்று பயந்து போய் விட்டாள்... அதனால்.. குழந்தை பிறக்கும் வரையில் சென்னையில் இருக்கும் அவளுடைய தோழியின் வீட்டில் இருக்கிறேன் என்று சொல்லிவிட்டு போய் விட்டாள்....''

''குழந்தை பிறந்த பின்னால் என்ன செய்வாளாம்...''

''அங்கேயே வேலை மாறுதல் வாங்கிக் கொண்டு இருந்துவிடுவாளாம்..''

''பிள்ளைக்கு தகப்பன்.. என்னிடம் ஒரு வார்த்தை கேட்காமல் அவளாய் இஷ்டப்படி முடிவு எடுத்து விடுவாளா....?''

''கேட்டிருந்தால் நீங்கள் இதை உங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டு.. அவளுடைய அண்ணனையும்.. அப்பாவையும்... அவமானப்படுத்தி விடுவீர்கள் என்று பயந்து விட்டாள்.. அவள் பயப்படுவதிலும் உண்மை இருக்கத்தானே செய்கிறது.. இல்லையென்று உங்களால் சொல்லி விட முடியுமா....?''

''என்னங்க... நீங்க... அவளை மாதிரியே நீங்களும் புரியாமல் பேசுகிறீங்க.. என் பிள்ளைக்கு தகப்பனாய் என் கடமையை நான் செய்வேனா... இல்லை.. அதையும்.... என் பகையைத் தீர்த்துக் கொள்ள காரணமாய் பயன் படுத்துவேனா.. எதற்கும் ஓர் எல்லை இருக்கிறது..''



''உங்கள் எல்லை எதுவரை என்றுதான் எங்களுக்குத் தெரியவில்லையே பெண்டாட்டிக்கு புருசன் என்ற கடமையை நீங்கள் ஒழுங்காக செய்யவில்லை எனும் போது... பிள்ளைக்கு தகப்பன் என்ற கடமையை மட்டும் ஒழுங்காக செய்து விடுவீங்களா...''

''நான் அவளை என்னோடு இருந்து விடும்படி கெஞ்சினேன்.. அவள் மறுத்து விட்டாள்....''

''எப்படி ஏற்றுக்கொள்வாள்... ஊறிய அவளை கை கழுவி விட்டு... யாருக்கும் தெரியாமல் கூட இருக்கச் சொன்னால்... அது பெண்டாட்டியிடம் சொல்லும் சொல் போல இல்லையே...''

தினகரன் தலையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்து விட்டான். பவித்ரன் கடுமை மாறாத முகத்துடன்.. அவ னுக்கு எதிரே அமர்ந்தார். நடப்பதைப் பார்த்துக் கொண் டும்... கேட்டுக் கொண்டும் மௌனமாய் அதுவரை நின்றிருந்த பவித்ரனின் மனைவி கமலம் வாய் திறந் தாள்...

''தம்பி.. நான் ஒன்று சொன்னால் தப்பாக நினைத்துக் கொள்ள மாட்டீர்களே...''

''இல்லைம்மா... தப்பாக நினைக்க மாட்டேன்...''

''நீங்கள் எங்கள் மருமகனை எதிரியாக நினைக்கிறீர் கள் என்பதற்காகவோ... என் நாத்தனாரின் வீட்டுக்காரரை காலில் விழச் சொல்கிறீர்கள் என்பதற்காகவோ.. நான் இதைச் சொல்லவில்லை.. எனக்கு என்னவோ.. நீங்கள் சித்ராவின் அண்ணனோடு ஒருமுறை பேசிவிட்டால் எல்லாமே சரியாகிவிடும் என்று தோன்றுகிறது..''

''நான் எப்படிம்மா அவரிடம் போய் பேசுவது? அவருடன் நான் முகம் கொடுத்து பேசியதே இல்லையே....''

''அப்படியென்றால் அவரை வந்து உங்களிடம் பேசச் சொல்கிறேன்.... அவர் ஈகோ பார்க்க மாட்டார்...''

''அம்மா... அவர் ஏன் என்னிடம் பேச வேண்டும்? நீங்கள் சித்ரலேகா எங்கிருக்கிறாள் என்ற விலாசத்தைக் கொடுங்கள்... நான் போய் அவளிடம் பேசி அழைத்து வருகிறேன்...''

''அவளும்... நீங்களும் பேசினால் மட்டும் இந்தப் பிரச்னை சரியாகி விடுமா தம்பி....? நீங்கள் பேச வேண்டியது அவளிடம் இல்லை.... அவளுடைய அண்ணனிடம்தான்....''

தினகரனுக்கு கமலம் சொல்வதிலும் ஓர் நியாயம் இருப்பது புலப்பட்டது... அவனும்.... சித்ரலேகாவும் என்னதான் பேசினாலும் பிரச்னை தீரப் போவதில்லை...

பிரச்னையின் மூல கர்த்தாவிடமே பேசி விட்டால் தான் என்ன...? தினகரன் யோசித்தான்.. பின் தெளிந்த மனத்துடன் ஓர் முடிவிற்கு வந்தான்..கமலத்தை நிமிர்ந்து பார்த்தான்....

''சரிங்கம்மா... உங்க மருமகனை வரச்சொல்லுங்க...''

''நாளைக்கு இதேநேரம் இங்கேயே நீங்கள் வந்து விடுங்க தம்பி.... நான் என் மருமகனை வரவைக்கிறேன்...''

''நல்லது அம்மா... ஆனால் இந்த விவரம்...''

''யாருக்கும் தெரியாது தம்பி... அதற்கு நான் உத்திரவாதம் தருகிறேன்..''



தினகரன் உயிரில்லாத உடலுடன் வீட்டிற்கு திரும்பினான். அவன் மனம் முழுவதும் சித்ரலேகாவிடமே இருந்தது..

'ஒரு வார்த்தை... ஒரேயொரு வார்த்தை... என்னிடம் சொல்லவில்லையே... சொல்லாமலே போய் விட்டாளே.....'

தினகரன் மனதில் வேறு ஒரு திட்டம் இருந்தது. சித்ரலேகா தாய்மை அடையப் போகும் நாளை அவனும் ஆவலுடன் எதிர்பார்த்தான்.

குழந்தையென்று வந்து விட்டால்.. அவள் மறுக்காமல் தன்னுடன் வந்து குடும்பம் நடத்துவாளே என்ற நினைவு அவனுக்கு....

ஆனால் அவள் இப்படியொரு முடிவை எடுத்து அவனிடம் சொல்லாமல் ஓடிப் போவாள் என்று கனவிலும் அவன் நினைக்கவில்லை..

ஒன்று மட்டும் உறுதியாகத் தெரிந்தது அவனுக்கு... சித்ரலேகா இல்லாமல் அவனால் ஒருகணம் கூட வாழ முடியாது..

மறுநாள் மாலையில் பவித்ரனின் வீட்டை நோக்கி காரைச் செலுத்திய போது அவன் மனதில் தெளிவான கேள்விகள் பல ... சித்தார்த்தனிடம் கேட்பதற்காக இருந்தன....

பவித்ரனின் வீட்டு வாசலில் அவன் காரை நிறுத்தி விட்டு இறங்கியபோது சித்தார்த்தன் வந்து எதிர் கொண்டழைத்தான்.

# 41

"வாங்க மாப்பிள்ளை..." என்று வெள்ளையாய் சிரித்தவனைப் பார்த்து இவனால் எப்படி.. இப்படி இருக்க முடிகிறது என்று நினைத்தான் தினகரன்.

ஒரு கோபம் இல்லாமல்.. கொந்தளிப்பு இல்லாமல்... தன் தங்கையின் வாழ்க்கையை பாழடித்து விட்டான் என்ற எண்ணமில்லாமல்.. மனமார சிரித்து வரவேற்கிறானே... இவனா.. அவனுடைய அக்கா கணவனை அவமானப் படுத்தியவன்...? இவனா.. அவனுடைய அக்கா கணவனின் மண்டையை உடைத்தவன்...?

தினகரன் ஒன்றும் சொல்லாமல் தலையை மட்டும் அசைத்தான்.. சித்தார்த்தன் மரியாதையுடன் தினகரனை... மாடி அறைக்கு அழைத்துச் சென்றான்.. ஏஸி அறையில் கதவை பூட்டிக் கொண்டு இருவரும் பேச ஆரம்பித்தார்கள்...

"சொல்லுங்க மாப்பிள்ளை.. நான் என்ன செய்ய வேண்டும்? நான் செய்யாத தவறுக்கு மன்னிப்புக் கேட்க நான் தயார்தான்... என் அப்பா பாவம் வயதானவர்... மரியாதையானவர்.. அவரை விட்டு விடுங்கள்.. எங்கே வந்து.. யாரிடம் நான் மன்னிப்பு கேட்க வேண்டும்.. சொல்லுங்கள் செய்கிறேன்...."

தினகரனுக்கு தன் காதுகளையே நம்ப முடியவில்லை.. அவனது கனவு பலித்து விட்டது... அவனது எண்ணம்



ஈடேறிவிட்டது.. மனம் உற்சாகம் கொண்ட அதே வேளை தில்... இதனால் தான் சித்ரலேகாவை முழுவதுமாய் இழக்க வேண்டி நேரலாம் என்ற உண்மை பிடிபட மௌனமானான்..

"ஏன் மாப்பிள்ளை பேசாமல் இருக்கிறீர்கள்....?"

"இப்போதும் நான் செய்யாத தவறு என்றுதானே சொல்கிறீர்கள்.. அப்போ... நான் கண்ணால் கண்டதும்.. காதால் கேட்டதும் பொய்யா?"

"இது இரண்டையும் விட்டு தீர விசாரித்து அறிவதே மெய் என்று உங்களுக்கு ஏன் புரியாமல் போனது..."

"இதில் விசாரிக்க என்ன இருக்கிறது..? என் அக்காவின் கணவர் என்ன பொய்யா சொல்லப் போகிறார்....?"

"உங்கள் அம்மா மட்டும் பொய் சொல்லி விடுவார்களா... எங்கே அவர்களிடம் போய் யார் மேல் தவறுன்னு கேட்டுப் பாருங்கள்... அப்போது தெரியும் உண்மை எது.. பொய் எது என்று...."

"அவங்க என்ன சொல்வாங்க... நீங்க நல்லவர்... என் மாமா கெட்டவர்ன்னு சொல்வாங்களா..."

"ஆமாம்..அப்படித்தான் சொல்வாங்க..."

"அப்போ.... என் மாமாவாய் அவர் நெற்றியில் அவராகவே காயத்தை உண்டு பண்ணி ரத்தம் கொட்ட வைத்தாரா?"

"ஆமாம்.."

"என்னது.."

தினகரன் திகைத்துப் போனான்.. சித்தார்த்தன்.. பெயருக்கேற்றார் போல் அமைதியாகப் பேசினான்..

"மாப்பிள்ளை.. நீங்கள் என்னைவிட வயதில் இளையவர்.. உங்களுக்குத் தெரியாதது நிறைய இருக்கிறது.. அதில் ஒன்று.. திலகாவும் நானும் காதலித்தது.."

"என்னது.."

தினகரன் மீண்டும் அதிர்ந்தான்..

"ஆமாம் மாப்பிள்ளை.. ஆனால் திலகா என்னை மறுத்து ஜெகனைக் கல்யாணம் பண்ணிக் கொண்டாள்.. அதன்பின் ஜெகன் என்னுடன் வம்புக்கு வர ஆரம்பித்தான்.. வீண்பழி போட்டான்.. நானும் பொறுத்துப் போனேன்.."

"என் அக்கா ஏன்.. காதலித்த உங்களை விட்டு விட்டு மாமாவைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டும்..? நீங்களும் ஏன்.. மாமாவிடம் அடியை வாங்கிக் கொண்டு பொறுமையாய் போகவேண்டும்?"

"விதி.. வேறு என்ன நான் சொல்ல.."

சித்தார்த்தின் கலங்கிய கண்களுடன்.. தன் அவசர புத்தியால் திலகாவின் மனம் புண்பட்டுப் போனதைக் கூறினான்.. ஜெகனின் கயமையால் தன் காதல் தோற்ற கதையைச் சொன்னான்..

தினகரன் கல்லில் வடித்த சிலையாய் உறைந்து போனான்..

'அக்காவின் வாழ்வில் இத்தனை நடந்திருக்கிறதா..'

"நான் என்ன செய்யட்டும்.. நீங்களே சொல்லுங்கள் மாப்பிள்ளை.. ஜெகனைப் போன்ற ஒரு மனிதனைக் கல்யாணம் செய்துகொள்ள திலகா எடுத்த முடிவிற்கு நானும் ஒருவகையில் காரணமாகி விட்டேன்.. ஒருவன்



தன்னை நம்பிய காதலிக்கு நம்பிக்கையை கொடுத்திருக்க வேண்டும்.. எது எப்படி நடந்தாலும்.. என்னுடையவன் என்னை ஏற்றுக் கொள்வான் என்ற மன திடத்தை அவளுக்குக் கொடுத்திருக்க வேண்டும்.. நான் அதை அவளுக்குக் கொடுக்கவில்லை.. திலகா அவனுக்கு வாழ்க்கைப்பட்டு விட்டாள்.. அவளுடைய நல் வாழ்விற்காக நான் அயோக்கியனாய் அவளுக்கு காட்சி அளிக்க வேண்டியதாகிவிட்டது.. இதுதான் நடந்தது.. மற்றபடி எனக்கு பரிந்து என் அப்பா வந்தார்.. அவனுடைய பொய்யை நம்பி உங்கள் அப்பா வந்தார்.. இரண்டு குடும்பமும் பிரிந்து நின்றன.. ஜெகன் அதில் குளிர் காய்ந்தான்.. திலகாவும் அவனுடன் குடும்பம் நடத்தி குழந்தைகளை பெற்றுவிட்டாள்.. இடையில் நான் எதிர்பார்க்காமல் நீங்கள் கிளம்பிவிட்டீர்கள்.."

அன்று இரவு.. ராம்குமாருக்கு டெலிபோனில் தகவல் சொல்லி லீவ் சொல்லச் சொல்லிவிட்டு.. சித்தார்த்தனுடன் சென்னைக்கு கிளம்பினான் தினகரன்..

"சென்னையில் அவளுடைய பிரண்ட் எந்த ஏரியாவில் இருக்காங்க..?"

"அவளுடைய பிரண்ட் வீடா?"

"அப்படித்தான் உங்க மாமா சொன்னார்.."

"அது காவ்யாவின் வீடு.."

"உங்கள் பெரிய மாமாவின் பெண் வீடா..?"

"ஆமாம்.."

சித்ரலேகாவை இரண்டு தாய்மாமன் வீட்டிலும் மாறி மாறி சீராட்டுவதைக் கண்ட தினகரனுக்கு.. தன் மனைவியை இப்படி அலைக்கழித்து விட்டோமே என்று தன்மீதே கோபம் வந்தது..

காவ்யாவின் வீட்டில்.. காவ்யா பிரசவத்திற்காக அமெரிக்காவில் இருந்து இந்தியாவிற்கு வந்திருந்தாள்..

தினகரனைக் கண்டதும் சித்ரலேகா மலங்க.. மலங்க விழிக்க.. கணவன் மனைவி இருவரையும் தனியே விட்டுவிட்டு மற்றவர்கள் அகன்றனர்..

தினகரன் மனைவியையே வைத்த கண் வாங்காமல் பார்த்தான்.. அவள் நடுக்கத்துடன் அவனைப் பார்த்தாள்..

''ஏன் இங்கே ஓடி வந்தாய்?''

''அது வந்து..''

''ஏன்.. என்னிடம் என் குழந்தையைப்பற்றி சொல்லாமல் மறைத்தாய்?''

''அது வந்து..''

''ஏன் என்மேல் சந்தேகப்பட்டாய்..''

''அது வந்து..''

''வந்து.. வந்து என்கிறாயே.. அப்புறம் ஏன் கிட்ட வந்து பேசாமல் தள்ளி நிற்கிறாய்...''

தினகரன் மனைவியை இழுத்து அணைத்துக் கொண்டான்..



# 42

''சகுந்தலா.. இங்கே யார் வந்திருக்காங்க பாரு..''

பிரபாகரனின் உற்சாகக் குரல் கேட்டு வாசலுக்கு வந்த சகுந்தலா ஆனந்தப் பரவசத்தில் ஆழ்ந்தாள்..



''எங்களை ஆசிர்வாதம் பண்ணும்மா.. நாங்கள் அப்பா.. அம்மா ஆகப் போகிறோம்..''

தினகரன்.. சித்ரலேகாவுடன் அவளது கால்களில் விழ.. சகுந்தலா.. பழம் நழுவி பாலில் விழுந்து.. அதுவும் நழுவி வாயில் விழுந்தது போல் பேரானந்தம் அடைந்தாள்..

மகனையும்.. மருமகளையும் அமரவைத்து விருந்து சமைத்துப் போட்டாள்.. தினகரன் மனைவியுடன் மாமனார் வீட்டிற்கு மறுவீடு கொண்டாடச் சென்றான்..

வசுந்தராவின் முகத்தில் பழைய கலகலப்பு மீண்டதைக் கண்ட சித்தார்த்தன் மனம் நிறைந்தான்..

களத்து மேட்டில் பிரபாகரன் ஓய்வாக நின்றிருந்த போது தினகரன் அவரைத் தேடி அங்கு சென்றான்..

''அப்பா..''

''என்னப்பா.. இங்கே வந்திருக்கிற..''

''உங்களிடம் பேச வேண்டும்..''

மகனின் முகத்தைப் பார்த்த பிரபாகரன்.. முண்டாசைக் கழட்டி.. துண்டை உதறி தோளில் போட்டார்.. அங்கிருந்த கயிற்றுக் கட்டிலில் அமர்ந்தார்..

''உட்கார்ருப்பா..''

தினகரன் உட்கார்ந்தான்..

''சொல்லு..''

சித்தார்த்தன் கூறியதை ஒருவார்த்தை விடாமல் தினகரன் சொல்லச் சொல்ல பிரபாகரனின் முகம் மாறியது..

''இவ்வளவு நடந்திருக்கிறதா.. இந்த ஜெகன் பயலுக்கு எவ்வளவு நெஞ்சழுத்தம்.. என் மகளின் வாழ்வை சூறையாடி விட்டானே..''

''அப்பா ஆத்திரப்படாதீர்கள்.. அம்மாவுக்கும் இது தெரிந்திருக்கிறது.. உங்களின் கோபத்திற்கு அஞ்சி. உங்களிடம் சொல்லாமல் மறைத்திருக்கிறார்கள்.. இப்போதும் நான் ஏன் இதைச் சொல்கிறேன் தெரியுமா? ஜெகன் மாமாவின் பொய்வலையில் இனியும் நாம் சிக்கி ஏமாறக்கூடாது.. அதனால்தான் சொல்கிறேன்..''

''என்னிடம் சொல்லி விட்டாய் இல்லையா.. இனி நான் பார்த்துக் கொள்கிறேன்..''

தினகரன் வீடுநோக்கி நடந்தான்.. பிரபாகரன் வயலுக்குள் இறங்கினார்.. ஜெகன் எதிரே அவசரமாய் வந்தான்..

''மாமா.. நம்ம வயல் காட்டில் ஓரமா ஒரு மாடு மேய்ந்து கொண்டிருந்ததை கவனித்தீர்களா..''

''நீ கவனித்தாயா..''

''கவனித்து விரட்டி விட்டுத்தான்.. பதறிப்போய் சேதி சொல்ல ஓடி வரேன் மாமா..''

''என்ன மாப்பிள்ளை.. சேதி..?''

''அது அவனுக வீட்டு மாடு மாமா.. திட்டம் போட்டு சதி செய்கிறானுக.. அவனுகளை இப்படியே விடக்கூடாது..''

''அப்படி என்ன மாப்பிள்ளை செஞ்சு புட்டானுக.. கல்யாணம் பண்ணனும்னு ஒரு பொண்ணு மேல ஆசைப்பட்டு.. அவள் விருப்பம் இல்லாமல் முத்தத்தைக் கொடுத்து.. அவளோட காதலையும் கலைத்து.. அவளைக் கட்டிக்கிட்டானுகளா.. இல்லை கட்டிக்கிட்டவ.. ஆசைப்பட்டவனை கடைசிவரை எதிரியாய் நினைக்கனும் என்கிறதுக்காக.. இரண்டு வீட்டுக்கும் நடுவில் தீயை எரிய விட்டானுகளா.. இல்லை.. வாழ வேண்டிய இளம்குருத்து



இரண்டு.. பிரிந்து நின்னதை கல் நெஞ்சுடன் இரக்கமில்லாமல் வேடிக்கை பார்த்தானுகளா.. சொல்லுடா மாப்பிள்ளை.. அவனுக என்ன செய்தானுக..''

பிரபாகரன் வேட்டியை மடித்துக் கட்டிக்கொண்டு வீச்சருவாள் மீசையை முறுக்கிக் கொண்டு அய்யனார் சிலைபோல் நின்று கர்ஜித்தார்..

ஜெகன் வெலவெலத்துப் போய்விட்டான்..

பிரபாகரன் அவனிடம் கண்டிப்பாய் சொல்லிவிட்டார்..

''உன் வில்லங்கமெல்லாம் அம்பலமாகி விட்டது.. இனி ஒழுங்கு மரியாதையாய் நடந்துக்கலைன்னா.. என் மகளிடம் நடந்ததை சொல்லி விடுவேன்.. உன் குடலை உறுவி மாலை போட்டு விட்டு.. என் மகளை கூப்பிட்டுக் கொண்டு வந்து விடுவேன் ஜாக்கிரதை..''

''ஐயையோ மாமா.. இனி அப்படியெல்லாம் நடக்காது..''

தினகரன் கிளம்பும் முன்னர்.. திலகாவின் வீட்டிற்கு சென்றான்.. அமைதியாய்.. காபியை ஆற்றி தம்பியிடம் நீட்டியவளாய்ப் பார்த்து கண்கலங்க கேட்டான்..

''நீ சந்தோஷமா இருக்கியா அக்கா..''

அவள் தம்பியின் கன்னத்தை தட்டி சிறிதாய் சிரித்தாள்..

''வாழ்க்கையில்.. நாம் நினைத்தது கிடைக்காவிட்டால்.. கிடைத்ததை வைத்து நிம்மதியாய் வாழக் கற்றுக் கொள்ள வேண்டும்.. நான் சந்தோசமாய் இருக்கிறேனோ இல்லையோ.. நிம்மதியாய் இருக்கிறேன்..''

''மாமா.. வந்து..''

''எனக்கும் தெரியும்டா தினகர்.. அதைப்பற்றி இனிப் பேசிப் பிரயோஜனமில்லை..''

''சித்தார்த்த.. அத்தான்.. நல்லவர்க்கா..''

''அதுவும் தெரியும்.. அதைப்பற்றியும் இனிப்பேசி ஆகப்போவது ஒன்றுமில்லை.. நான்.. என் புருசன்.. குழந்தைகள்ன்னு வட்டம் போட்டு வாழக்கற்றுக் கொண்டு விட்டேன்.. நீ கவலைப்படாமல் போய் விட்டு வா..''

திருச்சியில் மனைவியுடன் மாடிப்படி ஏறும் முன்னே விவரம் அறிந்த விசாலாட்சி ஆச்சரியப்பட்டுப் போனாள்.. ஆரத்திசுற்றி அவர்களை வரவேற்றாள்.. சுகன்யா இப்போது பால்கனிப் பக்கம் வருவதே இல்லை.. எந்த வீட்டில் காதல் கணவன் இருக்கச் சொன்னபோது..

'நீ சொன்ன வார்த்தை.. என் நெஞ்சை உறுத்துகிறது' என்று சொல்லி சித்ரலேகா விலகிச் சென்றாளோ.. அந்த வீட்டில் கணவனோடு.. மனம் மகிழ்ந்து வாழ ஆரம்பித்தாள்.